# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1895/17 - 2014 දෙසැම්බර් 31 වැනි බදාදා - 2014.12.31
*1895/17 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1995 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்**

**பிரிவு 4 (2) இன் கீழான பிரசுரிப்பு**

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதன்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக,1995 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் தேவைகளுக்காக இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கான (SLFRS மற்றும் LKAS) மாற்றங்களை இரண்டாயிரத்துப் பதின்நான்காம் ஆண்டு சனவரிமாதம் முதலாம் திகதியிலிருந்து அல்லதுஅதற்குப் பின்னர்ஆரம்பமாகும் காலத்தை அடக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு நடைமுறைக்கு வருகின்றது.

பேரவையின் கட்டளைப்படி,

அருண அல்விஸ்,
செயலாளர்.

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்,
இல. 30 A,
மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07,
2014, திசெம்பர் 31 ஆந் திகதி.



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## 01 சனவரி 2014 முதல் நடைமுறைக்கு வரும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

உள்ளடக்கம்

[1] நிதிக்கூற்றுக்களின் தயாரிப்புக்கும் முன்னிலைப்படுத்தலுக்குமான சட்டகம்
[2] SLFRS 1 - இலங்கை கணக்கீட்டு நியமங்களின் முதன்முறை ஏற்பிசைவு (ஏற்பு)
[3] SLFRS 2 - பங்கு அடிப்படையிலான கொடுப்பனவுகள்
[4] SLFRS 3 - வணிக இணைப்புக்கள்
[5] SLFRS 4 - காப்புறுதி ஒப்பந்தங்கள்
[6] SLFRS 5 - விற்பனைக்காக வைத்திருக்கப்படும் சொத்துகளும் முடிவிற்குக் கொண்டு வரப்பட்ட தொழிற்பாடுகளும்
[7] SLFRS 6 - கனிப்பொருள் வளங்களுக்கான அகழ்வாய்வும் அவைகளின் மதிப்பீடும்
[8] SLFRS 7 - நிதிச்சாதனங்கள்: வெளிக்காட்டல்கள்
[9] SLFRS 8 - தொழிற்பாட்டு பிரிவுகள்
[10] SLFRS 10 - ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்
[11] SLFRS 11 - இணைந்த ஏற்பாடுகள்
[12] SLFRS 12 - ஏனைய உரிமங்களிலான நாட்டங்களை வெளிக்காட்டல்
[13] SLFRS 13 - சீர்மதிப்பு அளவீடு
[14] LKAS 1 - நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்.
[15] LKAS 2 - தொக்குகள்
[16] LKAS 7 - காசுப்பாய்வுக் கூற்று
[17] LKAS 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்
[18] LKAS 10 - அறிக்கையிடும் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்
[19] LKAS 11 - நிர்மாண வேலை ஒப்பந்தங்கள்
[20] LKAS 12 - வருமான வரிகள்
[21] LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்
[22] LKAS 17 - குத்தகைகள்
[23] LKAS 18 - வருமானம்
[24] LKAS 19 - ஊழியர் பயன்கள்
[25] LKAS 20 - அரச கொடைகளுக்கான கணக்கீடும் அரச உதவிகளின் வெளிக்காட்டலும்
[26] LKAS 21 - அந்நிய நாணயமாற்று வீதங்களின் மாற்றங்களின் விளைவுகள்
[27] LKAS 23 - கடன்படுகைக் கிரயங்கள்
[28] LKAS 24 - உறவுமுறைசார் பகுதியினர் தொடர்பான வெளிப்படுத்தல்கள்
[29] LKAS 26 - ஓய்வூதிய அக்கறைபுரி திட்டங்களின் கணக்கீடும் அறிக்கையிடலும்
[30] LKAS 27 - ஒன்றித்த மற்றும் தனியான நிதிக்கூற்றுக்கள்
[31] LKAS 28 - கூட்டுக் கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகளிலான முதலீடுகள்
[32] LKAS 29 - உக்கிரமான பணவீக்கப் பொருளாதாரங்களில் நிதி அறிக்கையிடல்
[33] LKAS 32 - நிதிச்சாதனங்கள்: முன்னிலைப்படுத்தல்
[34] LKAS 33 - பங்கொன்றிக்கான வருவாய்
[35] LKAS 34 - இடைக்கால நிதி அறிக்கையிடல்

[36] LKAS 36 - சொத்துக்களின் சேத இழப்பு

[37] LKAS 37 - ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள்

[38] LKAS 38 - அருவச் சொத்துக்கள்

[39] LKAS 39 - நிதிச் சாதனங்கள்: ஏற்பிசைவும் அளவீடும்

[40] LKAS 40 - முதலீட்டு ஆதனம்

[41] LKAS 41 - விவசாயம்

**நிதிக்கூற்றுக்களின் தயாரிப்புக்கும் முன்னிலைப்படுத்தலுக்குமான சட்டகம்**

மாற்றமில்லை

**SLFRS 1 இலங்கை கணக்கீட்டு நியமங்களின் முதன்முறை ஏற்பிசைவு (ஏற்பு)**

| *தற்போதைய பந்தித் தொடர்பு* | *பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி* |
|---|---|
| பந்தி 4A | பந்தி 2 மற்றும் 3 இன் தேவைப்பாடுகளைக் கருத்தில் கொள்ளாது, உரிமம் முன்னைய அறிக்கையிடல் காலப்பகுதி ஒன்றில் SLFRS இனைப் பிரயோகித்து இருக்க, ஆனால் மிக அண்மைய கடந்தகால வருடாந்த நிதிக்கூற்றுக்கள் SLFRS உடனான இணக்கப்பாடு தொடர்பான வெளிப்படையான மற்றும் வரையறுக்கப்படாத கூற்றினைக் கொண்டிராத போது, உரிமம் இந்த SLFRS நியமத்தினைப் பிரயோகித்தல் வேண்டும் அல்லது LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* எனும் நியமத்திற்கு இணக்கமான வகையில் உரிமம் இந்த SLFRS நியமத்தினைப் பிரயோகிப்பதனை எப்போதுமே நிறுத்தவில்லை எனக் காட்டும் வகையில் SLFRS இனை முன்னிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 4B | உரிமம் பந்தி 4A க்கு அமைவான முறையில் SLFRS இனை பின்பற்றத் தீர்மானிக்காத போதும், உரிமமானது LKAS 8 இன் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக பந்தி 23A-23B இல் உள்ள வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளை பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 19 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 21 | LKAS 1 உடன் ஒத்திசையும் பொருட்டு, உரிமம் <u>ஒன்றின்</u> முதலாவது SLFRS நிதிக் கூற்றுக்கள் <u>முன்னிலைப்படுத்தப்பட்ட அனைத்துக் கூற்றுக்களுக்குமான</u> உரிய ஒப்பீட்டுத் தகவல்கள் உள்ளடங்கலாக குறைந்தபட்சம் மூன்று நிதிநிலைக் கூற்றுக்களையும், இரு <u>இலாபநட்ட</u> மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்றுக்களையும், இரு வேறான <u>இலாப நட்டக்</u> கூற்றுக்களையும் (முன்னிலைப்படுத்தி இருப்பின்), இரண்டு காசுப்பாய்வுக் கூற்றுக்களையும், இரண்டு உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்றுக்களையும், தொடர்புபட்ட குறிப்புக்களையும் உட்படுத்தும். |
| பந்தி 23A | <u>முன்னைய காலப்பகுதிகளில் SLFRS இனைப் பிரயோகித்த உரிமம் ஒன்று பந்தி 4A இல் குறிப்பிடப்பட்டவாறு பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தல் வேண்டும்:</u><br>(அ) <u>SLFRS இனை பிரயோகிப்பதை நிறுத்தியதற்கான காரணம்.</u><br>(ஆ) <u>உரிமம் மீளவும் SLFRSஇன் பிரயோகத்தினை தொடர்வதற்கான காரணம்</u> |
| பந்தி 23B | <u>பந்தி 4A க்கு அமைவான முறையில் SLFRS 1 இனை பின்பற்றத் தீர்மானிக்காத போது, உரிமமானது அது எப்போதுமே அதன் பிரயோத்தை நிறுத்தாதது போன்ற முறையில் அதனைப் பின்பற்றத் தெரிவு செய்தமைக்கான காரணங்களை விளக்குதல் வேண்டும்.</u> |
| பந்தி 29A | <u>*(இந்தப் பந்தியானது இதுவரையில் நடைமுறைக்கு வராத மாற்றங்களை உள்ளடக்குகின்றது, ஆகையால் இந்த வெளியீட்டில் உள்ளடக்கப்படவில்லை).*</u> |

| | |
|---|---|
| | **உப கம்பனிகள், கூட்டுத் தொழில் முயற்சிகள் மற்றும் இணை நிறுவனங்கள் ஆகியவற்றில் முதலீடுகளுக்கான கருதப்படும் கிரயத்தின் உபயோகம்** |
| பந்தி 31 | அதேபோல, உரிமமொன்று அதன் ஆரம்ப SLFRS நிதிநிலைக்கூற்றில் உபகம்பனி, கூட்டுத் தொழில் முயற்சி அல்லது இணைந்த கம்பனி ஒன்றில் முதலீடு ஒன்றிற்காக, அதன் வேறான நிதிக்கூற்றில் கருதப்படும் கிரயத்தினை உபயோகிக்குமேயாகில் (பந்தி D15 இனைப் பார்க்கவும்), உரிமத்தின் முதலாவது SLFRS வேறான நிதிக்கூற்று கீழ்வருவனவற்றினை வெளிக்காட்டும்: |
| பந்தி 34 | உரிமமொன்றின் முதலாவது SLFRS நிதிக் கூற்றுக்கள் 2012 சனவரி 1ம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பமாகும் காலமொன்றிற்கு ஆனதெனில், உரிமம் இந்த நியமத்தினை பிரயோகிக்கும். முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமமொன்று இந்த SLFRS இனை முந்திய காலமொன்றிற்கு பிரயோகிக்குமாகில், அது அந்த விடயத்தினை வெளிக்காட்டல் வேண்டும். |
| பந்தி 39I | SLFRS 10 *ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்* மற்றும் SLFRS 11 *கூட்டு ஏற்பாடுகள்* ஆகிய நியமங்கள் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டதுடன், திருத்தப்பட்ட பந்திகள் 31, B7, C1, D1, D14 மற்றும் D15 ஆகியவற்றுடன் சேர்க்கப்பட்ட பந்தி D31. SLFRS 10 மற்றும் SLFRS 11 நியமங்களினைப் பிரயோகிக்கும் போது உரிமம் அவ்வாறான மாற்றங்களைப் பிரயோகிக்கும். |
| பந்தி 39J | SLFRS 13 *சீர்பெறுமதி மதிப்பீடு* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது, பந்தி 19 நீக்கப்பட்டுள்ளது, இணைப்பு A இல் சீர்பெறுமதிக்கான வரைவிலக்கணம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், மாற்றம் செய்யப்பட்ட பந்திகள் D15 மற்றும் D20. SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது உரிமம் அவ்வாறான மாற்றங்களைப் பிரயோகிக்கும். |
| பந்தி 39K | *ஏனைய முற்றடக்க வருமான உருப்படிகளின் முன்னிலைப்படுத்தல்* பகுதிக்கான மாற்றங்கள், 2014 இல் வெளியிடப்பட்டது, பந்தி 19 மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 2014 இல் மாற்றம் செய்யப்பட்டவாறான LKAS 1 நியமத்தைப் பிரயோகிக்கும் போது உரிமம் அவ்வாறான மாற்றங்களைப் பிரயோகிக்கும். |
| பந்தி 39L | LKAS 19 *ஊழியர் பயன்கள்* (2013 இல் மாற்றம் செய்யப்பட்டவாறாக), பந்தி D1, திருத்தப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட பந்திகள் D10 மற்றும் D11, சேர்க்கப்பட்டுள்ள பந்தி E5. LKAS 19 (2013 இல் மாற்றம் செய்யப்பட்டவாறாக) நியமத்தைப் பிரயோகிக்கும் போது உரிமம் அவ்வாறான மாற்றங்களைப் பிரயோகிக்கும். |
| பந்தி 39M | IFRIC 20 *ஒரு சுரங்க மேற்பரப்பின் உற்பத்திக் கட்டத்திலான புறநீக்கல் செலவுகள்* சேர்க்கப்பட்ட பந்தி D32 மற்றும் திருத்தப்பட்ட பத்தி D1. IFRIC 20 நியமத்தைப் பிரயோகிக்கும் போது உரிமம் அவ்வாறான மாற்றங்களைப் பிரயோகிக்கும். |
| பந்தி 39N | அரச கடன்கள் (SLFRS 1இன் திருத்தங்கள்), 2014 ல் வெளியிடப்பட்டது. சேர்க்கப்பட்ட பந்திகள் B1(f) மற்றும் B10-B12. சேர்க்கப்பட்டது. உரிமங்கள் இப் பந்திகளை 01 சனவரி 2014 அன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கும் ஆண்டு காலப்பகுதிகளில் பிரயோகிக்கும். முற்காலப் பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| பந்தி 39O | பந்தி B10 மற்றும் B11 ஆகியன SLFRS 9 இனைக் குறிப்பிடுகின்றன. உரிமம் ஒன்று இந்த நியமத்தினைப் பிரயோகித்து ஆனால் SLFRS 9 இனைப் பிரயோகிக்காது விடின், B10 மற்றும் B11 ஆகிய பந்திகளில் உள்ள குறிப்புரைகள் LKAS 39 *நிதிச் சாதனங்கள்: ஏற்பிசைவும் மதிப்பீடும்* நியமத்துக்கான குறிப்புரைகள் என வாசிக்கப்படல் வேண்டும். |
| பந்தி 39P | IASB இன் வருடாந்த மேம்படுத்தல்களின் பின்பற்றுகை (2009-2011 சுழற்சிக் காலம், மே 2012 இல் வெளியிடப்பட்டது) சேர்க்கப்பட்ட பந்திகள் 4A-4B மற்றும் |

| | |
|---|---|
| | 23A-23B. உரிமமானது அம் மாற்றங்களை LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* நியமத்திற்கு இணக்கமான முறையில் முற்கால விளைவுள்ள வகையில் பிரயோகிக்க முடியும். முற்கூட்டிய பிரயோகம் அனுமதிக்கப்படும். உரிமம் திருத்தங்களை முற்கூட்டியே பிரயோகித்தால் அதனை வெளிப்படுத்த வேண்டும். |
| பந்தி 39Q | IASB இன் வருடாந்த மேம்படுத்தல்களின் பின்பற்றுகை (2009-2011 சுழற்சிக் காலம், மே 2012 இல் வெளியிடப்பட்டது) திருத்தப்பட்ட பந்தி D23. உரிமமானது அத் திருத்தங்களை LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* நியமத்திற்கு இணக்கமான முறையில் முற்கால விளைவுள்ள வகையில் 1 சனவரி 2014 இல் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் காலப்பகுதிகளுக்குப் பிரயோகிக்க முடியும். முற்கூட்டிய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் முற்பட்ட காலப்பகுதிக்கு அம் மாற்றத்தினைப் பிரயோகித்தால், அந்த விடயம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| பந்தி 39R | IASB இன் வருடாந்த மேம்படுத்தல்களின் பின்பற்றுகை (2009-2011 சுழற்சிக் காலம், மே 2012 இல் வெளியிடப்பட்டது) திருத்தப்பட்ட பந்தி D23. உரிமமானது அம் மாற்றங்களை LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் திருத்தங்களை மற்றும் வழுக்கள்* நியமத்திற்கு இணக்கமான முறையில் முற்கால விளைவுள்ள வகையில் 1 சனவரி 2014 இல் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் காலப்பகுதிகளுக்குப் பிரயோகிக்க முடியும். முற்கூட்டிய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் முற்பட்ட காலப்பகுதிக்கு அம் மாற்றத்தினைப் பிரயோகிப்பின், அந்த விடயம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| **பின்னிணைப்பு A** | |
| சீர்மதிப்பு | சீர்மதிப்பு என்பது மதிப்பீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்கள் இடையே ஒரு முறையான ஊடுசெயல் மூலம் ஒரு சொத்தை விற்பதனால் பெறப்படும் அல்லது ஒரு பரிப்பினை மாற்றம் செய்வதற்காக அளிக்கப்படும் விலை ஆகும். (SLFRS 13 இனைப் பார்க்கவும்) |
| **பின்னிணைப்பு B** | |
| பந்தி B1 | உரிமமொன்று கீழ்வரும் விதிவிலக்குகளை பிரயோகிக்கும்:<br>அ) நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப்பரிப்புக்களின் ஏற்பிசைவு விலக்கல் (பந்திகள் B2 மற்றும் B3),<br>ஆ) தளம்பற் காப்புக் கணக்கீடு (பந்திகள் B4 - B6),<br>இ) கட்டுப்பாடு அற்றோர் அக்கறைகள் (பந்தி B7)<br>ஈ) (*இந்தப் பந்தியானது இதுவரையில் நடைமுறைக்கு வராத திருத்தங்களை உள்ளடக்குகின்றது, ஆகையால் இந்த வெளியீட்டில் உள்ளடக்கப்படவில்லை).*<br>*உ) (இந்தப் பந்தியானது இதுவரையில் நடைமுறைக்கு வராத திருத்தங்களை உள்ளடக்குகின்ற காரணத்தால் இந்தப் பதிப்பில் உள்ளடக்கப்படவில்லை).*<br>*ஊ) அரசாங்கக் கடன்கள் பந்திகள் (B10 – B12).* |
| பந்தி B7 | முதற்தடவையாக கடைப்பிடிக்கும் உரிமமொன்று SLFRSs களுக்கு மாறிய திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் SLFRS 10 இன் கீழ்வரும் தேவைப்பாடுகளை பிரயோகிக்கும்:<br>அ) கட்டுப்பாடு அற்றோர் நாட்டங்களில் பற்றாக்குறையான மீதியினை விளைவிக்கின்ற போதிலும், மொத்த முற்றடக்க வருமானம் முதனிலைக் |

| | |
|---|---|
| | கம்பனியின் உரிமையாளர்களுக்கும் கட்டுப்பாடற்றோர் நாட்டங்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்ற, பந்தி B 94 இன் தேவைப்பாடுகள்<br><br>ஆ) கட்டுப்பாட்டு இழப்பினை விளைவிக்காத வகையில், உபகம்பனியில் முதனிலைக் கம்பனியின் உரிமை நாட்டத்தில் மாற்றங்களுக்கான கணக்கீட்டிற்காக பந்தி 23 மற்றும் B93 இலுள்ள தேவைப்பாடுகள் அத்துடன்<br><br>இ) உபகம்பனியின் மீது கட்டுப்பாடு இழப்புக்கான கணக்கீட்டிற்கான பந்திகள் B97- B99 இலுள்ள தேவைப்பாடுகளும், SLFRS 5 *விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்களும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகளும்* எனும் நியமத்தின் பந்தி 8A யின் அதனுடன் தொடர்புபட்ட தேவைப்பாடுகளும்.<br><br>எனினும், முதற்தடவையாக கடைப்பிடிக்கும் உரிமமொன்று கடந்த கால வியாபார இணைப்புக்களுக்கு முன்பிருந்து அமுலுக்கு<br><br>வரும்வகையில் SLFRS 3 இனை பிரயோகிக்க தேர்வு செய்யுமேயாகில், அது இந்த SLFRS இன் பந்தி C1 க்கு அமைவாக LKAS 27 இனையும் பிரயோகிக்கும். |
| பந்தி B8 | [*இந்தப் பந்தியானது இதுவரையில் நடைமுறைக்கு வராத திருத்தங்களை உள்ளடக்குகின்றது, ஆகையால் இந்த வெளியீட்டில் உள்ளடக்கப்படவில்லை.*] |
| பந்தி B9 | [*இந்தப் பந்தியானது இதுவரையில் நடைமுறைக்கு வராத திருத்தங்களை உள்ளடக்குகின்றது, ஆகையால் இந்த வெளியீட்டில் உள்ளடக்கப்படவில்லை.*] |
| | **அரச கடன்கள்** |
| பந்தி B10 | முதன்முறை பின்பற்றுபவர்கள் பெறப்பட்ட அனைத்து அரச கடன்களையும் ஒரு நிதிப் பரிப்பாக அல்லது LKAS 32 *நிதிச்சாதனங்கள்: முன்னிலைப்படுத்தல்* நியமத்துக்கு இணைவான வகையில் ஒரு உரிமையாண்மை சாதனமாக வகைப்படுத்தல் வேண்டும். பந்தி B11 இனால் அனுமதிக்கப்பட்ட போதல்லாது ஏனைய சந்தர்ப்பங்களில் முதன்முறை பின்பற்றுபவர்கள் SLFRS க்கு மாற்றமடையும் திகதியில் காணப்படும் அரச கடன்களுக்கு எதிர்வுகூறலான வகையில் SLFRS 9 *நிதிச் சாதனங்கள்* மற்றும் LKAS 20 *அரச மானியங்களுக்கான கணக்கீடும் அரசாங்க உதவியின் வெளிப்படுத்தலும்* ஆகிய நியமங்களில் கூறப்பட்ட தேவைப்பாடுக்ளைப் பிரயோகிப்பதுடன் தொடர்புபட்ட அரச கடன் மூலமான நன்மையினை ஒரு அரச மானியம் என்ற வகையில் சந்தை வட்டி வீதத்துக்குக் குறைவான வீதத்தில் ஏற்பிசைவு செய்தல் ஆகாது. அதன்படியாக முதன்முறை பின்பற்றுபவர் ஒருவர் அவர்களது முன்னைய GAAPன் நியமங்களின் கீழ் அரச கடன் ஒன்றினை SLFRS இன் தேவைப்பாடுகளுக்கு இணக்கமான அடிப்படையில் சந்தை வீதத்துக்குக் குறைவான வட்டி வீதத்தில் ஏற்பிசைவு செய்து மதிப்பிட்டு இருக்காவிடில், அது முன்னைய நியமத்தின் படியான கடனுடைய முன்கொணரற் பெறுமதியினையே SLFRS க்கு மாற்றமடையும் திகதியில் SLFRS இன் படியான ஆரம்ப நிதி நிலைமைக் கூற்றின் ஆரம்ப மீதியின் முன்கொணரற் பெறுமதியாகப் பயன்படுத்த முடியும். உரிமம் ஒன்று SLFRS க்கு மாற்றமடைந்த பின்னர் அவ்வாறான கடன்களின் மதிப்பீட்டிற்காக SLFRS 9 இனைப் பயன்படுத்த முடியும். |
| பந்தி B11 | பந்தி B10 இனை கருத்தில் எடுக்காது உரிமம் SLFRS க்கு மாற்றமடையும் திகதிக்கு முன்னர் உருவாக்கப்பட்ட ஏதேனும் அரச கடன்கள் தொடர்பாக அவ்வாறு செய்வதற்கான தகவல் கடனுக்கு கணக்கு வைக்கும் ஆரம்பதியிலேயே பெறப்பட்டது என்ற அடிப்படையில், SLFRS 9 மற்றும் LKAS 20 ஆகிய நியமங்களினது தேவைப்பாடுகளை முற்கால விளைவுள்ள வகையில் பிரயோகிக்க முடியும். |
| பந்தி B12 | B10 மற்றும் B11 ஆகிய பந்திகளின் தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் உரிமம் ஒன்றினை D19-D19D ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்ட இலாப |

| | |
|---|---|
| | நட்டங்களினூடான சீர் மதிப்புப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிச் சாதனங்களின் வகைப்படுத்தல் தொடர்பான விலக்களிப்புக்களை பயன்படுத்துவதிலிருந்து தடுக்கவில்லை. |
| பின்னிணைப்பு C | இந்த பின்னிணைப்பானது இந்த SLFRS இன் ஒன்றித்த பகுதியாகும். உரிமமொன்று SLFRS க்கு மாறிய திகதிக்கு முன்பதாக ஏற்பிசைவு செய்த வணிக இணைப்புக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பிரயோகிக்கும். *இப் பின்னிணைப்பானது SLFRS 3* வணிக இணைப்புக்கள் *நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்ட வணிக இணைப்புக்களுக்கு மாத்திரம் பயன்படுத்தப்படல் வேண்டும்.* |
| C1 | முதன்முறையாகப் பின்பற்றும் உரிமமொன்று கடந்தகால வணிக இணைப்புக்களுக்கு (SLFRSs களுக்கு மாறிய திகதிக்கு முன்பதாக நிகழ்ந்த வணிக இணைப்புக்களுக்கு) முன்பிருந்து அமுலுக்கு வரும் வகையில் SLFRS 3 இனைப் பிரயோகிக்க தேர்வு செய்யாதிருக்கலாம். எனினும், முதன்முறையாக பின்பற்றுபவர் SLFRS 3 உடன் ஒத்திசையும் பொருட்டு எந்தவொரு வணிக இணைப்பினையும் திருத்திக் கூறியிருந்தால், அது சகல பின்னைய வணிக இணைப்புக்களையும் திருத்திக் கூறுவதுடன் அந்தத் திகதியிலிருந்து SLFRS 10 இனையும் பிரயோகிக்கும். உதாரணமாக, முதன்முறையாக பின்பற்றுபவர் 20X6 யூன் 30 இல் நிகழ்ந்த வணிக இணைப்பொன்றினை திருத்திக் கூறுவதற்கு தேர்வுசெய்தால், அது 20X6 யூன் 30 இற்கும் SLFRS களுக்கு மாறிய திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த சகல வணிக இணைப்புக்களையும் திருத்திக் கூறுவதுடன், அது 20X6 யூன் 30ந் திகதியிலிருந்து SLFRS 10 இனையும் பிரயோகிக்கும். |
| **பின்னிணைப்பு D** | |
| பந்தி D1 | உரிமமொன்று கீழே தரப்பட்டுள்ள விதிவிலக்குகளில் ஒன்றினையோ அல்லது அதிகமானவற்றினையோ உபயோகத்திற்காக தேர்வு செய்யக்கூடும்:<br>(a) பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஊடுசெயல்கள் (பந்திகள் D2 மற்றும் D3);<br>(b) காப்புறுதி ஒப்பந்தங்கள் (பந்தி D4);<br>(c) கருதப்படு கிரயம் (பந்திகள் D5 - D8B);<br>(d) குத்தகைகள் (பந்தி D9 மற்றும் D9A);<br>(e) [நீக்கப்பட்டுள்ளது]<br>(f) நாணய மாற்று திரள் வேறுபாடுகள் (பந்திகள் D12 மற்றும் D13);<br>(g) உப கம்பனிகள், கூட்டுத் தொழில் முயற்சிகள் மற்றும் இணைக் கம்பனி முதலீடுகள் (பந்திகள் D14 மற்றும் D15);<br>(h) உபகம்பனிகள், கூட்டுத் தொழில் முயற்சிகள் மற்றும் இணைக் கம்பனிகளின் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் (பந்திகள் D16 மற்றும் D17);<br>(i) கூட்டு நிதிச் சாதனங்கள் (பந்தி D18);<br>(j) முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிச் சாதனங்களின் வகைப்படுத்தல் (பந்தி D19);<br>(k) ஆரம்ப ஏற்பிசைவின் போது நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிப்பரிப்புக்களின் சீர்மதிப்பு அளவீடு (பந்தி D20);<br>(l) ஆதனம், பொறி மற்றும் உபகரண கிரயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தொழிற்பாட்டு நிறுத்த பரிப்புக்கள் (பந்தி D21); |

| | |
|---|---|
| | (m) IFRIC 12 சேவைச் சலுகைகள் பற்றிய ஏற்பாடுகளுக்கு அமைவாக கணக்கிடப்படும் நிதிச் சொத்துக்கள் அல்லது அருவச் சொத்துக்கள் (பந்தி ம்22), மற்றும்<br>(n) கடன்படுகைக் கிரயங்கள் (பந்தி D23);<br>(o) வாடிக்கையாளர்களிடம் இருந்தான சொத்துக்களின் மாற்றல்கள் (பந்தி D24);<br>(p) குறைவடையும் உரிமை ஆதனங்களுடனான நிதிசார் பரிப்புக்கள்(பந்தி D25);<br>(q) கடுமையான உயர் பணவீக்கம் (பந்திகள் D26- D30);<br>(r) இணைந்த ஏற்பாடுகள் (பந்தி D31);<br>(s) அகழ்வு முகப்பின் உற்பத்திக் கட்டத்திலான நீக்கல் கிரயங்கள் (பந்தி D32). |
| பந்தி D10 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி D11 | நீக்கப்பட்டுள்ளது |
| | **உப கம்பனிகள், கூட்டுத் தொழில் முயற்சிகள் மற்றும் இணைக் கம்பனிகளிலான முதலீடுகள்** |
| பந்தி D14 | உரிமமொன்று வேறான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது உப கம்பனிகள், கூட்டுத் தொழில் முயற்சிகள் மற்றும் இணைக் கம்பனிகளின் மீதான அதன் முதலீடுகளை கீழே தரப்பட்டுள்ள இரண்டு வழிகளில் ஒன்றின்படி கணக்கிட வேண்டுமென LKAS 27 கேட்டுக் கொள்கின்றது:<br>அ) கிரயத்தில் அல்லது<br>ஆ) LKAS 39 க்கு அமைவாக. |
| பந்தி D15 | முதன்முறையாகப் பின்பற்றும் உரிமமொன்று அவ்வாறான முதலீடொன்றினை பந்தி D14 க்கு அமைவாக கிரயத்தில் அளவிடுமேயாகில், அது அதன் வேறான ஆரம்ப SLFRS நிதிநிலைக் கூற்றில் அந்த முதலீட்டினை கீழ்வரும் ஒரு தொகையில் அளவிடும்:<br>அ) LKAS 27 க்கு அமைவாக கணிக்கப்பட்ட கிரயத்தில் அல்லது<br>ஆ) கருதப்பட்ட கிரயத்தில். அவ்வாறான முதலீடொன்றின் கருதப்படு கிரயமானது அது,<br>(i) SLFRS க்கு மாறிய திகதியில் அதன் வேறான நிதிக்கூற்றுக்களில் (LKAS 39 க்கு அமைவாக கணிக்கப்பட்ட) சீர்மதிப்பாகும், அல்லது<br>(ii) அந்தத் திகதியல் முன்னைய GAAP முன்கொணரற் தொகையாகும்.<br>முதன்முறையாகப் பின்பற்றும் உரிமம் அது கருதப்படு கிரயத்தினை உபயோகித்து அளவிட தேர்வு செய்யும், உபகம்பனி, கூட்டுத் தொழில் முயற்சி அல்லது இணைக்கம்பனி ஒவ்வொன்றிலும் அதன் முதலீட்டினை அளவிடுவதற்கு மேலே (i) அல்லது (ii) இனை தேர்வு செய்யலாம். |
| பந்தி D16 (a) | ஒன்றித்தல் விதிமுறைகளுக்கும் முதனிலைக் கம்பனி உபகம்பனியினை சுவீகரித்த வியாபார இணைப்பின் தாக்கங்களுக்கும் செம்மையாகக் மேற்கொள்ளப்படாது இருப்பின், முதனிலைக் கம்பனி SLFRS க்கு மாறிய திகதியின் அடிப்படையில், முதனிலைக் கம்பனியின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு இருக்கக்கூடிய முன்கொணரற் தொகைகள் (SLFRS 10 இல் குறிப்பிடப்பட்ட விதமாக இலாப நட்டங்களினூடாக சீர்பெறுமதி மதிப்பிடப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்ட காரணத்தினால் இந்தப் பகுதி முதலீட்டு உப கம்பனி ஒன்றின் உப கம்பனிக்கு பொருத்தமானதாக இல்லை): அல்லது |

| | |
|---|---|
| பந்தி D17 | எனினும், உரிமமொன்று அதன் உபகம்பனிக்கு (அல்லது கூட்டுக்கம்பனிக்கு அல்லது கூட்டுத் தொழில் முயற்சிக்கு) பின்னதாக முதன்முறையாகப் பின்பற்றும் உரிமமொன்றாக வருமேயாகில், அந்த உரிமம் அதன் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் உபகம்பனியின் (அல்லது இணைக் கம்பனியின் அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின்) சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை உபகம்பனியின் (அல்லது இணைக் கம்பனியின் அல்து கூட்டுத் தொழில் முயற்சியின்) நிதிக்கூற்றுக்களிலுள்ள அதே முன்கொணரற் தொகைகளை ஒன்றித்தல் மற்றும் உரிமையாண்மைக் கணக்கீட்டிற்கான செம்மையாக்கத்திற்காகவும் உரிமம் உபகம்பனியினை சுவீகரித்த வியாபார இணைப்பின் தாக்கங்களுக்காகவும் செம்மையாக்கம் செய்யப்பட்ட பின்னர் அளவிடும். <u>இத் தேவைப்பாட்டுக்கு தொடர்பற்ற வகையில், முதலீட்டு உப கம்பனிகளில் பயன்படுத்தப்படும் ஒன்றித்தலுக்கான விலக்களிப்பினை முதலீடல்லாத உரிமத்தின் முதனிலைக் கம்பனி பயன்படுத்தலாகாது.</u> அதே போல, முதனிலைக் கம்பனியொன்று அதன் ஒன்றித்த நிதிக் கூற்றுக்களுக்கு முன்னதாகவோ அல்லது பின்னதாகவோ அதன் வேறான நிதிக் கூற்றுக்களுக்கு முதன்முறையாகப் பின்பற்றும் உரிமமொன்றாக வருமேயாகில், அது அதன் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை இரு நிதிக்கூற்றுக்களிலும், ஒன்றித்தல் செம்மையாக்கங்கள் தவிர, ஒரே தொகைகளில் அளவிடும். |
| பந்தி D19A-D19D | <u>*இந்தப் பந்தியானது இதுவரையில் நடைமுறைக்கு வராத திருத்தங்களை உள்ளடக்குகின்றது. ஆகையால் இந்த வெளியீட்டில் உள்ளடக்கப்படவில்லை.*</u> |
| பந்தி D20 | <u>பந்திகள் 7 மற்றும் 9 ஆகியவற்றின் தேவைப்பாட்டுக்கு தொடர்பற்ற வகையில், உரிமம் ஒன்று SLFRS க்கு மாற்றமடைந்த திகதியில் அல்லது அதற்குப் பின்னர் ஏற்படும் ஊடுசெயல் தொடர்பான வகையில் LKAS 39 இன் பந்தி AG76(a) இன் தேவைப்பாடுகளைக் பிரயோகிக்க முடியும்.</u> |
| பந்தி D23 | <u>முதன்முறை பின்பற்றுபவர் ஒருவர் LKAS 23 நியமத்தின் தேவைப்பாடுகளை நிலைமாறுகைத் திகதியில் இருந்து அல்லது LKAS 23 நியமத்தின் பந்தி 28 இனால் அனுமதிக்கப்பட்ட வகையில் அதற்கு முன்னைய காலப்பகுதி ஒன்றில் இருந்து பிரயோகிப்பதற்காக தேர்வு செய்துகொள்ள முடியும். உரிமம் இந்த விலக்களிப்புக்களைப் பிரயோகிக்கும் திகதியில் இருந்து உரிமம் LKAS 23 நியமத்தினைப் பிரயோகிக்க ஆரம்பிக்கும்.</u><br><br>(அ) <u>முன்னைய GAAP நியமங்களின் அடிப்படையில் மூலதனமாக்கப்பட்டு அத் திகதியில் சொத்தின் முன்கொணரல் தொகையில் உள்ளடக்கப்பட்ட கடன்படு கிரயக் கூறுகளை மீள்கூற்று அளித்தல் ஆகாது. அத்துடன்,</u><br><br>(ஆ) <u>அத் திகதிக்குப் பின்னர் இடம்பெற்ற, ஏற்கனவே நிர்மாணத்தில் உள்ள தகுதி வாய்ந்த சொத்தின் மீது ஏற்பட்ட கடன்படு கிரயங்கள் உள்ளடங்கலான கடன்படுகைக் கிரயங்களை LKAS 23 நியமத்துக்கு இணக்கமான வகையில் கணக்கு வைத்தல் வேண்டும்.</u> |
| | **இணைந்த எற்பாடுகள்** |
| பந்தி D31 | <u>முதன்முறை பின்பற்றுபவர் ஒருவர் SLFRS 11 நியமத்தின் நிலைமாறுகை ஏற்பாடுகளைப் பின்வரும் விலக்களிப்புக்களுடன் பிரயோகிக்க முடியும்.</u><br><br>(அ) <u>SLFRS 11 நியமத்தின் நிலைமாறுகை எற்பாடுகளைப் பிரயோகிக்கும் போது, முதன்முறை பின்பற்றுபவர் இந்த ஏற்பாடுகளை SLFRS க்கு நிலைமாறும் திகதியில் இருந்த பிரயோகித்தல் வேண்டும்.</u><br><br>(ஆ) <u>விகிதாசார ஒன்றிணைத்தலில் இருந்து உரிமையாண்மை முறையிலான ஒன்றிணைத்தலுக்கு மாற்றமடையும் போது, முதன்முறை பின்பற்றுபவர் முதலீடு சேத இழப்பக்கு உட்பட்டமைக்காக ஏதேனும் குறிகாட்டிகள் காணப்படுகின்றனவா என்பதைக் கருத்தில் கொள்ளாது LKAS 36 நியமத்துக்கு இணக்கமான வகையில் SLFRS க்கு நிலைமாறும் திகதியிலான முதலீட்டின் மீதான சேத இழப்புப் பரிசோதனையை மேற்கொள்ளுதல் வேண்டும். இதன் விளைவாக ஏற்படும் ஏதேனும் சேத இழப்புக்கள் நிலைமாறும் திகதியிலான பகிரப்படாத இலாபங்களிலான ஒரு சீராக்கமாக ஏற்பிசைவு செய்யப்படல் வேண்டும்.</u> |

| | |
|---|---|
| | **அகழ்வு முகப்பு ஒன்றின் உற்பத்திக் கட்டத்திலான பிரித்தெடுத்தல் கிரயங்கள்** |
| பந்தி D32 | முதன்முறை பின்பற்றுபவர் ஒருவர் IFRIC 20 *அகழ்வு முகப்பு ஒன்றின் உற்பத்திக் கட்டத்திலான பிரித்தெடுத்தல் கிரயங்கள்* நியமத்தின் A1 முதல் A4 வரையான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட நிலைமாறுகை ஏற்பாடுகளைப் பிரயோகிக்க முடியும். இப் பந்தியில் விளைவுள்ள திகதிக்கான குறிப்பானது 01 சனவரி 2013 அல்லது SLFRS அறிக்கையிடல் காலப்பகுதியின் ஆரம்பம், இவை இரண்டில் எது பிந்தியதோ அது என வியாக்கியானம் செய்யப்படல் வேண்டும். |
| **பின்னிணைப்பு E** | **SLFRSs களில் இருந்தான குறுங்கால விலக்களிப்புக்கள்**<br><br>*இப் பின்னிணைப்பானது SLFRS இன் மிக அவசியமான ஒரு பகுதியாகும்.*<br><br>E1 [*இந்தப் பந்தியானது இதுவரையில் நடைமுறைக்கு வராத மாற்றங்களை உள்ளடக்குகின்றது, ஆகையால் இந்த வெளியீட்டில் உள்ளடக்கப்படவில்லை.*]<br><br>E2 [*இந்தப் பந்தியானது இதுவரையில் நடைமுறைக்கு வராத மாற்றங்களை உள்ளடக்குகின்றது, ஆகையால் இந்த வெளியீட்டில் உள்ளடக்கப்படவில்லை*]<br><br>**நிதிச் சாதனங்கள் தொடர்பான வெளிப்படுத்தல்கள்**<br><br>E3 முதன்முறை பின்பற்றுபவர் ஒருவர் SLFRS 7[1] நியமத்தின் பந்தி 44G இல் உள்ள நிலைமாறுகை ஏற்பாடுகளைப் பிரயோகிக்க முடியும்.<br><br>E4 முதன்முறை பின்பற்றுபவர் ஒருவர் SLFRS 7[2] நியமத்தின் பந்தி 44G இல் உள்ள நிலைமாறுகை ஏற்பாடுகளைப் பிரயோகிக்க முடியும்.<br><br>**ஊழியர் பயன்கள்**<br>E5 முதன்முறை பின்பற்றுபவர் ஒருவர் LKAS 19 நியமத்தின் பந்தி 173(b) இல் உள்ள நிலைமாறுகை ஏற்பாடுகளைப் பிரயோகிக்க முடியும். |
| | **முதலீட்டு உரிமங்கள்**<br><br>E6 முதனிலைக் கம்பனியான முதன்முறை பின்பற்றுபவர், SLFRSக்கு நிலைமாறும் திகதியில் கிடைக்கக் கூடியதாகவுள்ள தரவுகள் மற்றும் அடிப்படைகளில் அமைந்த விதமாக SLFRS 10 நியமத்தில் குறிப்பிடப்பட்ட விதமாக அது ஒரு முதலீட்டு உரிமமா என்பதை மதிப்பிட்டுக்கொள்ள வேண்டும். |

[1] 2012 இல் வழங்கப்பட்ட, முதற் தடவை பின்பற்றுனர்களுக்கான SLFRS 7 நியம *ஒப்பீட்டு வெளிக்காட்டல்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட விலக்களிப்புக்களின்* (SLFRS 1 நியமத்துக்கான திருத்தம்) விளைவாக பந்தி E3 ஆனது சேர்க்கப்பட்டது. முன்னிருந்தான விளைவுகளின் சாத்தியமான பயன்பாட்டைத் தவிர்ப்பதற்காக மற்றும் தற்போது SLFRS நியமங்களைப் பின்பற்றுபவர்களுடன் ஒப்பிடும் போது முதற்தடவை பின்பற்றுபவர்கள் பிரதிகூலங்களுக்கு உட்படாமையை உறுதி செய்வதற்காக, தற்போது SLFRS நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பவர்களினால் பின்பற்றப்படும் *நிதிச் சாதனங்கள் பற்றிய வெளிக்காட்டல்களை விருத்தி செய்தலில்* (SLFRS7 நியமத்துக்கான திருத்தம்) உள்ளடக்கப்பட்ட அதே நிலைமாறல் ஏற்பாடுகளை முதற்தடவை பின்பற்றுபவர்களும் பின்பற்ற அனுமதிப்பதற்கு சபை தீர்மானித்துள்ளது.

[2] 2012 இல் வழங்கப்பட்ட, முதற் தடவை பின்பற்றுனர்களுக்கான SLFRS 7 *நிதிச் சொத்துக்களுக்கான இடமாற்றலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட விலக்களிப்புக்களின்* (SLFRS 7 நியமத்துக்கான திருத்தம்) விளைவாக பந்தி E4 ஆனது சேர்க்கப்பட்டது. முன்னிருந்தான விளைவுகளின் சாத்தியமான பயன்பாட்டைத் தவிர்ப்பதற்காக மற்றும் தற்போது SLFRS நியமங்களைப் பின்பற்றுபவர்களுடன் ஒப்பிடும் போது முதற்தடவை பின்பற்றுபவர்கள் பிரதிகூலங்களுக்கு உட்படாமையை உறுதி செய்வதற்காக, தற்போது SLFRS நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பவர்களினால் பின்பற்றப்படும் *நிதிச் சொத்துக்களுக்கான இடமாற்றல்- வெளிக்காட்டல்களில்* (SLFRS7 நியமத்துக்கான திருத்தம்) உள்ளடக்கப்பட்ட அதே நிலைமாறல் ஏற்பாடுகளை முதற்தடவை பின்பற்றுபவர்களும் பின்பற்ற அனுமதிப்பதற்கு சபை தீர்மானித்துள்ளது.

| | |
|---|---|
| | E7 முதலீட்டு உரிமமான முதன்முறை பின்பற்றுபவர், SLFRS 10 நியமத்தில் வரையறுக்கப்பட்ட விதமாக, SLFRS 10 நியமத்தின் பந்தி C3C-C3D இல் குறிப்பிடப்பட்ட நிலைமாறுகை ஏற்பாடுகளைப் பிரயோகிக்க முடியும். அதன் முதலாவது நிதிக்கூற்றுக்கள் 31 திசெம்பர் 2014 இல் முடிவடையும் அல்லது அதற்கு முற்பட்டதாக இருப்பின், LKAS 27 நியமத்தின் பந்திகள் 18C-18G பிரயோகிக்கத்தக்கதாகும். முதன்முறைப் பிரயேகத்துக்குப் பின்னர் முதலாவதாக வரும் வருடாந்த காலப்பகுதிக்குப் பிரயோகிக்கத்தக்க, அந்தப் பந்திகளில் கூறப்பட்ட குறிப்புரைகளானவை முன்னிலைப்படுத்தப்பட்ட முன்னைய வருடாந்த காலப்பகுதிக்கானவை என வாசிக்கப்படுதல் வேண்டும். இதன் விளைவாக, இப் பந்திகளில் உள்ள குறிப்புரைகளுக்கு நிலைமாறும் தியதியிலானவை என வாசிக்கப்படல் வேண்டும். |

**SLFRS 2 பங்கு அடிப்படையிலான கொடுப்பனவுகள்**

| *தற்போதைய பந்தித் தொடர்பு* | *பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி* |
|---|---|
| பந்தி 5 | பந்தி 2 இல் குறிப்பிட்டபடி SLFRS இல் உரிமம் ஒன்றின் பொருட்கள் அல்லது சேவைகளைப் பெறும் அல்லது சுவீகரிக்கும் பங்கு அடிப்படையிலமைந்த கொடுப்பனவு ஊடு செயல்களுக்கு பிரயோகிக்கப்படும். இங்கு பொருட்கள் எனும் பதம் தொக்குகள், நுகர்வுப் பொருட்கள், ஆதனம், பொறியும் உபகரணமும், அருவச் சொத்துக்கள் மற்றும் பிற நிதிசாராத சொத்துக்களை உள்ளடக்கும். எனினும், SLFRS 3 இன் பந்திகள் B1-B4 விபரிக்கும் பொதுக் கட்டுப்பாட்டின் கீழான உரிமங்கள் அல்லது வியாபாரங்களின் சேர்க்கையில் அல்லது *SLFRS 11 இணைந்த ஏற்பாடுகள்* நியமத்தினால் வரையறுக்கப்பட்ட கூட்டுத்தொழில் முயற்சி ஒன்றின் உருவாக்கத்துக்கான வியாபாரங்களின் பங்களிப்பில் SLFRS 3 வியாபார இணைப்புக்கள் எனும் நியமம் பிரயோகிக்கப்படும் வியாபார இணைப்பொன்றின் போது கொள்வனவு செய்யப்படும் நிகரச் சொத்துக்களின் பகுதியாக உரிமம் பொருட்களை கொள்வனவு செய்யும் ஊடுசெயல்களுக்கு இந்த SLFRS பிரயோகிக்கப்பட மாட்டாது. எனவே கொள்வனவுக்கு ஆளாகும் உரிமத்தின் கட்டுப்பாட்டினை பெறுவதற்கான பரிமாற்றமாக வியாபார இணைப்பொன்றின் போது வழங்கப்படும் உரிமையாண்மைச் சாதனங்கள் இந்த SLFRS இன் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்டதாகும். எனினும் கொள்வனவுக்கு ஆளாகும் உரிமத்தின் ஊழியர்களுக்கு ஊழியர் என்ற ரீதியில் வழங்கப்படும் உரிமையாண்மைச் சாதனங்கள் (உதாரணம் - அவர்கள் தொடர்ந்து சேவையில் இருப்பதற்கு) இந்த SLFRS நோக்கெல்லைக்கு உட்பட்டதாகும். அதேபோல வியாபார இணைப்பொன்றின் அல்லது வேறு உரிமையாண்மை மீள் கட்டமைப்பாக்கத்தின் காரணமாக *பங்கு அடிப்படையில் அமைந்த கொடுப்பனவு ஏற்பாடுகளினை* இரத்துச் செய்யும், பதிலீடு செய்யும் அல்லது வேறு மாற்றங்கள் செய்யும் செயற்பாடுகள் இந்த நியமத்துக்கு அமைவாக கணக்கீடு செய்யப்படும்.<br><br>SLFRS 3 ஆனது வியாபார இணைப்பு ஒன்றில் வழங்கப்படும் உரிமையாண்மைச் சாதனங்களின் கொள்வனவுக்கு ஆளாகுபவரின் கட்டுப்பாட்டுக்கான (எனவே அத்துடன் SLFRS 3 இன் நோக்கெல்லைக்கு உட்பட) பரிமாற்றத்திற்கு பகுதியான பதிலிறுக்கையாக மாற்றப்பட்டுள்ளதா அல்லது இணைப்புக்குப் பிந்திய காலப்பகுதியில் தொடர்ந்து சேவையில் இருப்பதனை ஏற்பிசைவு செய்யப்படக்கூடியதா என்பதனை தீர்மானிப்பதற்கான (எனவே அத்துடன் SLFRS இன் நோக்கெல்லைக்கு உட்பட) வழிகாட்டல்களை வழங்குகின்றது. |
| பந்தி 6A | இந்த SLFRS ஆனது சீர்மதிப்பு என்னும் பதத்தினை SLFRS 13 *சீர்மதிப்பு அளவீடு* நியமத்தில் குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணத்துக்கு சிறிது வேறுபட்ட விதமாக சில சந்தர்ப்பங்களில் பயன்படுத்துகிறது. ஆகவே, SLFRS நியமத்தினைப் பிரயோகிக்கும் போது உரிமம் சீர்பெறுமதியை இந்த SLFRS க்கு அமைவாக மதிப்பிடுதல் வேண்டுமே தவிர SLFRS 13 நியமத்துக்கு அமைவாக அல்ல. |

| | |
|---|---|
| பந்தி 53 | உரிமையாண்மை மூலம் தீர்க்கப்படும் பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஊடுசெயல்களைப் பொறுத்தமட்டில், 2012 சனவரி 01ந் திகதியின் பின்னர் SLFRS இன் அமுலாக்கற் திகதியன்று பங்கு வழங்கல்கள், தேர்வுரிமைகள் அல்லது பிற உரிமையாண்மைச் சாதனங்களின் வழங்கல்களுக்கு உரிமம் இந்த SLFRS இனைப் பிரயோகிக்கும். |
| பந்தி 60 | உரிமமொன்று இந்த SLFRS இனை 2012 சனவரி 1ந் திகதியில் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களுக்குப் பிரயோகிக்கும். முன்னதான பிரயோகம் ஊக்குவிக்கப்படுகின்றது. உரிமமொன்று இந்த SLFRS இனை 2012 சனவரி 1ந் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கும் காலத்திற்கு பிரயோகிக்குமாகில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். |
| பந்தி 63A | SLFRS 10 *ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்* மற்றும் SLFRS 11 நியமங்கள் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டன. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 5 மற்றும் பின்னிணைப்பு A. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 10 மற்றும் SLFRS 11 நியமங்களைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |

**SLFRS 3 வணிக இணைப்புக்கள்**

| ***தற்போதைய பந்தித் தொடர்பு*** | ***பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி*** |
|---|---|
| பந்தி 2A | இந் நியமத்தின் தேவைப்பாடானது, SLFRS 10 *ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள்* நியமத்தினால் வரையறுக்கப்பட்ட விதமாக இலாப நட்டங்களின் ஊடாக சீர்பெறுமதி மதிப்பிடப்பட வேண்டிய முதலீட்டு உரிமம் ஒன்றினது முதலீட்டு உப கம்பனி ஒன்றின் சுவீகரிப்பிற்காகப் பிரயோகித்தலைத் தவிர்க்கிறது. |
| பந்தி 7 | SLFRS 10 நியமத்தின் வழிகாட்டலானது சுவீகரிப்பவரை- மற்றொரு உரிமத்தின் கட்டுப்பாட்டைப் பெற்றுக்கொள்ளும் உரிமத்தினை இனங்காண்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். வணிக இணைப்பானது ஏற்பட்டிருக்குமாயின், ஆனால் SLFRS 10 இன் வழிகாட்டல் பிரயோகமானது எந்த இணைப்பு நிறுவனம் சுவீகரிப்பவராக உள்ளது என்பதை தெளிவாக வெளிப்படுத்தாத போது, பந்திகள் B14 – B18 இலுள்ள காரணிகளானது அத்தீர்மானத்தை மேற்கொள்வதில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். |
| பந்தி 20 | பந்திகள் 24 -31 இனங்காணத்தக்க சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களுக்கான வகைப்படுத்தல்களை குறிப்பிடுகின்றது. இது அளவீட்டு கொள்கைக்கான வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளை வழங்குகின்ற இவ் SLFRS நியமத்திற்கான உருப்படிகளை உள்ளடக்குகின்றது. |
| பந்தி 29 | சந்தைப்பங்காளிகள் அதன் சீர்மதிப்பு பெறுமதியினை தீர்மானிப்பதில் ஒப்பந்த ரீதியான புதுப்பித்தல்களை கவனத்தில் கொள்கிறார்களா என்பதற்கமைய சுவீகரிப்பவர் பொருத்தமான ஒப்பந்தத்தின் தொடர்ந்து காணப்படுகின்ற ஒப்பந்த ரீதியான நிபந்தனைகளின் அடிப்படையில் அருவச்சொத்தாக ஏற்பிசைவு செய்யப்பட்ட மீள்சுவீகரிக்கப்பட்ட உரிமையின் பெறுமதியினை அளவிட வேண்டும். பந்திகள் B35 மற்றும் B36 ஆனது பொருத்தமான பிரயோக வழிகாட்டலை வழங்குகிறது. |
| பந்தி 33 | சுவீகரிப்பவரும் சுவீகரிக்கப்பட்டவரும் (அல்லது முந்தைய உரிமையாளர்கள்) உரிமையாண்மை அக்கறையினை மட்டும் பரிமாற்றும் வணிக இணைப்பொன்றில், சுவீகரிக்கப்பட்டவரின் உரிமையாண்மை அக்கறைகளின் சுவீகரிப்பு திகதியிலான சீர்மதிப்பு பெறுமதியானது சுவீகரிப்பவரின் உரிமையாண்மை அக்கறைகளின் சுவீகரிப்பு திகதியிலான சீர்மதிப்பு பெறுமதியினை விட மிக நம்பகமான அளவீடாக காணப்படலாம். அவ்வாறிருக்குமாயின், சுவீகரிப்பவர் மாற்றப்பட்ட உரிமையாண்மை அக்கறைகளின் சுவீகரிப்பு திகதியிலான சீர்மதிப்பு பெறுமதிக்கு பதிலாக |

| | |
|---|---|
| | சுவீகரிக்கப்பட்டவரின் உரிமையாண்மை அக்கறைகளின் சுவீகரிப்பு திகதியிலான சீர்மதிப்பு பெறுமதியினை பயன்படுத்துவதன் மூலமே நன்மதிப்பு தொகையினை தீர்மானிக்க வேண்டும். விலையானது மாற்றப்பட்டிருக்காத வணிக இணைப்பில் நன்மதிப்பு தொகையினை தீர்மானிப்பதற்கு, சுவீகரிப்பவர் மாற்றப்பட்ட விலையின் சுவீகரிப்பு திகதியிலான சீர்மதிப்பு பெறுமதிக்கு பதிலாக மதிப்பீட்டு நுட்பத்தை பயன்படுத்தி தீர்மானிக்கப்பட்ட சுவீகரிக்கப்பட்டதிலுள்ள சுவீகரிப்பவரின் அக்கறையின் சுவீகரிப்பு திகதியிலான சீர்மதிப்பு பெறுமதியினை பயன்படுத்த வேண்டும் (பந்தி 32(a)(i)). பந்திகள் B46 – B49 ஆனது பொருத்தமான பிரயோக வழிகாட்டலை வழங்குகிறது. |
| பந்தி 64 | இவ் SLFRS நியமமானது 2012 சனவரி 1 இல் அல்லது அதற்கு பின்னர் தொடங்குகின்ற முதல் வருட அறிக்கையிடும் காலப்பகுதியின் ஆரம்பத்தில் அல்லது அதற்கு பின்னரான சுவீகரிப்பு திகதிக்கான வணிக இணைப்பிற்கு எதிர்காலத்தில் பிரயோகிக்கப்படும். முந்தைய பிரயோகமானது அனுமதியளிக்கப்படுகிறது. நிறுவனமொன்று 2012 சனவரி 1 முன்னர் இவ் SLFRS நியமத்தினை பிரயோகித்திருக்குமாயின், அது LKAS 27 நியமத்தினை பிரயோகிக்கின்ற அதேவேளை அதற்கான காரணத்தையும் வெளிப்படுத்த வேண்டும். |
| பந்தி 64E | SLFRS 10 நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 7, B13, B63(e) மற்றும் பின்னிணைப்பு A. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 10 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 64F | SLFRS 13 *சீர்மதிப்பு அளவீடு* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 20, 29, 33, 47 மற்றும் பின்னிணைப்பு A யில் சீர்பெறுமதிக்கான வரைவிலக்கணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் B22, B40, B43-B46, B49 மற்றும் B64 உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 65B | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 65C | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 65D | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 65E | நீக்கப்பட்டுள்ளது |
| **பின்னிணைப்பு A** | |
| **கட்டுப்பாடு** | தொடர்புபட்ட விபரங்கள் எவையும் இல்லை |
| **பின்னிணைப்பு B** | |
| பந்தி B13 | SLFRS 10 *ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்* நியமத்தின் வழிகாட்டலானது சுவீகரிப்பவரை (சுவீகரிக்கப்பட்டதை கட்டுப்படுத்தும் அதிகாரத்தினை பெறுகின்ற நிறுவனம்) இனங்காண்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். வணிக இணைப்பானது நிகழ்ந்திருப்பதுடன் ஆனால் SLFRS 10 நியமத்தின் வழிகாட்டல் பிரயோகமானது சுவீகரிப்பவரான இணைப்பு நிறுவனங்களை தெளிவாக சுட்டிக்காட்டவில்லையாயின், பந்திகள் B14 – B18 இலுள்ள காரணிகளானது அத்தீர்மானத்தினை மேற்கொள்வதில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். |
| பந்தி B22 (d) | இவ் SLFRS நியமத்திற்கமைய தீர்மானிக்கப்பட்ட சட்டரீதியான முதனிலை உரிமத்தின் (கணக்கீட்டிற்காக சுவீகரிக்கப்பட்டவர்) சீர்மதிப்பு பெறுமதிக்கு வணிக இணைப்பிற்கு முன்னர் நிலுவையிலிருக்கும் சட்டரீதியான உப உரிமத்தின் (கணக்கீட்டு சுவீகரிப்பவர்) வழங்கப்பட்ட உரிமையாண்மை நாட்டத்தினை சேர்ப்பதன் மூலம் தீர்மானிக்கப்பட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட உரிமையாண்மை அக்கறைகளாக ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகை. எனினும், உரிமையாண்மை கட்டமைப்பானது (அதாவது வழங்கப்பட்ட உரிமையாண்மை |

| | |
|---|---|
| | நாட்டங்களின் வகையும் எண்ணிக்கையும்) இணைப்பில் விளைவை ஏற்படுத்துகின்ற முதனிலை உரிமத்தின் வழங்கப்பட்ட உரிமையாண்மை நாட்டங்கள் உள்ளடங்கலாக, முதனிலை உரிமத்தின் (கணக்கீட்டிற்காக சுவீகரிக்கப்பட்டவர்) உரிமையாண்மை கட்டமைப்பினை பிரதிபலிக்கின்றது. இதற்கமைய, சட்டரீதியான உப உரிமத்தின் (கணக்கீட்டு சுவீகரிப்பவர்) உரிமையாண்மை கட்டமைப்பானது எதிர்மறை சுவீகரிப்பில் வழங்கப்பட்டுள்ள சட்டரீதியான முதனிலை உரிமத்தின் (கணக்கீட்டிற்காக சுவீகரிக்கப்பட்டவர்) பங்குகளின் எண்ணிக்கையை பிரதிபலிப்பதற்கு சுவீகரிப்பு ஒப்பந்தத்தில் ஏற்படத்தப்பட்ட நாணயமாற்று விகிதத்தினை பயன்படுத்தி மீள்குறிப்பிடப்படுகிறது. |
| பந்தி B40 | இனங்காணத்தக்க மூலப்பிரமாண அருவச் சொத்தொன்று நன்மதிப்பிலிருந்து வேறாக ஏற்பிசைவு செய்யப்படுகிறதா என்பதை தீர்மானிக்கிறது. எனினும், இத் தகுதி விதியானது அருவச் சொத்தொன்றின் சீர்மதிப்பு பெறுமதியினை அளவிடுவதற்கான வழிகாட்டலை வழங்கவோ அல்லது அருவச் சொத்தொன்றின் சீர்மதிப்பு பெறுமதியினை மதிப்பிடுவதில் பயன்படுத்தப்படுகின்ற எடுகோள்களை கட்டுப்படுத்தவோ இல்லை. உதாரணமாக, சந்தை பங்காளிகள் அருவச் சொத்தொன்றின் சீர்மதிப்பு பெறுமதியினை அளவிடுவதில் கவனத்தில் கொள்ளும் எதிர்கால ஒப்பந்த மீள்புதுப்பித்தல்களின் எதிர்பார்க்கைகள் போன்ற என்ற எடுகோள்களை சுவீகரிப்பவர் கவனத்தில் கொள்வார். இனங்காணத்தக்க தகுதி விதியினை அடைவதற்கு சுயமான புதுப்பித்தல்களுக்கான அவசியம் காணப்படுவதில்லை. (எனினும், பந்தி 29ஐ பார்க்க, அது வணிக இணைப்பில் ஏற்பிசைவு செய்யப்பட்ட மீள்சுவீகரிக்கப்பட்ட உரிமைகளுக்கான சீர்மதிப்பு பெறுமதி அளவீட்டு கொள்கைக்கான விதிவிலக்கொன்றினை உருவாக்குகின்றது.) LKAS 38 நியமத்தின் பந்திகள் 36 மற்றும் 37 ஆனது அருவச்சொத்துக்களானது ஏனைய அருவ அல்லது உருவ சொத்துக்களுடனான கணக்கீட்டில் ஒரு தனி அலகிற்குள் இணைக்கப்பட வேண்டுமா என்பதை தீர்மானிப்பதற்கான வழிகாட்டலை வழங்குகிறது. |
| பந்தி B43 | போட்டித்தன்மையைப் பாதுகாப்பதற்காக அல்லது வேறு நோக்கங்களுக்காக, கொள்வனவாளர் கொள்வனவு செய்யப்பட்ட நிதிசாரா சொத்து ஒன்றினை உத்வேகமாகப் பயன்படுத்துவதில்லை எனத் தீர்மானித்து இருக்கலாம் அல்லது அச் சொத்தை அதன் உச்ச மற்றும் சிறந்த பயன்பாட்டில் பயன்படுத்துவதற்கான விருப்பத்தைக் கொண்டிருக்காது விடலாம். உதாரணமாக, கொள்வனவு செய்யப்பட்ட ஆராய்ச்சி அபிவிருத்தி அருவச் சொத்து ஒன்றினைக் கொள்வனவாளர் ஏனையோர் அதனைப் பயன்படுத்தாது தடுக்கும் வகையில் பாதுகாப்பாகப் பயன்படுத்தலாம். இருப்பினும் கொள்வனவாளர் அந்த நிதிசாரா சொத்தின் ஆரம்ப மற்றும் பிற்கால சேத இழப்பு மதிப்பீட்டிற்கான சீர்பெறுமதியிலிருந்து முடிவு செய்தலுக்கான கிரயம் நீங்கலான பெறுமதியைக் கணிக்கும் போது, சீர்பெறுமதி அளவீட்டினை பொருத்தமான மதிப்பீட்டு அடிப்படைகளுக்கு இணங்கி சந்தைப் பங்குபற்றுனர்களது உயர்வான மற்றும் சிறப்பான பாவனை எடுகோளினைக் கருத்தில் கொண்டு மேற்கொண்டிருப்பார். |
| பந்தி B44 | இவ் SLFRS நியமமானது சுவீகரிப்பு திகதியிலான அதன் சீர்மதிப்பு பெறுமதியில் சுவீகரிக்கப்பட்டதின் கட்டுப்பாடு இல்லாத அக்கறைகளை அளவிடுவதற்கு சுவீகரிப்பவரை அனுமதிக்கின்றது. சிலநேரங்களில், சுவீகரிப்பவர் கட்டுப்பாடல்லாத அக்கறைகளின் சுவீகரிப்புத் திகதியிலான சீர்மதிப்பை உரிமைப் பங்குகளுக்கான செயற்படு சந்தையிலான கோரப்பட்ட விலைகளின் அடிப்படையில் அளவிட முடியும் (சுவீகரிப்பவரினால் உரிமை கொள்ளப்பட்டிருக்காத). ஏனைய சந்தர்ப்பங்களில், உரிமையாண்மை பங்குகளுக்கான செயற்படு சந்தையிலான குறிக்கப்பட்ட விலையானது கிடைக்கத்தக்கதாக காணப்படுவதில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில், சுவீகரிப்பவர் ஏனைய மதிப்பீட்டு நுட்பங்களை பயன்படுத்தி கட்டுப்பாடு இல்லாத நாட்டத்தின் சீர்மதிப்பு பெறுமதியினை அளவிடுவார். |
| பந்தி B45 | சுவீகரிக்கப்பட்டதிலுள்ள சுவீகரிப்பவரின் அக்கறையின் சீர்மதிப்பு பெறுமதிகளும் பங்கொன்றின் அடிப்படையிலான கட்டுப்பாடற்றோர் அக்கறை வேறுபடலாம். கட்டுப்பாடல்லாதோர் நாட்டத்தினை விலையிடும் போது சந்தைப் பங்குபற்றுனர்கள் அவ்வாறான வட்டம் அல்லது கழிவினைக் கருத்தில் கொள்வார்கள் எனின் சுவீகரிக்கப்பட்டதில் சுவீகரிப்பவரின் இல்லாத நாட்டத்தின் பங்கொன்றின் சீர்மதிப்பு பெறுமதியில் கட்டுப்பாட்டு வட்டத்தினை உள்ளடக்குதல் அல்லது மாறாக கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் பங்கொன்றின் சீர்மதிப்பு பெறுமதியில் குறைவான |

| | |
|---|---|
| | கட்டுப்பாட்டிற்கான கழிவினை (கட்டுப்பாடல்லாத அக்கறை தரப்பினர் கழிவு எனவும் குறிப்பிடப்படுகிறது) உள்ளடக்குதலானது பிரதான வேறுபாடாக காணப்படுகிறது. |
| பந்தி B46 | பதிலிறுத்தப் பரிமாற்றமில்லாமல் அடையப்பட்ட வணிக இணைப்பில், சுவீகரிப்பவர் பேரம்பேசல்கொள்வனவு மீதான ஆதாயம் அல்லது நன்மதிப்பினை அளவிடுவதற்கு மாற்றப்பட்ட விலையின் சுவீகரிப்பு திகதியிலான சீர்மதிப்பு பெறுமதிக்காக சுவீகரிக்கப்பட்டதிலுள்ள அதன் அக்கறையின் சுவீகரிப்பு திகதியிலான சீர்மதிப்பு பெறுமதியினை பிரதியிட வேண்டும் (பந்திகள் 32 – 34 ஐ பார்க்க). |
| பந்தி B49 | பரஸ்பர உரிமத்தின் சீர்மதிப்பு பெறுமதி அளவீடானது சந்தை பங்காளிகளின் எதிர்கால அங்கத்துவ நன்மைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற எடுகோள்களையும் அதேபோன்று பரஸ்பரம் உரிமம் தொடர்பில் சந்தை பங்காளிகள் மேற்கொள்கின்ற ஏனைய பொருத்தமான எடுகோள்களையும் உள்ளடக்க வேண்டும். உதாரணமாக, ஒரு இற்றைப் பெறுமதி நுட்பமானது பரஸ்பர உரிமத்தின் சீர்மதிப்பு பெறுமதியினை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படலாம். மாதிரிக்கு உள்ளீடுகளாக பயன்படுத்தப்பட்ட காசுப்பாய்ச்சல்களானது பரஸ்பர உரிமத்தின் எதிர்பார்க்கப்பட்ட காசுப்பாய்ச்சல்களின் அடிப்படையில் காணப்பட வேண்டும். இவை பொருட்கள் சேவைகளுக்காக விதிக்கப்பட்ட குறைந்த கட்டணங்கள் போன்ற அங்கத்துவ நன்மைகளுக்கான குறைப்புக்களை பிரதிபலிப்பதாக காணப்படுகிறது. |
| பந்தி B63 (e) | SLFRS 10 நியமமானது கட்டுப்படுத்தும் அதிகாரத்தினை பெற்ற பின்னர் உப உரிமத்தில் முதனிலை உரிமத்தின் உடைமை அக்கறையின் மாற்றங்களுக்கான கணக்கீடு தொடர்பான வழிகாட்டலை வழங்குகிறது. |
| பந்தி B64 (f) (iv) | வழங்கப்படக்கூடிய அல்லது வழங்கப்பட்ட உரிமையாண்மை அக்கறை அல்லது சாதனங்களின் எண்ணிக்கையும் அக்கறை அல்லது அச்சாதனங்களின் சீர்மதிப்பு பெறுமதியை மதிப்பிடும் முறையும் உள்ளடங்கலான சுவீகரிப்பவரின் உரிமையாண்மை அக்கறைகள் |
| பந்தி B49 (o) (ii) | சீர்மதிப்பில் அளவிடப்பட்ட சுவீகரிக்கப்படும் வியாபாரத்தின் ஒவ்வொரு கட்டுப்பாடற்ற அக்கறைகளுக்கும், அப் பெறுமதியை மதிப்பிடுவதற்காக மதிப்பீட்டு நுட்பம்(ங்கள்) மற்றும் முக்கியமான உள்ளீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. |
| பந்தி B68 | இவ் SLFRS நியமமானது 2009 யூலை 1 இல் அல்லது அதற்கு பின்னர் தொடங்குகின்ற முதல் வருட அறிக்கையிடும் காலப்பகுதியின் ஆரம்பத்தில் அல்லது அதற்கு பின்னர் காணப்படுகின்ற சுவீகரிப்பு திகதிக்கான வணிக இணைப்புகளுக்கு எதிர்காலத்தில் பிரயோகிக்கின்றது என்பதை பந்தி 64 வழங்குகிறது. முந்தைய பிரயோகமானது அனுமதியளிக்கப்படுகிறது. எனினும், உரிமம் ஒன்று 30 யூன் 2007 இல் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதிக்கு மாத்திரம் இவ் SLFRS நியமத்தினை பிரயோகிக்கும். உரிமமானது விளைவுத் திகதிக்கு முன்னரே அந் நியமத்தைப் பிரயோகித்திருப்பின் உரிமம் அதற்கான காரணத்தை வெளிப்படுத்த வேண்டியிருக்கும் அதேநேரத்தில் LKAS 27 நியமத்தினை பிரயோகிக்கும். |

**SLFRS 4 காப்புறுதி ஒப்பந்தங்கள்**

| ***தற்போதைய பந்தித் தொடர்பு*** | ***பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி*** |
|---|---|
| பந்தி 41 | ஒரு உரிமம் இந்த SLFRS இனை 01 சனவரி 2012 இல் அல்லது அதன் பின்னரான வருட காலப்பகுதிக்கு பிரயோகிக்கலாம். முன்னதான பிரயோகம் ஊக்குவிக்கப்படுகின்றது. நிறுவனம் முன்னைய காலங்களுக்கு இந்த SLFRS இனைப் பிரயோகித்தால் அது அத் தரவினை வெளிப்படுத்தல் வேண்டும். |
| பந்தி 41E | SLFRS 13 *சீர்பெறுமதி மதிப்பீடு* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. பின்னிணைப்பு A யில் சீர்பெறுமதிக்கான வரைவிலக்கணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. உரிமம் |

| | |
|---|---|
| | இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 42 | ஒரு உரிமம் இந்த SLFRS இன் பந்தி 37 (அ) மற்றும் (ஆ) வேண்டப்பட்ட வெளிக்காட்டல்களான கணக்கீட்டுக் கொள்கைகள், மற்றும் ஏற்பிசைவான சொத்துக்கள், பரிப்புக்கள், வருமானம் மற்றும் செலவு (நேரடி முறை பயன்படுத்தப்பட்டால் காசுப்பாச்சல்) போன்றவற்றைத் தவிர 01 சனவரி 2012 க்கு முன்னரான வருட கால ஆரம்பத்துடன் தொடர்புடைய ஒப்பீட்டுக்காகத் தரப்படும் தகவல்களுக்கு இந்த SLFRS இல் வேண்டப்பட்டதான வெளிக்காட்டல்களை பிரயோகிக்கத் தேவையில்லை. |
| பந்தி 43 | சனவரி 2012 க்கு முன்னர் ஆரம்பிக்கும் வருடகாலத்துடன் தொடர்புடையதான ஒப்பீட்டுத் தகவல்களுக்கு பந்தி 10 – 35 இல் குறிப்பிட்ட தேவைப்பாடுகளைப் பிரயோகிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது எனில் நிறுவனம் உண்மையினை வெளிப்படுத்தலாம். கடன்பாட்டுப் போதுமைப் பரீட்சை (பந்தி 15 -19) யைப் பிரயோகிக்கின்ற போது, ஒப்பீட்டுக்காகத் தரப்படும் தகவல்கள் சில நேரங்களில் நடைமுறைச் சாத்தியமற்றதாகக் காணப்படலாம், ஆனால் பந்தி 10 – 35 இலுள்ள ஒப்பீட்டுத் தகவல்களுக்கு பிற தேவைப்பாடுகளைப் பிரயோகிப்பது முற்றாகவே நடைமுறைச் சாத்தியப்பாடற்றது. LKAS 8 நடைமுறைச் சாத்தியப்பாடற்றது எனும் பதத்தினை விபரிக்கின்றது. |
| **பின்னிணைப்பு A** | |
| சீர் மதிப்பு | *சீர் மதிப்பு* என்பது சந்தைப் பங்குபற்றுனர்களிடையே மதிப்பீட்டுத் திகதியில் முறைசார் ஊடுசெயல் ஒன்றின்போது சொத்தொன்று விற்கப்படுவதனால் பெறப்படக்கூடிய அல்லது பரிப்பொன்று மாற்றப்படுவதற்காக செலுத்தக்கூடிய விலையாகும். (SLFRS 13 *சீர்மதிப்புப் பெறுமதி* நியமத்தினைப் பார்க்கவும்). |

**SLFRS 5 விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லா சொத்துகளும் முடிவிற்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகளும்**

| ***தற்போதைய பந்தித் தொடர்பு*** | ***பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி*** |
|---|---|
| பந்தி 28 | உரிமமொன்று, விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்துதல் நிறுத்தப்படும் நடைமுறையல்லா சொத்தின் முன்கொணரற் தொகைமீது தேவைப்படும் எந்தவொரு சீராக்கத்தினையும், பந்திகள் 7 - 9 இலுள்ள மூலப்பிரமாணங்கள் தொடர்ந்தும் நிறைவு செய்யப்படாத காலத்தின் போது, தொடரும் தொழிற்பாடுகளிலிருந்தான இலாபம் அல்லது நட்டத்தில் உட்படுத்தும். முடிவு செய்தலுக்கான சொத்துத் தொகுதி அல்லது விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்துதல் நிறுத்தப்படும் நடைமுறையல்லாச் சொத்தானது ஒரு உப கம்பனி, கூட்டுத் தொழில் முயற்சி, இணைக் கம்பனி அல்லது கூட்டுத்தொழில் முயற்சி அல்லது இணைக் கம்பனியின் பகுதி ஒன்றாகக் காணப்படுமிடத்து, விற்பனைக்கானது என வகைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் இருந்தான நிதிக்கூற்றுக்கள் உரியவாறு மாற்றம் செய்யப்படல் வேண்டும். உரிமம் பந்தி 37 க்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்டால் அந்த செம்மையாக்கத்தினை அதே தலைப்பின் கீழ் இலாபம் அல்லது நட்டம் எதுவும் இருப்பின் அதனை முன்னிலைப்படுத்துவதற்கு உபயோகிக்கப்படும் முற்றடக்க வருமானக் கூற்றில் முன்னிலைப்படுத்தும். |
| பந்தி 33 (b) (iv) | [நீக்கப்பட்டுள்ளது] |
| பந்தி 33A | உரிமமொன்று LKAS 1 இன் பந்தி 10A இல் விபரிக்கப்பட்டவாறு இலாப அல்லது நட்டத்தின் ஆக்கக் கூறுகளை வேறான வருமானக் கூற்றொன்றில் முன்னிலைப்படுத்துமேயாகில், முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகளுடன் |

| | |
|---|---|
| | தொடர்புபட்டதாக இனங்காணப்படும் பகுதியொன்று அந்தக் கூற்றில் முன்னிலைப்படுத்தப்படும். |
| பந்தி 44 | உரிமமொன்று இந்த SLFRS இனை 2012 சனவரி 1ந் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பமாகும் ஆண்டு காலங்களுக்கு பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் ஊக்கப்படுத்தப்படுகிறது. உரிமமொன்று இந்த SLFRS இனை 2012 சனவரி 1ந் திகதிக்கு முன்னர் ஆரம்பமாகும் காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த விடயம் வெளிக்காட்டப்பட வேண்டும். |
| பந்தி 44G | SLFRS 11 *இணைந்த ஏற்பாடுகள்* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டதுடன், திருத்தப்பட்ட பந்தி 28 ஆகும். SLFRS 11 நியமங்களினைப் பிரயோகிக்கும் போது உரிமம் அவ்வாறான திருத்தங்களைப் பிரயோகிக்கும். |
| பந்தி 44H | SLFRS 13 *சீர்மதிப்பு அளவீடு* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது, பின்னிணைப்பு A இல் சீர்பெறுமதிக்கான வரைவிலக்கணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது உரிமம் அவ்வாறான திருத்தங்களைப் பிரயோகிக்கும். |
| பந்தி 44I | *உருப்படிகளை ஏனைய முற்றடக்க வருமானக் கூற்றில் முன்னிலைப்படுத்தல்* (LKAS 1 க்கான திருத்தங்கள்) 2014 இல் வெளியிடப்பட்டது. திருத்தப்பட்ட பந்தி 33A. LKAS 1 க்கான திருத்தங்களை உரிமம் 2014 இல் திருத்தப்பட்டவாறு பிரயோகிக்கும். |
| **பின்ணைப்பு A** | |
| **சீர் மதிப்பு** | *சீர் மதிப்பு* என்பது சந்தைப் பங்குபற்றுனர்களிடையே மதிப்பீட்டுத் திகதியில் முறைசார் ஊடுசெயல் ஒன்றின்போது சொத்தொன்று விற்கப்படுவதனால் பெறப்படக்கூடிய அல்லது பரிப்பொன்று மாற்றப்படுவதற்காக செலுத்தக்கூடிய விலையாகும். (SLFRS 13 *சீர்மதிப்புப் பெறுமதி* நியமத்தினைப் பார்க்கவும்). |

**SLFRS 6 கனிப்பொருள் வளங்களுக்கான அகழ்வாய்வும் அவைகளின் மதிப்பீடும்**

| *தற்போதைய பந்தித் தொடர்பு* | *பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி* |
|---|---|
| பந்தி 26 | உரிமமொன்று இந்த SLFRS இனை 2012 சனவரி 1ந் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பிக்கும் ஆண்டுக் காலங்களுக்குப் பிரயோகிக்கும். முற்கூட்டிய பிரயோகம் ஊக்குவிக்கப்படுகின்றது. உரிமமொன்று இந்த SLFRS இனை 2012 சனவரி 1ந் திகதிக்கு முன்னர் ஆரம்பமாகும் காலமொன்றிற்கு பிரயோகிக்குமேயாகில் அந்த விடயம் வெளிக்காட்டும். |
| பந்தி 27 | 2012 சனவரி 1ந் திகதிக்கு முன்னர் ஆரம்பமாகும் ஆண்டுக் காலமொன்றுடன் தொடர்புபட்ட ஒப்பீட்டுத் தகவல்களுக்கு பந்தி 18 இன் குறிப்பிட்ட தேவைப்பாடுகளை பிரயோகித்தல் நடைமுறைச் சாத்தியமற்றதாக இருப்பின், உரிமம் அந்த உண்மையினை வெளிக்காட்டும். "நடைமுறைச் சாத்தியமின்மை" எனும் பதத்தினை LKAS 8 விபரிக்கின்றது. |

**SLFRS 7 – நிதிச்சாதனங்கள் (நிதிக்கருவிகள்): வெளிக்காட்டல்கள்**

| **ஏற்கனவே உள்ள பந்தி** | **பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி** |
|---|---|
| பந்தி 3 (a) | உப கம்பனிகள், கூட்டுக்கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகளில் நாட்டங்கள் SLFRS 10 *ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்*, LKAS 27 – வேறான |

| | |
|---|---|
| | நிதிக்கூற்றுக்கள் அல்லது LKAS 28 - *கூட்டுக்கம்பனிகள் மற்றும் கூட்டுத்தொழில் முயற்சிகளிலான முதலீடுகள்* ஆகிய நியமங்களுக்கு அமைவாக கணக்கிடப்படும். எனினும் சில சந்தர்ப்பங்களில், உரிமமொன்று உப கம்பனி, கூட்டுக்கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றில் கொண்டுள்ள நாட்டத்தினை LKAS 39 நியமத்தினை உபயோகித்து கணக்கீடு செய்வதனை SLFRS 10, LKAS 27, அல்லது LKAS 28 அனுமதிக்கலாம் அல்லது தேவைப்படுத்தலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில், உரிமங்கள் இந்த SLFRS இன் தேவைப்பாடுகளைப் பிரயோகிப்பதுடன், சீர்பெறுமதியில் மதிப்பிடப்படுபவற்றுக்கு SLFRS 13 *சீர்பெறுமதி மதிப்பீடு* நியமத்தின் தேவைப்பாடுகளைப் பிரயோகிக்கும். அத்துடன், உப கம்பனிகள், கூட்டுக் கம்பனிகள் அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகளிலான அதன் நாட்டங்களுடன் தொடர்புபட்ட சகல உய்த்தறி சாதனங்களுக்கும், அந்த உய்த்தறி சாதனங்கள் LKAS 32 இலுள்ள உரிமையாண்மைச் சாதனமொன்றின் பொருள் விளக்கத்தினை திருப்தி செய்திருந்தாலன்றி, இந்த SLFRS இனை பிரயோகிக்கும். |
| பந்தி 10A | *இந்தப் பந்தியானது இதுவரையில் நடைமுறைக்கு வராத திருத்தங்களை உள்ளடக்குகின்றது, ஆகையால் இந்த வெளியீட்டில் உள்ளடக்கப்படவில்லை.* |
| | **ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஊடாக சீர்பெறுமதியில் மதிப்பிடப்படும் நிதிச் சொத்துக்கள்** |
| 11A-11B | *இந்தப் பந்தியானது இதுவரையில் நடைமுறைக்கு வராத திருத்தங்களை உள்ளடக்குகின்றது, ஆகையால் இந்த வெளியீட்டில் உள்ளடக்கப்படவில்லை.* |
| 12B-12D | *இந்தப் பந்தியானது இதுவரையில் நடைமுறைக்கு வராத திருத்தங்களை உள்ளடக்குகின்றது, ஆகையால் இந்த வெளியீட்டில் உள்ளடக்கப்படவில்லை.* |
| | **நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பரிப்புக்களை எதிரீடு செய்தல்** |
| பந்தி 13A | இந்த SLFRS நியமத்தின் ஏனைய வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் LKAS 32 நியமத்தின் பந்தி 42 இன் படியான ஏற்பிசைவு செய்யப்பட்ட அனைத்து நிதிச் சாதனங்களுக்குமான வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளை 13B-13E பந்திகளில் காணப்படும் வெளிப்படுத்தல்கள் விஞ்சி நிற்கின்றன. இந்த வெளிப்படுத்தல்கள் செயற்படுத்தக்கூடிய வலுமிக்க பிரதம தேறல் ஏற்பாடு அல்லது அதனை ஒத்த ஏற்பாடு தொடர்புபட்ட ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிச் சாதனங்களுக்கும், அவை LKAS 32 நியமத்தின் பந்தி 42 இன் படியான வகையில் எதிரீடுசெய்யப்படுகின்றனவா என்பதைக் கருத்தில் கொள்ளாது பிரயோகிக்கத் தக்கவையாகும். |
| பந்தி 13B | உரிமம் தனது நிதிக்கூற்றுக்களின் பயனாளர்கள் உரிமத்தின் நிகர தேறச்செய்கை ஏற்பாடுகளின் விளைவுகள் அல்லது சாத்திய விளைவுகளை விளங்கிக் கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில் தகவல்களை வெளிப்படுத்தல் வேண்டும். இது பந்தி 13A இன் நோக்கெல்லைக்கு உட்பட்ட வகையிலான ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பரிப்புக்களை குறுக்குத்தீர்த்தல் செய்வதற்கான உரிமையின் விளைவு அல்லது சாத்தியமான விளைவினை உள்ளடக்குகிறது. |

| | |
|---|---|
| பந்தி 13C | பந்தி 13B இன் நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் உரிமமானது அதன் அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவில் பந்தி 13A இன் நோக்கெல்லைக்கு உட்பட்ட வகையிலான ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பரிப்புக்களுக்காக பின்வரும் அளவுசார் தகவல்களைத் தனித்தனியாக வெளிப்படுத்தல் வேண்டும்.<br><br>a) ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பரிப்புக்களின் மொத்த தொகைகள்:<br><br>b) நிதிநிலைக்கூற்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிகர தொகைகள்<br><br>c) செயலாகும் பிரதான நிகரச்செய்கை ஏற்பாடு அல்லது அதனை ஒத்த, அவ்வாறல்லாதவிடத்து பந்தி 13C(b) இல் உள்ளடக்கப்படாத ஒப்பந்தங்கள் ஒன்றுக்கான தொகைகள், பின்வருவன உள்ளடங்கலாக:<br><br>• நியமத்தின் பந்தி 42 இன் ஒருசில அல்லது அனைத்து ஏதிரீடுசெய்தல் முலப்பிரமாணங்களை திருப்தி செய்யாத ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிச் சாதனங்கள் தொடர்பான தொகைகள்: மற்றும்<br><br>• நிதிசார் பிணைகள் தொடர்புபட்ட தொகைகள் (காசுப்பிணை உள்ளடங்கலாக): மற்றும்<br><br>d) மேலே (c) இல் கூறப்பட்ட தொகைகளில் இருந்து (d) இல் குறிப்பிடப்பட்ட தொகைகள் கழிக்கப்பட்ட நிகர தொகைகள்<br><br>e) இந்தப் பந்தியினால் வேண்டப்படும் தகவல், மற்றுமொரு வடிவம் மிகப் பொருத்தமானதாக இல்லாதவிடத்து, ஒரு அட்டவணை வடிவத்தில், நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பரிப்புக்களில் இருந்து தனியாக முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.<br><br>f) நிதிநிலைமைக் கூற்றில் முன்னிலைப்படுத்தப்படும் தேறிய தொகைகளைத் தீர்மானிக்கும் போதான, LKAS 32 நியமத்தின் பந்தி 42 இன் அடிப்படைகளுக்கு அமைவாக தீர்க்கப்படும் தொகைகள் |
| பந்தி 13D | சாதனம் ஒன்றுக்காக பந்தி 13C(d) க்கு அமைவாக வெளிப்படுத்தப்பட்ட மொத்தத் தொகைகள் அச் சாதனத்துக்கான பந்தி 13C(c) இல் குறிப்பிடப்பட்ட தொகைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. |
| பந்தி 13E | பந்தி 13C(b) க்கு இணக்கமான வகையில் வெளிப்படுத்தப்பட்ட வலுவுள்ள பிரதான தேறச்செய்கை ஏற்பாடு அல்லது அதனை ஒத்த உடன்படிக்கைகளுக்கான வகையில், ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பரிப்புக்கள் தொடர்புபட்ட தீர்த்தல் உரிமையின் வெளிப்படுத்தல்களில் உரிமம் ஒரு விபரணத்தை உள்ளடக்குதல் வேண்டும். |
| பந்தி 13F | பந்திகள் 13B-13E இனால் வேண்டப்படும் தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் ஒன்றுக்கு மேற்பட்ட குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டிருப்பின், உரிமம் அக் குறிப்புக்களைக் குறுக்குத் தொடர்பு செய்தல் வேண்டும். |
| பந்தி 20A | *இந்தப் பந்தியானது இதுவரையில் நடைமுறைக்கு வராத நிறுத்தங்களை உள்ளடக்குகின்றது, ஆகையால் இந்த வெளியீட்டில் உள்ளடக்கப்படவில்லை.* |
| பந்தி 27 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 27A | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 27B | நீக்கப்பட்டுள்ளது |

| | |
|---|---|
| பந்தி 28 | சில சந்தர்ப்பங்களில், சீர்பெறுமதி சுறுசுறுப்பான சந்தை ஒன்றில் அடையாளம் காணக்கூடிய சொத்து அல்லது பரிப்பு ஒன்றின் கோரப்பட்ட விலைகளால் சான்றுப்படுத்தப்படாமை (அதாவது மட்டம் 1 உள்ளீடுகள்) அல்லது அவதானிக்கக் கூடிய சந்தைகளிலிருந்தான தரவுகளை மாத்திரம் பயன்படுத்தும் மதிப்பீட்டு நுட்பத்தின் அடிப்படை காரணமாக (நியமத்தின் பந்தி இனைப் பார்வையிடுக) உரிமம் நிதிசார் சொத்து அல்லது நிதிசார் பரிப்பு ஒன்றின் ஆரம்ப ஏற்பிசைவில் ஒரு இலாபம் அல்லது நட்டத்தினை ஏற்பிசைவு செய்வதில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்களில், உரிமம் நிதிசார் சொத்து அல்லது நிதிசார் பரிப்பின் வகுப்பின் அடிப்படையில் வெளிப்படுத்த முடியும்.<br><br>(a) ஆரம்ப ஏற்பிசைவிலான சீர்பெறுமதி மற்றும் சொத்து அல்லது பரிப்பினை விலையிடும் போது சந்தைப் பங்குபற்றுனர்கள் கருத்தில் கொள்ளும் காரணிகளிலான (காலம் உள்ளடங்கலான) மாற்றங்களை பிரதிபலிக்கக்கூடிய ஊடுசெயல் விலைகள் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடுகளை இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்வதற்கான அதன் கணக்கீட்டுக் கொள்கை (LKAS 39 நியமத்தின் AG76(b) பந்தியினைப் பார்வையிடுக).<br><br>(b) காலப்பகுதியின் ஆரம்பத்திலும் முடிவிலும் ஏற்பிசைவு செய்யப்படவேண்டியுள்ளவற்றின் திரண்ட வேறுபாடுகள் மற்றும் இவ் வேறுபாடுகளின் மீதிகளிலான மாற்றங்களுக்கான இணக்கக்கூற்று<br><br>(c) சீர்பெறுமதிக்கு ஆதரவு வழங்கக்கூடிய சான்றின் விபரணம் உள்ளடங்கலாக, ஊடுசெயல் விலை சீர்பெறுமதியின் சிறப்பான சான்று அல்ல என உரிமம் முடிவு செய்தமைக்கான காரணம் |
| பந்தி 29 | கீழ்வரும் சந்தர்ப்பங்களில் சீர்மதிப்புக்களின் வெளிக்காட்டல் தேவைப்படமாட்டாது:<br><br>(அ) முன்கொணரற்தொகை சீர்மதிப்பின் நியாயபூர்வமான அண்ணளவாக்கமாக இருக்கும் போது. உதாரணமாக: குறுங்கால வியாபார வருமதிகள் மற்றும் சென்மதிகள் போன்ற நிதிச் சாதனங்கள்<br><br>(ஆ) சுறுசுறுப்பான சந்தையொன்றில் ஒத்த தன்மையான சொத்துக்கு (அதாவது மட்டம் 1 உள்ளீடு) கோரப்பட்ட சந்தை விலை கொண்டிராத உரிமையாண்மைச் சாதனங்களிலான முதலீடு அல்லது அவ்வாறான உரிமையாண்மைச் சாதனங்களுடன் இணைந்த, சீர் மதிப்பு வேறு விதமாக நம்பகரமாக அளவிடப்பட முடியாததன் காரணமாக LKAS 39 க்கு அமைவாக கிரயத்தில் அளவிடப்படும் உய்த்தறி சாதனங்கள் அல்லது<br><br>(இ) சுயமாக தீர்மானிக்கும் பங்கு பற்றுதல் குணவியல்பினைக் கொண்டிருக்கும் (SLFRS 4 இல் விபரிக்கப்பட்டவாறு) ஒப்பந்தம் ஒன்று தொடர்பில், அந்த குணவியல்பின் சீர்மதிப்பு நம்பகரமாக அளவிடப்பட முடியாதபோது |
| பந்தி 43 | உரிமமொன்று இந்த SLFRS இனை 2012 சனவரி 1 ந் திகதியன்றோ அல்ல அதற்குப் பின்னரோ ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். முன்னதான பிரயோகம் ஊக்கப்படுத்தப்படுகின்றது. உரிமமொன்று முன்னைய காலமொன்றிற்கு இந்த நியமத்தினைப் பிரயோகிக்குமிடத்து, அந்த விடயத்தினை வெளிக்காட்டும். |
| பந்தி 44N | *இந்தப் பந்தியானது இதுவரையில் நடைமுறைக்கு வராத நிறுத்தங்களை உள்ளடக்குகின்றது, ஆகையால் இந்த வெளியீட்டில் உள்ளடக்கப்படவில்லை.* |
| பந்தி 44O | SLFRS 10 மற்றும் SLFRS 11 *இணைந்த ஏற்பாடுகள்,* ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 3. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 10 மற்றும் SLFRS 11 நியமங்களைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பந்தி 44P | SLFRS 13 நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 3. 28 மற்றும் 29 மற்றும் பின்னிணைப்பு A. நீக்கப்பட்டுள்ள பந்திகள் 27-27B. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 44Q | *ஏனைய முற்றடக்க வருமானங்களில் உருப்படிகளை முன்னிலைப்படுத்தல்* (LKAS 1 நியமத்துக்கான திருத்தங்கள்) 2014 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 27B. உரிமம் இத் திருத்தங்களை அது 2014 இல் திருத்தப்பட்டவாறு LKAS 1 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 44R | *நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பரிப்புக்களை ஏதிரீடு செய்யும் போதான வெளிப்படுத்தல்கள்* (SLFRS 7 நியமத்துக்கான திருத்தங்கள்) 2014 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 13A-13F மற்றும் B40-B53. உரிமம் இத் திருத்தங்களை அது 2014 சனவரி 01 இல் அல்லது அதற்குப் பின்னரான காலப்பகுதிகள் மற்றும் அவ் வருட காலங்களுக்கு இடையிலான இடைக்காலங்களில் பிரயோகித்தல் வேண்டும். உரிமம் அத் திருத்தங்களினால் வேண்டப்படும் வெளிப்படுத்தல்களை முற்கால விளைவுள்ள வகையில் வழங்குதல் வேண்டும். |
| பந்தி 45 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 46 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 47 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 48 | நீக்கப்பட்டுள்ளது |
| **பின்னிணைப்பு B** | |
| | **நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பரிப்புக்களை எதிரீடு செய்தல் (பந்திகள் 13A-13F)** *(நோக்கெல்லைப் பந்தி 13A)* |
| பந்தி B40 | LKAS 32 இன் 42 வது பிரிவுக்கு ஏற்ப எதிரீடு செய்யப்பட்ட, அனைத்து ஏற்பிசைவு செய்த நிதிச் சாதனங்களுக்கும் பந்திகள் 13B-13E இல் உள்ள வெளிப்படுத்தல்கள் தேவைப்படுகின்றன. மேலதிகமாக, நிதிச் சாதனங்கள் அவை LKAS 32 இன் 42 வது பிரிவுக்குட்பட்ட நிதிச் சாதனங்களின் எதிரீடு செய்தல் செய்யப்படுகின்றனவா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், அமுல்படுத்தக்கூடிய பிரதான தேறச்செய்கை ஒழுங்கமைப்பு அல்லது அதேபோன்ற நிதியியல் கருவிகளையும் ஊடுசெயல்களையும் பரிவர்த்தனைகளையும் உள்ளடக்கிய ஒத்த தன்மையான ஒப்பந்தம் ஒன்றுக்கு உட்பட்டிருந்தால், பந்திகள் 13B-13E இல் வெளிப்படுத்துதல் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டவை ஆகும். |
| பந்தி B41 | பந்திகள் 13A மற்றும் B40 இல் குறிப்பிடப்பட்டுள்ள உய்த்தறிசான தீர்ப்பனவு ஒப்பந்தங்கள், அடைவுத் தீர்ப்பனவு ஒப்பந்தங்கள், உலகளாவிய பிரதான மீள்கொள்முதல் ஒப்பந்தங்கள், உலகளாவிய பிரதான பத்திரங்கள் கடன்வழங்கல் ஒப்பந்தங்கள் மற்றும் நிதியியல் பிணைப்பிற்கு தொடர்புடைய எந்தவொரு உரிமையாண்மை ஆகியவற்றை உள்ளடக்கும். பந்தி B40 இல் குறிப்பிடப்படுகின்ற ஒத்த தன்மையான நிதிச்சாதனங்கள் மற்றும் ஊடுசெயல்கள் அடைவுத் தீர்ப்பனவு ஒப்பந்தங்கள், விற்று மீள்கொள்முதல் ஒப்பந்தங்கள், தலைகீழ் விற்று மீள்கொள்முதல் ஒப்பந்தங்கள், பிணைப் பத்திர கடன்வழங்கல் மற்றும் பிணைப் பத்திர கடன் ஒப்பந்தங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும். 13A பந்தியின் பரப்பெல்லைக்குள் இல்லாத நிதியியல் கருவிகளுக்கான உதாரணங்களாக, ஒரே நிறுவனத்திலான கடன்கள் மற்றும் வாடிக்கையாளர் வைப்புக்கள் (அவை நிதிநிலைமைக் கூற்றில் குறுக்குத்தீர்க்கப்படாதவிடத்து) மற்றும் ஒரு பிணை ஒப்பந்தத்திற்கு மட்டுமே உட்பட்ட நிதிச் சாதனங்கள். |

| | |
|---|---|
| | **ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களுக்கான அளவு சார் தகவல்களின் வெளிப்படுத்தல் பந்திகள் 13A மற்றும் 13C க்கு உட்பட்டவையாகும்.** |
| பந்தி B42 | பந்தி 13C க்கு அமைவாக வெளிக்காட்டப்பட்ட நிதிச் சாதனங்கள் வேறுபட்ட அளவீடுகளுக்கு உட்பட்டவையாக இருக்கலாம் (உதாரணமாக, மீள்கொள்வனவு ஒப்பந்தம் ஒன்றுடன் தொடர்பான சென்மதி ஒன்று காலதேய்மானம் செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்பட்டிருக்க, பெறுதி சாதனம் ஒன்று சீர்மதிப்பில் அளவிடப்பட்டிருக்கலாம்). உரிமம் சாதனங்களை அவற்றின் ஏற்பிசைவு செய்யப்பட்ட பெறுமதியில் உள்ளடக்கி அதன் மூலமான அளவீட்டு வேறுபாடுகளை தொடர்புபட்ட வெளிக்காட்டல்களில் விபரித்தல் வேண்டும். |
| | **ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களுக்கான மொத்தத் தொகைகளின் வெளிப்படுத்தல் பந்திகள் 13A மற்றும் (13C(a)) க்கு உட்பட்டவையாகும்.** |
| பந்தி B43 | பந்தி 13C(a) இனால் தேவைப்படுத்தப்படும் தொகைகள் LKAS 32 நியமத்தின் பந்தி 42 க்கு அமைவாக எதிரீடு செய்யப்பட்ட ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிச் சாதனங்களுடன் தொடர்பானவை ஆகும். பந்தி 13C(a) இனால் தேவைப்படுத்தப்படும் தொகைகள் அவை எதிரீட்டு மூலப்பிரமாணங்களை திருப்தி செய்கின்றனவா என்பதைக் கருத்தில் கொள்ளாது வலுவுள்ள பிரதான தேறல் ஏற்பாடு அல்லது அதனை ஒத்த உடன்படிக்கைகளுக்கான வகையில், ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பரிப்புக்கள் தொடர்புபட்ட தீர்த்தலுக்கு உட்பட்ட ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிச் சாதனங்களுடனும் தொடர்புபடும். எனினும், பந்தி 13C(a) இனால் தேவைப்படுத்தப்படும் வெளிக்காட்டல்கள் LKAS 32 நியமத்தின் பந்தி 42 இன் எதிரீடு செய்தல் மூலப்பிரமாணங்களை பூர்த்தி செய்யாத பிணைப்பத்திர ஒப்பந்தம் ஒன்றின் ஏற்பிசைவு செய்யப்பட் தொகைகளுடன் தொடர்புபடாது. புதிலாக, அவ்வாறான தொகைகள் பந்தி 13C(d) க்கு அமைவாக வெளிக்காட்டப்படல் வேண்டும். |
| | **நியமத்தின் பந்தி 42 இன் அடிப்படைக்கு அமைவாக எதிரீடு செய்தல் செய்யப்பட்ட தொகைகளின் வெளிப்படுத்தல் (பந்திகள் (13C(b))** |
| | பந்தி 13e(b) ஆனது உரிமங்கள் நிதிநிலைமைக்கூற்றில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய தேறிய தொகைகளைத் தீர்மானிக்கும் போது, LKAS 32 நியமத்தின் பந்தி 42க்கு அமைவாக எதிரீடு செய்த தொகைகளை வெளிக்காட்டல் வேண்டும் என தேவைப்படுத்துகின்றன. அதே ஒப்பந்தத்தின் கீழ் எதிரீடுக்கு உட்படும் ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் தொகைகள் நிதிச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் வெளிக்காட்டல்களில் வெளிப்படுத்தப்படும். எனினும், வெளிக்காட்டப்பட்ட தொகைகள் (உதாரணமாக, அட்டவணை ஒன்று) எதிரீடு செய்த உட்பட்ட தொகைகளின் அளவுக்கு வரையறுக்கப்பட்டிருக்கும். உதாரணமாக, உரிமம் ஒன்று நியமத்தின் பந்தி 42 இன் மூலப்பிரமாணங்களைத் திருப்தி செய்யும் பெறுதிச் சொத்துக்கள் மற்றும் பெறுதிப் பரிப்புக்களைக் கொண்டிருக்கக்கூடும். பெறுதிச் சொத்தின் மொத்தத் தொகையானது பெறுதிப் பரிப்புக்களின் மொத்தத் தொகையிலும் பார்க்க அதிகமாகக் காணப்படின், நிதிச் சொத்து வெளிக்காட்டல் அட்டவணை பெறுதிச் சொத்தின் முழுமையான தொகைகளையும் உள்ளடக்குவதுடன் (பந்தி 13C (a)க்கு அமைவாக) பெறுதிப் பரிப்பின் முழுமையான தொகைகளையும் உள்ளடக்கும் (பந்தி 13C (b)க்கு அமைவாக). எனினும், நிதிப் பரிப்பு வெளிக்காட்டல் அட்டவணை பெறுதிப் பரிப்பின் முழுமையான தொகைகளையும் உள்ளடக்குவதுடன் (பந்தி 13C க்கு அமைவாக), அது பெறுதிப் பரிப்புக்குச் சமனான அளவல் மாத்திரமே பெறுதிச் சொத்தின் தொகைகளை உள்ளடக்கும் (பந்தி 13C(b) க்கு அமைவாக), |
| பந்தி B44 | **நிதிநிலைமைக் கூற்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட தேறிய தொகைகளின் வெளிப்படுத்தல்கள் (பந்திகள் (13C(c))** |

| | |
|---|---|
| பந்தி B45 | உரிமம் ஒன்று இந்த வெளிப்படுத்தல்களினை (பந்தி 13 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடியான) திருப்தி செய்யக்கூடிய சாதனங்களைக் கொண்டிருப்பின், ஆனால் அது LKAS 32 இன் 42 வது பந்தியில் குறிப்பிட்ட குறுக்குத்தீர்த்தல் அடிப்படைகளைப் பூர்த்தி செய்யாதுவிடின். பந்தி 13C (a) மூலம் வெளிக்காட்ட வேண்டிய தொகைகள் பந்தி 13C (c) மூலம் வெளிக்காட்டப்படும் தொகைகளுக்கு சமமாகும். |
| பந்தி B46 | பந்தி 13C (c) மூலம் வெளிக்காட்ட வேண்டிய தொகைகள், நிதி நிலைமைக் கூற்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட தனியான வரிசை உருப்படிகளின் தொகைகளுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். உதாரணமாக, உரிமம் ஒன்று வேறான நிதிக்கூற்றின் வரிசை உருப்படிகளின் ஒன்றாக்கல் அல்லது வேறாக்கலானது மிகவும் பொருத்தப்பாடான தகவல்களை வழங்கும் எனத் தீர்மானித்தால், அது பந்தி 13C (c) இல் வெளிக்காட்டப்பட்ட ஒன்றாக்கப்பட்ட அல்லது வேறாக்கப்பட்ட தொகைகளை நிதி நிலைமைக் கூற்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட தனியான வரிசை உருப்படிகளின் தொகைகளுடன் இணக்கம் செய்ய வேண்டும். |
| | **அமுலாக்கக்கூடிய பிரதம தேறல்செய்கை ஒப்பந்தம் அல்லது அதனை ஒத்த ஒப்பந்தங்கள் தொடர்பான அவ்வாறல்லாதவிடத்து பந்திகள் 13C(b) (13C(b) இல் சேர்க்கப்படாத தொகைகளின் வெளிப்படுத்தல்** |
| பந்தி B47 | பந்தி 13C (d) (i) அமுலாக்கக்கூடிய பிரதம தேறச்செய்கை ஒப்பந்தம் அல்லது அதனை ஒத்த ஒப்பந்தங்கள் தொடர்பான அவ்வாறல்லாதவிடத்து பந்திகள் 13C(b) (13C(b) இல் சேர்க்கப்படாத தொகைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என பந்தி 13C(d) தேவைப்படுத்துகிறது. LKAS 32 நியமத்தின் பந்தி 42 (b) இன் படியான குறுக்குத் தீர்த்தலுக்கான ஒருசில அல்லது அனைத்து அடிப்படைகளையும் திருப்தி செய்யாத (உதாரணமாக, LKAS 32 நியமத்தின் பந்தி 42 (b) இன் படியான குறுக்குத் தீர்த்தலுக்கான அடிப்படைகளை திருப்தி செய்யாத ஒரு நடைமுறை குறுக்குத் தீர்த்தல் உரிமை அல்லது தவறுகை நிகழ்வின் போது அல்லது ஏனைய எந்தவொரு எதிர்த் தரப்பினதும் முறிவுநிலையின் போது மாத்திரம் பயன்படுத்தக்கூடிய அல்லது அமுலாக்கக்கூடிய நிபந்தனையுடனான குறுக்குத் தீர்த்தல் உரிமைகள் ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புபட்ட தொகைகளுடன் தொடர்புபடுகிறது. |
| பந்தி B48 | 13C(d)(ii) பந்தி ஆனது பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட காசுப் பிணை உள்ளடங்கலான நிதிசார் பிணைகளுடன் தொடர்புபடுகிறது. உரிமம் அவ்வாறாக பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட நிதி ஆதனங்களது சீர்மதிப்பினை வெளிக்காட்டல் வேண்டும். பந்தி 13C(d)(ii) க்கு அமைவாக வெளிக்காட்டப்பட்ட தொகைகள் உண்மையாக பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட பிணைகளுடன் தொடர்புபடுவதுடன், அப் பிணைகளைத் திருப்பிச் செலுத்துவதுடன் அல்லது மீளப் பெறுவதுடன் தொடர்பான வருமதிகள் அல்லது சென்மதிகளுடன் தொடர்புபடல் ஆகாது. |
| | **பந்தி 13C(d), பந்தி 13D இனால் வெளிக்காட்டப்படும் தொகைகளுக்கான வரையறைகள்** |
| பந்தி 49 | பந்தி 13C(d) க்கு அமைவாகத் தொகைகளை வெளிக்காட்டும் போது, உரிமம் நிதிச் சாதனங்களிலாலான மிகைப் பிணையாக்கலைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதற்கு, பந்தி 13C(c) க்கு அமைவாக வெளிக்காட்டப்பட்ட தொகைகளில் இருந்து பந்தி 13C(d)(i) க்கு அமைவாக வெளிக்காட்டப்பட்ட தொகைகளைக் கழித்தல் வேண்டும். உரிமம் பந்தி 13C(d)(ii) க்கு அமைவாக வெளிக்காட்டும் தொகையினை பந்தி 13C(c) இல் உள்ளவாறாக, தொடர்புபட்ட நிதிச் சாதனத்தின் மீதமுள்ள தொகைக்கு வரையறுத்தல் வேண்டும். எனினும், பிணைக்கான உரிமை நிதிச் சாதனங்களிடையே பயன்படுத்தப்பட முடியுமெனில், பந்தி 13D இன் படியான வெளிக்காட்டலில் அவ்வாறான உரிமை உள்ளடக்கப்படும். |

| | |
|---|---|
| | **அமுலாக்கக்கூடிய பிரதம தேறச்செய்கை ஒப்பந்தம் அல்லது அதனை ஒத்த ஒப்பந்தங்களின் அடிப்படையிலான குறுக்குத் தீர்த்தல் உரிமைகளின் விபரணம் (பந்தி 13 E)** |
| பந்தி B50 | உரிமம் பந்தி 13C(d) க்கு அமைவாக வெளிக்காட்டப்பட்ட அமுலாக்கக்கூடிய பிரதம தேறச்செய்கை ஒப்பந்தம் அல்லது அதனை ஒத்த ஒப்பந்தங்களின் வகைகளை, அவ் உரிமைகளின் இயல்புகள் உள்ளடங்கலாக விபரித்தல் வேண்டும். உதாரணமாக, உரிமம் தனது நிபந்தனையுடனான உரிமைகளை விபரிக்கும். எதிர்கால நிகழ்வு ஒன்றில் தங்கியிராத ஆனால் LKAS 32 நியமத்தின் பந்தி 42 இன் படியான எதிரீடு செய்தல் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத எதிரீடு செய்தல் உரிமையுடன் கூடிய சாதனங்களுக்கு, உரிமம் அந்த அடிப்படைகளை பூர்த்தி செய்யப்படாமைக்கான காரணங்களை விபரித்தல் வேண்டும். பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட ஏதேனும் நிதிப் பிணைகளுக்கு, உரிமம் பிணையின் நிபந்தனைகளை (உதாரணமாக, பிணை மட்டுப்படுத்தப்பட்டுள்ள போது) விபரித்தல் வேண்டும். |
| | **நிதிச் சாதன வகைகளின் அடிப்படையிலான எதிர்த் தரப்பினரின் வெளிக்காட்டல்** |
| பந்தி B51 | பந்தி 13C(a)-(e) இனால் தேவைப்படுத்தப்படும் அளவுசார் வெளிக்காட்டல்கள் நிதிச் சாதனங்கள் அல்லது ஊடுசெயல்களின் வகையின் அடிப்படையில் (உதாரணமாக, பெறுதி ஆதனங்கள், மீள்கொள்வனவு மற்றும் நேர்மாறான கொள்வனவு அல்லது பிணையங்களின் கடன் வழங்கல் மற்றும் கடன் பெறுகை ஒப்பந்தங்கள்) குழுவாக்கப்படலாம். |
| பந்தி B52 | மாறாக, உரிமம் பந்தி 13C(a)-(c) இனால் தேவைப்படுத்தப்படும் அளவுசார் வெளிக்காட்டல்களை நிதிச் சாதன வகையின் அடிப்படையில் குழுவாக்குவதுடன், பந்தி 13C(c)-(e) இனால் தேவைப்படுத்தப்படும் அளவுசார் வெளிக்காட்டல்களை எதிஒத்தரப்பின் அடிப்படையில் குழுமமாக்கலாம். உரிமம் ஒன்று எதிர்த் தரப்பினரால் தேவைப்படுத்தப்படும் தகவலினை வழங்கின், அவ் உரிமம் அந்த எதிர்த் தரப்பினருடைய பெயர்களை வெளிக்காட்ட வேண்டிய தேவை இல்லை. எனினும், ஒப்பிடக்கூடிய தன்மையைப் பேணும் வகையில் எதிர்த் தரப்பினருடைய பதவி (எதிர்த்தரப்பு அ, எதிர்த்தரப்பு ஆ, எதிர்த்தரப்பு இ முதலாக) மாற்றமின்றிக் காணப்படும். பண்புரீதியான வெளிக்காட்டல்கள் எதஒ்த்தரப்பினான் வகை தொடர்பான மேலதிக தகவல்களை வழங்கக்கூடிய வகையில் கருத்தில் கொள்ளப்படும். பந்தி 13C(c)-(e) இல் தேவைப்படுத்தப்பட்ட வெளிக்காட்டல்கள் எதிர்த் தரப்பால் வழங்கப்படும் போது, மொத்த எதிர்த்தரப்புத் தொகைகளுடன் ஒப்பிடும் போது முக்கியத்துவம் வாய்ந்த தொகைகள் வேறாக வெளிக்காட்டப்படுவதுடன், மீதமுள்ள தனியான வகையில் முக்கியமற்ற தொகைகளின் தொகை ஒரே வரிசையில் திரட்டிக் காட்டப்படும். |
| | **ஏனையவை** |
| பந்தி B53 | பந்திகள் 13C-13E இனால் தேவைப்படுத்தப்படும் பிரத்தியேகமான வெளிக்காட்டல்கள் குறைந்தபட்சத் தேவைப்பாடுகள் ஆகும். பந்தி 13B இன் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக உரிமம் ஒன்று அமுலாக்கக்கூடிய பிரதம தேறச்செய்கை ஒப்பந்தம் மற்றும் தொடர்புபட்ட ஒப்பந்தங்களின் பதங்களின் அடிப்படையில், அவற்றினை எதிரீடு செய்தல் உரிமைகளின் இயல்பு மற்றும் உரிமத்தின் நிதி நிலைமை மீதான அவற்றின் விளைவு அல்லது சாத்தியமான விளைவு ஆகியன உள்ளடங்கலாக மேலதிக (பண்புசார்) வெளிக்காட்டல்களின் மூலம் பதிலீடு செய்தல் வேண்டும். |

**SLFRS 8 தொழிற்பாட்டு பிரிவுகள்**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 24 (b) | நிதிச்சாதனங்கள், பிற்போடப்பட்ட வரிச்[4] சொத்துக்கள், நிகர வரையறுக்கப்பட்ட பயன்பாட்டுச் சொத்துக்கள் (LKAS 19 *ஊழியர் பயன்கள்* நியமத்தினைப் பார்க்கவும்), மற்றும் காப்புறுதி ஒப்பந்தங்களின் கீழ் ஏற்படும் உரிமைகள் ஆகியவை தவிர்ந்த நடைமுறையற்ற சொத்துக்களுக்கான[4] சேர்க்கைகளின் தொகைகள் |
| பந்தி 27 | உரிமமொன்று ஒவ்வொரு அறிக்கையிடற் பிரிவுக்குமான பிரிவு இலாபம் அல்லது நட்டம் பிரிவுச் சொத்துக்கள் மற்றும் பரிவு பரிப்புக்கள் ஆகியவற்றின் அளவீடுகள் பற்றிய விளக்கத்தினை வழங்கும். உரிமமொன்று குறைந்தபட்சமாக கீழ்வருவனவற்றினை வெளிக்காட்டும். |
| பந்தி 35 | உரிமமொன்று இந்த SLFRS இனை 2012 சனவரி 1ம் திகதியன்றோ அல்லது அதற்கு பின்னரோ ஆரம்பமாகும் அதன் வருடாந்த நிதிக் கூற்றுக்களுக்கு பிரயோகிக்கும். முன்னதான பிரயோகம் ஊக்குவிக்கப்படுகின்றது. உரிமமொன்று இந்த SLFRS இனை 2012 சனவரி 1ம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கும் அதன் வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்குப் பிரயோகிக்குமாயின், அந்த உண்மை வெளிக்காட்டப்படும். |

**SLFRS 10 – ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்**

மாற்றமில்லை

**SLFRS 11 - இணைந்த ஏற்பாடுகள்**

மாற்றமில்லை

**SLFRS 12 – ஏனைய உரிமங்களிலான அக்கறைகளின் வெளிப்படுத்தல்**

மாற்றமில்லை

**SLFRS 13 – சீர்மதிப்பு அளவீடு**

மாற்றமில்லை

**LKAS 1 நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்.**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 4 | இந்நியமம் LKAS 34 *இடைக்கால நிதியறிக்கையிடல்* நியமத்துக்கு அமைவாக தயாரிக்கப்படும் சுருக்கப்பட்ட இடைக்கால நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு பிரயோகிக்கப்படமாட்டாது. எனினும், அவ்வாறான நிதிக்கூற்றுக்களுக்கு பந்திகள் 15-35 பிரயோகிக்கப்படும். இந்த நியமம் SLFRS 10 *ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்* நியமத்திற்கு அமைவாக ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை முன்னிலைப்படுத்தும் மற்றும் LKAS 27 *வேறான நிதிக்கூற்றுக்கள்* நியமத்திற்கு அமைவாக தனியான நிதிக்கூற்றுக்களை |

[4] திரவநிலை முன்னிலைப்படுத்தலுக்கு அமைவாக வகைப்படுத்தப்படும் சொத்துக்களைப் பொறுத்தவரை நடைமுறையல்லா சொத்துக்களாவன ஐந்தொகைத் திகதியில் இருந்து பன்னிரண்டுமாத காலத்தின் பின் மீளப்பெறப்படுமென எதிர்பார்க்கப்படும் தொகையினை உட்படுத்துபவையாகும்.

| | |
|---|---|
| | முன்னிலைப்படுத்தும் உரிமங்கள் உள்ளடங்கலாக சகல உரிமங்களுக்கும் பிரயோகிக்கப்படும். |
| பந்தி 7 | **கீழே தரப்பட்டுள்ள பதங்கள் குறித்துக்காட்டப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் இந்நியமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளன:**<br><br>**<u>பொதுத் தேவைப்பாட்டுக்கான நிதிக்கூற்றுக்கள்</u> ( நிதிக்கூற்றுக்கள் என குறிக்கப்படுகின்றவை) என்பன, பாவனையாளர்களின் குறிப்பிட்ட தகவற் தேவைப்பாட்டுக்கு பொருந்தக் கூடியவாறு அறிக்கையினை தயாரிக்குமாறு உரிமமொன்றை வேண்டிக்கொள்கின்ற நிலைமையில் இல்லாத உத்தேசிக்கப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்கின்றவையாகும்.**<br><br>**<u>நடைமுறைச் சாத்தியமற்றது</u> எனப்படுவது, உரிமமொன்று சாத்தியமான சகல நியாயபூர்வமான முயற்சிகளை மேற்கொண்ட பின்னரும் தேவைப்பாட்டினை பிரயோகிக்க முடியாத நிலையாகும்.**<br><br>**<u>இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRs)</u> எனப்படுபவை இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் பேரவையினால் கடைப்பிடிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் ஆகும் இவை கீழ்க்கண்டவற்றைக் கொண்டிருக்கும்.**<br><br>**அ) ஸ்ரீ லங்கா கணக்கீட்டு நியமங்கள் (SLFRSs)**<br><br>**ஆ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKASs)**<br><br>**இ) பரிந்துரை செய்யப்பட்ட நடைமுறைகளின் கூற்று (SoRPs)**<br><br>**ஈ) மாற்று வழிமுறைகளுக்கான கூற்று (SoATs)**<br><br>**உ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் பேரவையினால் கடைப்பிடிக்கப்படும் வியாக்கியானங்கள் (IFRIC & SIC)**<br><br>**ஊ) இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட நிதி அறிக்கையிடல் வழிகாட்டல்கள்**<br><br>***பொருண்மை*: உருப்படிகளின் தவறுகைகள் அல்லது பிறழ்கூற்றுகள் அவை தனியாகவோ அல்லது கூட்டாகவோ, நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பாவனையாளர் எடுக்கும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்துமாயின் அவை பொருண்மையானதாகும். பொருண்மை தன்மை சூழவுள்ள சந்தர்ப்பங்களில் சீர்தூக்கி பார்க்குமிடத்து விடப்பட்ட அல்லது பிறழ்கூற்றின் அளவு மற்றும் இயல்பில் தங்கியுள்ளது. உருப்படியின் அளவு அல்லது தன்மை அல்லது இரண்டும் சேர்ந்து தீர்மானிக்கும் காரணியாக அமையலாம்.**<br><br>விடப்படுதல் அல்லது பிறழ்கூற்றுக்கள் பாவனையாளர்களின் பொருளாதார தீர்மானங்களில் அக்கறை செலுத்துமா என மதிப்பிடுதல் மற்றும் அதன் காரணமாக பொருண்மையானதாக காணப்படுதல் அந்தப் பாவனையாளர்களின் நடத்தையினை கவனத்தில் கொள்வதனை தேவைப்படுத்தும். நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் முன்னிலைப்படுத்தலுக்கான சட்டகம் அதன் பந்தி 25ல் 'பாவனையாளர்கள் நியாயமான வியாபார மற்றும் பொருளாதார செயற்பாடுகள் பற்றிய அறிவை கொண்டிருப்பர் எனவும், தகவலை விடா முயற்சியுடன் தாமாகவே கற்பர் எனவும்' எடுகோளினை மேற்கொண்டுள்ளது. ஆகவே இந்த மதிப்பீடு பாவனையாளர்கள் இயல்பாக பொருளாதார தீர்மானங்களை எடுப்பதில் எவ்வாறு செல்வாக்கு செலுத்தும் என்ற நியாயபூ ர்வமான எதிர்பார்ப்பினை கருத்திற் கொள்ள வேண்டிய தேவையினை ஏற்படுத்துகின்றது.<br><br>***குறிப்புகள்*: இவை நிதிநிலை கூற்று, <u>இலாபநட்டங்கள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று</u>, உரிமையாண்மை மாற்றங்களுக்கான கூற்று மற்றும் காசுப்பாய்வுக் கூற்றுக்கள் ஆகியவற்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட தகவலுக்கு மேலதிகமான தகவல்களைக் கொண்டிருக்கும். குறிப்புகள் சுருக்கமான விபரங்கள் அல்லது அந்த கூற்றுக்களில் முன்னிலைப்படுத்தப்பட்ட உருப்படிகளின் பகுப்பு** |

| | |
|---|---|
| | **மற்றும் இக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்ய தகமையற்ற உருப்படிகள் பற்றிய தகவல் ஆகியவற்றினை வழங்குகின்றது.**<br><br>***ஏனைய முற்றடக்க வருமானம்* ஏனைய SLFRSs களினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்டவாறு இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படாத வருமான மற்றும் செலவு உருப்படிகளை (மீள்வகைப்படுத்தல் செம்மையாக்கம் உட்பட) கொண்டிருக்கும்.**<br><br>ஏனைய முற்றடக்க வருமானத்தின் கூறுகள் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கும்:<br><br>அ) மீள்மதிப்பிடலின் மிகையில் மாற்றங்கள் (LKAS 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் LKAS 38 அருவச் சொத்துக்கள்)<br><br>ஆ) வரையறை செய்யப்பட்ட பயன்தரு திட்டங்களின் <u>மீள் அளவீடு</u> (LKAS 19 *ஊழியர் பயன்கள்* நியமத்தைப் பார்க்கவும்)<br><br>இ) அந்நிய தொழிற்பாடுகளின் நிதிக்கூற்றுக்களை நாணய மாற்றம் செய்வதனால் ஏற்படுகின்ற நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் (LKAS 21 *அந்நிய நாணயமாற்று விகித மாற்றங்களின் தாக்கங்களை* பார்க்கவும்)<br><br>ஈ) விற்பனைக்காக கிடைக்கப்பெறும் நிதிச் சொத்துக்களின் மீள் அளவிடலினால் ஏற்படும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் (LKAS 39 *நிதிச் சாதனங்கள்: ஏற்பிசைவும் மற்றும் அளவீடும்* இனைப் பார்க்கவும்)<br><br>உ) காசுப்பாய்வு தளம்பற்காப்பில் உள்ள தளம்பற்காப்பு சாதனங்களின் மீதான இலாபங்கள் மற்றும் நட்டங்களில் விளைவுப் பகுதி (LKAS 39ஐ பார்க்கவும்)<br><br>***உரிமையாளர்* எனப்படுவோர் உரிமையாண்மையாக வகைப்படுத்தப்பட்ட சாதனங்களை கொண்டுள்ளோர் ஆவர்.**<br><br>***இலாபம் அல்லது நட்டம்* என்பது, ஏனைய முற்றடக்க வருமானத்தின் கூறுகள் நீங்கலாக மொத்த வருமானத்திலிருந்து செலவுகளை கழித்து வருவதாகும்.**<br><br>***மீள் வகைப்படுத்தல் சீராக்கல்கள்* என்பது, நடப்பு காலத்திலோ அல்லது அதற்கு முன்னைய காலங்களிலோ பிற முற்றடக்க வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு நடப்புக் காலத்தில் இலாபம் அல்லது நட்டத்தில் மீள்வகைப்படுத்தப்படும் தொகையாகும்.**<br><br>***மொத்த முற்றடக்க வருமானம்* என்பது, உரிமையாளர் என்ற அந்தஸ்த்தில் உரிமையாளர்களுடனான நடவடிக்கைகளின் விளைவாக ஏற்படும் உரிமையாண்மை மாற்றம் தவிர்ந்த ஊடுசெயல்கள் அல்லது நிகழ்வுகளினால் காலமொன்றின்போது விளையும் உரிமையாண்மை மாற்றங்களாகும்.**<br><br>மொத்த முற்றடக்க வருமானம் 'இலாபம் அல்லது நட்டம்' மற்றும் 'பிற முற்றடக்க வருமானம்' ஆகியவற்றின் சகல கூறுகளையும் கொண்டிருக்கும். |
| பந்தி 10 | **நிதிக்கூற்றுக்களின் பூரண ஆக்கக் கூறுகள் கீழ்க்கண்டவற்றை கொண்டிருக்கும்.**<br><br>**அ) காலத்தின் இறுதியில் உள்ளவாறு நிதிலைக் கூற்று.**<br><br>**ஆ) காலத்திற்கான <u>இலாப நட்ட மற்றும் ஏனைய</u> முற்றடக்க வருமானக் கூற்று.**<br><br>**இ) காலத்திற்கான உரிமையாண்மையில் மாற்றங்கள் பற்றிய கூற்று.**<br><br>**ஈ) காலத்திற்கான காசுப்பாய்வுக் கூற்று.**<br><br>**உ) குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவலின் சுருக்கம் உள்ளடங்கலாக, குறிப்புகள்.** |

| | |
|---|---|
| | **ஊ) பந்திகள் <u>38</u> மற்றும் <u>38A</u> இல் குறிப்பிடப்பட்டவாறாக உரிமமொன்று முன்னைய காலப்பகுதி தொடர்பான ஒப்பீட்டுத் தகவல்**<br><br>**எ) <u>பந்திகள் 40A-40D இன் படியாக</u> உரிமமொன்று கணக்கீட்டு கொள்கையை முன்னைய காலப்பகுதி ஆரம்பத்திலிருந்து அமுலுக்கு வரும்வகையில் பிரயோகிக்கும் போதோ அல்லது நிதிக் கூற்றுக்களில் உருப்படிகளை திருத்திக் கூறும் போதோ அல்லது நிதிக்கூற்றுக்களில் உள்ள உருப்படிகளை மீள் வகைப்படுத்தல் செய்யும் போதோ மிக <u>முன்னதான</u> ஒப்பீட்டுக் காலத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான நிதிநிலைக் கூற்று**<br><br>**உரிமமொன்று இந்த நியமத்தில் பாவிக்கப்பட்ட தலைப்புக்கள் தவிர்ந்த வேறு தலைப்புக்களை நிதிக்கூற்றுக்களில் பாவிக்கலாம். <u>உதாரணமாக, 'இலாபநட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று' என்னும் தலைப்பிற்குப் பதிலாக 'முற்றடக்க வருமானக் கூற்று' என்னும் தலைப்பினைப் பயன்படுத்த முடியும்.</u>** |
| பந்தி 10A | **உரிமமென்று இலாபநட்டங்கள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானங்களைத் தனித்தனியான இரு பகுதிகளில் வெளிப்படுத்தி ஒரே கூற்றாக இலாப நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்றினை முன்னிலைப்படுத்த முடியும். இப் பகுதிகள் முதலில் இலாப நட்டப் பகுதியும் அதனைத் தொடர்ந்து ஏனைய முற்றடக்கப் பகுதியும் இடம்பெறக்கூடிய வகையில் ஒன்றாக முன்னிலைப்படுத்தப்பட முடியும். உரிமம் இலாப நட்டங்களைத் தனியான ஒரு கூற்றாக முன்னிலைப்படுத்த முடியும். அவ்வாறு முன்னிலைப்படுத்தின், அது முற்றடக்க வருமானங்கள் முன்னிலைப்படுத்தப்பட முன்பதாக முன்னிலைப்படுத்தப்பட, முற்றடக்க வருமானக் கூற்று இலாபநட்டத்தில் ஆரம்பிக்கும்.** |
| பந்தி 12 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 17 (a) | LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* என்னும் நியமத்திற்கு அமைவாக கணக்கீட்டுக் கொள்கைகளை தேர்வு செய்து பிரயோகிப்பதற்கு. ஒரு குறிப்பிட்ட உருப்படிக்கு குறிப்பாக பிரயோகிக்கப்படக் கூடிய <u>SLFRS</u> நியமமொன்று இல்லாத விடத்து முகாமை கருத்திற் கொள்ளக் கூடிய அதிகார ரீதியிலான வழிகாட்டல்களின் படியமைப்பினை LKAS 8 குறிப்பிடுகின்றது. |
| பந்தி 33 | சொத்துக்களும் பரிப்புக்களும் அதேபோல வருமானமும் செலவுகளும் வெவ்வேறாக அறிக்கையிடப்படுதல் முக்கியமானதாகும். எதிரீடு செய்தல் நடவடிக்கைகளின் அல்லது வேறு நிகழ்வுகளின் உள்ளடக்கத்தினை பிரதிபலிக்கும் சந்தர்ப்பங்கள் தவிர <u>இலாபநட்ட மற்றும் ஏனைய</u> முற்றடக்க வருமானக்கூற்றில் அல்லது நிதிநிலமையில் அல்லது தனியான வருமானக்கூற்றில் (முன்நிலைப்படுத்தப்படின்) மேற்கொள்ளப்படும் எதிரீடானது நிகழ்ந்துள்ள ஊடுசெயல்கள், வேறு நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை விளங்கிக் கொள்வதற்கும் உரிமத்தின் எதிர்காலக் காசுப்பாய்வுகளை மதிப்பீடு செய்வதிலும் நிதிக்கூற்றுக்களை பாவிப்போரின் இயலுமையினைப் பாதிக்கின்றது. சொத்துக்களை நிகர மதிப்பீட்டுப்படிகளில் அளவிடுதல், உதாரணமாக, தொக்குகளுக்கான வழக்கிழப்புப் படிகள் மற்றும் வருமதிகள் மீதான ஐயுறவுக் கடன்படிகள் ஆகியன எதிரீடுகள் ஆகமாட்டா. |
| | <u>*குறைந்தபட்ச ஒப்பீட்டுத் தகவல்கள்*</u> |
| பந்தி 38 | **SLFRs அனுமதித்திருந்தாலோ அல்லது வேறு வகையில் தேவைப்படுத்தியிருந்தாலோ தவிர நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்படும் சகல பெறுமதிகளுக்குமான <u>முன்னைய</u> காலந்தொடர்பான ஒப்பீட்டு தகவல்கள் <u>முன்னிலைப்படுத்தப்படல்</u> வேண்டும். நடப்பு காலத்திற்கான நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்வதில் தொடர்புபட்டதாக இருக்குமேயாகில் சுருக்கக் குறிப்பு மற்றும் விபரமான தகவல்களுக்கும் ஒப்பீட்டுத் தகவல்கள் உட்படுத்தப்பட வேண்டும்.** |
| பந்தி 38A | **<u>உரிமம் குறைந்தபட்சம் இரு நிதிநிலைமைக் கூற்றுக்கள் மற்றும் இரு இலாப நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்றுக்கள், இரு வேறான இலாபநட்டக்</u>** |

| | |
|---|---|
| | **கூற்றுக்கள், இரு காசுப் பாய்வுக் கூற்றுக்கள், இரு உரிமை அசைவுக் கூற்றுக்கள் மற்றும் தொடர்புபட்ட குறிப்புக்களை முன்னிலைப்படுத்தல் வேண்டும்.** |
| பந்தி 38B | சில சந்தர்ப்பங்களில், முன்னைய காலத்துக்கு (காலங்களுக்கு) வழங்கப்பட்டுள்ள குறிப்பீட்டுத் தகவல்கள் தற்போதைய காலப்பகுதிக்கும் உகந்தவையாகக் காணப்படலாம். உதாரணமாக, உரிமம் தற்போதைய காலத்தில் சட்ட முரண்பாடு ஒன்று தொடர்பான விடயங்களை வெளிக்காட்டுகிறது எனில், அதன் வெளியீடு முன்னைய காலப்பகுதியில் நிச்சயமற்றதாகக் காணப்பட்டிருப்பதுடன் அது தீர்க்கப்படாது காணப்பட்டிருக்கலாம். நிச்சயமற்ற தன்மை முன்னைய காலத்தின் வெளிப்படுத்துகை மற்றும் அந்த நிச்சயமற்ற தன்மையினைத் தீர்ப்பதற்கான படிமுறைகள் தற்போதைய காலத்தில் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பான தகவல்களின் வெளிக்காட்டல்கள் மூலம் பயனாளர்கள் பயனடைந்திருப்பர். |
| | *மேலதிக ஒப்பீட்டுத் தகவல்கள்* |
| பந்தி 38C | உரிமம் SLFRS நியமங்களினால் தேவைப்படுத்தப்படும் குறைந்தபட்ச வெளிப்படுத்தல்களுக்கு மேலதிகமாக, ஒப்பீட்டுத் தகவல்கள் SLFRS நியமங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட ஆனால் முழுமையான நிதிக்கூற்றுத் தொகுதியை கொண்டிருக்க வேண்டியிருப்பின் அவற்றை வெளிப்படுத்தக்கூடும். இந்த ஒப்பீட்டுத் தகவலானது பந்தி 10 இல் குறிப்பிடப்பட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கூற்றுக்களின் தகவல்களைக் கொண்டிருக்கக்கூடும். இந்த நிலைமையின் போது, உரிமம் தொடர்புபட்ட குறிப்புத் தகவல்களை அவ்வாறான மேலதிகக் கூற்றுக்களில் வெளிக்காட்டல் வேண்டும். |
| பந்தி 38D | உதாரணமாக, உரிமம் மூன்றாவது இலாப நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்றை முன்னிலைப்படுத்தக்கூடும் (அதன் மூலமாக, தற்போதைய காலம், முன்னைய காலம் மற்றும் மேலதிகமாக ஒரு ஒப்பீட்டுக்காலம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தல்). எனினும், உரிமம் மூன்றாவது நிதிநிலைமைக் கூற்று, காசுப்பாய்வுக் கூற்று, உரிமை அசைவுக் கூற்று (மேலதிக நிதிக்கூற்று ஒப்பீடு) ஆகியவற்றை முன்னிலைப்படுத்த வேண்டியதில்லை. உரிமம் நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களில், மேலதிக இலாப நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று தொடர்பான ஒப்பீட்டுத் தகவலினை வெளிக்காட்டல் வேண்டும். |
| பந்தி 39 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 40 | நீக்கப்பட்டுள்ளது |
| | *கணக்கீட்டுக் கொள்கையிலான மாற்றங்கள், முற்கால விளைவுள்ள மீள்கூற்று அல்லது மீள்வகைப்படுத்தல்* |
| பந்தி 40A | **உரிமம் ஒன்று பந்தி 38 A இனால் தேவைப்படுத்தப்படும் குறைந்தபட்ச ஒப்பீட்டு நிதிக்கூற்றுக்களுக்கு மேலதிகமாக முன்னைய காலத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான மூன்றாவது நிதிநிலைமைக் கூற்றினை முன்னிலைப்படுத்தும்.**<br><br>**(அ) அது முற்காலத்திலிருந்து விளைவுள்ள வகையில் கணக்கீட்டுக் கொள்கையினைப் பிரயோகித்து நிதிக்கூற்றுக்களின் உருப்படிகளை முற்கால விளைவுள்ள வகையில் மீள்கூற்று செய்தல் வேண்டும் அல்லது நிதிக்கூற்றுக்களின் உருப்படிகளை மீளவகைப்படுத்தல் வேண்டும்**<br><br>**மற்றும்**<br><br>**(ஆ) முற்காலத்திலிருந்து விளைவுள்ள பிரயோகம், முற்கால விளைவுள்ள மீள்கூற்று அல்லது மீள்வகைப்படுத்தலானது முற்கால ஆரம்பத்தில் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றுக்களில் உள்ள தகவல்களின் மீது பொருண்மைத்தன்மை வாய்ந்த விளைவைக் கொண்டிருக்கும்.** |
| பந்தி 40B | பந்தி 40A இல் குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளில், உரிமம் பின்வரும் காலப்பகுதிகளுக்கான மூன்று நிதிநிலைமைக் கூற்றுக்களை முன்னிலைப்படுத்தல் வேண்டும்: |

| | |
|---|---|
| | (அ) தற்காலத்தின் முடிவு<br>(ஆ) முன்னைய காலத்தின் முடிவு<br>(இ) முன்னைய காலத்தின் ஆரம்பம் |
| பந்தி 40C | உரிமம் பந்தி 40A க்கு அமைவாக மேலதிக நிதிநிலைமைக் கூற்று ஒன்றினை முன்னிலைப்படுத்துமாறு வேண்டப்படும் போது, அது LKAS 8 நியமத்தின் பந்திகள் 41-44க்கு அமைவாக தேவைப்படுத்தப்படும் விடயங்களை வெளிக்காட்டல் வேண்டும். எனினும், அது தொடர்புபட்ட குறிப்புக்களை முன்னைய காலத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான ஆரம்ப நிதி நிலைமைக் கூற்றில் காட்ட வேண்டியதில்லை. |
| பந்தி 40D | உரிமத்தின் நிதிநிலைமைக்கூற்று முன்னைய காலத்துக்கான ஒப்பீட்டுத் தகவல்களை முன்னிலைப்படுத்துகின்றதா என்பதைக் கவனத்தில் கொள்ளாது, ஆரம்ப நிதி நிலைமைக்கூற்றின் திகதியானது முன்னைய காலத்தின் ஆரம்பமாக இருத்தல் வேண்டும் (பந்தி 38 C இல் அனுமதிக்கப்பட்டவாறாக) |
| பந்தி 41 | **நிதிக்கூற்றுக்களிலுள்ள உருப்படிகளின் முன்னிலைப்படுத்தல் அல்லது வகைப்படுத்தல் திருத்தப்படும் போது மீள்வகைப்படுத்தல் சாத்தியமாக இருந்தாலேயன்றி ஒப்பீட்டு தகவல்கள் மீள்வகைப்படுத்தப்படும். ஒப்பீட்டு தொகைகள் மீள்வகைப்படுத்தப்படும் போது உரிமமொன்று கீழ்கண்டவற்றை (முன்னைய காலப்பகுதியின் ஆரம்ப உள்ளடங்கலாக) வெளிக்காட்டும்:** |
| பந்தி 47 | இந்த நியமம் நிதிநிலைமைக்கூற்று அல்லது இலாபநட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று(க்கள்), தனியான வருமானக்கூற்று (முன்நிலைப்படுத்தப்படின்) அல்லது உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று ஆகியவற்றில் குறிப்பிட்ட சில வெளிக்காட்டல்களையும் அதே கூற்றுக்களில் அல்லது குறிப்புக்களாக பிற வரிசைஉருப்படிகளின் வெளிக்காட்டல்களையும் தேவைப்படுத்துகின்றது. காசுப்பாய்வுக் கூற்றின் முன்னிலைப்படுத்தற் தேவைப்பாடுகளை LKAS 7 *காசுப்பாய்வுக் கூற்று* குறிப்பிடுகின்றது. |
| பந்தி 139 | உரிமமொன்று இந்த நியமத்தினை 2012 சனவரி 1ந் திகதியிலோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். இக்காலத்திற்கு முந்திய பிரயோகம் ஊக்குவிக்கப்படுகின்றது. உரிமமொன்று இந்த நியமத்தினை முன்னைய காலமொன்றிற்கு பிரயோகிக்குமேயாகில் உரிமம் அந்த உண்மையினை வெளிப்படுத்தும். |
| பந்தி 139H | SLFRS 10 மற்றும் SLFRS 12 நியமங்கள் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 4, 119, 123 மற்றும் 124. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 10 மற்றும் SLFRS 12 நியமங்களைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 139I | SLFRS 13 நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 128 மற்றும் 133. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 139J | ஏனைய முற்றடக்க வருமானங்களின் உருப்படிகளை முன்னிலைப்படுத்தல் (LKAS 1 நியமத்துக்கான திருத்தம்) 2014 சனவரியில் வழங்கப்பட்டது. திருத்தப்பட்ட பந்திகள் 7, 10, 82, 85-87, 90, 91, 94, 100 மற்றும் 115, சேர்க்கப்பட்ட பந்திகள் 10A, 81A, 81B மற்றும் 82A, மற்றும் நீக்கப்பட்டுள்ள பந்திகள் 12, 81, 83 மற்றும் 84 ஆகும். உரிமம் இந் நியமத்தை 01 சனவரி 2012 அல்லது அதற்குப் பிந்திய காலப்பகுதியைக் கொண்ட நிதிக் கூற்றுக்களுக்கு செயற்படுத்தக் கூடியதாகவுள்ளது. முன்னைய பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. உரிமம் இந் நியமத்தினை 01 சனவரி 2014 முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பந்தி 139K | LKAS 19 ஊழியர் பயன்கள் நியமம் (2013 இல் திருத்தப்பட்டவாறாக) பந்தி 7 மற்றும் பந்தி 96 இல் 'ஏனைய முற்றடக்க வருமானங்களுக்கான' வரைவிலக்கணத்தை திருத்தம் செய்துள்ளது. உரிமம் இத் திருத்தங்களை LKAS 19 நியமத்தினைப் (2013 இல் திருத்தப்பட்டவாறாக) பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 139L | IASB இன் வருடாந்த மேம்படுத்தல்களின் பின்பற்றுகை (2009-2011 சுழற்சிக்காலம் மே 2012 இல் வழங்கப்பட்டது), திருத்தப்பட்ட பந்திகள் 10, 38 மற்றும் 41. நீக்கப்பட்ட பந்திகள் 39-40. சேர்க்கப்பட்ட பந்திகள் 38A-38D மற்றும் 40A-40D. உரிமம் LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள்* நியமத்துக்கு இணக்கமான வகையில் இந்த மாற்றங்களினை முற்கால விளைவுள்ள வகையில் பிரயோகித்தல் வேண்டும். |
| | கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் மற்றும் வழுக்கள் 01 சனவரி 2014 க்குப் பின்னரான ஆண்டுக் காலங்களில் ஆரம்பிக்கிறது. முன்னைய பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. உரிமம் இந் நியமத்தினை 01 சனவரி 2014 முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தல் வேண்டும். |

**LKAS 2 தொக்குகள்**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 3 (a) | **அந்த கைத்தொழில்களில் நன்கு தாபிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைவாக நிகர தேறுகைப் பெறுமதிகளில் அளவிடப்படும் அளவுக்கு விவசாய மற்றும் வன உற்பத்திப் பொருட்கள், அறுவடைக்குப் பின்னர் விவசாய உற்பத்திப் பொருட்கள், கனிப்பொருட்களும் கனிப்பொருள் உற்பத்திகளும் ஆகியவற்றின் உற்பத்தியாளர். அவ்வாறான தொக்குகள் நிகர தேறுகைப் பெறுமதியில் அளவிடப்படும்போது, அந்தப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் அந்த மாற்றங்கள் ஏற்படும் காலத்திலேயே இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.** |
| | **கீழ்வரும் பதங்கள் குறிப்பிடப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இந்த நியமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளன:**<br><br>**தொக்குகள் கீழ்வரும் வகையில் அமைந்த சொத்துக்களாகும்:**<br><br>**(a) வியாபாரத்தின் வழமையான செயற்பாடாக விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவை;**<br><br>**(b) அவ்வாறான விற்பனைக்கான உற்பத்திச் செயன்முறையில் உள்ளவை அல்லது**<br><br>**(c) உற்பத்திச் செயன்முறையில் அல்லது சேவைகளை வழங்குவதில் நுகரப்படவுள்ள பொருட்கள் அல்லது வழங்கல்களாக உள்ளவை.**<br><br>**நிகர தேறுகைப் பெறுமதி ஆனது வியாபாரத்தின் வழமையான செயற்பாடுகளின் போது மதிப்பிடப்பட்ட விற்பனை விலையிலிருந்து மதிப்பிடப்பட்ட பூர்த்தி செய்தல் கிரயங்கள் மற்றும் மதிப்பிடப்பட்ட விற்பனை செய்வதற்கு அவசியமான கிரயங்களை கழிக்க வரும் தொகையாகும்.**<br><br>**சீர்பெறுமதி என்பது மதிப்பீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்கள் இடையே ஒரு முறையான ஊடுசெயல் மூலம் ஒரு சொத்தை விற்பதனால் பெறப்படும் அல்லது ஒரு பரிப்பினை மாற்றம் செய்வதற்காக அளிக்கப்படும் விலை ஆகும். (SLFRS 13 இனைப் பார்க்கவும்)** |
| பந்தி 7 | நிகர தேறுகைப் பெறுமதியானது உரிமமொன்று வழமையான வியாபார செயற்பாட்டின்போது தொக்கின் விற்பனையிலிருந்து தேறுமென எதிர்பார்க்கும் |

| | |
|---|---|
| | நிகரத் தொகையினை குறிப்பிடுகின்றது. சீர்மதிப்பானது அதே தொக்குகள் மதிப்பீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்களிடையே ஒரு முறையான ஊடுசெயல் மூலம் இருப்பினை ஒரு பிரதான (அல்லது கூடுதலான நன்மை மிக்க சந்தையில்) விற்பதற்காகப் பரிமாறப்படக்கூடிய தொகையினை பிரதிபலிக்கின்றது. முன்னையது உரிமம் தொடர்புபட்ட பெறுமதியாகும். பின்னையது அப்படி அல்ல. தொக்குகளுக்கான நிகர தேறுகைப்பெறுமதி சீர்மதிப்பிலிருந்து விற்பனைக்கான கிரயத்தினை கழிக்கவரும் தொகைக்கு சமமானதாக இருக்க வேண்டியதில்லை. |
| பந்தி 40 | உரிமமொன்று இந்த நியமத்தினை 2012 சனவரி 1ந் திகதியிலோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். இக்காலத்திற்கு முந்திய பிரயோகம் ஊக்குவிக்கப்படுகின்றது. உரிமமொன்று இந்த நியமத்தினை முன்னைய காலமொன்றிற்கு பிரயோகிக்குமேயாகில் உரிமம் அந்த விடயத்தினை வெளிப்படுத்தும். |
| பந்தி 40A | [நீக்கப்பட்டுள்ளது] |
| பந்தி 40B | [நீக்கப்பட்டுள்ளது] |
| பந்தி 40C | SLFRS 13 *சீர்பெறுமதி மதிப்பீடு* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 6 மற்றும் 7 இல் சீர்பெறுமதிக்கான வரைவிலக்கணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |

## LKAS 7 காசுப்பாய்வுகளின் கூற்று

| **ஏற்கனவே உள்ள பந்தி** | **பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி** |
|---|---|
| பந்தி 8 | வங்கிக் கடன் படுகைகள் பொதுவாக நிதியளிப்பு நடவடிக்கைகளாகக் கொள்ளப்படும். எனினும் சில நாடுகளில், கோரியவுடன் மீளச் செலுத்தப்பட வேண்டிய வங்கி மேலதிகப் பற்றுக்கள் உரிமத்தின் காசு முகாமையின் ஒன்றித்த பகுதியாகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் வங்கி மேலதிகப் பற்றுக்கள் காசு மற்றும் காசுக்கு சமனானவைகளின் ஆக்கக்கூறாக உட்படுத்தப்படும். அவ்வாறான வங்கி ஒழுங்காக்கங்களின் ஒரு குணவியல்பு வங்கி மீதி சாதக, பாதக நிலைகளுக்கிடையே ஏற்றத் தாழ்வுகளுக்கு உட்படுதலாகும். |
| பந்தி 37 | ஒரு இணை கம்பனி, கூட்டுத்தொழில் முயற்சி அல்லது உப கம்பனியில் முதலீட்டினை உரிமையாண்மை அல்லது கிரய முறையை உபயோகித்து கணக்கீடு செய்யும் போது ஒரு முதலீட்டாளர் காசுப் பாய்ச்சல் கூற்றில் அதற்கும் முதலீட்டு நிறுவனத்திற்கும் இடையேயான காசுப்பாய்ச்சல்களின் அறிக்கையிடலை வரையறை செய்வார். உதாரணம் பங்கிலாபங்களுக்கும் முற்பணங்களுக்கும். |
| பந்தி 38 | கூட்டுத்தொழில் முயற்சி அல்லது துணைக்கம்பனி ஒன்றிலான தமது அக்கறையினை உரிமையாண்மை முறையினை உபயோகித்து அறிக்கையிடும் உரிமம் ஒன்று அதன் ஒன்றித்த காசுப் பாய்ச்சல் கூற்றில் கூட்டுத்தொழில் முயற்சி அல்லது துணைக்கம்பனியின் காசுப் பாய்ச்சல்களில் அதன் விகிதாசாரப் பங்கினை உட்படுத்துவதுடன் அதன் காசுப் பாய்ச்சல் கூற்றில் கூட்டுத்தொழில் முயற்சி அல்லது துணைக்கம்பனியில் அதன் முதலீடுகள் தொடர்பான காசுப் பாய்ச்சல்களினையும் கூட்டாகக் கட்டுப்படுத்தப்படும் உரிமத்திற்கும் அதற்கும் இடையிலான பகிர்வுகள் மற்றும் கொடுப்பனவுகள் அல்லது பெறுவனவுகளையும் உள்ளடக்கும். |
| பந்தி 40A | ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் நியமத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு, முதலீட்டு உரிமம் ஒன்று இலாப நட்டங்களின் ஊடாக சீர்மதிப்பு அளவிடப்படும் உப கம்பனிகளின் மீதான முதலீடுகளுக்கு பந்தி 40(c) அல்லது 40(d) இனைப் பிரயோகிக்க வேண்டிய தேவைப்பாடு இல்லை. |

| | |
|---|---|
| பந்தி 42A | நியமத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட் விதமாக, உப கம்பனியானது முதலீட்டு உரிமம் ஒன்றினால் கைக்கொள்ளப்பட்டிராத போது மற்றும் இலாபநட்டத்தின் ஊடாக சீர் பெறுமதியில் மதிப்பிடப்பட வேண்டிய தேவைப்பாடு இல்லாத போது, கட்டுப்பாட்டின் இழப்பினை விளைவாக ஏற்படுத்தாத உப கம்பனியொன்றின் உடைமை அக்கறையின் மாற்றங்களிலிருந்து தோன்றும் காசுப் பாய்ச்சல்கள் நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்களென வகைப்படுத்தப்படும். |
| பந்தி 42B | முதனிலைக் கம்பனியால் உபகம்பனியின் உரிமையாண்மை சாதனங்கள் தொடர்ந்துவரும் காலங்களில் விற்பனை அல்லது கொள்வனவு போன்ற (SLFRS 10 நியமத்தினைப் பார்க்கவும்). உப கம்பனியானது முதலீட்டு உரிமம் ஒன்றினால் கைக்கொள்ளப்பட்டிராத போது மற்றும் இலாபநட்டத்தின் ஊடாக சீர் பெறுமதியில் மதிப்பிடப்பட வேண்டிய தேவைப்பாடு இல்லாத போது, கட்டுப்பாட்டின் இழப்பினை விளைவாக ஏற்படுத்தாத உப கம்பனியொன்றின் உடைமை அக்கறையின் மாற்றங்கள் உரிமையாண்மை ஊடுசெயல்களென கணக்கீடு செய்யப்படும். அதன்படியாக, விளைவான காசுப் பாய்ச்சல்கள் பந்தி 17 இல் விபரிக்கப்பட்டவாறு வேறு ஊடுசெயல்கள் போன்ற அதே வழியில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. |
| பந்தி 50 (b) | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 53 | இந் நியமம் 1 தை 2012 அல்லது அதற்குப் பிந்திய காலப்பகுதியைக் கொண்ட நிதிக் கூற்றுக்களுக்கு செயற்படுத்தக் கூடியதாக வரவுள்ளது. முன்னைய பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. 1 தை 2012 முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிக்கின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தும். |
| பந்தி 57 | SLFRS 10 மற்றும் SLFRS 11 *இணைந்த ஏற்பாடுகள்,* ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 37, 38 மற்றும் 42B. பந்தி 50 (b). உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 10 மற்றும் SLFRS 11 நியமங்களைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 58 | நீக்கப்பட்டுள்ளது |

## LKAS 8 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 52 | எனவே பின்னோக்கிய காலத்திற்கு ஒரு புதிய கணக்கீட்டுக் கொள்கைக்கு அல்லது முந்திய காலத்தின் வழுக்களை அல்லது பிழைகளைத் திருத்தும் போது அடையாளங்காணக்கூடிய தகவலொன்று தேவைப்படுகின்றது. அது,<br><br>அ) பரிமாற்றம், வேறு நிகழ்ச்சி அல்லது வேறு நிபந்தனை நேரிடுகின்ற போது அந்தத் திகதியில் (திகதிகளில்) நிலையாய் இருப்பதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கான சான்றினைத் தருகின்றது.<br><br>ஆ) நிதிக்கூற்றுக்கள் வேறு தகவலிலிருந்து கிடைக்கக்கூடியதும் முந்திய காலத்திற்கு அங்கிகரித்து விநியோகிக்கக்கூடியதுமான சந்தர்ப்பத்தின் சில வகையான மதிப்பீடுகளிற்கு (உதாரணம் - அவதானிக்க முடியாத முக்கிய உள்ளீடுகளைப் பிரயோகிக்கும் சீர்பெறுமதி மதிப்பீடு), இந்த மாதிரியான தகவல்களின் பேதங்களைக் கண்டுபிடித்து செயற்படுத்த முடியாதிருக்கின்றது. இந்த இரண்டுவிதமான தகவலின் பேதங்களை அறியமுடியாத சந்தர்ப்பங்களிலும் பின்னோக்கிய காலப் பிரயோகத்திற்கும் பின்னோக்கிய கால மீளக்குறிப்பிடலுக்கும் குறிப்பிடத்தக்க மதிப்பீட்டினைச் செய்ய வேண்டும். இந்தவகையில் ஒரு புதிய கணக்கீட்டுக் கொள்கைக்கு பிரயோகித்துச் செயற்படுத்த முடியாதுள்ளது. அல்லது பின்னோக்கிய காலத்திற்கான முந்திய காலத் தவறினை திருத்தம் செய்யமுடியாதுள்ளது. |

| | |
|---|---|
| பந்தி 54 | நிறுவனமொன்று 2012 ஜனவரி 1 இன் பின்னர் அல்லது வருட காலப்பகுதியின் தொடக்கத்திற்காக இந்நியமனத்தினை பிரயோகிக்கலாம். முன்னைய பிரயோகமானது ஊக்குவிக்கப்படுகின்றது. நிறுவனமொன்று 2012 சனவரி 1ம் திகதிக்கு முன்னரான தொடக்க காலப்பகுதிக்காக இந்நியமனத்தினை பிரயோகிக்குமாயின், அது அதற்கான விடயத்தினை வெளிப்படுத்த வேண்டும். |
| பந்தி 54A | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 54B | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 54C | SLFRS 13 *சீர்பெறுமதி மதிப்பீடு* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 52. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |

## LKAS 10 அறிக்கையிடும் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 11 | அறிக்கையிடும் கால முடிவிற்கும் நிதிக்கூற்றுக்கள் வெளிக் கொணரப்படுவதற்காக அங்கீகரிப்பட்ட திகதிக்கும் இடையில் முதலீடுகளின் சீர்பெறுமதி வீழ்ச்சி அறிக்கையிடும் காலத்திற்குப் பின்னரான செம்மையாக்கம் செய்ய வேண்டாத நிகழ்விற்கு ஓர் உதாரணமாகும். சீர்பெறுமதி வீழ்ச்சி அறிக் கையிடும் கால முடிவில் முதலீடுகளின் நிலைமையுடன் சாதாரணமாக தொடர்பற்றதாக இருந்தபோதிலும் அது பின்னர் ஏற்பட்ட சூழ்நிலையினை பிரதிபலிக்கின்றது. ஆகவே உரிமம் நிதிக்கூற்றுக்களில் முதலீடுகள் சம்பந்தமாக ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகையை செம்மையாக்கம் செய்யாது. அதேபோல அறிக்கையிடும் கால முடிவில் வெளிப்படுத்தப்பட்ட முதலீட்டுத் தொகையை இற்றையாக்காதபோதிலும் பந்தி 21 இன் பிரகாரம் மேலதிக வெளிப்படுத்தல்களை முன்வைக்க வேண்டிய தேவை ஏற்படலாம். |
| பந்தி 23 | நிறுவனமொன்று 2012 சனவரி 1 இன் பின்னர் அல்லது வருட காலப்பகுதியின் தொடக்கத்திற்காக இந்நியமனத்தினை பிரயோகிக்கலாம். முற்கூட்டிய பிரயோகமானது ஊக்குவிக்கப்படுகின்றது. நிறுவனமொன்று 2012 சனவரி 1ம் திகதிக்கு முன்னரான தொடக்க காலப்பகுதிக்காக இந்நியமனத்தினை பிரயோகிக்குமாயின், அது அதற்கான விடயத்தினை வெளிப்படுத்த வேண்டும். |
| பந்தி 23A | SLFRS 13 *சீர்பெறுமதி மதிப்பீடு* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 11. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |

## LKAS 11 நிர்மாண வேலை ஒப்பந்தங்கள்

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 46 | இந் நியமமானது 2012 சனவரி 1ம் திகதி அன்று அல்லது அதற்குப் பின்னரான காலப்பகுதியின் நிதிக்கூற்றுக்களுக்காக செல்லுபடியானதாகின்றது. |

## LKAS 12 வருமான வரிகள்

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 2 | இந்நியமத்தின் நோக்கங்களுக்காக வரிக்குரிய இலாபங்களை அடிப்படையாகக் கொண்ட எல்லா உள்நாட்டு, அந்நிய நாட்டு வரிகளையும் வருமான வரிகள் உள்ளடக்கும். வருமான வரிகளானவை அறிக்கையிடும் நிறுவனத்துக்கு ஒரு உப நிறுவனம், இணைக் கம்பனி அல்லது கூட்டு <u>ஏற்பாடுகள்</u> பகிர்வுகளின் போது கொடுபடவேண்டிய நிறுத்திவைத்தல் வரிகள் போன்ற வரிகளையும் கூட உள்ளடக்குகின்றது. |
| பந்தி 39(a) | **முதனிலை நிறுவனம், முதலீட்டாளன், <u>கூட்டுமுயற்சியாளர் அல்லது கூட்டு தொழிற்பாட்டாளரினால்</u> தற்காலிக வேறுபாட்டின் எதிர்த்திசை திருப்பத்திற்கான கால இடைவெளியினை கட்டுப்படுத்தக் கூடியதாக இருத்தல், அத்துடன்** |
| பந்தி 43 | ஒரு கூட்டு <u>ஏற்பாட்டுக்கான</u> தரப்பினர்களிடையே உள்ள ஏற்பாடானது வழமையாக இலாபத்தைப் பங்கிடும் வழமையை கையாளுவதுடன், அவ்வகை விடயங்களிலான தீர்மானங்கள் எல்லாக் கூட்டு முயற்சியாளர்கள் அல்லது அவர்களது குழுவின் சம்மதத்தை கோருகின்றதா என்பதையும் அடையாளம் காணும். ஒரு <u>கூட்டுமுயற்சியாளன்</u> அல்லது <u>கூட்டு தொழிற்பாட்டாளர் கூட்டு ஏற்பாட்டின்</u> இலாபப் <u>பங்கினைப் பகிர்தலைக்</u> கட்டுப்படுத்த இயலும் போது மற்றும் இலாபப் <u>பங்குகள்</u> முற்துணியக்கூடிய எதிர்காலத்திற்கு வழங்கப்பட மாட்டாது என்பதுடன் ஒரு பிற்போடப்பட்ட வரிப் பரிப்பு ஏற்பிசைவு செய்யப்படாது. |
| பந்தி 52 | <u>(நகர்த்தப்பட்டு 51 A எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது)</u> |
| பந்தி 58(b) | **ஒரு வணிக இணைப்பு <u>(SLFRS 10 *ஒன்றிணைத்த நிதிக்கூற்றுக்கள்* நியமத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு இலாப நட்டங்களின் ஊடாக சீர்மதிப்பில் மதிப்பிடப்படும் உப கம்பனி ஒன்றிலான முதலீட்டு உரிமம் ஒன்றினாலான கையகப்படுத்தல் தவிர்ந்த).</u> (பந்திகள் 66 தொடக்கம் 68 வரை பார்க்க)** |
| பந்தி 68C | பந்தி 68 A இல் குறிக்கப்பட்டதுபோல வரிக் கழிவுத் தொகை (அல்லது பந்தி 68 B இற்கமைய அளவீடு செய்யப்பட்ட மதிப்பீட்டு வருங்கால வரிக் கழிவு) தொடர்புடைய திரண்ட ஊழியச் செலவிலிருந்து வேறுபடலாம். (a) ஒரே காலத்தில் அல்லது வேறுபட்ட காலத்தில் ஏற்பிசைவுக்குள்ளான ஒரு ஊடு செயல் அல்லது நிகழ்விலிருந்து அல்லது (b) ஒரு வணிக இணைப்பிலிருந்து வரும் வரி இலாபம் அல்லது நட்டத்துக்குப் புறம்பாக ஏற்பிசைவு செய்யப்பட்டிருந்தால் ஒழிய, நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரி வருமானம் அல்லது செலவாகக் கருதப்பட்டு இலாபம் அல்லது நட்டத்தில் உள்ளடக்குமாறு நியமத்தின் பந்தி 58 கோருகின்றது. வரிக் கழிவுத் தொகை (அல்லது மதிப்பிடு செய்யப்பட்ட எதிர்கால வரிக் கழிவு) தொடர்புடைய திரண்ட ஊழியச் செலவின் தொகையை மிஞ்சி இருக்குமாயின், இது வரிக் கழிவு ஊழியச் செலவு மாத்திரமன்றி ஒரு உரிமையாண்மை உருப்படி ஒன்றுடனும் தொடர்புடையது என்பதை காட்டுகின்றது. இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரியின் மிஞ்சிய தொகை நேரே உரிமையாண்மையில் ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும். |
| பந்தி 77 | **சாதாரண தொழிற்பாட்டிலிருந்தான இலாபம் அல்லது நட்டத்துடன் தொடர்புடைய வரிச் செலவினமானது (வருமானமானது) <u>இலாப நட்ட மற்றும்</u> ஏனைய முற்றடக்க வருமானக்கூற்றில் <u>(கூற்றுக்களில்) இலாப நட்டங்களின் ஒரு பகுதியாக</u> சமர்ப்பிக்கப்பட வேண்டும்.** |
| பந்தி 77A | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 89 | இந் நியமம் 1 தை <u>2012</u> அல்லது அதற்குப் பிந்திய காலப்பகுதியைக் கொண்ட நிதிக் கூற்றுக்களுக்கு செயற்படுத்தக் கூடியதாகவுள்ளது. உரிமம் 1 தை 2012 முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அது அந்த நியமத்தினைப் பிரயோகித்த விடயத்தினை வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | |
|---|---|
| பந்தி 98A | SLFRS 11 *இணைந்த ஏற்பாடுகள்* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 2, 15, 18(e), 24, 38, 39, 43-45, 81(f), 87 மற்றும் 87C உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 11 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 98B | *ஏனைய முற்றடக்க வருமானங்களில் உருப்படிகளை முன்னிலைப்படுத்தல்* (LKAS 1 நியமத்துக்கான திருத்தங்கள்) 2014 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 77, 81(f), 87 மற்றும் நீக்கப்பட்ட பந்தி 77A. உரிமம் இத் திருத்தங்களை அது 2014 இல் திருத்தப்பட்டவாறு LKAS 1 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |

**LKAS 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| **ஏற்கனவே உள்ள பந்தி** | **பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி** |
|---|---|
| பந்தி 6 | **பின்வரும் பதங்கள் குறிப்பிட்ட கருத்துக்களுடன் இந்த நியமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது.**<br><br>***முன்கொணரும் தொகை*** **என்பது திரண்ட தேய்மானமும் திரண்ட சேத இழப்புக்களும் கழித்த பின் ஒரு சொத்து தொடர்பாக ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகை.**<br><br>***கிரயம்*** **(ஆகுசெலவு) என்பது ஒரு சொத்தினை கொள்வனவு செய்யும் பொழுது அல்லது நிர்மாணிக்கும் பொழுது வழங்கப்பட்ட காசுத்தொகை அல்லது காசுக்கு சமமானவை அல்லது வேறு பிரதியீட்டல் கிரயம் (ஆகுசெலவு) ஆகும். பொருத்தமானவிடத்து வேறு (SLFRS இல்) குறிப்பிட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் ஒரு சொத்து ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்போது அதற்குரியதாக கருதப்படும் தொகை கிரயமாகும். உதாரணம் SLFRS 2 – உரிமைப் பங்கு அடிப்படை கொடுப்பனவு.**<br><br>***தேய்மானத்திற்கு உள்ளாகும் தொகை*** **என்பது ஒரு சொத்தின் ஒடிவுப் பெறுமதி கழித்த கிரயம் அல்லது கிரயத்திற்காக பிரதியீடாக்கப்பட்ட தொகை.**<br><br>***தேய்மானம்*** **என்பது ஒரு சொத்தின் தேய்மானத்திற்குள்ளாகும் தொகையை அதன் பயனுள்ள ஆயுட்காலத்தில் ஒழுங்கு முறைப்படி ஒதுக்குவதாகும்.**<br><br>***உரிமம் குறிப்பிட்ட பெறுமதி*** **என்பது ஒரு உரிமம் ஒரு சொத்தின் தொடர்ந்த உபயோகத்தால் பெறப்படக்கூடும் என எதிர்பார்க்கும் காசுப்பாய்வு மற்றும் அதன் பயனுள்ள ஆயுட்கால முடிவில் விற்பனை செய்யும் பொழுது பெறக்கூடிய காசு ஆகியனவின் தற்போதைய பெறுமதி அல்லது ஒரு பரிப்பை தீர்வு செய்யும் பொழுது செலவு செய்ய எதிர்பார்க்கும் தொகை.**<br><br>***சீர்மதிப்பு*** **என்பது மதிப்பீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்கள் இடையே ஒரு முறையான ஊடுசெயல் மூலம் ஒரு சொத்தை விற்பதனால் பெறப்படும் அல்லது ஒரு பரிப்பினை மாற்றம் செய்வதற்காக அளிக்கப்படும் விலை ஆகும். (SLFRS 13** ***சீர்மதிப்பு அளவீடு*** **நியமத்தினைப் பார்க்கவும்)**<br><br>***சேத இழப்பு*** **என்பது ஒரு சொத்தின் முற்கொணரும் தொகை அதன் மூலம் அறவிடக்கூடிய தொகையினை மிஞ்சிய தொகையாகும்.** |
| பந்தி 8 | உதிரிப்பாகங்கள், நிலைத்தகு உபகரணங்கள் மற்றும் பராமரிப்பு உபகரணங்கள் முதலியன ஆதனம், பொறி, உபகரணங்களுக்கான ஏற்பிசைவு அடிப்படையினைத் திருப்தி செய்யும் போது இந்த நியமத்தின் கீழ் ஏற்பிசைவு செய்யப்படும். அல்லாதவிடத்து அவ்வாறான உருப்படிகள் தொக்காக வகைப்படுத்தப்படும். |

| | |
|---|---|
| பந்தி 26 | ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய சந்தை ஊடுசெயல் இல்லாத ஒரு சொத்தின் சீர்மதிப்பு பின்கூறப்படும் அடிப்படையில் நம்பகரமாக அளவிடப்பட முடியும்.<br><br>(அ) சீர்மதிப்பு வீச்செல்லையில் காணப்படும் வேறுபாடு அந்தச் சொத்திற்கு கணிசமானதற்றது<br><br>(ஆ) வீச்செல்லையுள் அடங்கிய பல மதிப்பீடுகளின் நிகழ்தகவு சாதாரணமாக மதிப்பீட்டு சீர்மதிப்பை அளவீடு செய்ய உபயோகிக்கக் கூடியதானால், ஒரு உரிமம் பெற்ற சொத்தின் அல்லது கையளித்த சொத்தின் சீர்மதிப்பை நம்பகரமாக அளவிட முடியுமானால் பெற்ற சொத்தின் சீர்பெறுமதி தெளிவாக இருந்தாலன்றி கைவிட்ட சொத்தின் நியாய விலையை உபயோகித்து பெற்ற சொத்தின் கிரயத்தை அளவிடும். |
| பந்தி 32 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 33 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 35(a) | மீள்மதிப்பீட்டிற்கு பின்னரான சொத்தின் முற்கொணரும் தொகை மீள்மதிப்பீட்டு தொகைக்கு சமமானதாக மொத்த முற்கொணரும் தொகையுடன் விகிதசமமாக குறிப்பிடல் வேண்டும். ஒரு சொத்து அதன் மதிப்பிளிவுப் பிரதியீட்டு கிரயத்திற்கு சுட்டெண்ணை பிரயோகித்து மீள்மதிப்பீடு செய்யும்பொழுது இம்முறை பெரிதும் உபயோகப்படுத்தப்படுகின்றது (SLFRS 13 நியமத்தினைப் பார்வையிடவும்). |
| பந்தி 77 | **மீள்மதிப்பீட்டு பெறுமதியில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் உருப்படிகள் குறிப்பிடப்பட்டிருந்தால் SLFRS 13 நியமத்தின் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக பின்வருவன வெளிப்படுத்தப்படல் வேண்டும்:** |
| பந்தி 77(a) | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 77(b) | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 81 | இந் நியமம் 1 தை 2012 அல்லது அதற்குப் பிந்திய காலப்பகுதியைக் கொண்ட நிதிக் கூற்றுக்களுக்கு செயற்படுத்தக் கூடியதாகவுள்ளது. முன்னைய பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. 1 தை 2012 முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தும். |
| பந்தி 81F | SLFRS 13 நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 6 இல் சீர்பெறுமதிக்கான வரைவிலக்கணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 26, 35 மற்றும் 77. நீக்கப்பட்ட பந்திகள் 32 மற்றும் 33. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 81G | IASB இன் வருடாந்த மேம்படுத்தல்களின் பின்பற்றுகை (2009-2011 சுழற்சிக்காலம் மே 2012 இல் வழங்கப்பட்டது), திருத்தப்பட்ட பந்தி 8. உரிமம் LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் மற்றும் தவறுகள்* நியமத்துக்கு இணக்கமான வகையில் இந்த மாற்றங்களினை முற்கால விளைவுள்ள வகையில் பிரயோகித்தல் வேண்டும். முன்னைய பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. உரிமம் இந் நியமத்தினை முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தல் வேண்டும். |

**LKAS 17 குத்தகைகள்**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 6A | LKAS 17 நியமம் 'சீர்மதிப்பு' என்னும் பதத்தை SLFRS 13 சீர்மதிப்பு அளவீடு நியமத்தின் சீர்பெறுமதிக்கான வரைவிலக்கணத்தில் இருந்து சில விடயங்களில் வேறுபடுத்திப் பயன்படுத்துகிறது. ஆகவே, LKAS 17 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது உரிமம் சீர்மதிப்பினை LKAS 17 நியமத்துக்கு அமைவான விதத்தில் அளவிடல் வேண்டும். SLFRS 13 நியமத்துக்கு அமைவாக அல்ல. |
| பந்தி 68 | **முன்னர் LKAS 17 (2011) இனை பிரயோகித்த உரிமமொன்று சகல குத்தகைகளுக்கும் இந்த நியமத்தினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை முன்னர் இருந்து அமுலுக்கு வரும் வகையில் பிரயோகிக்கும் அல்லது LKAS 17 ((2011) முன்னர் இருந்து அமுலுக்கு வரும் வகையில் பிரயோகிக்கப்படாத இடத்து, அந்த நியமத்தினை முதற்தடவையாக பிரயோகித்த பின்னர் ஏற்படுத்திக்கொண்ட சகல குத்தகைகளுக்கும் அவ்வாறு பிரயோகிக்கும்.** |
| பந்தி 69 | இந் நியமம் 1 தை 2012 அல்லது அதற்குப் பிந்திய காலப்பகுதியைக் கொண்ட நிதிக் கூற்றுக்களுக்கு செயற்படுத்தக் கூடியதாகவுள்ளது. முன்னைய பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. உரிமம் இந் நியமத்தினை 01 தை 2012 முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தல் வேண்டும். |

**LKAS 18 வருமானம்**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 6(b) | உரிமையாண்மை முறையின் கீழ் கணக்கீடு செய்யப்படும் முதலீடுகளில் இருந்து ஏற்படும் பங்கிலாபங்கள். (LKAS 28 *கூட்டுக்கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகளிலான முதலீடுகள்* இனைப் பார்க்கவும்) |
| பந்தி 7 | **கீழே தரப்பட்டுள்ள பதங்கள் குறித்துக் காட்டப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் இந்த நியமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளன:**<br><br>***வருமானம்*** **என்பது தரப்பட்ட காலத்தின் போது உரிமமொன்றின் வழமையான செயற்பாடுகளிலிருந்து எழும் பொருளியற் பயன்களின் மொத்த உட்பாய்வாக அமைவதுடன் அந்த உட்பாய்வுகள் உரிமையாண்மையில், உரிமையாண்மைப் பங்குபற்றுனர்களிடமிருந்து பங்களிப்புத் தொடர்பாக ஏற்படும் அதிகரிப்புக்கள் தவிர்ந்த, அதிகரிப்பினை விளைவிப்பதாகும்.**<br><br>***சீர்மதிப்பு*** **என்பது மதிப்பீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்கள் இடையே ஒரு முறையான ஊடுசெயல் மூலம் ஒரு சொத்தை விற்பதனால் பெறப்படும் அல்லது ஒரு பரிப்பினை மாற்றம் செய்வதற்காக அளிக்கப்படும் விலை ஆகும். (SLFRS 13** ***சீர்மதிப்பு அளவீடு*** **நியமத்தினைப் பார்க்கவும்)** |
| பந்தி 37 | இந் நியமம் 1 தை 2012 அல்லது அதற்குப் பிந்திய காலப்பகுதியைக் கொண்ட நிதிக் கூற்றுக்களுக்கு செயற்படுத்தக் கூடியதாகவுள்ளது. முன்னைய பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. உரிமம் இந் நியமத்தினை 01 தை 2012 முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தல் வேண்டும். |
| பந்தி 41 | SLFRS 11 *இணைந்த ஏற்பாடுகள்,* ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 6(b). உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 11 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பந்தி 42 | SLFRS 13 ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. பந்தி 7 இல் சீர்பெறுமதிக்கான வரைவிலக்கணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |

**LKAS 19 ஊழியர் பயன்கள்**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 8 | ***சீர்மதிப்பு*** **என்பது மதிப்பீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்கள் இடையே ஒரு முறையான ஊடுசெயல் மூலம் ஒரு சொத்தை விற்பதனால் பெறப்படும் அல்லது ஒரு பரிப்பினை மாற்றம் செய்வதற்காக அளிக்கப்படும் விலை ஆகும். (SLFRS 13** ***சீர்மதிப்பு அளவீடு*** **நியமத்தினைப் பார்க்கவும்)** |
| பந்தி 113 | வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பயன் பொறுப்பு ஒன்றின் இற்றைப் பெறுமதியில் இருந்து திட்ட சொத்து ஒன்றின் சீர்மதிப்பு கழிக்கப்பட்டு மிகை அல்லது பற்றாக்குறை கணிப்பிடப்படும். |
| பந்தி 172 | இந் நியமம் 1 தை 2012 அல்லது அதற்குப் பிந்திய காலப்பகுதியைக் கொண்ட நிதிக் கூற்றுக்களுக்கு செயற்படுத்தக் கூடியதாகவுள்ளது. முன்னைய பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. உரிமம் இந் நியமத்தினை 01 தை 2012 முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தல் வேண்டும். |
| பந்தி 173(b) | 1 சனவரி 2014 இல் அல்லது அதற்குப் பிந்திய காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களில், உரிமம் பந்தி 145 இனால் வேண்டப்படும் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பயன் கடப்பாடுகளின் உணர்திறன் தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கான ஒப்பீட்டுத் தகவல்களை முன்னிலைப்படுத்த வேண்டியதில்லை. |
| பந்தி 174 | SLFRS 13 நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 8 இல் சீர்பெறுமதிக்கான வரைவிலக்கணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 113. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |

**LKAS 20 அரசாங்க மானியங்களுக்கான கணக்கீடும் அரசாங்க உதவியின் வெளிப்படுத்தலும்**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 3 | ***சீர்மதிப்பு*** **என்பது மதிப்பீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்கள் இடையே ஒரு முறையான ஊடுசெயல் மூலம் ஒரு சொத்தை விற்பதனால் பெறப்படும் அல்லது ஒரு பரிப்பினை மாற்றம் செய்வதற்காக அளிக்கப்படும் விலை ஆகும். (SLFRS 13** ***சீர்மதிப்பு அளவீடு*** **நியமத்தினைப் பார்க்கவும்)** |
| பந்தி 29 | வருமானம் தொடர்புபட்ட மானியங்கள் முற்றடக்க வருமானக் கூற்றில் இலாபநட்டங்களின் பகுதியாக வேறாகவோ அல்லது "பிற வருமானம்" போன்ற பொதுவான தலைப்பு ஒன்றின் கீழோ முன்னிலைப்படுத்தப்படும். பதிலீடாக, அவை தொடர்புபட்ட செலவுகளை அறிக்கையிடுதலில் கழிக்கப்படும். |
| பந்தி 29A | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 41 | இந்த நியமம் 2012 சனவரி 1ந் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ |

| | |
|---|---|
| | ஆரம்பமாகும் காலங்களை அடக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு நடைமுறைக்கு வரும். முந்திய பிரயோகம் ஊக்குவிக்கப்படுகின்றது. உரிமமொன்று இந்த நியமத்தினை 2012 சனவரி 1ந் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கும் காலமொன்றிற்கு பிரயோகிக்குமேயாகில், அந்த உண்மை வெளிக் காட்டப்படல் வேண்டும். |
| பந்தி 45 | SLFRS 13 நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 3 இல் சீர்பெறுமதிக்கான வரைவிலக்கணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 46 | *ஏனைய முற்றடக்க வருமானங்களில் உருப்படிகளை முன்னிலைப்படுத்தல்* (LKAS 1 நியமத்துக்கான திருத்தங்கள்) 2014 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 29. உரிமம் இத் திருத்தங்களை அது 2014 இல் திருத்தப்பட்டவாறு LKAS 1 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |

**LKAS 21 அந்நிய நாணயமாற்று வீதங்களின் மாற்றங்களுக்கான விளைவுகள்**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 3(b) | **ஒன்றித்தல், விகிதாசார ஒன்றித்தல் அல்லது உரிமையாண்மை முறை மூலம் உரிமத்தின் நிதிக் கூற்றுகளில் உட்படுத்தப்படும் அந்நிய தொழிற்பாடுகளின் பெறுபேறுகள் மற்றும் நிதி நிலைமையினை நாணயமாற்றம் செய்வதில், அத்துடன்** |
| பந்தி 8 | ***சீர்மதிப்பு*** **என்பது மதிப்பீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்கள் இடையே ஒரு முறையான ஊடுசெயல் மூலம் ஒரு சொத்தை விற்பதனால் பெறப்படும் அல்லது ஒரு பரிப்பினை மாற்றம் செய்வதற்காக அளிக்கப்படும் விலை ஆகும். (SLFRS 13** ***சீர்மதிப்பு அளவீடு*** **நியமத்தினைப் பார்க்கவும்)**<br><br>***அந்நிய நாணயம்*** **உரிமத்தின் தொழிற்பாட்டு நாணயம் தவிர்ந்த நாணயமாகும்.**<br><br>***அந்நிய தொழிற்பாடு*** **எனப்படுவது அறிக்கையிடல் உரிமத்தின் உபகம்பனி, கூட்டுக்கம்பனி, இணைந்த ஏற்பாடு, கூட்டுத்தொழில் முயற்சி அல்லது கிளையாக அமைவதுடன், அதன் செயற்பாடுகள் அறிக்கையிடும் உரிமம் தவிர்ந்த நாடு அல்லது நாணயத்தில் அல்லது அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் உரிமமொன்றாகும்.** |
| பந்தி 23(c) | **அந்நிய நாணயத்தில் சீர்மதிப்பில் அளவிடப்படும் நாணயம் சாராத உருப்படிகள் சீர்மதிப்பு மதிப்பிடப்பட்ட திகதியில் நிலவிய நாணய மாற்று வீதத்தினை உபயோகித்து நாணய மாற்றம் செய்யப்படும்.** |
| பந்தி 27 | பந்திகள் 3(a) மற்றும் 5 இல் குறிப்பிடப்பட்டவாறு அந்நிய நாணய உருப்படிகளுக்கான தளம்பற் காப்புக் கணக்கீட்டிற்கு LKAS 39 பிரயோகிக்கப்படும். தளம்பற்காப்புக் கணக்கீட்டின் பிரயோகமானது உரிமமொன்று சில நாணயமாற்று வித்தியாசங்களை இந்த நியமத்தினால் தேவைப்படுத்தப்படும் நாணயமாற்று வித்தியாசங்களின் கையாள்கையிலிருந்து வேறுபட்ட விதத்தில் கணக்கிற் கொள்ள வேண்டுமென தேவைப்படுத்துகின்றது. உதாரணமாக, காசுப்பாய்வுத் தளம்பற் காப்பு ஒன்றில் தளம்பற்காப்புச் செய்யப்படும் சாதனங்களாகத் தகைமைபெற்ற நாணய உருப்படிகள் மீதான நாணயமாற்று வித்தியாசங்கள், தளம்பற் காப்பு விளைவுத்திறனானதாக அமையும் அளவிற்கு ஆரம்பத்தில் பிற முற்றடக்க வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட வேண்டுமென LKAS 39 தேவைப்படுத்துகின்றது. |

| | |
|---|---|
| பந்தி 39(b) | **<u>இலாபநட்டங்கள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானங்களை</u> முன்னிலைப்படுத்தப்படும் ஒவ்வொரு கூற்றினதும் வருமானம் மற்றும் செலவுகள் (ஒப்பீட்டுப் பெறுமதிகள் உள்ளடங்கலாக) ஊடுசெயல்களின் திகதிகளில் நிலவிய நாணயமாற்று வீதங்களில் நாணயமாற்றம் செய்யப்படும், அத்துடன்** |
| பந்தி 45 | அந்நிய தொழிற்பாடொன்றின் பெறுபேறுகள் மற்றும் நிதி நிலைமையினை அறிக்கையிடல் உரிமத்தினதோடு கூட்டிணைத்தலில், குழும இடை மீதிகள் மற்றும் உபகம்பனியின் குழும இடை ஊடுசெயல்களின் நீக்கம் போன்ற வழமையான ஒன்றித்தல் விதிமுறைகளை உரிமம் பின்பற்றும் (SLFRS 10 *ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்* நியமத்தைப் பார்க்கவும்). எனினும், குழும இடை நாணயச் சொத்தொன்று (அல்லது பரிப்பொன்று), அது குறுங்காலத்தினதோ அல்லது நீண்டகாலத்தினதோ, நாணயத் தளம்பல்களின் பெறுபேறுகளை ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் காட்டாது, தொடர்புபட்ட குழும இடை பரிப்புக்கு (அல்லது சொத்திற்கு) எதிராக நீக்கப்பட முடியாது. ஏனெனில், நாணய உருப்படியானது ஒரு நாணயத்தினை இன்னொரு நாணயமாக மாற்றுவதற்கான கடமைப்பாட்டினைப் பிரதிபலிப்பதுடன், நாணயத் தளம்பலினூடாக அறிக்கையிடல் உரிமத்தினை நயம் அல்லது நட்ட நிலையொன்றிற்கு இட்டுச் செல்லுவதனாலாகும். அதன்படி, அறிக்கையிடு உரிமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் அவ்வாறான நாணயமாற்று வித்தியாசம் இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்; அல்லது, அது பந்தி 32 இல் விபரிக்கப்பட்டுள்ள புறநிலைகளிலிருந்து ஏற்படும் பட்சத்தில் அது ஏனைய முற்றடக்க வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டு, அந்நிய தொழிற்பாடுகள் முடிவு செய்யப்படும் வரை உரிமையாண்மையின் தனியானதொரு பகுதியாகத் திரட்டப்படும். |
| பந்தி 46 | அந்நிய தொழிற்பாடொன்றின் நிதிக்கூற்றுக்களின் திகதி அறிக்கையிடல் உரிமத்தினதில் இருந்து வேறுபட்டதாக இருப்பின், அந்நிய தொழிற்பாடானது அனேகமாக அறிக்கையிடல் உரிமத்தின் திகதிக்கு ஏற்ப மேலதிக கூற்றுக்களைத் தயாரிக்கும். அவ்வாறு செய்யப்படாத பட்சத்தில், காலவேறுபாடு மூன்று மாதத்திற்கு மேல் அதிகரிக்காது இருந்து இந்த வேறுபட்ட காலங்களுக்கு இடையே நிகழும் எந்தவொரு பொருண்மையான ஊடுசெயல் அல்லது பிற நிகழ்வுகளுக்காகவும் செம்மையாக்கங்கள் மேற்கொள்ளப்படுவதனை <u>SLFRS 10</u> நியமம் அனுமதிக்கிறது. அவ்வாறான சந்தர்ப்பத்தில், அந்நிய தொழிற்பாட்டின் சொத்துக்களும் பரிப்புக்களும் அந்நிய தொழிற்பாட்டின் அறிக்கையிடற் காலத்தின் இறுதியில் நிலவும் நாணய மாற்று விகிதத்தில் நாணயமாற்றம் செய்யப்பட்டு <u>SLFRS 10</u> க்கு அமைவாக அறிக்கையிடல் வேண்டும். LKAS 28 க்கு அமைவாக <u>(2014 இல் திருத்தப்பட்டவாறாக)</u> இணைக் கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகளுக்கு உரிமையாண்மை முறையினைப் பிரயோகிக்கும் போது இதே அணுகுமுறை பின்பற்றப்படுகிறது. |
| பந்தி 48A | அந்நிய தொழிற்பாடொன்றில் உரிமத்தின் முழு அக்கறையினதும் விற்பனைக்கு மேலதிகமாக உரிமம் முன்னைய உபகம்பனி, கூட்டுக்கம்பனி அல்லது கூட்டாகக் கட்டுப்படுத்தும் உரிமத்தில் நாட்டத்தினைத் தொடர்ந்து வைத்துள்ளபோதிலும், கீழ்வரும் <u>பகுதியளவான விற்பனைகள்</u> விற்பனையொன்றாகக் கணக்கில் கொள்ளப்படும்:<br><br>(அ) <u>பகுதியளவான விற்பனைகள்</u> அந்நிய தொழிற்பாடொன்றினை உள்ளடக்கிய உபகம்பனியொன்றின் கட்டுப்பாட்டினை இழத்தல் தொடர்பானதான போது, <u>பகுதியளவிலான விற்பனையின் பின்னர் உரிமம் முன்னைய உப கம்பனி மீது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளதா இல்லையா என்பதைக் கருத்தில் கொள்ளாது</u>,<br><br>(ஆ) இணைந்த ஏற்பாடு அல்லது இணைக்கம்பனி ஒன்றின் மீதான அக்கறைகளின் பகுதியளவான விற்பனைக்குப் பின்னரான மீதமுள்ள அந்நிய தொழிற்பாடுகளை உள்ளடக்கிய கட்டுப்பாடு, அந்நிய தொழிற்பாடுகளை உள்ளடக்கிய ஒரு நிதிச் சொத்தாகக் காணப்படும் போது. |

| | |
|---|---|
| பந்தி 58 | உரிமமொன்று இந்த நியமத்தினை 2012 சனவரி 1ந் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். முந்திய பிரயோகம் ஊக்குவிக்கப்படுகின்றது. உரிமமொன்று இந்த நியமத்தினை 2012 சனவரி 1ந் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கும் காலமொன்றிற்கு பிரயோகிக்குமேயாகில், அந்த விடயம் வெளிக்காட்டப்படல் வேண்டும். |
| பந்தி 60F | SLFRS 10 மற்றும் SLFRS 11 *இணைந்த ஏற்பாடுகள்,* ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 3(b), 8, 11, 18, 19, 33, 44-46 மற்றும் 48A. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 10 மற்றும் SLFRS 11 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 60 G | SLFRS 13 *சீர்பெறுமதி மதிப்பீடு* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 23. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 60H | *ஏனைய முற்றடக்க வருமானங்களில் உருப்படிகளை முன்னிலைப்படுத்தல் (*LKAS 1 நியமத்துக்கான திருத்தங்கள்) 2014 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 39. உரிமம் இத் திருத்தங்களை அது 2014 இல் திருத்தப்பட்டவாறு LKAS 1 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |

**LKAS 23 கடன்படு கிரயங்கள்**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 29 | இந் நியமமானது 2012 சனவரி 1ம் திகதி அன்று அல்லது அதற்குப் பின்னரான காலப்பகுதியின் வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்காக செல்லுபடியானதாகின்றது. முந்தைய பிரயோகமானது ஊக்குவிக்கப்படுகிறது. உரிமமானது 2012 சனவரி 1ம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற காலப்பகுதிக்கான நியமத்தினை பிரயோகிக்குமாயின், அது அவ் விடயத்தினை வெளிப்படுத்தல் வேண்டும். |

**LKAS 24 உறவுமுறைசார் பகுதியினர் தொடர்பான வெளிப்படுத்தல்கள்**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 3 | **இந்நியமம், SLFRS 10 *ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்* அல்லது LKAS 27 *வேறான நிதிக்கூற்றுக்கள்* ஆகிய நியமங்களின் பிரகாரம் முன்னிலைப்படுத்தப்படும் ஒரு முதனிலை நிறுவனம், தொழில்முயற்சியாளர் அல்லது முதலீட்டாளரின் உறவுமுறைசார் பகுதியினரின் ஊடுசெயல்கள் மற்றும் நிலுவையிலுள்ள மீதிகளின் வெளிப்படுத்தல்களை முதனிலைக் கம்பனி, கூட்டுக் கட்டுப்பாட்டைக் கொண்ட முக்கியமான செல்வாக்கைக் கொண்ட முதலீட்டாளர்கள் அல்லது முதலிடப்படும் உரிமம் ஆகியவற்றின் வேறான நிதிக்கூற்றுக்களில் தேவைப்படுத்துகின்றது. இந் நியமம் தனியான நிதிக்கூற்றுக்களுக்கும் பிரயோகிக்கத்தக்கதாகும்.** |
| பந்தி 4 | ஒரு உரிமத்தின் நிதிக்கூற்றுக்களில், ஒரு குழுமத்திலுள்ள வேறு உரிமங்களுடனான உறவுமுறைசார் பகுதியினரின் ஊடுசெயல்களும் நிலுவையிலுள்ள மீதிகளும் வெளிப்படுத்தல் செய்யப்படுகின்றன. குழுமமொன்றின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது, இலாப நட்டங்களின் ஊடாக சீர்மதிப்பில் அளவிடப்படும் முதலீட்டு உரிமம் மற்றும் அதன் உப கம்பனிகளுக்கு இடையிலானவை தவிர்ந்த, குழுமத்தின் உள்ளான உறவுமுறைத்தரப்பினரின் ஊடுசெயல்களும் நிலுவையிலுள்ள மீதிகளும் நீக்கப்படும் . |

| | |
|---|---|
| பந்தி 9 | ***முக்கிய முகாமை ஆளணியினர்*** **என்றால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒரு உரிமத்தின் நடவடிக்கைகளைத் திட்டமிடல் வழிநடத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்ற கடமைகளுக்கான அதிகாரத்தினையும் பொறுப்பினையும் கொண்டோர் - உரிமத்தின் பணிப்பாளர்கள் (நிறைவேற்று அல்லது வேறுவிதமான) உள்ளடங்கலாக.**<br><br>**அரசு என்பது அரசாங்கம், அரச முகவர் அமைப்புக்கள் மற்றும் அதனை ஒத்த உள்ளாட்சி, தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்களைக் குறிக்கும்.**<br><br>**அரச சார்பான உரிமம் என்பது அரசின் கட்டுப்பாட்டிலுள்ள, இணைந்த கட்டுப்பாட்டிலுள்ள அல்லது அரசினால் முக்கியமான வகையில் செல்வாக்கு செலுத்தப்படும் உரிமம் ஆகும்.**<br><br>**‘கட்டுப்பாடு’, ‘முதலீட்டு உரிமம்’, ‘இணைந்த கட்டுப்பாடு’ மற்றும் முக்கிய செல்வாக்கு என்னும் பதங்கள் SLFRS 10, SLFRS 11 இணைந்த ஏற்பாடுகள், LKAS 28** ***இணைக்கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சி உரிமங்களிலான அக்கறைகள்*** **ஆகிய நியமங்களில் முறையே வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்த நியமங்களில் குறித்துரைக்கப்பட்ட கருத்துக்களுடனேயே இந்த நியமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.** |
| பந்தி 11(b) | இரு கூட்டுத் தொழில் முயற்சியாளர் ஏனெனில் அவை ஒரு கூட்டுத்தொழில் முயற்சியின் கூட்டுக்கட்டுப்பாடு கொண்டிருத்தல் |
| பந்தி 15 | LKAS 27 மற்றும் SLFRS 12 *ஏனைய உரிமங்களிலான அக்கறைகளின் வெளிக்காட்டல்* ஆகிய நியமங்கள் தேவைப்படுத்தும் வெளிக்காட்டல்களுக்கு மேலதிகமாக, முதனிலை மற்றும் உப கம்பனிகளுக்கு இடையேயான உறவுமுறைசார் தொடர்புகளை வெளிப்படுத்தக் கோருகின்றது. |
| பந்தி 22 | ஒரு வரையறுக்கப்பட்ட பயன் திட்டத்தில் ஒரு மேன்நிலை நிறுவனத்தின் அல்லது உபகம்பனியின் பங்குபற்றுதலினால் குழும உரிமங்களுக்கிடையே இடரினை பகிர்தல் ஒரு உறவுமுறைசார் பகுதியினரிற்கிடையேயான வியாபார ஊடுசெயலாகும் (LKAS 19 ல் பந்தி 42ஐ பார்க்கவும்). |
| பந்தி 28 | இந் நியமம் 1 சனவரி 2012 அல்லது அதற்குப் பிந்திய காலப்பகுதியைக் கொண்ட நிதிக் கூற்றுக்களுக்கு செயற்படுத்தக் கூடியதாகவுள்ளது. பந்தி 25-27 இல் குறிப்பிடப்பட்ட அரசு தொடர்பான உரிமங்களுக்கான பகுதியளவு விலக்களிப்புக்கள் அல்லது முழுமையான நியமம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றின் முன்னைய பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. 01 சனவரி 2012 முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தும். |
| பந்தி 28A | SLFRS 10, SLFRS 11 *இணைந்த ஏற்பாடுகள்* மற்றும் SLFRS 12 நியமங்கள் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 3, 9, 11(b), 15, 19(b) மற்றும்(e) மற்றும்25. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 10, SLFRS 11, SLFRS 12 நியமங்களைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |

**LKAS 26 ஓய்வ‘ திய அக்கறைபுரி திட்டங்களின் கணக்கீடும் அறிக்கையிடலும்**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 37 | இந் நியமமானது 2012 சனவரி 1ம் திகதி அன்று அல்லது அதற்குப் பின்னரான காலப்பகுதியின் ஓய்வூதிய நலன்புரித் திட்டங்களுக்கான நிதிக்கூற்றுக்களுக்காக செயற்படக்கூடியதாகின்றது. |

| | |
|---|---|
| | முந்தைய பிரயோகமானது ஊக்குவிக்கப்படுகிறது. உரிமமானது 2012 சனவரி 1ம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற காலப்பகுதிக்கான நியமத்தினை பிரயோகிக்குமாயின், அது அவ் விடயத்தினை வெளிப்படுத்தல் வேண்டும். |

## LKAS 27 வேறான நிதிக்கூற்றுக்கள்

இலங்கைக் கணக்கீட்டு நியமம் - LKAS 27 வேறான நிதிக்கூற்றுக்களானது 1-19 பந்திகளில் குறிப்பிடப்படுகிறது. அனைத்துப் பந்திகளும் சமமான அதிகாரத்தைக் கொண்டிருக்கிறது. LKAS 27 ஆனது *இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் முகவுரை* மற்றும் *நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கருச் சட்டகம்* ஆகியவற்றுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டும். தெளிவான வழிகாட்டல்கள் வழங்கப்படாத போது கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதற்கும் தெரிவு செய்வதற்குமான அடிப்படையினை LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டிலான மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* நியமம் வழங்குகிறது.

### நோக்கம்

1 இந் நியமத்தின் குறிக்கோளானது உரிமமொன்று வேறான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது உப கம்பனிகள், கூட்டுத் தொழில் முயற்சிகள் மற்றும் இணைக் கம்பனிகளிலான முதலீடுகளைக் கணக்கு வைப்பதற்கான கணக்கீட்டு மற்றும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளைப் பரிந்துரை செய்வதகும்.

### நோக்கெல்லை

**2 உரிமம் ஒன்று பிறிதான நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு உள்நாட்டு விதிகளால் வேண்டப்படுகின்ற அல்லது தெரிவு செய்யப்படுகின்ற போது இந்நியமனமானது இணை நிறுவனங்கள், கூட்டுத் தொழில் முயற்சிகள் மற்றும் உப கம்பனிகள் என்பவற்றின் முதலீடுகளுக்கான கணக்கீட்டிலும் பிரயோகிக்கப்பட வேண்டும்.**

3 இந்த நியமம் எந்த உரிமங்கள் தனியான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டும் எனக் கட்டாயப்படுத்தவில்லை. உரிமமொன்று இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இது பிரயோகிக்கப்படும்.

### வரைவிலக்கணங்கள்

**4. இந்நியமத்தில் பயன்படுத்தப்படுகின்ற பதங்களின் கருத்துக்கள் குறிப்பதாவது :**

***ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்* என்பது முதனிலை உரிமம் மற்றும் உப உரிமங்கள் யாவும் ஒரு தனிப் பொருளியல் உரிமமாக கருதப்பட்டு ஒரு குழுமத்தின் சொத்துக்கள், பரிப்புக்கள், உரிமையாண்மை, வருமானம் மற்றும் செலவினங்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்ற நிதிக்கூற்றுக்கள் ஆகும்.**

***வேறான நிதிக்கூற்றுக்கள்* என்பது முதலீடுகள் கிரயம் அல்லது SLFRS 9 *நிதிச் சாதனங்கள்* நியமத்துக்கு இணக்கமான வகையில் கணக்கீடு செய்யப்பட்டு முதனிலைக் கம்பனியினால் (அதாவது உப கம்பனி ஒன்றின் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் முதலீட்டாளர்) அல்லது முதலீடு செய்யப்படும் உரிமத்தின் மீது இணைந்த கட்டுப்பாட்டை அல்லது முக்கிய செல்வாக்கைக் கொண்ட முதலீட்டாளரினால் முன்னிலைப்படுத்தப்படும் நிதிக்கூற்றுக்கள் ஆகும்.**

5 பின்வரும் பதங்கள் SLFRS 10 *ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்* நியமத்தின் பின்னிணைப்பு A, SLFRS 10 *இணைந்த ஏற்பாடுகள்* நியமத்தின் பின்னிணைப்பு A மற்றும் இணைக்கம்பனிகள் மற்றும் LKAS 28 *கூட்டுத் தொழில் முயற்சிகள்* நியமம் ஆகியவற்றினால் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றன.

* இணைக் கம்பனி
* ஒரு முதலிடப்பட்ட உரிமத்தின் கட்டுப்பாடு
* குழுமம்

* முதலீட்டு நிறுவனம்

* இணைந்த கட்டுப்பாடு

* கூட்டுத் தொழில் முயற்சி
* கூட்டுத் தொழில் முயற்சியாளர்

* முதனிலைக் கம்பனி

* முக்கிய செல்வாக்கு

* உப கம்பனி

6 பந்திகள் 8-8A இல் குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகள் தவிர, ஒன்றித்த நிதிக்கூற்றுக்களுக்கு மேலதிகமாக அல்லது இணைக் கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகளின் மீதான முதலீடுகள் உரிமையாண்மை முறையைப் பயன்படுத்திக் கணக்கீடு மேற்கொள்ளப்படும் நிதிக்கூற்றுக்களுக்கு மேலதிகமாக வேறான நிதிக்கூற்றுக்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. வேறான நிதிக்கூற்றுக்கள் அக் கூற்றுக்களுடன் இணைக்கப்படவோ அல்லது இணக்கப்படவோ தேவையில்லை.

7 உரிமையாண்மை முறை பயன்படுத்தப்படும் நிதிக்கூற்றுக்கள் வேறான நிதிக்கூற்றுக்கள் ஆகாது. அதேபோல், உப கம்பனி, இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகளின் மீது அக்கறையைக் கொண்டிராத உரிமங்களது நிதிக்கூற்றுக்கள் வேறான நிதிக்கூற்றுக்கள் ஆகாது.

8 SLFRS 10 நியமத்தின் பந்தி 4 (a) இன் படி ஒன்றிப்புக்கு விலக்களிக்கப்பட்ட அல்லது LKAS 28 நியமத்தின் பந்தி 17 இன் படி உரிமையாண்மை முறையைப் பயன்படுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட உரிமம் ஒன்று வேறான நிதிக்கூற்றுக்களை மாத்திரம் அதன் நிதிக்கூற்றுக்கள் முன்னிலைப்படுத்தலாம்.

8A SLFRS 10 இன் பந்தி 31 இன்படியான ஒன்றிணைப்பதற்கான விலக்களிப்பை அதன் அனைத்து உப கம்பனிகளுக்கும் தற்போதைய காலம் முழுதும் மற்றும் அனைத்து ஒப்பீட்டுக் காலங்களுக்கும் பிரயோகிக்கும் ஒரு முதலீட்டு உரிமம் வேறான நிதிக்கூற்றுக்களை மாத்திரம் அதன் நிதிக்கூற்றுக்களை முன்னிலைப்படுத்தும்.

## வேறான நிதிக்கூற்றுக்களினைத் தயாரித்தல்

**9 பந்தி 10 இல் குறிப்பிடப்பட்டது தவிர்ந்த வகையில் அனைத்துப் பிரயோகிக்கத்தக்க SLFRS நியமங்களுக்கும் இணக்கமான வகையில் வேறான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.**

**10 ஒரு உரிமம் வேறான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அது உப கம்பனிகள், கூட்டுத் தொழில் முயற்சிகள் மற்றும் இணைக் கம்பனிகள் மீதான முதலீடுகள் தொடர்பாக பின்ருவனவற்றில் ஏதேனும்ஒரு முறையில் கணக்கீடு செய்தல் வேண்டும்:**

**(a) கிரயத்தில் அல்லது**

**(b) SLFRS 9 நியமத்துக்கு அமைவாக**

**உரிமமானது ஒவ்வொரு வகை முதலீட்டிற்கும் அதே கணக்கியலைப் பிரயோகித்தல் வேண்டும். கிரயத்தில் மதிப்பிடப்படும் முதலீடுகள், அவை விற்பனைக்கென வைத்திருப்பதாக வகைப்படுத்தப்படும் போது (அல்லது விற்பனைக்கொன வைத்திருக்கும் அகற்றல் குழு ஒன்றினுள் உள்ளடக்கப்படும் போது) அவை SLFRS 5 *விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் தொடரப்படாத நடவடிக்கைகள்* நியமத்துக்கு அமைவாக கணக்கிடப்பட வேண்டும். முதலீடுகள் விற்பனை செய்யப்படும் போது, செலவினங்களுக்காக கணக்கிடப்படும் அத்தகைய சூழ்நிலைகளில் SLFRS 9 க்கு இணங்க கணக்கீடு செய்யப்படும் முதலீடுகளின் மதிப்பீடு மாற்றப்படுவதில்லை.**

11 உரிமம் LKAS 28 நியமத்தின் பந்தி 18 க்கு அமைவாக, அதன் இணைக் கம்பனிகள் அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகளிலான முதலீட்டினை SLFRS 9 நியமத்தைப் பின்பற்றி இலாப நட்டங்களின்

ஊடான சீர்மதிப்பில் அளவிடத் தெரிவு செய்யின், அது தனது வேறான நிதிக்கூற்றுக்களிலும் அதே முறையிலேயே அந்த முதலீடுகளுக்குக் கணக்கீடு செய்தல் வேண்டும்.

11A SLFRS 10 நியமத்தின் பந்தி 10 க்கு அமைவாக முதனிலைக் கம்பனியானது தனது உப கம்பனி மீதான முதலீட்டினை SLFRS 9 நியமத்தைப் பின்பற்றி இலாப நட்டங்களின் ஊடான சீர்மதிப்பில் அளவிடத் தேவைப்படுத்தப்பட்டால், அது தனது வேறான நிதிக்கூற்றுக்களிலும் அதே முறையிலேயே அந்த முதலீடுகளுக்குக் கணக்கீடு செய்தல் வேண்டும்.

11B முதனிலைக் கம்பனி முதலீட்டு உரிமமாக இருப்பதனை முடிவு செய்யும் போது அல்லது முதலீட்டு உரிமமாக மாற்றமடையும் போது, அந்த மாற்றம் ஏற்பட்ட திகதியில் இருந்து அந்த மாற்றத்தினைப் பின்வருமாறு கணக்கீடு செய்தல் வேண்டும்.

(a) முதனிலைக் கம்பனி முதலீட்டு உரிமமாக இருப்பதனை முடிவு செய்யும் போது, அது பந்தி 10 க்கு அமைவாக பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்ற வேண்டும்:

(i) உப கம்பனி மீதான முதலீட்டிற்குக் கிரயத்தில் கணக்கீடு செய்தல். உப கம்பனியின் மாற்றத் திகதியிலான சீர்மதிப்பானது அத் தியதியிலான நிகழ்ந்த செலவாகக் கருதப்படும். அல்லது

(ii) உப கம்பனி மீதான முதலீட்டிற்குத் தொடர்ந்தும் SLFRS 9 நியமத்தைப் பின்பற்றி கணக்கீடு செய்தல்.

(b) முதனிலைக் கம்பனி முதலீட்டு உரிமமாக மாற்றமடையும் போது அது உப கம்பனி மீதான முதலீட்டிற்கு SLFRS 9 நியமத்தைப் பின்பற்றி இலாப நட்டங்களின் ஊடான சீர்மதிப்பில் கணக்கீடு செய்யும். உப கம்பனியின் முன்னைய முன்கொணரல் தொகைக்கும் மாற்றத் திகதியிலான சீர்மதிப்புக்கும் இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டமாக ஏற்பிசைவு செய்யப்படும். அந்த உப கம்பனிகள் தொடர்பாக முன்னர் ஏனைய முற்றடக்க வருமானங்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட சீர்மதிப்புச் சீராக்கங்களின் திரண்ட தொகைகள், மாற்றத் திகதியில் உப கம்பனிகள் முடிவு செய்யப்பட்டவாறாகக் கொள்ளப்பட்டுக் கணக்கீடு செய்யப்படும்.

**12 ஒரு உரிமமானது அதன் உப கம்பனி, இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியிடம் இருந்தான பங்கிலாபத்தை, அது பங்கிலாபத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை உருவாக்கப்பட்டதும் அதன் வேறான நிதிக்கூற்றுக்களின் இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்துகொள்ள முடியும்.**

13 ஒரு முதனிலைக் கம்பனி புதிய உரிமம் ஒன்றை உருவாக்கி அதன் முதனிலைக் கம்பனியாக்கி அதன் குழுமத்தின் கட்டமைப்பை மறுசீரமைக்கும்போது அது பின்வரும் அடிப்படைகளைப் பூர்த்தி செய்திருப்பின்:

(a) புதிய முதனிலைக் கம்பனி ஏற்கனவே உள்ள முதனிலைக் கம்பனியின் உரிமைப் பங்குகளுக்குப் பரிமாற்றாக தமது உரிமைப் பங்குகளை வழங்கி அவர்களது கட்டுப்பாட்டைக் கையகப்படுத்திக் கொள்ளல்

(b) புதிய குழுமம் மற்றும் ஏற்கனவே இருந்த குழுமம் ஆகியவற்றின் சொத்துகள் மற்றும் பரிப்புகள் மறுசீரமைப்புக்கு முன்பும் அதற்கு பின்னரும் ஒரேயளவிலே இருத்தல் மற்றும்

(c) மறுசீரமைப்பு முன் ஏற்கனவே இருந்த முதனிலைக் கம்பனியின் உரிமையாளர்கள் மறுசீரமைப்புக்குப் பின்பும் புதிய குழுவின் நிகர சொத்துகளில் அதே முழுமையான மற்றும் சார்பு அக்கறைகளை கொண்டிருத்தல்

(d) மற்றும் புதிய முதனிலைக் கம்பனி ஏற்கனவே இருந்த முதனிலைக் கம்பனி மீதான முதலீட்டுக்காக அதன் வேறான நிதிக்கூற்றுக்களில் பந்தி 10(a) க்கு அமைவாகக் கணக்கிடல். அது கிரயத்தை ஏற்கனவே இருந்த முதனிலைக் கம்பனியின் மறுசீரமைப்புத் திகதியில் இருந்தவாறான வேறான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட உரிமையாண்மையின் முன்கொணரல் பெறுமதியில் அளவிடல்.

14 அதேபோல, முதனிலைக் கம்பனி அல்லாத உரிமம் ஒன்று பந்தி 13க்கு அமைவான முறையில் புதிய உரிமம் ஒன்றினைத்த முதனிலைக் கம்பனியாக உருவாக்கிக் கொள்ளலாம்.பந்தி 13 இன் தேவைப்பாடுகள் அவ்வாறான மறுசீராக்கங்களுக்கும் சமமாகப் பிரயோகிக்கப்படும். அவ்வாறான நிலைமைகளில், ஏற்கனவே இருந்த முதனிலைக் கம்பனி மற்றும் ஏற்கனவே இருந்த குழுமம் மற்றும் ஏற்கனவே இருந்த உரிமம்.

## வெளிப்படுத்தல்

**15 உரிமம் வேறான நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டல்களை மேற்கொள்ளும் போது, பந்தி 16 மற்றும் 17 இன் தேவைப்பாடுகள் உட்பட, பிரயோகிக்கத்தக்க அனைத்து SLFRS நியமங்களையும் பிரயோகிக்கும்.**

**16 நியமத்தின் பந்தி 4(a)க்கு அமைவாக முதனிலைக் கம்பனி ஒன்று ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில்லை எனத் தீர்மானித்து அதற்குப் பதிலாக வேறான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அது பின்வரும் விடயங்களை வேறான நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டல் வேண்டும்.**

**(a) நிதிக்கூற்றுக்கள் வேறான நிதிக்கூற்றுக்கள் என்னும் விடயம், ஒன்றித்தலுக்கான விலக்களிப்பு பயன்படுத்தப்படுகிறது, இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவான ஒன்றிணைத்த நிதிக் கூற்றுக்கள் பொதுத் தேவைக்காகத் தயாரிக்கப்படும் வியாபாரத்தின் பெயர் மற்றும் பிரதான வியாபார அமைவிடம் (அத்துடன் நாடு, கூட்டிணைக்கப்பட்ட நாடு வேறாக இருப்பின்), மற்றும் அந்த ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் பெறக்கூடிய முகவரி.**

**(b) உப கம்பனி, இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகளில் கொண்டிருக்கும் முக்கிய முதலீடுகளின் பட்டியல், பின்வருவன உள்ளடங்கலாக:**

**(i) அந்த முதலிடப்படுபவர்களின் பெயர்.**

**(ii) அந்த முதலீட்டாளர்களின் வியாபாரத்தின் பிரதான அமைவிடம் (கூட்டிணைக்கப்பட்ட நாடு மற்றும் வேறு எனின்)**

**(iii) அந்த முதலீடுகளில் வைத்திருக்கும் உரிமையுடைய அக்கறையின் விகிதம் (மற்றும் வாக்குரிமை விகிதம், வேறு எனில்) அதன் விகிதம்.**

**(c) (b) இன் கீழ் பட்டியலிடப்பட்ட முதலீட்டிற்கான கணக்கைப் பயன்படுத்துவதற்கான முறையின் விளக்கம்.**

**16A முதனிலைக் கம்பனியாக உள்ள முதலீட்டு உரிமம் ஒன்று (பந்தி 16 இனால் உள்ளடக்கப்பட்ட முதனிலைக் கம்பனி தவிர்ந்த) பந்தி 8A க்கு இணங்கி, வேறான நிதிக்கூற்றுக்களை அதன் ஒரே நிதிக்கூற்றுக்களாகத் தயாரிக்கும் போது, அது அந்த விடயத்தினை வெளிப்படுத்தும். முதலீட்டு உரிமம், SLFRS 12 *ஏனைய உரிமங்களிலான அக்கறைகளின் வெளிக்காட்டல்* நியமத்தினால் தேவைப்படுத்தப்படும் முதலீட்டு உரிமங்கள் தொடர்பான விபரங்களை வழங்க வேண்டும்.**

**17 முதனிலைக் கம்பனி ஒன்று (பந்தி 16 இனால் உள்ளடக்கப்பட்ட முதனிலைக் கம்பனி தவிர்ந்த) அல்லது முதலிடப்படும் உரிமம் மீது இணைந்த கட்டுப்பாடு அல்லது முக்கிய செல்வாக்குக் கொண்ட முதலீட்டாளர் உரிமம் வேறான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, முதனிலைக் கம்பனி அல்லது முதலீட்டாளர் SLFRS 10, SLFRS 11 அல்லது LKAS 28 ஆகிய நியமங்களில் பொருத்தமானவற்றுக்கு இணக்கமான வகையில் அவை தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதை அடையாளம் கண்டு கொள்ளல் வேண்டும். முதனிலைக் கம்பனி அல்லது முதலீட்டாளர் தமது வேறான நிதிக்கூற்றுக்களில் பின்வரும் விடயங்களை வெளிக்காட்டல் வேண்டும்.**

**(a) நிதிக்கூற்றுக்கள் வேறான நிதிக்கூற்றுக்கள் என்னும் விடயம் மற்றும் சட்டத்தால் கோரப்படாதவிடத்து, அக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கான காரணங்கள்**

**(b) உப கம்பனி, இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகளில் கொண்டிருக்கும் முக்கிய முதலீடுகளின் பட்டியல், பின்வருவன உள்ளடங்கலாக:**

**(i) அந்த முதலிடப்படுபவர்களின் பெயர்.**

**(ii) அந்த முதலீட்டாளர்களின் வியாபாரத்தின் பிரதான அமைவிடம் (கூட்டிணைக்கப்பட்ட நாடு மற்றும் வேறு எனின்)**

**(iii) அந்த முதலீடுகளில் வைத்திருக்கும் உரிமையுடைய அக்கறையின் விகிதம் (மற்றும் வாக்குரிமை விகிதம், வேறு எனில்) அதன் விகிதம்.**

**(c) (b) இன் கீழ் பட்டியலிடப்பட்ட முதலீட்டிற்கான கணக்கைப் பயன்படுத்துவதற்கான முறையின் விளக்கம்.**

**நிலைமாற்றத்தின் விளைவுத் தகதி**

18 உரிமமொன்று 2014 சனவரி 1 இன் பின்னர் அல்லது வருட காலப்பகுதியின் தொடக்கத்திற்காக இந்நியமத்தினை பிரயோகிக்கலாம். முன்னைய பிரயோகமானது அனுமதிக்கப்படுகின்றது. உரிமம் முன்னைய காலப்பகுதிக்காக இந்நியமத்தினை பிரயோகிக்குமாயின், அது அந்த விடயத்தினை வெளிப்படுத்துவதுடன் அதே நேரம் SLFRS 10, SLFRS 11, SLFRS 12 மற்றும் LKAS 28ஆகிய நியமங்களையும் பிரயோகித்தல் வேண்டும்.

18A [நீக்கப்பட்டுள்ளது]

18B [நீக்கப்பட்டுள்ளது]

18C ஆரம்ப பிரயோகத் திகதியில், முன்னர் தனது உப கம்பனி மீதான முதலீட்டினைக் கிரயத்தில் மதிப்பீடு செய்த முதலீட்டு உரிமம் அதற்குப் பதிலாக இந்த நியமத்துக்கு அமைவாக முதலீட்டினை இலாப நட்டத்தின் ஊடான சீர்மதிப்பில் அளவிடுதல் எப்போதும் விளைவுத் திறனானதாக இருக்கும். முதலீட்டு உரிமம் ஆரம்பப் பிரயோகத்துக்கு உடனடி முன்னான ஆண்டுக் காலத்துக்கு முற்கால விளைவுள்ள வகையில் சீராக்குவதுடன் உடனடி முன்னான ஆண்டுக் கால ஆரம்பத்தில் உள்ளவாறான நிறுத்திவைத்த இலாபங்களை பின்வருவனவற்றுக்காக இடையிலான வேறுபாட்டுக்காக சீராக்கம் செய்யும்:

*(a)* முதலீட்டின் முன்னைய முன்கொணரல் பெறுமதி மற்றும்

*(b)* முதலீட்டாளரின் உபகம்பனி மீதான முதலீட்டின் சீர்மதிப்பு

18D ஆரம்பப் பிரயோகத் திகதியில், முன்னர் தனது உப கம்பனி மீதான முதலீட்டினைக் ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஊடாக சீர்மதிப்பில் மதிப்பீடு செய்த முதலீட்டு உரிமம் தொடர்ந்தும் முதலீட்டினை சீர்மதிப்பில் அளவிட வேண்டும். அந்த உப கம்பனிகள் தொடர்பாக முன்னர் ஏனைய முற்றடக்க வருமானங்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட சீர்மதிப்புச் சீராக்கங்களின் திரண்ட தொகைகள், மாற்றத் திகதிக்கு உடனடி முன்னான ஆண்டுக் கால ஆரம்பத்தில் நிறுத்திவைத்த இலாபங்களுக்கு மாற்றப்படும்.

18E ஆரம்பப் பிரயோகத் திகதியில், முதலீட்டு உரிமம், பந்தி 10 இல் அனுமதிக்கப்பட்டவாறாக, முதலீட்டினை SLFRS 9 நியமத்துக்கு அமைவாக இலாப நட்டத்தின் ஊடான சீர்மதிப்பில் அளவிடத் தெரிவு செய்த உப கம்பனி மீதான அக்கறை தொடர்பான முற்கால கணக்குகளில் சீராக்கங்களை செய்தல் ஆகாது.

18F SLFRS 13 *சீர்மதிப்பு அளவீடு* நியமம் பின்பற்றப்பட முன்னர், முதலீட்டு உரிமம் முன்னர் முதலீட்டாளர்களுக்கு அல்லது முகாமைக்கு அறிக்கையிட்ட சீர்மதிப்புத் தொகைகள் அறிவும் விருப்பமும் கொண்ட தரப்பினரிடையே மதிப்பீட்டுத் திகதியில் சந்தைப் பரிமாற்றத்தில் முதலீடு பரிமாற்றப்படக்கூடிய தொகையைப் பிரதிநிதித்துவப்படுத்துமாயின், அத் தொகைகளைப் பயன்படுத்த வேண்டும்.

18G பந்திகள் 18C-18F க்கு அமைவாக உபகம்பனி மீதான முதலீட்டினை மதிப்பிட முடியாதவிடத்து, முதலீட்டு உரிமம் பந்திகள் 18C-18F பிரயோகிக்கப்படத் தக்கதான காலப்பகுதியின் ஆரம்பத்தில், அதாவது, நடைமுறைக் காலத்தில் இந்த நியமத்தின் தேவைப்பாடுகளைப் பிரயோகிக்க முடியும் (LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் மற்றும் தவறுகள்*) நியமத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறாக). 18C-18F பிரயோகிக்கப்படத் தக்கதான காலப்பகுதியின் ஆரம்பமானது நடைமுறைக் காலமாக இல்லாதவிடத்து, முதலீட்டாளர் ஆரம்பப் பிரயோகத் திகதிக்கு உடனடி முன்னரான ஆண்டுக் காலப்பகுதிக்கு முற்கால விளைவுள்ள வகையில் சீராக்கம் செய்தல் வேண்டும். முதலீட்டு உரிமம் சேய்க் கம்பனி மீதான முதலீட்டின் சீர்மதிப்பை

உடனடி முற்கால ஆரம்பத்துக்கு முன்னான காலப்பகுதி ஒன்றிலே அளவிடக் கூடியதாக இருப்பின், முதலீட்டாளர் உடனடி முற்கால ஆரம்பத்தில் பின்வருவனவற்றுக்க இடையிலான வேறுபாட்டுக்கான சீராக்கத்தினை மேற்கொள்ளல் வேண்டும்:

*(a)* முதலீட்டின் முன்னைய முன்கொணரல் பெறுமதி மற்றும்

*(b)* முதலீட்டாளரின் சேய்க்கம்பனி மீதான முதலீட்டின் சீர்மதிப்பு

பந்திகள் 18C-18F பிரயோகிக்கப்படத் தக்கதான காலப்பகுதியின் ஆரம்பமானது நடைமுறைக் காலமாக இருக்குமிடத்து, உரிமையாண்மைக்கான சீராக்கமானது தற்காலப் பகுதிக்கான ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்படல் வேண்டும்.

18H ஒரு முதலீட்டு உரிமம், முதலீட்டு உரிமங்களுக்கான திருத்தங்களின் ஆரம்ப பிரயோகத்துக்கு முன்னர் உப கம்பனி மீதான முதலீட்டை முடிவு செய்திருந்தால் அல்லது கட்டுப்பாட்டை இழந்திருந்தால் அந்த முதலீட்டுக்காக முதலீட்டு உரிமம் முந்தைய கணக்கியலுக்கு சீராக்கங்கள் செய்யத் தேவையில்லை.

18I 18C-18G பந்திகளின் ஆரம்பப் பிரயோகத் திகதிக்கு உடனடி முன்னான ஆண்டுக் காலக் (உடனடியான முன்னைய காலம்) குறிப்புரைகளைக் கருத்தில் எடுக்காது, முன்னிலைப்படுத்தப்பட்ட முந்தைய காலத்திற்கான சீராக்கப்பட்ட ஒப்பீட்டுத் தகவல்களை முன்னிலைப்படுத்தலாம் எனினும் ஆனால் அவ்வாறு செய்ய வேண்டிய அவசியமில்லை. ஒரு உரிமம் 18C-18G பந்திகளின் முந்தைய காலத்திற்கான சீராக்கப்பட்ட ஒப்பீட்டுத் தகவல்களை முன்னிலைப்படுத்தின, முன்னினலப்படுத்தப்பட்ட உடனடி முன்னான ஆண்டுக் காலம் தொடர்பான சகல குறிப்புரைகளும் முன்னைய சீராக்கப்பட்ட ஒப்பீட்டுக் காலப்பகுதிக்கானது என வாசிக்கப்படல் வேண்டும். எந்த ஒரு முன்னைய காலத்திற்கும் சீராக்கப்படாத ஒப்பீட்டு தகவல் அளிக்கப்பட்டால், அது சீர்செய்யப்படாத தகவல் என்பது தெளிவாக அடையாளம் காட்டப்பட்டு அது, வேறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டது எனக்கூறி, அந்த அடிப்படையை விளக்க வேண்டும்.

**SLFRS 9 நியமத்துடனான குறிப்பீடுகள்**

19 உரிமம் ஒன்று இந் நியமத்தினைப் பிரயோகித்து ஆனால், SLFRS 9 நியமத்தினை இன்னமும் பிரயோகிக்காவிடின், SLFRS 9 நியமம் தொடர்பான குறிப்புரைகள் யாவும் LKAS 39 *நிதிச் சாதனங்கள்: ஏற்பிசைவு மற்றும் அளவீடு* நியமத்துடனான குறிப்புரைகள் என வாசிக்கப்படல் வேண்டும்.

## LKAS 28 இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகளின் மீதான முதலீடுகள்

இலங்கைக் கணக்கீட்டு நியமம் LKAS 28 *இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகளின் மீதான முதலீடுகள்* , பந்திகள் 1 - 47 இல் தரப்பட்டுள்ளன. சகல பந்திகளும் சமமான அதிகாரத்தினைக் கொண்டுள்ளன. LKAS 28 ஆனது, *இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கான முகவுரை* மற்றும் *நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கருச் சட்டகம்* ஆகியவற்றின் உட்கருத்து அடிப்படையில் வாசிக்கப்படல் வேண்டும். வெளிப்படையான வழிகாட்டல் இல்லாதபோது, கணக்கீட்டுக் கொள்கைகளை தேர்வு செய்து பிரயோகிப்பதற்கான அடிப்படையினை LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* என்னும் நியமம் வழங்குகின்றது.

**நோக்கெல்லை**

1 **இந் நியமத்தின் குறிக்கோளானது இணை நிறுவனங்களிலான முதலீடுகளைக் கணக்கு வைப்பதற்கான கணக்கீட்டைப் பரிந்துரை செய்வதால் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகள் மற்றும் இணை நிறுவனங்களிலான முதலீடுகளைக் கணக்கு வைப்பதற்கு உரிமையாண்மை முறையைப் பிரயோகிப்பதற்கான தேவைப்பாடுகளை வழங்குதல் ஆகும்.**

**பரப்பெல்லை**

2 **இந்த நியமம் முதலிடப்படும் உரிமம் மீது இணைந்த கட்டுப்பாடு அல்லது முக்கிய செல்வாக்கைக் கொண்ட முதலீட்டு உரிமங்களினால் கணக்கீட்டில் பிரயோகிக்கப்படும்.**

**வரைவிலக்கணங்கள்**

3 **கீழே தரப்பட்டுள்ள பதங்கள் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் இந்த நியமத்தில் உபயோகிக்கப்படுகின்றன:**

***இணைக் கம்பனி*** **எனப்படுவது, முதலீட்டாளர் கணிசமான தலையிடற் செல்வாக்கினைக் கொண்டுள்ள உரிமமொன்றாகும்.**

***ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்*** **ஆவன, குழுமமொன்றினை ஒரு தனியான பொருளியல் உரிமமாகக் கொண்டு முதனிலைக் கம்பனிகள் மற்றும் இணை நிறுவனங்களின் சொத்துக்கள், பரிப்புக்கள், உரிமையாண்மை, வருமானங்கள், செலவினங்கள் மற்றும் காசுப்பாய்வுகள் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தப்படும் குழுமத்துக்கான நிதிக்கூற்றுக்களாகும்.**

***உரிமையாண்மை முறை*** **எனப்படுவது, முதலீடானது ஆரம்பத்தில் கிரயத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு அதன்பின்னர், கொள்வனவுக்குப் பின்னர் முதலீடு செய்யப்பட்ட உரிமத்தின் நிகரச் சொத்துக்களின் முதலீட்டாளரின் பங்கில் ஏற்படும் மாற்றங்களுக்காக செம்மையாக்கம் செய்யப்படும் கணக்கீட்டு முறையாகும். முதலீட்டாளரின் இலாபம் அல்லது நட்டம் முதலீட்டாளர் உரிமத்தின் இலாபம் அல்லது நட்டம் முதலீடு செய்யப்பட்ட உரிமத்தின் இலாபநட்டங்கள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானங்களின் முதலீட்டாளரது பங்கை உள்ளடக்கும்.**

***இணைந்த ஏற்பாடு*** **என்பது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தரப்பினர் இணைந்த கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கும் ஒரு ஏற்பாடு ஆகும்.**

***இணைந்த கட்டுப்பாடு*** **எனப்படுவது, பொருளியல் செயற்பாடொன்றின் மீது ஒப்பந்த ரீதியாக இணங்கப்பட்ட வகையில் கட்டுப்பாட்டினை பகிர்ந்து கொள்வதுடன், இது செயற்பாடு தொடர்பான நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு தூரநோக்கு தீர்மானங்களை மேற்கொள்வதற்கு கட்டுப்பாட்டினை பகிர்ந்துகொள்ளும் தரப்பினரின் (தொழில்முயற்சியாளர்களின்) ஏகமனதான சம்மதம் தேவைப்படும்போது மாத்திரம் ஏற்படும்.**

***கூட்டுத் தொழில் முயற்சி*** **என்பது ஏற்பாடு ஒன்றின் தரப்பினர் அதன் தேறிய சொத்துக்களின் மீது இணைந்த கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கக் கூடிய ஏற்பாடு ஆகும்.**

***கூட்டுத் தொழில் முயற்சியாளர்*** **என்பது அந்த கூட்டுத்தொழில் முயற்சி மீது இணைந்த கட்டுப்பாட்டைக் கொண்ட தரப்பினர் ஆகும்.**

***முக்கிய செல்வாக்கு*** **என்பது முதலீட்டு உரிமத்தின் நிதி மற்றும் செயல்பாட்டுக் கொள்கை வகுப்புக்களில் பங்கு பெறுவதற்கான, ஆனால் அந்த கொள்கைகளின் மீது கட்டுப்பாடு அல்லது இணைந்த கட்டுப்பாட்டை செலுத்த முடியாத வலு ஆகும்.**

4 பின்வரும் பதங்கள் LKAS 27 வேறான நிதிக்கூற்றுக்கள் நியமத்தின் பந்தி 4 மற்றும் SLFRS 10 *ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்* நியமத்தின் பின்னிணைப்பு A, வரைவிலக்கணப்படுத்தப்படுவதுடன், அவை வரைவிலக்கணப்படுத்தப்பட்ட SLFRS நியமங்களின் கருத்துக்களிலேயே பயன்படுத்தப்படுகின்றன.

* முதலிடப்படும் உரிமத்தின் மீதான கட்டுப்பாடு
* குழுமம்
* முதனிலைக் கம்பனி
* வேறான நிதிக்கூற்றுக்கள்
* உப கம்பனி

**முக்கிய செல்வாக்கு (கணிசமான செல்வாக்கு)**

5 முதலீட்டாளரொருவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ (உதாரணமாக உப கம்பனிகளினூடாக) முதலீடு செய்யப்படும் கம்பனியின் வாக்குரிமை அதிகாரத்தில் 20 சதவீதத்தினையோ அல்லது அதற்கு அதிகமாகவோ கொண்டிருப்பின், தெளிவான முறையில்

எதிராகக் காட்ட முடியாத பட்சத்தில், முதலீட்டாளர் கணிசமான தலையிடற் செல்வாக்கினைக் கொண்டிருப்பதாகக் கொள்ளப்படும். மாறாக, முதலீட்டாளரொருவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ (உதாரணமாக உப கம்பனிகளினூடாக) முதலீடு செய்யப்படும் கம்பனியின் வாக்குரிமை அதிகாரத்தில் 20 சதவீதத்திற்குக் குறைவாகக் கொண்டிருப்பின், தெளிவான முறையில் எதிராகக் காட்ட முடியாத பட்சத்தில், முதலீட்டாளர் கணிசமான தலையிடற் செல்வாக்கினைக் கொண்டிருக்கவில்லை எனக் கொள்ளப்படும். வேறொரு முதலீட்டாளரினால் கொண்டிருக்கப்படும் மேலதிக அல்லது பெரும்பான்மையான உரிமை, முதலீட்டாளர் கணிசமான தலையிடற் செல்வாக்கினை கொண்டிருப்பதை அவசியமாக தடைசெய்யாது.

6 முதலீட்டாளர் ஒருவரினால் கணிசமான செல்வாக்கினைக் கொண்டிருப்பதானது, வழமையாக கீழே தரப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வழிகளினால் சான்றுபடுத்தப்படும் :

*(அ)* முதலீடு செய்யப்படும் உரிமத்தின் பணிப்பாளர்சபையில் அல்லது அதற்குச் சமானமான ஆளுமை அமைப்பில் பிரதிநிதித்துவம்,

*(ஆ)* பங்கிலாபங்கள் மற்றும் ஏனைய பகிர்வுகள் பற்றிய தீர்மானங்கள் உள்ளடங்கலாக கொள்கை வகுப்புச் செயன்முறைகளில் பங்குபற்றுதல்,

*(இ)* முதலீட்டாளர் மற்றும் முதலீடு செய்யப்படும் உரிமம் ஆகியவற்றிற்கு இடையே பொருண்மையான ஊடுசெயல்கள்,

*(ஈ)* உரிமங்களுக்கு இடையில் முகாமை ஆளணியினரின் பரிமாற்றம்,

*(உ)* அவசியமான தொழில்நுட்பத் தகவல்கனை வழங்குதல்.

7 உரிமமொன்று சாதாரண பங்குகளாக மாற்றப்படக்கூடிய பங்கு வார்நாமங்கள், பங்கு அழைப்புத் தேர்வுரிமைகள், கடன்கள் அல்லது உரிமையாண்மைச் சாதனங்களுக்கோ பிரயோகிக்கப்படும்போது அல்லது மாற்றப்படும்போது உரிமத்திற்கு மேலதிக வாக்குரிமை அதிகாரத்தினை அல்லது வேறொரு உரிமத்தின் நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு கொள்கைகள் மீது (சாத்தியமாகக்கூடிய வாக்குரிமை) வேறொரு தரப்பினரின் வாக்குரிமை அதிகாரத்தினை குறைக்கும் அதனை ஒத்த பிற சாதனங்களுக்கோ உரிமை கொண்டிருக்கக்கூடும். பிற உரிமங்களினால் கொண்டிருக்கப்படும் சாத்தியமாகக்கூடிய வாக்குரிமைகள் உள்ளடங்கலாக, தற்போது பிரயோகிக்கக்கூடிய அல்லது மாற்றப்படக்கூடிய சாத்தியமாகக்கூடிய வாக்குரிமைகளின் இருப்பும் தாக்கமும் உரிமமொன்று கணிசமான செல்வாக்கைக் கொண்டுள்ளதா என மதிப்பிடுதலில் கணக்கிற் கொள்ளப்படும். சாத்தியமாகக்கூடிய வாக்குரிமைகள், உதாரணமாக அவை எதிர்காலத் திகதியொன்று வரையில் அல்லது எதிர்கால நிகழ்வு ஒன்று நிகழும்வரையில் பிரயோகிக்கப்பட முடியாததாகவோ அல்லது மாற்றப்பட முடியாததாகவோ இருக்கும்போது, அவை தற்போது பிரயோகிக்கப்பட முடியாததாகவோ அல்லது மாற்றப்பட முடியாததாகவோ இருக்கும்.

8 சாத்தியமாகக்கூடிய வாக்குரிமைகள் கணிசமான செல்வாக்கிற்கு பங்களிப்புச் செய்கின்றனவா என்பதனை தீர்மானித்தலில் உரிமம், முகாமையின் உள்நோக்கம் மற்றும் பிரயோகிப்பதற்கான அல்லது மாற்றுவதற்கான நிதிசார் இயலுமை தவிர, சாத்தியமாகக்கூடிய உரிமைகளை பாதிக்கக்கூடிய சகல உண்மைகள் மற்றும் புறநிலைகளை (சாத்தியமாகத்தகு வாக்குரிமைகளின் பிரயோகக் கட்டுறுப்புக்கள் மற்றும் தனியாகவோ அல்லது சேர்ந்தோ கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஏனைய ஒப்பந்த ரீதியிலான ஏற்பாடுகள் எவையும் இருப்பின் அவை, உள்ளடங்கலாக) பரீட்சிக்கும்.

9 முதலீடு செய்யப்படும் உரிமத்தின் நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்தலில் பங்குகொள்ளும் அதிகாரத்தினை உரிமமொன்று இழக்கும்போது அந்த உரிமம் முதலீடு செய்யப்படும் உரிமத்தின் மீதான அதன் கணிசமான செல்வாக்கினை இழக்கின்றது. கணிசமான தலையிடற் செல்வாக்கின் இழப்பானது தனியான அல்லது சார்பு உரிமை மட்டங்களில் மாற்றம் ஏற்பட்டாலோ இல்லாவிட்டாலோ நிகழலாம். உதாரணமாக, இது கூட்டுக்கம்பனி அரசாங்கத்தின், நீதிமன்றின், நிருவாகத்தினரின் அல்லது ஒழுங்காற்று அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் வரும்போது நிகழலாம். இது ஒப்பந்த ரீதியிலான உடன் படிக்கையின் விளைவாகவும் ஏற்படலாம்.

**உரிமையாண்மை முறை**

10 உரிமையாண்மை முறையின் கீழ் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியொன்றின் மீதான முதலீடு ஆரம்பத்தில் கிரயத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு முன்கொணரற் தொகையானது கொள்வனவுத் திகதியின் பின்னர் முதலீடு செய்யப்பட்டுள்ள உரிமத்தின் இலாபம் அல்லது நட்டத்தில் முதலீட்டாளரின் பங்கினை ஏற்பிசைவு செய்யும் வகையில் அதிகரிக்கப்படும் அல்லது

குறைக்கப்படும். முதலீடு செய்யப்பட்டுள்ள உரிமத்தின் இலாபம் அல்லது நட்டத்தின் முதலீட்டாளரின் பங்கு முதலீட்டாளரின் இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். முதலீடு செய்யப்பட்டுள்ள உரிமத்திலிருந்து கிடைக்கப்பெறும் பகிர்வுகள் முதலீட்டின் முன்கொணரற் தொகையினைக் குறைக்கும். முதலீடு செய்யப்பட்டுள்ள உரிமத்தின் பிற முற்றடக்க வருமானத்தில் ஏற்படும் மாற்றம் காரணமாக முதலீடு செய்யப்படும் உரிமத்தின் மீது முதலீட்டாளரின் விகிதாசார அக்கறையில் ஏற்படும் மாற்றங்களுக்காக முன்கொணரற் தொகைக்கு செம்மையாக்கம் மேற்கொள்வது அவசியமானதாக இருக்கலாம். அவ்வாறான மாற்றங்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மீள்மதிப்பீட்டினால் ஏற்படும் மாற்றங்களையும் அந்நிய நாணய மாற்று வித்தியாசங்களினால் ஏற்படும் மாற்றங்களையும் உள்ளடக்கும். அந்த மாற்றங்களின் முதலீட்டாளரின் பங்கானது முதலீட்டாளரின் பிற முற்றடக்க வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். (LKAS 1 நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்துகை இனைப் பார்க்கவும்)

11 பெறப்பட்ட பகிர்வின் அடிப்படையில் வருமானத்தினை ஏற்பிசைவு செய்தலானது முதலீட்டாளர் ஒருவரினால் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியொன்றில் அவர் கொண்டுள்ள முதலீட்டிலிருந்து உழைக்கப்பட்ட வருமானத்தின் போதுமான அளவீடாக அமையாது போகலாம் ஏனெனில், பெறப்படும் பகிர்வானது இணைக் கம்பனி அல்லது கூட்டுத்தொழில் முயற்சியின் சாதிப்புடன் குறைந்த தொடர்பினையே கொண்டிருக்கும். முதலீட்டாளர் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் மீது கணிசமான செல்வாக்கினைக் கொண்டிருப்பதன் மூலம் முதலீட்டாளர் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் சாதனை மீது அக்கறையினைக் கொண்டிருப்பதுடன் அதன் விளைவாக முதலீட்டின் மீதான வருமானத்தின் மீது அக்கறையினைக் கொண்டிருக்கும். முதலீட்டாளர் இந்த அக்கறையினை, அதன் நிதிக் கூற்றுக்களின் நோக்கெல்லையினை அவ்வாறான இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் இலாபம் அல்லது நட்டத்தின் மீது அதன் பங்கினை உட்படுத்தி விரிவுபடுத்துவதன் மூலம் கணக்கிற் கொள்ளும் . இதன் விளைவாக உரிமையாண்மை முறையின் பிரயோகம் முதலீட்டாளரின் நிகர சொத்துக்கள் மற்றும் இலாபநட்டத்தின் அதிகமான தகவலைக் கொண்ட அறிக்கையிடலினை வழங்கும்.

12 சாத்தியமான வாக்குரிமை அல்லது வாக்குரிமை கொண்ட பிற நேரற்ற ஆதனங்கள் காணப்படும் போது, இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் வணிகத்தில் உள்ள ஒரு உரிமத்தின் அக்கறை, ஏற்கனவே இருக்கும் உரிமை அக்கறைகளின் அடிப்படையிலே மட்டுமே நிர்ணயிக்கப்படுகிற தே தவிர, பந்தி 13 பிரயோகிக்கப்படாதவிடத்து, சாத்தியமான பிரயோகம் அல்லது சாத்தியாமான வாக்குரிமைகளின் நிலைமாற்றல் மற்றும் பிற நேரற்ற சாதனங்களைப் பிரதிபலிக்காது.

13 சில சூழ்நிலைகளில், ஒரு நிறுவனம், கருத்து அடிப்படையில், ஒரு உரிமை நலனுடன் தொடர்புடைய வருமானத்துக்கான அணுகையினை தற்போது வழங்கக்கூடிய ஒரு ஊடுசெயலின் விளைவாக, ஏற்கனவே இருக்கும் உரிமையைக் கொண்டிருக்கும். இத்தகைய சூழ்நிலைகளில், உரிமத்திற்கு ஒதுக்கப்பட்ட விகிதாசாரமானது, சாத்தியமான வாக்குரிமைகளின் முடிவான பிரயோகம் மற்றும் தற்போது உரிமத்துக்கு வருவாய் பெறும் உரிமைக்கான அணுகலை வழங்கும் பிற நேரற்ற சாதனங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ளுவதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது.

14 உரிமையாண்மை முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்ட இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகளுக்கு SLFRS 9 *நிதியியல் சாதனங்கள்* பிரயோகிக்கப்படுவதில்லை. சாத்தியமான வாக்குரிமையைக் கொண்டுள்ள சாதனங்கள் நடைமுறையில் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றின் உரிமையுடன் தொடர்பான வருவாய்களுக்கான அணுகையினை வழங்கும் போது, அச் சாதனங்கள் SLFRS 9 நியமத்துக்கு உட்படுவதில்லை. இது தவிர்ந்த சகல சந்தர்ப்பங்களிலும், இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றின் சாத்தியமான வாக்குரிமையைக் கொண்டுள்ள சாதனங்கள் SLFRS 9 நியமத்துக்கு அமைவாகக் கணக்கிடப்படும்.

15 இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றின் முதலீடு அல்லது முதலீட்டில் ஒரு பகுதி SLFRS 5 *விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லா சொத்துக்கள் மற்றும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட செயற்பாடுகள்* நியமத்துக்கு அமைவாக விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படின், விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படாத முதலீடு அல்லது முதலீட்டின் மீதமுள்ள பகுதி, நடைமுறையல்லா சொத்து என வகைப்படுத்தப்படும்.

**உரிமையாண்மை முறையின் பிரயோகம்**

16 இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றின் முதலீடு மீது இணைந்த கட்டுப்பாட்டை அல்லது முக்கிய செல்வாக்கைக் கொண்ட உரிமம் ஒன்று அந்த முதலீடு பந்தி 17-19 க்கு அமைவாக விலக்களிப்பதற்குத் தகுதி பெறாத பட்சத்தில் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி மீதான தனது முதலீட்டிற்கான உரிமையாண்மை முறையைப் பயன்படுத்தி கணக்கு வைக்கும்.

**உரிமையாண்மை முறையைப் பயன்படுத்துவதற்கான விலக்களிப்புக்கள்**

17 உரிமம் ஒன்று SLFRS 10 நியமத்தின் பந்தி 4(அ) இலுள்ள விதிவிலக்குக்கு அமைவாக ஒன்றித்த நிதிக் கூற்றுக்களை முன்னிலைப்படுத்துவதற்கு விலக்களிக்கப்பட்டிருப்பின் அல்லது கீழே குறிப்பிடப்பட்ட சகல விடயங்களும் பிரயோகிக்கக் கூடியதாக இருப்பின், அவ் உரிமம் அதன் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றிலுள்ள முதலீடொன்றிற்கு உரிமையாண்மை முறையினைப் பயன்படுத்த வேண்டியதில்லை.

(அ) முதலீட்டாளர் வேறொரு உரிமத்தின் முற்றிலுமாக உரிமை கொண்ட உபகம்பனியாகவோ அல்லது பகுதியான உரிமை கொண்ட உபகம்பனியாகவோ இருந்து மற்றைய சந்தர்ப்பங்களில் வாக்குரிமை அற்றோர் அடங்கலாக ஏனைய உரிமையாளர்களுக்கு முதலீட்டாளர் உரிமையாண்மை முறையினை பிரயோகிக்கவில்லை என்பதனை அறிவித்ததுடன் அவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காத பட்சத்தில்,

(ஆ) முதலீட்டு உரிமத்தின் கடன் மற்றும் உரிமையாண்மைச் சாதனங்கள் பகிரங்கச் சந்தையில் (உள்நாட்டு அல்லது பிரதேச சந்தைகள் அடங்கலாக, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பங்குப் பரிவர்த்தனைச் சந்தை அல்லது கருமபீடம் மீதான சந்தை) கொடுக்கல் வாங்கல் செய்யப்படாத போது,

(இ) பொதுச் சந்தையில் எந்தவொரு வகையான சாதனங்களையும் வழங்கும் தேவைக்காக காப்பாவண அதிகாரசபையுடன் அல்லது பிற ஒழுக்காற்று அமைப்புடன் நிதிக்கூற்றுக்களை கோவைப்படுத்தியிராத அல்லது கோவைப்படுத்தும் செயன்முறையில் ஈடுபட்டிராதபோது,

(ஈ) இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் ஒத்திசையும் வண்ணம் பொதுமக்களின் உபயோகத்திற்கு கிடைக்கக் கூடியதாக ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை தயாரித்து முன்னிலைப்படுத்தும் முதலீட்டாளரின் ஈற்று அல்லது இடைநிலையில் அமைந்த முதனிலைக் கம்பனி.

18 இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றின் முதலீடு ஒன்று மூலதன முயற்சிக் கம்பனி, பரஸ்பர நிதியம், அலகு நம்பிக்கை நிதியம் அல்லது முதலீட்டுடன் இணைந்த காப்புறுதி நிதி உள்ளடங்கலான அதனை ஒத்த உரிமம் ஒன்றினால் நேரடியாகவோ அல்லது நேரில் முறையிலோ வைத்திருக்கப்படும் போது, உரிமம் SLFRS 9 நியமத்துக்கு அமைவாக இலாபநட்டங்களின் ஊடான சீர்மதிப்பு முறையில் அந்த இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றின் முதலீடு நோக்கில் அல்லது கூட்டு நிறுவனங்களில் முதலீட்டினை மதிப்பிடும்.

19 உரிமம் ஒன்று இணைக் கம்பனி ஒன்றில் மறைமுகமாக முதலீடு ஒன்றினைக் கொண்டுள்ள போது, அம் முதலீட்டின் ஒரு பகுதி மூலதன முயற்சிக் கம்பனி, பரஸ்பர நிதியம், அலகு நம்பிக்கை நிதியம் அல்லது அதனை ஒத்த உரிமம் ஒன்றினால் முதலீட்டுடன் இணைந்த காப்புறுதி நிதி உள்ளடங்கலாக நேரடியாகவோ அல்லது நேரில் முறையிலோ வைத்திருக்கப்படும் போது, உரிமம் அம் முதலீட்டின் பகுதியை, மூலதன முயற்சிக் கம்பனி, பரஸ்பர நிதியம், அலகு நம்பிக்கை நிதியம் அல்லது முதலீட்டுடன் இணைந்த காப்புறுதி நிதியம் உள்ளடங்கலான அதனை ஒத்த உரிமம் அம் முதலீட்டின் மீது முக்கிய செல்வாக்கினைக் கொண்டுள்ளதா என்பதைக் கருத்தில் கொள்ளாது, SLFRS 9 நியமத்துக்கு அமைவாக இலாபநட்டங்களின் ஊடான சீர்மதிப்பு முறையில் மதிப்பிடத் தெரிவு செய்யலாம். அவ்வாறு தெரிவு செய்யின், உரிமம் இணை நிறுவன முதலீட்டின் மூலதன முயற்சிக் கம்பனி, பரஸ்பர நிதியம், அலகு நம்பிக்கை நிதியம் அல்லது முதலீட்டுடன் இணைந்த காப்புறுதி நிதி உள்ளடங்கலான அதனை ஒத்த உரிமங்களால் உரிமை கொள்ளப்படாது மீதமுள்ள பகுதிகளுக்கு உரிமையாண்மை முறையினைப் பிரயோகிக்கும்.

**விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தல்**

20 விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படுவதற்கான அடிப்படைகளைத் திருப்தி செய்யும் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றின் முதலீடு அல்லது முதலீட்டில்

ஒரு பகுதி மீது SLFRS 5 நியமத்தினைப் பிரயோகிக்கும். உரிமம் விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படாத முதலீடு அல்லது முதலீட்டின் மீதமுள்ள பகுதிகளுக்கு, விற்பனைக்கானவை என வகைப்படுத்தப்பட்டவை உண்மையிலேயே விற்கப்படும் வரை உரிமையாண்மை முறையினைப் பிரயோகிக்கும். விற்கப்பட்ட பின், மீதமுள்ள அக்கறைகளை ஒரு இணைக் கம்பனியாக தொடர்ந்து செல்லும் எனில் உரிமம் உரிமையாண்மை முறையையும் அல்லாதவிடத்து இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் மீதமுள்ள அக்கறைகளினை SLFRS 9 நியமத்துக்கு அமைவாகவும் கணக்கிடல் வேண்டும்.

21 முன்னர் விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்பட்ட இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றின் மீதான முதலீடு அல்லது முதலீட்டின் பகுதி ஒன்று இனிமேலும் அவ்வாறு வகைப்படுத்தப்படுவதற்கான மூலப்பிரமாணத்தை திருப்தி செய்யாத போது, அது விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்பட்ட திகதியில் இருந்து முற்கால விளைவுள்ள வகையில் உரிமையாண்மை முறையைப் பிரயோகிக்கும். வகைப்படுத்தல் காலப்பகுதியில் இருந்தான நிதிக்கூற்றுக்களில் விற்பனைக்கானவை என வகைப்படுத்தப்பட்ட பகுதிகள் உரியவாறு திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

**உரிமையாண்மை முறையின் பயன்பாட்டை நிறுத்தல்**

22 **உரிமம் அதன் முதலீடுகள் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியாக இல்லாது போகும் திகதியில் இருந்து உரிமையாண்மை முறையைப் பின்பற்றுவதை நிறுத்துதல் வேண்டும்.**

**(a) முதலீடானது ஒரு உப கம்பனியாக மாற்றமடையின், உரிமம் அதன் மீதான முதலீட்டினை SLFRS 3 *வணிக ஒன்றிப்புக்கள்* மற்றும் SLFRS 10 நியமங்களுக்கு அமைவாக கணக்கிடுதல் வேண்டும்.**

**(b) முன்னைய இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி மீதான மீதமுள்ள அக்கறைகள் ஒரு நிதிச் சொத்தாகக் காணப்படின், மீதமுள்ள அக்கறைகள் உரிமம் சீர்மதிப்பில் அளவிடல் வேண்டும். மீதமுள்ள அக்கறைகளின் சீர்மதிப்பானது SLFRS 9 நியமத்துக்கு அமைவான முறையில் அதனை நிதிச் சொத்தாக ஏற்கும் ஆரம்ப ஏற்பிசைவிலிருந்ததாகக் கருதிக்கொள்ளல் வேண்டும். பின்வருவனவற்றுக்கு இடையிலான ஏதேனும் வேறுபாடுகளை உரிமம் இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்யும்.**

**(i) மீதமுள்ள அக்கறைகளின் சீர்மதிப்பானது மற்றும் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி மீதான அக்கறைகளின் பகுதி ஒன்றை முடிவு செய்வதனால் கிடைக்கக்கூடிய ஏதேனும் வருமானங்கள், மற்றும்**

**(ii) உரிமையாண்மை முறை நிறுத்தப்பட்ட திகதியிலான முதலீட்டின் முன்கொணரல் பெறுமதி**

**(c) உரிமம் உரிமையாண்மை முறை நிறுத்திக் கொள்ளும் போது, முன்னைய காலங்களில் ஏனைய முற்றடக்க வருமானங்களில் அந்த முதலீடுகள் தொடர்பில் அதே முறையில் ஏற்பிசைவு செய்யப்பட்ட சகல தொகைகளையும் முதலிடப்படும் உரிமம் தொடர்புபட்ட சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை நேரடியாகவே முடிவு செய்ததாகக் கருதக்கூடிய வகையில் கணக்கிடல் வேண்டும்.**

23 ஆகவே, முதலிடப்பட்ட உரிமத்தினால் முன்னைய காலங்களில் ஏனைய முற்றடக்க வருமானங்களில் ஏதேனும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஏற்பிசைவு செய்யப்பட்டிருப்பின், அவை தொடர்புபட்ட சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் அகற்றலின் போது இலாபநட்டங்களுக்கு மீள வகைப்படுத்தப்பட வேண்டும். உரிமம் உரிமையாண்மை முறையை நிறுத்தும் போது அவ்வாறான இலாபங்கள் அல்லது நட்டங்களை உரிமையாண்மையில் இருந்து இலாபநட்டங்களுக்கு மாற்றுதல் வேண்டும். உதாரணமாக, ஒரு இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி வெளிநாட்டு தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய திரண்ட நாணயமாற்று வேறுபாடுகளைக் கொண்டிருந்து, அந்த கம்பனி உரிமையாண்மை முறையை பயன்படுத்துவதை நிறுத்துகிறது எனில், அந்த உரிமம் ஏனைய முற்றடக்க வருமானத்தில் நாணயமாற்று தொடர்பாக முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட இலாபம் அல்லது நட்டத்தை இலாபநட்டங்களுக்கு மாற்றுதல் வேண்டும்.

24 **இணைக் கம்பனி மீதான முதலீடு ஒன்று கூட்டுத் தொழில் முயற்சி மீதான முதலீடாக மாற்றம் அடையின் அல்லது கூட்டுத் தொழில் முயற்சி மீதான முதலீடு ஒன்று இணைக் கம்பனி மீதான முதலீடாக மாற்றம் அடையின், உரிமம் தொடர்ந்தும் உரிமையாண்மை முறையைப் பிரயோகிப்பதுடன் மீதமுள்ள அக்கறைகளை அளவிடுவதில்லை.**

**உரிமையாண்மை அக்கறைகளிலான மாற்றம்**

25 இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றின் மீதான உரிமம் ஒன்றின் அக்கறைகள் குறைக்கப்பட்டு, ஆனால் உரிமம் தொடர்ந்தும் உரிமையாண்மை முறைமையினைப் பின்பற்றினால், அந்த உரிமம் ஏனைய முற்றடக்க வருமானத்தில் உரிமையாண்மை அக்கறைகள் குறைப்புத் தொடர்பாக முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட இலாபம் அல்லது நட்டத்தை, அந்த இலாபம் அல்லது நட்டம் தொடர்புபட்ட சொத்துக்கள் அல்லது பரிப்புக்களின் அகற்றலின் போது இலாபநட்டங்களுக்கு மீள வகைப்படுத்த வேண்டியிருப்பின் அவை இலாபநட்டங்களுக்கு மீள வகைப்படுத்தல் வேண்டும்.

**உரிமையாண்மை முறை நடைமுறைகள்**

26 உரிமையாண்மை முறைக்குப் பிரயோகிக்கத்தக்க பெரும்பாலான நடைமுறைகள் SLFRS 10 நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஒன்றித்தல் நடைமுறைகளை ஒத்தவையாகும். மேலும், உப கம்பனி ஒன்றினைக் கையகப்படுத்தும் போது பயன்படுத்தப்படும் அடிப்படை எண்ணக்கருக்கள் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றினைக் கையகப்படுத்தும் போதும் பயன்படுத்தப்படுகின்றன.

27 இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி மீதான குழுமம் ஒன்றின் பங்கானது இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி மீதான முதனிலைக் கம்பனி மற்றும் சேய்க்கம்பனிகளின் உரிமையின் திரட்டாகும். இந் நோக்கத்திற்காக குழுமத்தின் ஏனைய இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி மீதான உரிமைகள் புறக்கணிக்கப்படுகின்றன. இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்று சேய்க்கம்பனிகள், இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகளைக் கொண்டிருக்கும் போது, உரிமையாண்மை முறையினைப் பிரயோகிக்கும் போது கணக்கில் எடுக்கப்படும் இலாபநட்டங்கள், எனைய முற்றடக்க வருமானம் மற்றும் தேறிய சொத்துக்கள் ஆகியன ஓரினத்தன்மை வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அவசியமான சீராக்கங்களின் பின்னர் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் நிதிக்கூற்றுக்களில் (இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகளது சேய்க்கம்பனிகள், இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் இலாபம் அல்லது நட்டம், ஏனைய முற்றடக்க வருமானங்கள் மற்றும் நிகர சொத்துக்கள் உள்ளடங்கலாக) ஏற்பிசைவு செய்யப்படுகின்றன (பந்தி 35 மற்றும் 36 இனைப் பார்வையிடவும்).

28 உரிமம் மற்றும் அதன் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகளுக்கு இடையிலான (ஒன்றித்தல் செய்யப்பட்ட சேய்க்கம்பனிகள் உள்ளடங்கலாக) கீழ்நோக்கிய மற்றும் மேல்நோக்கிய ஊடுசெயல்களின் விளைவான இலாபம் அல்லது நட்டங்கள் அவற்றின் நிதிக்கூற்றுக்களில் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகளில் உள்ள தொடர்புபடாத முதலீட்டாளர்களது அக்கறைகளின் அளவுக்கு ஏற்பிசைவு செய்யப்படும். மேல்நோக்கிய ஊடுசெயல்கள் என்பது, உதாரணமாக, இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகளில் இருந்து முதலிடும் உரிமத்துக்கான சொத்துக்களின் விற்பனை ஆகும். கீழ்நோக்கிய ஊடுசெயல்கள் என்பது, உதாரணமாக, முதலிடும் உரிமத்தில் இருந்தான இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகளினை நோக்கிய சொத்துக்களின் பங்களிப்பு ஆகும். இவ்வாறான ஊடுசெயல்கள் மூலம் உருவாகும் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகளின் இலாபங்கள் அல்லது நட்டங்களின் மீதான முதலிடும் உரிமத்தின் பங்கானது நீக்கப்படும்.

29 கீழ்நோக்கிய ஊடுசெயல்கள் விற்கப்பட வேண்டிய அல்லது பங்களிக்கப்பட வேண்டிய சொத்தின் நிகர தேறத்தக்க பெறுமதியில் ஏற்படும் ஒரு குறைவிற்கான அல்லது சொத்துக்களின் சேத இழப்பு தொடர்பான சான்றினை வழங்கின், அவ்வாறான நட்டங்கள் முற்றிலும் முதலீடு மேற்கொள்ளும் உரிமத்தினாலேயே ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும். மேல்நோக்கிய ஊடுசெயல்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டிய சொத்தின் நிகர தேறத்தக்க பெறுமதியில் ஏற்படும் ஒரு குறைவிற்கான அல்லது சொத்துக்களின் சேத இழப்பு தொடர்பான சான்றினை வழங்கின், அவ்வாறான நட்டங்கள் முற்றிலும் முதலீடு மேற்கொள்ளும் உரிமத்தினால் அதன் பங்குக்கு ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும்.

30 இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி மீது உரிமையாண்மை அக்கறை ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலான இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சிக்கான நிதிசாரா சொத்த ஒன்றின் பங்களிப்பானது, LKAS 16 *ஆதனம், பொறி, உபகரணங்கள்* நியமத்தில் பதம் பொருள் வரையறை செய்யப்பட்ட விதமாக ஒன்றித்தலானது வர்த்தகரீதியான பொருளைக் கொண்டிராதபோது தவிர, பந்தி 28க்கு அமைவாக கணக்கிடப்பட வேண்டும். அவ்வாறு ஒன்றித்தலானது வர்த்தகரீதியான கருத்தைக் கொண்டிராதபோது, இலாபம் அல்லது நட்டமானது தேறாததாகக் கருதப்பட்டு, பந்தி 31 பிரயோகிக்கப்படாத பட்சத்தில் ஏற்பிசைவு செய்யப்படாது.

அவ்வாறான தேறாத இலாபங்கள் அல்லது நட்டங்கள் உரிமையாண்மை முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்ட முதலீட்டுக்கு எதிராக நீக்கப்படுவதுடன், உரிமையாண்மை முறையைப் பயன்படுத்தி முதலீடு கணக்கு வைக்கப்படும் உரிமத்தின் ஒன்றித்த நிதிநிலைமைக்கூற்றில் அல்லது உரிமத்தின் நிதிநிலைமைக்கூற்றில் பிற்போடப்பட்ட இலாபங்கள் அல்லது நட்டங்களாக முன்னிலைப்படுத்தப்படல் ஆகாது.

31 இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி மீது உரிமையாண்மை அக்கறை ஒன்றினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு மேலதிகமாக, உரிமம் ஒன்று நிதிசார் அல்லது நிதிசாரா சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளுமாகில், பெறப்பட்ட நாணய அல்லது நாணயம்சாரா சொத்துக்களுடன் தொடர்பான பங்களிப்பின் இலாபம் அல்லது நட்டத்தின் பகுதியை முழுமையாக இலாபநட்டத்தில் ஏற்பிசைவு செய்யும்.

32 இணைக் கம்பனி ஒன்றின் மீதான முதலீடொன்று அது இணைக் கம்பனியான தினத்திலிருந்து உரிமையாண்மை முறையினை உபயோகித்து கணக்கீடு செய்யப்படும். முதலீட்டின் கொள்வனவின் போது முதலீட்டின் கிரயத்திற்கும் இணைக் கம்பனியின் இனங்காணத்தகு சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் நிகர சீர்மதிப்பின் முதலீட்டாளரின் பங்குக்கும் இடையேயான வித்தியாசம் கீழ்வருமாறு கணக்கிற் கொள்ளப்படும்:

(அ) இணைக் கம்பனி தொடர்பான நன்மதிப்பு முதலீட்டின் முன்கொணரற் தொகையில் உள்ளடக்கப்படும். அந்த நன்மதிப்பின் காலத் தேய்மானம் அனுமதிக்கப்படவில்லை.

(ஆ) முதலீட்டின் கிரயத்திலும் மிகையான இணைக் கம்பனியின் இனங்காணத்தகு சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் நிகர சீர்மதிப்பில் முதலீட்டாளரின் பங்கு ஏதும் இருப்பின் அது, முதலீடு கொள்வனவு செய்யப்பட்ட காலத்தின் போது இணைக் கம்பனியின் இலாபம் அல்லது நட்டத்தில் முதலீட்டாளரின் பங்கினைத் தீர்மானித்தலில் வருமானமாக உட்படுத்தப்படும்.

கொள்வனவின் பின்னர் இணைக் கம்பனியின் இலாபங்கள் அல்லது நட்டங்களில் முதலீட்டாளரின் பங்கிற்கான பொருத்தமான செம்மையாக்கங்களும் கணக்கில் மேற்கொள்ளப்படும். உதாரணமாக, தேய்மானத்தகு சொத்துக்களின் தேய்மானத்தினை கொள்வனவுத் திகதியிலிருந்து அவற்றின் சீர்மதிப்பின் அடிப்படையில் மேற்கொள்ளல். அதேபோல, நன்மதிப்பு அல்லது ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பாக இணை கம்பனியினால் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்புநட்டங்களுக்காக கொள்வனவுக்குப் பின்னர் இணை கம்பனி இலாபங்கள் அல்லது நட்டங்களில் முதலீட்டாளரின் பங்கிற்கு பொருத்தமான செம்மையாக்கங்கள் மேற்கொள்ளப்படும்.

33 **உரிமையாண்மை முறையினைப் பிரயோகித்தலில் முதலீட்டாளரினால் இணை கம்பனியின் கிடைக்கப்பெறும் மிக அண்மைக்காலத்தின் நிதிக்கூற்றுக்கள் உபயோகிக்கப்படும். முதலீட்டாளரின் அறிக்கையிடற் கால முடிவு இணை நிறுவனத்தினதில் இருந்து வேறுபடும் போது இணை கம்பனியானது, நடைமுறைச் சாத்தியமான இடத்து, முதலீட்டாளரின் உபயோகத்திற்காக முதலீட்டாளரின் நிதிக்கூற்றுக்களின் அதே திகதியின் படி அதன் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்.**

34 **பந்தி 33 க்கு அமைவாக, உரிமையாண்மை முறையினைப் பிரயோகிப்பதற்காக உபயோகிக்கப்படும் இணை நிறுவனமொன்றின் நிதிக் கூற்றுக்கள் முதலீட்டாளரின் காலத்தில் இருந்து வேறுபட்ட காலத்திற்குத் தயாரிக்கப்பட்டிருப்பின், அந்தத் திகதிக்கும் முதலீட்டாளரின் நிதிக்கூற்றுக்களின் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழும் கணிசமான ஊடுசெயல்கள் அல்லது நிகழ்வுகளின் தாக்கங்களுக்காக செம்மையாக்கங்கள் மேற்கொள்ளப்படும். எவ்வாறாயினும், இணை நிறுவனத்தின் அறிக்கையிடற் காலத்தின் இறுதித் திகதிக்கும் முதலீட்டாளரின் அந்தத் திகதிக்கும் இடையேயான காலம் மூன்று மாதங்களுக்கு மேலாக அதிகரிக்கக்கூடாது. அறிக்கையிடற் காலங்களின் நீட்டமும் அறிக்கையிடற் காலங்களின் இறுதித் திகதிகளுக்கு இடையிலான எந்தவொரு வேறுபாடும் காலத்திற்குக் காலம் ஒன்றாகவே இருக்கும்.**

35 **முதலீட்டாளரின் நிதிக்கூற்றுக்கள் ஒத்த சூழ்நிலைகளில் ஒரேவிதமான ஊடுசெயல்கள் மற்றும் நிகழ்வுகளுக்கு ஒரே சீரான கணக்கீட்டுக் கொள்கைகளை உபயோகித்துத் தயாரிக்கப்படும்.**

36 உரிமையாண்மை முறையினை உபயோகித்தலில் முதலீட்டாளரினால் இணைக் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் உபயோகிக்கப்படும் போது, இணைக் கம்பனியானது ஒத்த சூழ்நிலைகளில் ஒரேவிதமான ஊடுசெயல்கள் மற்றும் நிகழ்வுகளுக்கு முதலீட்டாளரின் கணக்கீட்டுக் கொள்கைகளை அல்லாது வேறு கொள்கைகளை உபயோகிக்குமேயாகில், இணைக் கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்கும் பொருட்டு முதலீட்டாளரின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு செம்மையாக்கம் செய்யப்படும்.

37 இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியொன்று முதலீட்டாளர் தவிர்ந்த ஏனைய தரப்பினரால் கொண்டிருக்கப்படுவதும் உரிமையாண்மையாக வகைப்படுத்தப்பட்டதுமான நிலுவையிலுள்ள திரள் முன்னுரிமைப் பங்குகளைக் கொண்டிருப்பின், உரிமம் அந்தப் பங்கிலாபங்கல் பிரேரிக்கப்பட்டதா என்பதைக் கருத்தில் கொள்ளாது அதன் மீதான பங்கிலாபங்களுக்கு செம்மையாக்கம் செய்த பின்னர் அதன் இலாப அல்லது நட்டப் பங்கினைக் கணிக்கும்

38 இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றின் நட்டங்களுக்கான முதலீட்டாளர் ஒருவரின் பங்கு இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி மீதான அதன் அக்கறைக்கு சமமானால் அல்லது அதனை அதிகரித்தால், மேலும் நட்டத்தின் அதன் பங்கினை ஏற்பிசைவு செய்வதனை முதலீட்டாளர் முடிவுக்குக் கொண்டு வருவார். இணைக் கம்பனி ஒன்றின் மீதான அக்கறை, உரிமையாண்மை முறையின் கீழ் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் முதலீட்டின் முன்கொணரற் தொகையுடன், பொருளளவில் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் நிகர முதலீட்டின் பகுதியாக அமையும் எந்தவொரு நீண்டகால அக்கறையுமாகும். உதாரணமாக, தீர்ப்பனவு திட்டமிடப்பட்டிராத அல்லது எதிர்வுகூறக்கூடிய எதிர்காலம் வரையில் நிகழ்வு சாத்தியப்படாத உருப்படியொன்று, பொருளளவில் அந்த இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் மீது உரிமத்தின் முதலீட்டின் ஒரு நீட்சியாகும். அவ்வாறான உருப்படிகள் முன்னுரிமைப் பங்குகள் மற்றும் நீண்டகால வருமதிகள் மற்றும் கடன்களை உட்படுத்தக்கூடும், ஆயினும் வியாபார வருமதிகள், வியாபார சென்மதிகள் அல்லது பிணையளிக்கப்பட்ட கடன்கள் போன்ற போதுமான பிணையினைக் கொண்ட நீண்டகால வருமதிகள் எதனையும் உள்ளடக்காது. சாதாரண பங்குகளிலான முதலீட்டுக்கு மேலாக உரிமையாண்மை முறையின் கீழ் ஏற்பிசைவு செய்யப்படும் நட்டங்கள் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியிலான உரிமத்தின் அக்கறையின் ஏனைய கூறுகளுக்கு அவற்றின் மூப்பு அடிப்படையில் எதிர் ஒழுங்கில் (அதாவது, திரவ முன்னுரிமை அடிப்படையில்) பிரயோகிக்கப்படும்.

39 உரிமத்தின் அக்கறை பூச்சியத்திற்குக் குறைக்கப்பட்ட பின்னர் மேலதிக நட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுவதுடன், உரிமம் ஏற்பட்டுள்ள சட்ட ரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடுகளின் அளவு அல்லது இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி சார்பாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவின் அளவிற்கு மாத்திரம் பரிப்பொன்று ஏற்பிசைவு செய்யப்படும். இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி தொடர்ந்து வரும் காலங்களில் இலாபத்தினைக் காட்டுமேயாகில், உரிமம் அந்த இலாபங்கள் மீதான அதன் பங்குகளை அதன் இலாபப் பங்கானது ஏற்பிசைவு செய்யப்படாத நட்டங்களின் பங்குகளுக்கு சமமான பின்னர் மாத்திரமே, ஏற்பிசைவு செய்ய ஆரம்பிக்கும்

**சேத இழப்பு**

40 பந்தி 38க்கு அமைவாக இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் நட்டங்களை ஏற்பிசைவு செய்தல் உள்ளடங்கலாக உரிமையாண்மை முறையின் பிரயோகத்தின் பின்னர், இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் மீதான நிகர முதலீடு தொடர்பாக மேலதிக சேதஇழப்பு எதனையும் ஏற்பிசைவு செய்தல் அவசியமானதா எனத் தீர்மானிப்பதற்கு முதலீட்டாளர் LKAS 39 *நிதிச் சாதனங்கள்: ஏற்பிசைவு மற்றும் அளவீடு* இன் தேவைப்பாடுகளைப் பிரயோகிப்பார்.

41 நிகர முதலீட்டின் கூறாக அமையாத, இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் மீதான உரிமத்தின் அக்கறை தொடர்பாக மேலதிகமான சேத இழப்பு நட்டம் மற்றும் அந்த சேத இழப்பு நட்டத்தொகை எதுவும் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளதா என்பதனை தீர்மானிப்பதற்கும் முதலீட்டாளர் LKAS 39 இன் தேவைப்பாடுகளைப் பிரயோகிப்பார்.

42 இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றிலுள்ள முதலீடொன்றின் முன்கொணரற் தொகையின் பகுதியாக அமையும் நன்மதிப்பு வேறாக ஏற்பிசைவு செய்யப்படாத காரணத்தினால், அது LKAS 36 சொத்துக்களின் சேத இழப்பு நியமத்திலுள்ள நன்மதிப்பின் சேத இழப்பு சோதனைகளைப் பிரயோகிப்பதன் மூலம் சேத இழப்புக்காக வேறாக சோதனை செய்யமாட்டாது. அதற்குப் பதிலாக, LKAS 39 இலுள்ள தேவைப்பாடுகளின் பிரயோகம் முதலீடு சேத இழப்பிற்கு உள்ளாகியிருக்கக்கூடுமென காட்டுமேயாகில், முதலீட்டின் முற்றுமுழுதான முன்கொணரற் தொகையானது தனியான சொத்தொன்றாக LKAS 36 க்கு அமைவாக மீளப் பெறத்தகு தொகையினை (உபயோகப் பெறுமதி மற்றும் சீர்மதிப்பிலிருந்து விற்பனைக்கான கிரயத்தினை கழிக்க வரும் தொகை இரண்டிலும் எது பெரியதோ அந்தத் தொகை) அதன் முன்கொணரற் தொகையுடன் ஒப்பிடுவதன் மூலம், சேத இழப்பிற்காக சோதனை செய்யப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏற்பிசைவு செய்யப்படும் சேத இழப்பு, இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி மீதான முதலீட்டின் முன்கொணரற் தொகையின் பகுதியாக அமையும் நன்மதிப்பு

உள்ளடங்கலாக, எந்தவொரு சொத்திற்கும் ஒதுக்கப்பட மாட்டாது. அதன்படி, அந்த சேத இழப்பின் எந்தவொரு எதிர்ப்பதிவும், முதலீட்டின் மீளப்பெறத்தகு தொகை பின்னர் அதிகரிக்கும் அளவிற்கு LKAS 36 க்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்படும். முதலீட்டின் உபயோகப் பெறுமதியினைத் தீர்மானித்தலில் உரிமமொன்று கீழ்வருவனவற்றினை மதிப்பிடும்:

*(அ)* இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் தொழிற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்வுகள் மற்றும் இறுதியில் முதலீட்டின் விற்பனையிலிருந்தாக பெறுவனவு உள்ளடங்கலாக, இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியினால் பிறப்பாக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்வுகளின் இற்றைப் பெறுமதியில் அதன் பங்கு அல்லது

*(ஆ)* முதலீட்டிலிருந்து பெறப்படவுள்ள பங்கிலாபங்களில் இருந்தும் இறுதியில் விற்பனையில் இருந்தும் ஏற்படுமென எதிர்பார்க்கப்படும் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்வுகளின் இற்றைப் பெறுமதிபொருத்தமான எடுகோள்களைப் பயன்படுத்தி, இரு முறைகளுமே ஒரே பெறுபேற்றையே தரும்.

43 அந்த இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி உரிமத்தின் ஏனைய சொததுக்களிலிருந்து பெருமளவில் சுயாதீனமான வகையில் தொடர்ச்சியாக காசு உட்பாய்ச்சல்களை உழைக்காதவிடத்து அல்லாதவிடத்து இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றிலான முதலீட்டின் மீளப்பெறத்தக்க தொகையானது ஒவ்வொரு இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தெரில் முயற்சிக்கும் மதிப்பிடப்பட வேண்டும்.

## வேறான நிதிக்கூற்றுக்கள்

44 இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றில் கொண்டுள்ள முதலீடொன்று முதலீட்டாளரின் வேறான நிதிக் கூற்றுக்களில் LKAS 27 இன் பந்தி 10 க்கு அமைவாக கணக்கீடு செய்யப்படும்.

## நிலைமாற்றத்தின் விளைவுத் திகதி

45 உரிமமொன்று 2014 சனவரி 1 இன் பின்னர் அல்லது வருட காலப்பகுதியின் தொடக்கத்திற்காக இந்நியமத்தினை பிரயோகிக்கலாம். முன்னதான பிரயோகமானது அனுமதிக்கப்படுகின்றது. உரிமம் முன்னதான காலப்பகுதிக்காக இந்நியமத்தினை பிரயோகிக்குமாயின், அது அந்த விடயத்தினை வெளிப்படுத்துவதுடன் அதே நேரம் SLFRS 10, SLFRS 11 *இணைந்த ஏற்பாடுகள்,* SLFRS 12 *ஏனைய உரிமங்களிலான அக்கறைகளின் வெளிக்காட்டல்* மற்றும் LKAS 27 ஆகிய நியமங்களையும் பிரயோகித்தல் வேண்டும்.

### SLFRS 9 நியமத்துடனான குறிப்புரை

46 உரிமம் ஒன்று இந் நியமத்தினைப் பிரயோகித்து ஆனால், SLFRS 9 நியமத்தினை இன்னமும் பிரயோகிக்காவிடின், SLFRS 9 நியமம் தொடர்பான குறிப்புரைகள் யாவும் LKAS 39 நியமத்துடனான குறிப்புரைகள் என வாசிக்கப்படல் வேண்டும்.

## LKAS 28 நியமத்தின் மீளப்பெறல்

47 இந்த நியமம் LKAS 28 *இணைக் கம்பனிகள் மீதான முதலீடு* நியமத்தை விஞ்சி நிற்கிறது.

## LKAS 29 மட்டற்ற (உக்கிரமான) பணவீக்கப் பொருளாதாரங்களில் நிதி அறிக்கையிடல்

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 41 | இந் நியமமானது <u>2012 சனவரி 1ம்</u> திகதி அன்று அல்லது அதற்குப் பின்னரான காலப்பகுதியின் வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்காக செல்லுபடியானதாகின்றது. |

| | |
|---|---|
| | முன்னதான பிரயோகம் ஊக்குவிக்கப்படுகிறது. உரிமமானது 2012 சனவரி 1ம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற காலப்பகுதிக்கான நியமத்தினை பிரயோகிக்குமாயின், அது அவ் விடயத்தினை வெளிப்படுத்தல் வேண்டும். |

**LKAS 31 கூட்டு தொழில்முயற்சிகளின் நாட்டம்**

இந் நியமம் முழுமையாக நீக்கப்பட்டுள்ளது

**LKAS 32 நிதிச்சாதனங்கள் (நிதிக்கருவிகள்): முன்னிலைப்படுத்தல்**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 4(a) | **உப கம்பனிகள், இணைக் கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகள் ஆகியவற்றில் இருக்கும் அக்கறைகள்: <u>SLFRS 10</u> *ஒன்றித்த <u>நிதிக்கூற்றுக்கள், LKAS 27</u> தனியான நிதிக்கூற்றுக்கள்*, <u>அல்லது</u> LKAS 28 *கூட்டு நிறுவனங்கள் மற்றும் <u>இணைக் கம்பனிகளிலான</u> முதலீடுகள்* முதலான நியமங்களுக்கு அமைவாக கணக்கிடப்படும். எனினும் சில சந்தர்ப்பங்களில் <u>SLFRS 10</u>, LKAS 27 அல்லது LKAS 28 என்பன ஒரு உரிமம் தனக்குள்ள உப கம்பனிகள், கூட்டு கம்பனிகள் மற்றும் கூட்டு தொழில் முயற்சிகள் என்பவற்றில் உள்ள அக்கறைகளை LKAS 39 இன் படி கணக்கிட தேவைப்படுத்துகின்றது அல்லது அனுமதிக்கின்றது. இந்த சந்தர்ப்பங்களில் கம்பனிகள் இந்த நியமத்தின் தேவைப்பாடுகளைப் பிரயோகிக்கும். மேலும் இந்நியமம் உப கம்பனிகள், இணை கம்பனிகள் கூட்டு தொழில் முயற்சிகளிலுள்ள அக்கறைகள் தொடர்புடைய உய்த்தறி சாதனங்களுக்கும் பிரயோகிக்கப்பட வேண்டும்.** |
| பந்தி 11 | ***சீர்மதிப்பு*** **என்பது <u>மதிப்பீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்களிடையேயான ஒழுங்குமுறையான ஊடுசெயல் மூலம்</u> சொத்தை <u>விற்பதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படக்கூடிய</u> அல்லது பரிப்பு <u>ஒன்றைத் தீர்ப்பதற்காக செலுத்தப்படக்கூடிய விலை</u> ஆகும். <u>SLFRS 13 *சீர்மதிப்பு அளவீடு* நியமத்தினைப் பார்வையிடுக</u>)** |
| பந்தி 23 | பந்திகள் 16 அ மற்றும் 16 ஆ அல்லது பந்திகள் 16 இ மற்றும் 16 ஈ யில் விபரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்ந்தபோது, உரிமத்தின் சொந்த பங்குகளை காசு அல்லது நிதிச் சொத்து மூலம் கொள்வனவு செய்வதற்கான கடப்பாட்டினை கொண்டிருக்கும் ஒப்பந்தம் மீட்பு பெறுமதியின் நிகழ் மதிப்பிற்கு நிதிப்பரிப்பினை ஏற்படுத்தும் (உதாரணமாக முன்னொப்பந்த மீள்கொள்வனவு விலையின், தெரிவுரிமை நடைமுறைப்படுத்தல் விலையின் அல்லது வேறு மீட்பு பெறுமதியின் நிகழ் மதிப்பிற்கு). ஒப்பந்தம் உரிமையாண்மை சாதனமாக இருந்தாலும் இதே நிலைதான் காணப்படும். ஒரு உதாரணம் நிறுவனம் தனது உரிமையாண்மை சாதனங்களை காசிற்கு கொள்வனவு செய்வதற்கான முன்னாற்று ஒப்பந்தத்தின் கீழான கடப்பாடு. LKAS 39 இன் அடிப்படையில் ஆரம்பத்தில் நிதிப் பரிப்பு ஏற்பிசைவு செய்யப்படும் போது அதன் சீர்மதிப்பு (மீட்பு பெருமதியின் நிகழ் பெருமதி) உரிமையாண்மையாக மீள் வகையாக்கம் செய்யப்படும். ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படாது காலாவதியானால் பரிப்பின் தொகை உரிமையாண்மைச் சாதனங்களாக மீளாக்கம் செய்யப்படும். ஒரு உரிமத்தின் சொந்த உரிமையாண்மை கருவிகளை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்த அடிப்படையிலான கடப்பாடு நிதிப் பரிப்பு ஒன்றினை ஏற்படுத்துகின்றது. இக்கடப்பாடு மீட்பு உரிமையை நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமை எதிர்த்தரப்பிற்கு இருந்தாலும் கூட. (உதாரணமாக, நிலையான விலைக்கு ஒரு உரிமத்தின் உரிமையாண்மை சாதனங்களை அந்நிறுவனத்துக்கு விற்பனை செய்ய பதில்தரப்பிற்கு உரிமையை ஏற்படுத்தும் எழுதப்பட்ட வழங்கு தெரிவுரிமை) |
| பந்தி 35 | **ஒரு நிதிச்சாதனத்துடன் அல்லது அதன் ஒரு ஆக்ககூற்றுடன் தொடர்புடைய வட்டி, பங்கிலாபம், நட்டங்கள் மற்றும் ஆதாயங்கள், சாதனம் ஒரு நிதிப்பரிப்பாக இருக்குமிடத்து, அவை இலாபமாகவோ அல்லது நட்டமாகவோ, இலாபநட்ட கணக்கில் ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும். சாதனங்களின் உடமையாளர்களுக்கு பகிரப்படும் பகிர்வுகள், நேரடியாக <u>உரிமையாண்மையில் ஏற்பிசைவு செய்யப்படலாம்</u>.** |

| | |
|---|---|
| | **உரிமையாண்மை ஊடுசெயல் தொடர்பான ஊடுசெயற் செலவுகள், வருமான வரி தேறிய பெறுமதியாக, உரிமையைாண்மையது கழிக்கப்படலாம்.** |
| பந்தி 35A | உரிமையாண்மை சாதனங்களை வைத்திருப்பவர்களுக்கான பகிர்வுகள் மற்றும் உரிமையாண்மை ஊடுசெயல் ஒன்றின் ஊடுசெயல் கிரயங்கள் தொர்பான வருமான வரிகள் LKAS 12 *வருமான வரிகள்* நியமத்துக்கு அமைவாகக் கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| பந்தி 37 | ஒரு நிறுவனம் தன் உரிமையாண்மைச் சாதனங்களை வழங்கும்போது அல்லது கொள்வனவு செய்யும்போது வழமையாக பல்வேறுபட்ட செலவுகளை மேற்கொள்ளும். அச்செலவுகளானது பதிவு மற்றும் ஏனைய சட்ட கட்டணங்கள், சட்ட கணக்கியல் மற்றும் ஏனைய அறிவுரையாளர்களுக்கான கட்டணங்கள், அச்சிடல் மற்றும் தபால் செலவுகளை உள்ளடக்கியிருக்கும். உரிமையாண்மை ஊடுசெயல்களுடன் நேரடியாக தொடர்புபட்ட அதிகரிப்பு (தொடர்புபட்ட வருமான வரி பயன்கள் எவையுமிருப்பின் அவற்றினை கழிக்கவரும் பெறுமதி) மாத்திரம் உரிமையாண்மையிலிருந்து கழித்துக்காட்டப்பட வேண்டியதோடு மற்றவை புறக்கணிக்கப்படல் வேண்டும். கைவிடப்பட்ட மூலதன கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய செலவுகள் செலவினமாக கருதப்பட வேண்டும். |
| பந்தி 39 | குறித்த காலப்பகுதியின் போது உரிமையாண்மையிலிருந்து கழிக்கப்பட்ட தொகையில் கணக்கிற் கொள்ளப்படும் ஊடுசெயற் செலவின் பெறுமதியானது LKAS 1 இன்படி தனியாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| பந்தி 40 | ஒரு செலவினமாக வகைப்படுத்தப்பட்ட பங்கிலாபமானது இலாபநட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்றில் அல்லது வேறான வருமானக் கூற்றில் (முன்னிலைப்படுத்தப்பட்டிருப்பின்) ஏனைய கடன்படு வட்டிச் செலவினத்தோடு அல்லது தனி ஒரு உருப்படியாக காட்டப்படலாம். இந்த நியமத்தில் தேவைப்பாட்டிற்கு மேலதிகமாக வட்டி, பங்கிலாபம் என்பனவற்றை வெளிப்படுத்துவதில் LKAS 1 மற்றும் SLFRS 7 என்பனவற்றின் தேவைப்பாடுகளும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். இவ்வேளைகளில் வட்டி, பங்கிலாபம் என்பனவற்றில் வரி கழிப்பனவு போன்ற விடயங்களில் காணப்படும் வேறுபாடுகள் காரணமாக வட்டி மற்றும் பங்கிலாபம் வெவ்வேறாக இலாபநட்ட மற்றும் ஏனைய -முற்றடக்க வருமானக் கூற்றில் அல்லது வேறான வருமானக் கூற்றில் (முன்னிலைப்படுத்தப்பட்டிருப்பின்) வெளிப்படுத்துவது விரும்பத்தக்கது. வரி விளைவுகள் LKAS 12 இன் படி வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| | **நிதிச் சொத்து மற்றும் நிதிப் பொறுப்பு ஒன்றினை எதிர்தீர்ப்பு செய்தல் (பந்திகள் AG38A-AG38F மற்றும் AG39 இனைப் பார்வையிடவும்)** |
| பந்தி 43 | இந்நியமம் நிதிச் சொத்துக்களையும் நிதிப்பரிப்புக்களையும் தேறிய அடிப்படையில் முன்னிலைப்படுத்தும் தேவையை ஏற்படுத்துகிறது. அவ்வாறு செய்யப்படும் போது நிறுவனத்தின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிதிச்சாதனங்களை தீர்ப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் எதிர்கால காசுப்பாய்ச்சல்களை பிரதிபலிக்கிறது. ஒரு நிறுவனத்திற்கு ஒரு தேறிய பெறுமதியை வழங்குவதற்கு அல்லது பெறுவதற்கு உரிமை மற்றும் உத்தேசம் இருக்கும் போது, அதன் விளைவாக அந்நிறுவனத்திற்கு ஒரு நிதிச் சொத்தை வாங்குவதற்கோ அல்லது ஒரு பரிப்பினை தீர்ப்பதற்கோ முடியும். மற்றும் ஏனைய சந்தர்ப்பங்களில் நிதிச் சொத்துக்களாகவோ அல்லது நிதிப்பரிப்புக்களாகவோ அவைகளின் குணாம்சங்களுக்கேற்ப வகைப்படுத்தி சீராகவும் தனித்தனியாகவும் வளங்களாகவோ அல்லது கடப்பாடுகளாகவோ ஒரு நிறுவனம் காட்ட வேண்டும். உரிமம் SLFRS 7 நியமத்தின் 13A பந்தியின் நோக்கெல்லைக்கு உட்பட்ட ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிச் சாதனங்களுக்கு SLFRS 7 நியமத்தின் 13B-13E பந்திகளினால் தேவைப்படுத்தப்படும் தகவல்களை வெளிக்காட்டல் வேண்டும். |
| பந்தி 96 | இந் நியமம் 1 தை 2012 அல்லது அதற்குப் பிந்திய காலப்பகுதியைக் கொண்ட நிதிக் கூற்றுக்களுக்கு செயற்படுத்தக் கூடியதாகவுள்ளது. முன்னைய பிரயோகங்கள் அனுமதிக்கப்படுகிறது. உரிமம் LKAS 32 நியமத்தினையும் பிரயோகிக்காதவிடத்து இந் நியமத்தினை 2012 சனவரி 01 க்கு முற்பட்ட காலங்களுக்குப் பிரயோகித்தல் ஆகாது. 01 தை 2012 முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தும். |

| | |
|---|---|
| பந்தி 97I | SLFRS 10 மற்றும் SLFRS 11 *இணைந்த ஏற்பாடுகள்* நியமங்கள் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 4(a) மற்றும் AG29. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 10, SLFRS 11 நியமங்களைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 97J | SLFRS 13 *சீர்பெறுமதி மதிப்பீடு* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. பந்தி 11 இல் சீர்பெறுமதிக்கான சொற்பொருள் விலக்கம் திருத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட பந்திகள் 23 மற்றும் AG31. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 97K | *ஏனைய முற்றடக்க வருமானங்களில் உருப்படிகளை முன்னிலைப்படுத்தல் (*LKAS 1 நியமத்துக்கான திருத்தங்கள்) 2014 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 40. உரிமம் இத் திருத்தங்களை அது 2014 இல் திருத்தப்பட்டவாறு LKAS 1 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 97L | *நிதிச் சொத்துகள் மற்றும் நிதிப்பரிப்புக்களை குறுக்குத் தீர்த்தல்* (LKAS 32 இன் திருத்தங்கள்) 2014 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. நீக்கப்பட்ட பந்திகள் AG38. சேர்க்கப்பட்ட பந்திகள் AG38A-AG38F. உரிமம் இத் திருத்தங்களை அது 2014 சனவரி 1 இல் அல்லது அதற்குப் பின்னரான ஆண்டுக் காலங்களுக்கு இத் திருத்தங்களை முற்கால விளைவுள்ள வகையில் பிரயோகிக்கும். முன்னையகாலப் பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. போது பிரயோகித்தல் வேண்டும். உரிமம் இந் நியமத்தினை முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்துவதுடன் 2014 இல் வழங்கப்பட்ட *வெளிக்காட்டல்கள்- நிதிச் சொத்துகள் மற்றும் நிதிப்பரிப்புக்களை* (SLFRS 7 இன் திருத்தங்கள்) இனால் தேவைப்படுத்தப்படும் வெளிக்காட்டல்களையும் மேற்கொள்ள வேண்டும். |
| பந்தி 97M | *வெளிக்காட்டல்கள்- நிதிச் சொத்துகள் மற்றும் நிதிப்பரிப்புக்களை குறுக்குத் தீர்த்தல்* (SLFRS 7 இன் திருத்தங்கள்) 2014 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. திருத்தப்பட்ட பந்திகள் 43 உரிமத்தினை SLFRS 7 நியமத்தின் பந்தி 13A இன் நோக்கெல்லைக்கு உட்பட்ட ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களுக்கு பந்திகள் 13B-13E க்கு அமைவாக வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு தேவைப்படுத்துகின்றன. சேர்க்கப்பட்ட பந்திகள் AG38A-AG38F. உரிமம் இத் திருத்தங்களை அது 2014 சனவரி 1 இல் அல்லது அதற்குப் பின்னரான ஆண்டு மற்றும் இடைக் காலங்களுக்கு இத் திருத்தங்களை முற்கால விளைவுள்ள வகையில் பிரயோகிக்கும். உரிமம் இந் நியமத்தினை முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் இத் திருத்தத்தினால் தேவைப்படுத்தப்படும் வெளிக்காட்டல்களை முற்கால விளைவுள்ள வகையில் மேற்கொள்ள வேண்டும். |
| பந்தி 97N | IASB இன் வருடாந்த மேம்படுத்தல்களின் பின்பற்றுகை (2009-2011 சுழற்சிக்காலம் மே 2012 இல் வழங்கப்பட்டது), திருத்தப்பட்ட பந்தி 35, 37 மற்றும் 39. சேர்க்கப்பட்ட பந்தி 35A. உரிமம் LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் மற்றும் தவறுகள்* நியமத்துக்கு இணக்கமான வகையில் இந்த மாற்றங்களினை முற்கால விளைவுள்ள வகையில் பிரயோகித்தல் வேண்டும். முன்னைய பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. உரிமம் இந் நியமத்தினை முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தல் வேண்டும். |
| பந்தி AG16 | இரண்டாம் நிலை நிதிச் சாதனங்கள், அவைகள் தங்கியிருக்கும் முதல்நிலை சாதனங்களில் இயல்பாக இருக்கும் நிதி இடர்களை, கருவிக்குரிய இருதரப்பினரிடையே பரிமாற்றம் செய்வதற்கான உரிமைகளையும் கடப்பாடுகளையும் உண்டுபண்ணும். ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் இரண்டாம் நிலை நிதிச் சாதனங்கள், ஒரு நபருக்கு நிதிச் சொத்தை அல்லது நிதிப்பரிப்பினை மற்றைய நபருடன் அனுகூலமான நிலைகளில் பரிமாற்றம் செய்வதற்கான உரிமையை அல்லது அனுகூலமற்ற நிலைகளில் பரிமாற்றம் செய்வதற்கான கடப்பாட்டை வழங்குகின்றன. ஆனாலும் ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் முதன்மை நிதிச் சாதனங்களின் பரிமாற்றத்தை ஏற்படுத்தாது. அத்துடன் ஒப்பந்தத்தின் முடிவிலும் இப்பரிமாற்றம் நடைபெற வேண்டுமென்ற அவசியமில்லை. சில சாதனங்கள் பரிமாற்றத்திற்கான உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் இரண்டினையும் உள்ளடக்கும். |

| | |
|---|---|
| | காரணம் ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் பரிமாற்றத்திற்கான நிபந்தனைகள் தீர்மானிக்கப்படுகின்றன. நிதிச் சந்தையின் விலை மாற்றங்களுக்கு அமைய இந்த நிபந்தனைகள் அனுகூலமாகவோ பிரதிகூலமாகவோ அமையலாம். |
| பந்தி AG29 | ஒன்றித்த நிதிக் கூற்றுக்களில் உரிமமொன்று கட்டுப்பாடற்றோர் அக்கறையினை முன்னிலைப்படுத்துவது – அதாவது உரிமத்தில் பிற தரப்பினரின் அக்கறைகள் மற்றும் உப கம்பனிகளின் வருமானம்- LKAS 1 மற்றும் SLFRS 10 க்கு அமைவாக மேற்கொள்ளும். அதாவது ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் நிதிச்சாதனங்களை (அல்லது ஆகக்கூறுகளை) வகைப்படுத்தும் போது, ஒரு உரிமம் குழுமத்தின் அங்கத்தவர்கள் மற்றும் சாதனங்களை வைத்திருப்பவர்களுக்கிடையில் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிமுறைகள், நிபந்தனைகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு குழுமத்திற்கும் காசு அல்லது வேறு நிதிச் சொத்துக்களை வழங்குவதற்கு அல்லது நிதிப் பரிப்பினை தீர்ப்பதற்கான கடப்பாட்டினை கொண்டுள்ளதா என்பதை தீர்மானிக்கும். ஒரு குழுமத்தின் கீழ் கம்பனி ஒன்று ஒரு நிதிச்சாதனத்தினை வழங்கியிருந்து, குழுமம் நிதிச்சாதனங்களை வைத்திருப்பவர்களுடன் மேலதிக நிபந்தனைகளுக்கு உடன்பட்டிருந்தால் (உதாரணம் - ஒரு உத்தரவாதம்) குழுமம் பகிர்வு செய்வதையோ மீட்பதையோ கைவிடலுக்கான விருப்புரிமை கிடையாது. குழுமத்தின் கீழ் கம்பனி குழுமத்தின் மேலதிக நிபந்தனைகளை கருத்திற்கொள்ளாது அதன் வேறான நிதிக்கூற்றுக்களில் தகுந்த முறையில் வகைப்படுத்திருந்தாலும் கூட, குழுமம் அதன் நிதிக்கூற்றுக்களில் ஒருமையாக செய்துள்ள ஒப்பந்தங்களும் பரிவர்த்தனைகளும் சரியாக பிரதிபலிக்க வேண்டி குழுமத்துக்கும் கருவிகளை வைத்திருப்பவர்களுக்கும் இடையேயான ஒப்பந்தங்களை கருத்திற்கொள்ளும் தீர்ப்பனவு செய்வதற்கான கடப்பாடு அல்லது தீர்வு ஏற்பாடு இருக்குமளவுக்கு கருவி (அல்லது அதன் பகுதி) ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் ஒரு நிதிப் பரிப்பாகவே வகைப்படுத்தப்படும். |
| AG 31(b) | உரிமையாண்மைச் சாதனம் என்பது பரிப்பினை வழங்குபவரின் உரிமையாண்மையாக மாற்றக்கூடிய ஒரு உட்பொதிக்கப்பட்ட தெரிவாகும். இத் தெரிவானது பணமல்லாது இருப்பினும் ஆரம்ப ஏற்பிசைவில் ஒரு பெறுமதியைக் கொண்டிருக்கும். |
| பந்தி AG38 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG38A | ஏதிர்த் தீர்த்தலுக்கான உரிமை தற்போது கிடைக்கக்கூடியதாக இருக்கலாம் அல்லது அது எதிர்கால நிகழ்வுகளின் உறுமுரிமையாக இருக்கலாம் (உதாரணமாக, தவறுகை, எதிர்த்தரப்பினரின் முறிவு நிலை போன்ற சில எதிர்கால நிகழ்வுகளின் நிகழ்வுகளில் மட்டுமே செயற்படுத்தக் கூடியதாக அல்லது பயன்மிக்கதாக இருக்கலாம்). எதிர்கால நிகழ்வில் உறுமுரிமையல்லாதிருப்பினும் கூட ஏதிர்த் தீர்த்தலுக்கான உரிமை, சாதாரண வணிக சூழ்நிலையில், அல்லது இயல்புநிலை நிகழ்வில், அல்லது ஏதேனும் எதிர்த்தரப்பின் முறிவு நிலை ஏற்பட்டால் செயற்படுத்தக் கூடியதாக இருக்கலாம். |
| பந்தி AG38B | 42 (அ) பந்தியின் அடிப்படைகளை திருப்தி செய்ய, ஒரு உரிமம் சட்டபூர்வமாக அமல்படுத்தக்கூடிய ஏதிர்த் தீர்த்தல் உரிமையைக் கொண்டிருக்க வேண்டும். இது பின்வருவனவற்றுக்கான குறுக்குத் தீர்த்தலை உள்ளடக்கும்:<br><br>(அ) எதிர்கால நிகழ்வு தொடர்பான உறுமுரிமையாக அல்லாத,<br><br>(ஆ) பின்வரும் சூழ்நிலைகளில் சட்டபூர்வமாக அமல்படுத்தப்படக்கூடிய<br><br>i. வியாபாரத்தின் சாதாரண நடைமுறையில்<br>ii. ஒரு தவறுகை நிகழ்வின் போது<br>iii. உரிமம் மற்றும் அனைத்து எதிர்த்தரப்பினதும் நிறுவனத்தின் முறிவடை நிலையில் அல்லது வகையற்றுப் போதலில் |
| பந்தி AG38C | நடைமுறையில் உள்ள எந்தவொரு நிபந்தனையையும் உள்ளடக்கிய, தவறுகை அல்லது முறிவடை நிலை ஏற்பட்டாலும் அது தொடர்ந்து காணப்படுமா என்னும் விடயம் உள்ளடங்கலான ஒரு ஏதிர்த் தீர்த்தலின் உரிமையின் இயல்பு மற்றும் அளவு சட்ட அதிகார எல்லைகளிடையே மாறுபடும். இதன் விளைவாக, சாதாரண வணிக நிலைமைகளுக்குப் புறமாக, குறுக்குத் தீர்த்தல் உரிமை இயல்பாகவே கிடைக்கும் |

| | |
|---|---|
| | என்று கருத முடியாது. உதாரணமாக, முறிவடைநிலை தொடர்பான பிராந்திய சட்டங்கள் சில சூழ்நிலைகளில் எதிர்த் தீர்த்லுக்கான உரிமையை தடை செய்யலாம் அல்லது கட்டுப்படுத்தலாம். |
| பந்தி AG38D | உரிமத்தின் அல்லது எதிர்த்தரப்பின் சாதாரண வியாபார சூழ்நிலைகளில், தவறுகை நிழ்வொன்றின் போது அல்லது முறிவடைநிலையின் போது குறுக்குத் தீர்த்தல் உரிமை அமுலாக்கக்கூடியதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கட்சிகளுக்கு இடையிலான உறவுமுறை தொடர்பாகப் பிரயோகிக்கத்தக்க சட்டங்கள் (உதாரணமாக, ஒப்பந்த விதிமுறைகள், ஒப்பந்தத்தை கட்டுப்படுத்தும் சட்டங்கள் அல்லது ஒப்பந்தத் தரப்பினருக்குப் பொருந்தக்கூடிய முறிவடை நிலை தொடர்பான சட்டங்கள்), கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். இயல்பான போக்கில், இயல்புநிலை நிகழ்விலும், தவறுகை அல்லது முறிவடைநிலை ஏற்பட்டால், உரிமம் மற்றும் அனைவரையும் (AG38B (b) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி). |
| | **ஒரு உரிமம் ஒரு நிகர அடிப்படையில் தீர்ப்பதற்கு அல்லது ஒரே நேரத்தில் சொத்தை அடையாளம் கண்டு பொறுப்பைத் தீர்த்துக் கொள்வதற்கான அடிப்படை (பந்தி 42 (b))** |
| பந்தி AG38E | 42 (b) பந்தியில் உள்ள பிரமாணத்தினை திருப்தி செய்ய ஒரு உரிமம் நிகர அடிப்படையில் தீர்ப்பதற்கு அல்லது ஒரே நேரத்தில் சொத்தை அடையாளம் கண்டு பொறுப்பைத் தீர்த்துக் கொள்ள விரும்ப வேண்டும். உரிமம் நிகர அடிப்படையில் தீர்க்க உரிமை கொண்டிருப்பினும், அது இன்னும் அது சொத்துக்களையும் பரிப்புக்களையும் தனித்தனியாக தீர்க்கலாம். |
| பந்தி AG38F | நிகர தீர்ப்பனவுக்கு சமமான விளைவைத் தரக்கூடிய வகையில் உரிமம் தொகைகளைத் தீர்ப்பனவு செய்யக்கூடியதாக இருப்பின் அது பந்தி 42 இன் நிகர தீர்ப்பனவு அடிப்படையினைத் திருப்தி செய்யும். மொத்தத் தீர்ப்பனவு முறை முக்கியமல்லாத கடன் மற்றும் திரவத்தன்மை இடரை நீக்கக்கூடிய இயல்புகளைக் கொண்டிருக்குப்பதுடன் அது வருமதிகள் மற்றும் சென்மதிகளை ஒரே தீர்ப்பனவில் அல்லது ஒரு சுற்றோட்டத்தில் தீர்க்கக்கூடியதாகவும் இருப்பின் மாத்திரமே இது நிகழும். |
| | உதாரணமாக, பின்வரும் பண்புகள் அனைத்தையும் கொண்டிருக்கும் ஒரு மொத்தத் தீர்த்தல் முறை பந்தி 42 (b) இல் உள்ள நிகர தீர்வு அடிப்படை பிரமாணத்தை திருப்தி செய்யும்:<br><br>(அ) எதிர்தீர்த்தலுக்கான தகைமையுள்ள நிதிச் சொத்துகள் மற்றும் நிதிப்பரிப்புக்கள் செயன்முறைப்படுத்தலுக்காக ஒரே நேரத்தில் சமர்ப்பிக்கப்படுதல்,<br><br>(ஆ) நிதிச் சொத்துகள் மற்றும் நிதிப்பரிப்புக்கள் செயன்முறைப்படுத்தலுக்காக ஒரே நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டதும், தீர்ப்பனவை நிறைவேற்றுவதற்கு கட்சிகள் கடமைப்படுதல்,<br><br>(இ) செயன்முறைப்படுத்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்டதும் சொத்துகள் மற்றும் கடப்பாடுகளிலிருந்து எழும் காசுப்பாய்வுகள் மாற்றமடைவதற்கான எந்தவிதமான சாத்தியக்கூறுகளும் இல்லை (செயன்முறைப்படுத்தல் தோல்வியடைதல் தவிர- கீழே (ஈ) ஐ பார்க்கவும்)<br><br>(ஈ) பிணைகளுடன் இணைந்திருக்கும் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பத்திரங்கள் பரிமாற்ற அல்லது இதே போன்ற அமைப்பில் (உதாரணமாக, விநியோகம் மற்றும் கட்டணம் செலுத்துதல்) தீர்ப்பனவு செய்யப்படும், அதனால் பத்திரங்கள் பரிமாற்றம் தோல்வியடைந்தால், தொடர்புடைய பெறுதல் அல்லது ஊதியம் பாதுகாப்புப் பத்திரங்கள் இணைந்தவையும் தோல்வியடையும் (மற்றும் இதற்கு நேர்மாறாக)<br><br>(உ) (ஈ) இல் வரையறுக்கப்பட்ட, தோல்வியுறும் எந்தவொரு பரிமாற்றமும் செயலாக்கப்படுவதற்கு மீண்டும் செயல்படுத்தப்படும்.<br><br>(எ) தீர்ப்பனவு ஒரே தீர்ப்பனவு நிறுவனம் (உதாரணமாக, ஒரு தீர்ப்பனவு வங்கி, ஒரு மத்திய வங்கி அல்லது மத்திய பிணைய வைப்பகம்) மூலம் வழங்கப்படுதல் மற்றும் |

| | |
|---|---|
| | (ஏ) ஒவ்வொரு தீர்வைத் தேதியின் போது தீர்ப்பனவுத் தரப்பினர் பணம் செலுத்துவதற்கு போதுமான மேலதிகப்பற்றுத் தொகைகளை வழங்குவதற்கு அதேநாளில் தீர்ப்பனவுக் கடன் வசதி உள்ளதுடன், அது குறிப்பிட்ட காலப்பகுதியில், பெறுமதியளிக்கப்படும் அது கோரப்படுமாயின். |
| பந்தி AG39 | இந்த நியமம் மற்றொரு நிதிச் சாதனத்தின் இயல்புகளுக்கு இணையாகக் கையகப்படுத்தப்பட்ட வேறுபட்ட நிதிச் சாதனங்களின் குழுக்களாகவுள்ள செயற்கை சாதனங்கள் என்று அழைக்கப்படும் சிறப்பு அணுகுமுறையை வழங்கவில்லை, உதாரணமாக, மிதக்கும் வித வருமதிகளைப் பெற்றுக் கொண்டு நிலையான கொடுப்பனவுகளைத் தீர்க்கும், வட்டி விகித நிகழ்மாற்றத்துடன் இணைந்த மிதக்கும் விகித நீண்ட காலக்கடன் நிலையான விகித நீண்ட கால கடன்களை ஒத்திருக்கும். தனித்தனியான நிதியியல் சாதனங்கள் ஒவ்வொன்றும் ஒன்றித்து ஒரு செயற்கை சாதனமாக ஒப்பந்த உரிமை அல்லது கடமை மற்றும் அதன் சொந்த நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு பிரதிபலிக்கிறது. ஒவ்வொரு நிதிச் சாதனங்களும் அவை எதிர்கொள்ளும் இடர்களால் ஏனைய சாதனங்களிலிருந்து வேறுபடுகின்றன. அதன்படி, பந்தி 42 இன் பிரமாணகளை திருப்தி செய்யாதவிடத்து ஒரு செயற்கை சாதனமாக உள்ள ஒரு நிதிச்சாதனம் அவை உரிமத்தின் நிதி நிலைமைக் கூற்றில் நிகர அடிப்படையில் மற்றொரு பொறுப்புடன் எதிர்த் தீர்த்தல் செய்யப்பட முடியாது. |

**LKAS 33 பங்கொன்றிக்கான வருவாய்**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 4 | **ஒரு உரிமம் SLFRS 10 *ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள்* மற்றும் LKAS 27 *பிறிதான நிதிக் கூற்றுக்கள்* ஆகிய நியமங்களின் பிரகாரம் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் பிறிதான நிதிக் கூற்றுக்கள் ஆகிய இரண்டினையும் முன்னிலைப்படுத்தும் போது தகவல்களை ஒன்றித்த தகவல்கள் அடிப்படையில் மட்டும் முன்னிலைப்படுத்தல் வேண்டும் என இந் நியமம் தேவைப்படுத்துகின்றது. பிறிதான நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் பங்கொன்றின் உழைப்பை முன்னிலைப்படுத்த ஒரு உரிமம் முனையுமானால் அவ்வாறான பங்கொன்றின் உழைப்பின் தகவல்களை முற்றடக்க வருமானக் கூற்றில் மட்டும் முன்னிலைப்படுத்தல் வேண்டும். அவ்வாறான பங்கொன்றின் உழைப்புத் தகவல்களை ஒரு உரிமம் ஒன்றித்த நிதிக் கூற்றுக்களில் முன்னிலைப்படுத்தாது.** |
| பந்தி 4A | **LKAS 1 *நிதிக் கூற்றுக்களை முன்னிலைப்படுத்தல்* இன் பந்தி 10 A இல் விவரிக்கப்பட்டவாறு வேறான நிதிக் கூற்று ஒன்றில் இலாபம் அல்லது நட்ட உருப்படிகளை ஒரு உரிமம் முன்னிலைப்படுத்துமாயின் அது பங்கொன்றிற்கான உழைப்புக்களை அந்த வேறான கூற்றில் மட்டுமே முன்னிலைப்படுத்தும்.** |
| பந்தி 8 | LKAS 32 *நிதிச் சாதனங்கள்* நியமத்தில் வரையறை செய்யப்பட்ட சொற்பதங்கள் வேறு வகையில் குறிப்பிடப்பட்டாலான்றி இந் நியமத்தில் முன்னிலைப்படுத்தல் ஆனது LKAS 32 இன் பந்தி 11 இல் குறித்துரைக்கப்பட்ட கருத்துக்களுடன் உபயோகப்படுத்தப் படுகின்றது. LKAS 32 ஆனது நிதிச் சாதனம், நிதிச் சொத்து, நிதிப் பரிப்பு மற்றும் உரிமையாண்மை சாதனம் மற்றும் சீர்மதிப்பினை பொருள் வரையறை செய்வதுடன் இப் பொருள் வரையறைகளை பிரயோகிக்கின்ற வழிகாட்டியினையும் வழங்குகிறது. SLFRS 13 *சீர்மதிப்பு அளவீடு* நியமம் சீர்மதிப்பினை வரைவிலக்கணம் செய்வதுடன் இந்த விரைவிலக்கணத்தைப் பிரயோகிப்பதற்கான தேவைப்பாடுகளையும் வெளிப்படுத்துகிறது. |
| பந்தி 40 | ஒரு கீழ்நிலை உரிமம், கூட்டுத்தொழில் முயற்சி அல்லது இணைக் கம்பனி, முதன்நிலை உரிமம் அல்லது இணைந்த கட்டுப்பாட்டைக் கொண்ட முதலீட்டாளர்கள், முக்கிய செல்வாக்கைக் கொண்ட தரப்பினர் அல்லாத பகுதியினருக்கு கீழ்நிலை உரிமம் அல்லது கூட்டு முயற்சி அல்லது இணை உரிமம் ஆகியனவற்றின் சாதாரண பங்குகளாகவோ அல்லது முதன்நிலை உரிமம் இணைந்த கட்டுப்பாட்டைக் கொண்ட முதலீட்டாளர்கள் ஆகியோரின் சாதாரண பங்குகளாகவோ (அறிக்கையிடும் உரிமம்) |

| | |
|---|---|
| | மாற்றக் கூடிய சாதாரண பங்குகளின் வாய்ப்புக்களை வழங்க முடியும். கீழ்நிலை உரிமம், கூட்டு முயற்சி அல்லது இணைக் கம்பனி, ஆகியனவற்றின் சாதாரண பங்குகளின் வாய்ப்புக்கள் அறிக்கையிடும் உரிமத்தின் பங்கொன்றின் அடிப்படை உழைப்பின் மீது ஐதாக்கும் தன்மையைக் கொண்டிருக்குமாயின் அவை பங்கொன்றின் ஐதாக்கப்பட்ட உழைப்பின் கணிப்பில் உள்ளடக்கப்படும். |
| பந்தி 47A | SLFRS 2 *பங்கு அடிப்படையிலான கொடுப்பனவுகள்* நியமத்தினை பிரயோகிக்கின்ற பங்குத் தேர்வு விருப்பு மற்றும் ஏனைய பங்கை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு ஏற்பாடு ஆகியவற்றுக்கு பந்தி 46 இல் குறிப்பிட்ட வழங்கல் விலை மற்றும் பந்தி 47 இல் குறிப்பிட்ட செயற்படுத்து விலை பங்குத் தேர்வு விருப்பு அல்லது வேறு பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஒழுங்கு ஆகியவற்றின் கீழ் எதிர்காலத்தில் உரிமத்திற்கு வழங்கப்படும் ஏதாவது பொருட்கள் அல்லது சேவைகளை <u>சீர்மதிப்பில் (SLFRS 2 நியமத்துக்கு இணைவான வகையில் அளவிடப்பட்ட)</u> உள்ளடக்கும். |
| பந்தி 54 | உறுமுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ள சாதாரண பங்குகளின் எண்ணிக்கை சாதாரண பங்குகளின் எதிர்கால சந்தை விலையில் தங்கியிருக்கலாம். அப்படியானால் விளைபயன் ஐதானதானால் பங்கொன்றின் உழைப்புக் கணிப்பு, அறிக்கையிடும் கால முடிவின் சந்தை விலை உறுமுரிமைக் கால முடிவின் சந்தை விலையாயின் வழங்கவுள்ள சாதாரண பங்குகளின் அடிப்படையில் அமையும். அறிக்கையிடும் கால முடிவுக்கு அப்பால் விரிவடைந்த காலப்பகுதியின் சந்தை விலையின் அடிப்படையாக நிபந்தனை அமையுமானால் கடந்தகாலத்திற்கான சராசரி உபயோகிக்கப்படும். எதிர்காலத்தில் சந்தை விலை மாற்றத்திற்கு உள்ளாகுமாதலால் பங்குகொன்றின் அடிப்படை உழைப்பைக் கணிப்பதில் அப்படியான உறுமுரிமை அடிப்படையில் வழங்கப்படும் சாதாரண பங்குகள் உறுமுரிமை கால முடிவுவரையில் அவசியமான நிபந்தனைகள் எல்லாம் திருப்திப்படுத்தப்படாதபடியால் உள்ளடக்கப்படமாட்டா. |
| பந்தி 67A | உரிமம் LKAS 1 இன் பந்தி <u>10 A</u> இல் விவரிக்கப்பட்டவாறு இலாபம் அல்லது நட்டத்தின் <u>உருப்படிகளை</u> வேறான ஒரு வருமானக் கூற்றில் முன்னிலைப்படுத்துமாகில் அது பந்திகள் 66 இலும் 67 இலும் கோரப்பட்டவாறு அந்த வேறான கூற்றில் அடிப்படை மற்றும் ஐதான பங்கொன்றுக்கான உழைப்புக்களை முன்னிலைப்படுத்தும். |
| பந்தி 68A | உரிமம் LKAS 1 இன் பந்தி <u>10 A</u> இல் விவரிக்கப்பட்டவாறு இலாபம் அல்லது நட்டத்தின் <u>உருப்படிகளை</u> வேறான ஒரு வருமானக் கூற்றில் முன்னிலைப்படுத்துமாகில் அது வேறான கூற்றில் அல்லது குறிப்புக்களில் பந்தி 68இல் கோரப்பட்டவாறு முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட செயற்பாட்டின் பங்கொன்றிற்கான அடிப்படை மற்றும் ஐதாக்க உழைப்பின் தொகையினை முன்னிலைப்படுத்தும். |
| பந்தி 73A | **இந்நியமம் தேவைப்படுத்தியவை தவிர்ந்த அடிப்படை மற்றும் ஐதான பங்கொன்றுக்கான உழைப்புக்கு மேலாக அறிக்கையிடப்பட்ட <u>இலாப நட்டக் கூற்றின்</u> உருப்படிகளை உபயோகித்து பங்கொன்றுக்கான தொகையை வெளிப்படுத்தும் உரிமத்திற்கும் பந்தி 73 பிரயோகிக்கப்படும்.** |
| பந்தி 74 | இந் நியமம் 1 சனவரி <u>2012</u> அல்லது அதற்குப் பிந்திய காலப்பகுதியைக் கொண்ட நிதிக் கூற்றுக்களுக்கு செயற்படுத்தக் கூடியதாகவுள்ளது. முன்னைய பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. உரிமம் இந் நியமத்தினை 01 சனவரி 2012 முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தல் வேண்டும். |
| பந்தி 74B | <u>SLFRS 10 மற்றும் SLFRS 11 *இணைந்த ஏற்பாடுகள்* நியமங்கள் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தும் செய்யப்பட்ட பந்திகள் 4, 40 மற்றும் A11. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 10, SLFRS 11 நியமங்களைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும்.</u> |
| பந்தி 74C | <u>SLFRS 13 *சீர்பெறுமதி மதிப்பீடு* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 8, 47A மற்றும் A2. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும்.</u> |

| | |
|---|---|
| பந்தி 74D | *ஏனைய முற்றடக்க வருமானங்களில் உருப்படிகளை முன்னிலைப்படுத்தல்* (LKAS 1 நியமத்துக்கான திருத்தங்கள்) 2014 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 4A, 67A, 68A மற்றும் 73A. உரிமம் இத் திருத்தங்களை அது 2014 இல் திருத்தப்பட்டவாறு LKAS 1 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி A2 | சாதாரண பங்கு வாய்ப்புக்களின் செயற்பாட்டு அல்லது மாற்றும் நேரத்தில் வழங்கப்படும் சாதாரண பங்குகள் வழக்கமாக உபகாரப் பங்கு வழங்கலுக்கு வழிவகுக்காது. உரிமத்திலான வளங்கள் சமவிகித மாற்றம் ஏற்படுவதன் விளைவாக சாதாரண பங்குகளின் வாய்ப்பு வளம், பெரும்பாலும் சீர்மதிப்பில் வழங்கப்படுவது தான் இதற்குக் காரணம். எனினும், உரிமைப்பங்கு வழங்கலில் செயற்படுத்தும் விலை பங்குகளின் சீர்மதிப்பிலும் பார்க்க பெரும்பாலும் குறைவானது. ஆகவே பந்தி 27 (ஆ) இல் குறிப்பிட்டபடி அப்படியான உரிமை வழங்கல் ஒரு உபகார ஆக்கக்கூற்றையும் உள்ளடக்கும். உரிமை வழங்கலை தற்போதுள்ள எல்லா பங்குதாரர்களுக்கும் வழங்க முனைவு செய்யப்படுமேயாகில் எல்லா காலத்திற்குமான பங்கொன்றின் அடிப்படை மற்றும் ஐதாக்கல் உழைப்பின் கணிப்பில் உபயோகப்படுத்தும் உரிமை வழங்கலுக்கு முன்னரான சாதாரண பங்குகளின் எண்ணிக்கை, வழங்கலுக்கு முன்னதாக எஞ்சியிருக்கும் சாதாரண பங்குகளின் எண்ணிக்கையைப் பின்வரும் பின்னத்தினால் பெருக்குவதன் மூலம் பெறப்படும்.<br><br>உரிமை செயற்படுத்தலுக்கு உடன் முன்னரான பங்கின் சீர்மதிப்பு<br>―――――――――――――<br>பங்கொன்றின் கோட்பாட்டுதலான உரிமை வழங்கலுக்கு முந்திய சீர்மதிப்பு<br><br>பங்கொன்றின் கோட்பாட்டு உரிமை வழங்கலுக்கு முன்னரான சீர்மதிப்பு உரிமையைச் செயற்படுத்துவதற்கு உடன் முன்னரான சந்தைப் பெறுமதிகளின் கூட்டுத் தொகையை உரிமையைச் செயற்படுத்தலில் பெற்ற தொகையுடன் கூட்டி உரிமையைச் செயற்படுத்திய பின் நிலுவையாகவுள்ள பங்குகளின் எண்ணிக்கையால் பிரித்து கணிக்கப்படும். பங்குகளுக்குப் பிறம்பாக உரிமைகளை பிரசித்தமாக செயற்படுத்தற் திகதிக்கு முன் விற்பனை செய்யும் பொழுது இக்கணிப்பிற்கு வேண்டிய சீர்மதிப்பு பங்குகள் உரிமைகளுடன் சேர்த்து விற்பனை செய்த கடைசி நாள் முடிவில் அளவீடு நிலைநிறுத்தப்படும். |
| A11 | கீழ்நிலை உரிமம், கூட்டுத்தொழில் முயற்சி அல்லது இணைக் கம்பனி ஆகியவற்றினது அல்லது முதனிலை நிறுவனம் முயற்சியாளர் அல்லது முதலிடப்படும் வியாபாரம் மீதான இணைந்த கட்டுப்பாடு அல்லது முக்கிய செல்வாக்குடனான முதலீட்டாளரின் (அறிக்கையிடும் உரிமம்) சாதாரண பங்குகளாக மாற்றக் கூடிய கீழ்நிலை, கூட்டு முயற்சி அல்லது இணை நிறுவனத்தின் சாதாரண வாய்ப்பு பங்குகள் பங்கொன்றின் ஐதாக்கிய உழைப்பைக் கணிக்கும் பொழுது பின்வருமாறு உட்படுத்தப்படும். |

## LKAS 34 இடைக்கால நிதி அறிக்கையிடல்

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 5 | பின்வரும் பகுதிகளை உள்ளடக்கியதாக ஒரு பூரணப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு LKAS - 1 வரைவிலக்கணம் கூறுகின்றது.<br><br>(அ) காலப்பகுதி முடிவிலுள்ள நிதி நிலைமைக் கூற்று<br>(ஆ) அந்தக் காலத்துக்கான இலாப, நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று<br>(இ) அந்தக்காலத்துக்கான உரிமை மாற்றங்களின் கூற்று<br>(ஈ) அந்தக்காலத்துக்கான காசுப்பாய்வுக் கூற்று |

| | |
|---|---|
| | (உ) வேறு விளக்கத் தகவலையோ அல்லது கணக்கீட்டுக்கொள்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியமானவற்றின் சுருக்கத்தின் குறிப்புகள்<br><br>(ஊ) LKAS 1 நியமத்தின் பந்தி 38 மற்றும் 38 A இல் குறிப்பிடப்பட்ட முன்னைய காலம் தொடர்பான ஒப்பீட்டுத் தகவல்கள்<br>(எ) LKAS 1 நியமத்தின் பந்தி 40A-40D க்கு அமைவாக, உரிமம் ஒன்று கணக்கீட்டுக் கொள்கைக்கு முன்னயை காலத்துக்கு விண்ணப்பிக்கும்போது அல்லது பொருள்களின் பின்னோக்கிய கால மீளக் குறிப்பிடுதலைச் செய்யும் போதுள்ள ஒப்பீட்டளவில் குறித்த காலத்துக்கு அல்லது நேரத்துடன் தொடக்கத்திலேயுள்ள நிதி நிலை பற்றிய ஒரு கூற்று அல்லது அது அதனுடைய பொருட்களின் நிதிக் கூற்றுக்களின் மீள வகைப்படுத்தலின் ஒரு கூற்றாகவும் இருக்கலாம்.<br><br>உரிமம் இந்த நிமத்தில் உள்ள கூற்றுக்கள் தவிர்ந்த ஏனைய கூற்றுக்களுக்கு தலைப்புக்களைப் பயன்படுத்தலாம். உதாரணமாக, உரிமம் "இலாப நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று" என்பதற்குப் பதிலாக, "முற்றடக்க வருமானக் கூற்று" என்னும் தலைப்பைப் பயன்படுத்தலாம். |
| பந்தி 7 | தெரிவு செய்யப்பட்ட விளக்கக் குறிப்புக்களிலும், சுருங்கிய நிதிக் கூற்றுக்களிலும் பார்க்க ஒரு உரிமமானது அதனுடைய இடைக்கால நிதி அறிக்கையின் பூரணப்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு இந்த நியமமானது தடை செய்யவோ அல்லது அதனை அதைரியப்படுத்தவோ உத்தேசிக்கவில்லை (LKAS 1). அதுவுமன்றி தெரிவுசெய்யப்பட்ட விளக்கக் குறிப்புகள், குறைந்தபட்ச பொருள்களின் நிலைகளிலும் பார்க்க இந்த நியமத்தின் அடுக்குகளில் மேலாக இருப்பின்<br><br>அதோடு சுருங்கிய இடைக்கால நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குவில் ஒரு உரிமத்துக்கு இந்த நியமமானது தடைகளை ஏற்படுத்தவோ அல்லது அதைரியப்படுத்துவதற்கோ உத்தேசிக்கவில்லை. அத்தோடு ஏற்பிசைவு, அளவீட்டின் வழிகாட்டல் ஆகியன ஒரு இடைக்கால பூரணப்படுத்தப்பட்ட இந்த நியமத்தில் பிரயோகிக்கலாம். இவ்வாறான கூற்றுக்கள் எல்லாம் இந்த நியமத்துக்கு தேவைப்படுகின்ற எல்லா வெளிப்படுத்தல்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் (குறிப்பாக தெரிவுசெய்யப்பட்ட குறிப்பு வெளிக்காட்டல் 16A பந்தியிலும் (SLFRS) தேவைப்படுவது போன்று)) |
| பந்தி 8 | **ஒரு இடைக்கால நிதி அறிக்கையில் குறைந்த பட்ச அளவிலுள்ள பின்வரும் பகுதிகளைக் கொண்டிருக்கும்.**<br><br>**(அ) நிதி நிலைப்பாட்டின் ஒரு சுருங்கிய கூற்று**<br><br>**(ஆ) சுருங்கிய இலாப நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று அல்லது கூற்றுக்கள்.**<br><br>**(இ) உரிமையாண்மை மாற்றங்களின் ஒரு சுருக்கிய கூற்று**<br><br>**(ஈ) காசுப்பாய்ச்சல்களின் ஒரு சுருங்கிய கூற்று.**<br><br>**(உ) தெரிவு செய்யப்பட்ட விளக்கக் குறிப்புகள்** |
| பந்தி 8A | **LKAS 1, 10 A பந்தியில் விபரித்தது போன்று உரிமம் ஒன்று இலாபநட்ட உருப்படிகளை வேறுபட்ட கூற்றில் முன்னிலைப்படுத்துமேயாகில், அது அந்தக் கூற்றிலிருந்து சுருங்கிய தகவலைச் சமர்ப்பிக்கிறது.** |
| பந்தி 11A | **உரிமம் ஒன்று ஒரு தனிப்பட்ட வருவாயின் கூற்றிலுள்ள இலாபம் அல்லது நட்டத்தின் பகுதிகளைச் சமர்ப்பிக்கும்போது அது LKAS 1, 10 A பந்தியில் விபரித்தவாறு இருக்க வேண்டும். அத்துடன் அது அந்தத் தனிப்பட்ட கூற்றின் அடிப்படையானதும் பங்கொன்றிற்கான ஐதாக்கபட்ட வருவாயைக் கொண்டதாக சமர்ப்பிக்க வேண்டும்** |
| பந்தி 16 (g) (iv) | **குறித்த அறிக்கையிடத்தக்க பகுதி ஒன்றின் கடைசியாக நடைபெற்ற வருடாந்த நிதி அறிக்கையிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட தொகையின் மொத்த சொத்து மற்றும்** |

| | |
|---|---|
| | **பரிப்புக்களின் மதிப்பீடு, வழக்கமாக அவை பிரதான தீர்மானம் மேற்கொள்பவருக்கு வழங்கப்படுவதாக இருப்பதுடன், குறித்த அறிக்கையிடத்தக்க பகுதிக்காக கடந்த நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்ட தொகைகளில் ஒரு பொருண்மையான மாற்றம் காணப்படின், அவ்வாறான மதிப்பீடுகள்** |
| பந்தி 16 (j) | **SLFRS 13 *சீர்மதிப்பு அளவீடுகள்* நியமத்தின் 91-93(h), 94-96, 98 மற்றும் 99 பந்திகள் மற்றும் SLFRS 7 *நிதிச் சாதனங்கள்: வெளிக்காட்டல்கள்* நியமத்தின் 25, 26 மற்றும் 28-30 பந்திகளினால் சீர்மதிப்பு பெறுமதிகள் தேவைப்படுத்தப்படும் நிதிச் சாதனங்கள்** |
| பந்தி 16 (k) | **SLFRS 10 *ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்* நியமத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு முதலீட்டு உரிமங்களாக மாற்றமடையும் அல்லது முடிவுறுத்தப்படும் உரிமங்களுக்கு, SLFRS 12 *ஏனைய உரிமங்களிலான அக்கறைகளின் வெளிக்காட்டல்* நியமத்தின் பந்தி 9B** |
| பந்தி 20 (b) | **நடப்பு இடைக்காலத்தின் இலாப நட்ட மற்றும் முற்றடக்க வருமானக் கூற்றுக்கள். அத்துடன் இது ஒன்று திரட்டியதாகவும் நடப்புக்காலமும் இன்றுவரை உள்ளதாகவும் இருக்க வேண்டும். அதுவுமன்றி உடனடியாக கடந்து செல்லுகின்ற நிதி ஆண்டின் ஒப்பிடக்கூடிய இடைக்கால (நடப்புக்காலம் - இன்றுவரையும்) இலாப நட்ட மற்றும் முற்றடக்க வருமானக் கூற்றுக்கள். LKAS 1 இனால் அனுமதிக்கப்பட்ட, ஒரு இடைக்கால அறிக்கையானது பரந்த அளவிலான வருவாயின் ஒவ்வொரு காலத்துக்குமுரியதைச் சமர்ப்பிக்கலாம். ஒரேயொரு பரந்த அளவிலான வருமானத்தின் கூற்றாகவோ அல்லது இலாபம் அல்லது நட்டத்தின் பகுதிகளைக் காட்சிப்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும் (தனிப்பட்ட வருவாயின் கூற்று) அத்துடன் ஒரு இரண்டாவது கூற்று இலாபத்துடனோ அல்லது நட்டத்துடனோ உள்ள தொடக்கம் அத்துடன் வேறு இலாப நட்ட மற்றும் முற்றடக்க வருமானக் கூற்று(க்கள்)** |
| பந்தி 46 | இந் நியமம் 1 சனவரி 2012 அல்லது அதற்குப் பிந்திய காலப்பகுதியைக் கொண்ட நிதிக் கூற்றுக்களுக்கு செயற்படுத்தக் கூடியதாகவுள்ளது. முன்னைய பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. |
| பந்தி 50 | SLFRS 13 *சீர்பெறுமதி மதிப்பீடு* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. சேர்க்கப்பட்ட பந்தி 16A(j). உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 51 | *ஏனைய முற்றடக்க வருமானங்களில் உருப்படிகளை முன்னிலைப்படுத்தல்* (LKAS 1 நியமத்துக்கான திருத்தங்கள்) 2014 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 8, 8A, 11A மற்றும்20. உரிமம் இத் திருத்தங்களை அது 2014 இல் திருத்தப்பட்டவாறு LKAS 1 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 52 | IASB இன் *வருடாந்த மேம்படுத்தல்களின்* பின்பற்றுகை (*2009-2011 சுழற்சிக்காலம்* மே 2012 இல் வழங்கப்பட்டது), LKAS 1 *நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்* நியமத்தின் திருத்தத்தின் விளைவாக திருத்தப்பட்ட பந்தி 5. உரிமம் LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* நியமத்துக்கு இணக்கமான வகையில் இந்த மாற்றங்களினை முற்கால விளைவுள்ள வகையில் பிரயோகித்தல் வேண்டும். முன்னைய பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. உரிமம் இந் நியமத்தினை முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தல் வேண்டும். |
| பந்தி 53 | IASB இன் *வருடாந்த மேம்படுத்தல்களின்* பின்பற்றுகை (*2009-2011 சுழற்சிக்காலம்* மே 2012 இல் வழங்கப்பட்டது), திருத்தப்பட்ட பந்தி 16A. உரிமம் LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் மற்றும் தவறுகள்* நியமத்துக்கு இணக்கமான வகையில் இந்த மாற்றங்களினை முற்கால விளைவுள்ள வகையில் பிரயோகித்தல் வேண்டும். முன்னைய பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. உரிமம் இந் நியமத்தினை 01 சனவரி 2014க்கு முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தல் வேண்டும். |

## LKAS 36 சொத்துக்களின் சேத இழப்பு

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| | கீழுள்ள மாற்றங்களுக்கு மேலதிகமாக, இந்த நியமத்தில் "விற்பதற்கு" என்னும் பதமானது "அகற்றலுக்கு" எனப் பதிலீடு செய்யப்பட்டுள்ளது. |
| பந்தி 4 | இந்த நியமம் கீழ்வருமாறு வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களுக்கு பிரயோகிக்கப்படுகின்றது:<br><br>(அ) SLFRS 10 *ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்* நியமத்தில் சொற்பொருள் விளக்கம் செய்யப்பட்டவாறு அமையும் உப கம்பனிகள்<br><br>(ஆ) LKAS-28 *இணைக் கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகளிலான முதலீடுகள்* நியமத்தில் சொற்பொருள் விளக்கம் செய்யப்பட்டவாறு அமையும் இணைக் கம்பனிகள் அத்துடன்<br><br>(இ) SLFRS 11 *இணைந்த ஏற்பாடுகள்* நியமத்தில் சொற்பொருள் விளக்கம் செய்யப்பட்டவாறு அமையும் கூட்டுத்தொழில் முயற்சிகள்.<br><br>ஏனைய நிதிச் சொத்துக்களின் சேதங்கள் தொடர்பாக LKAS 39 ஐ பார்க்கவும். |
| பந்தி 5 | இந்த நியமம் LKAS 39 இன் நோக்கெல்லைக்கு உட்பட்ட நிதிச் சொத்துக்களுக்கோ LKAS 40 இன் நோக்கெல்லைக்கு உட்பட்ட சீர்மதிப்பில் அளவிடப்படும் முதலீட்டு ஆதனத்திற்கோ அல்லது LKAS 41 இன் நோக்கெல்லைக்கு உட்பட்ட வகையில் சீர்மதிப்பு பெறுமதியிலிருநது விற்பனைக்கான கிரயத்தை கழிக்கும் பெறுமானத்தில் அளவிடல் விவசாயச் செயற்பாடுகள் தொடர்பான உயிரியற் சொத்துக்களுக்கோ பிரயோகிக்கப்பட மாட்டாது. எனினும் LKAS 16 *ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்* மற்றும் LKAS 38 *அருவச் சொத்துக்கள்* நியமங்களின் படி மீள்மதிப்பீட்டு மாதிரி போன்றவற்றுக்கு அமைவாக மீள்மதிப்புச் செய்யப்பட்ட தொகைகளில் (அதாவது, மீள்மதிப்பீட்டுத் திகதியிலான சீர்மதிப்பில் இருந்து ஏதேனும் பிற்கால திரண்ட தேய்மான மற்றும் சேத இழப்பு நட்டங்கள் கழிக்கப்பட்ட) முன்கொண்டு செல்லப்படும் சொத்துக்களுக்கு இந்த நியமம் பிரயோகிக்கப்படும். சொத்தின் சீர்மதிப்பு மற்றும் அதன் சீர்மதிப்பில் அகற்றல் கிரயங்கள் கழிக்கபபட்ட பெறுமதி ஆகியவற்றுக்கு இடையிலான ஒரேயொரு வேறுபாடானது நேரடியாக சொத்தின் அகற்றலுக்கு சுமத்தப்படக்கூடிய அதிகரித்த கிரயங்கள் ஆகும்.<br><br>(அ) அகற்றல் தொடர்புபட்ட கிரயங்கள் தவிர்க்கப்படக்கூடிய அளவு சிறியதாக இருப்பின் மீள்மதிப்புச் செய்யப்பட்ட சொத்தின் மீளப்பெறத்தகு தொகையானது கட்டாயமாக அதன் மீள்மதிக்கப்பட்ட தொகைக்கு (அதாவது சீர்மதிப்பு) கிட்டிய தொகையாகவோ அல்லது அதற்கு அதிகமானதாகவோ இருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில், மீள்மதிப்புத் தேவைப்பாடுகள் பிரயோகிக்கப்பட்ட பின்னர், மீள்மதிப்பிடப்பட்ட சொத்து சேத இழப்பிற்கு உள்ளாவது சாத்தியமற்றதாக இருப்பதுடன் மீளப்பெறத்தகு தொகை மதிப்பிடப்பட வேண்டியதில்லை.<br><br>(ஆ) நீக்கப்பட்டுள்ளது<br><br>(இ) அகற்றல் தொடர்பான கிரயங்கள் தவிர்க்கப்படக்கூடிய அளவிற்கு சிறியதாக இல்லாது இருப்பின், சீர்மதிப்பிலிருந்து அந்த மீள் மதிப்பிடப்பட்ட சொத்தின் அகற்றலுக்கான கிரயங்களைக் கழிக்கவரும் தொகையானது கட்டாயமாக அதன் சீர்மதிப்பிலும் பார்க்க குறைவானதாக இருக்கும். எனவே, மீள்மதிப்புச் செய்யப்பட்ட சொத்தொன்றின் பயன்பாட்டுப்பெறுமதி அதன் மீள்மதிக்கப்பட்ட பெறுமதியிலும் பார்க்க (அதாவது அதன் சீர்மதிப்பு) குறைவானதாக இருப்பின் மீள்மதிப்பிடப்பட்ட சொத்து சேத இழப்பிற்கு உள்ளாகும். இந்தச் சந்தர்ப்பத்தில், மீள்மதிப்புத் தேவைப்பாடுகள் பிரயோகிக்கப்பட்ட பின்னர், சொத்து சேத இழப்பிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கக் கூடுமா என அறிந்துகொள்வதற்கு உரிமமொன்று இந்த நியமத்தினை பிரயோகிக்கும். |

| | |
|---|---|
| பந்தி 6 | **இந்த நியமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ள கீழ்வரும் பதங்களின் கருத்துக்கள் கீழே குறிப்பிட்டவாறு அமையும்.**<br><br>***முன்கொண்டு செல்கைத் தொகை என்பது***, திரள்தேய்மானம் (காலத் தேய்மானம்) மற்றும் திரள் சேத இழப்பு நட்டங்கள் ஏதுமிருப்பின் அவற்றினை கழித்தபின்னர் சொத்தொன்று ஏற்பிசைவு செய்யப்படும் தொகையாகும்<br><br>***காசு பிறப்பாக்கும் அலகு எனப்படுவது*** ஏனைய சொத்துக்களிலிருந்தோ அல்லது சொத்துக்களின் குழுமங்களிலிருந்தோ பிறப்பிக்கப்படும் காசுப் பாய்வுகளில் அதிக அளவில் தங்கியிராத காசுப்பாய்வுகளை பிறப்பாக்கும் அதிசிறிய இனங்காணற்தகு சொத்துக்கள் அல்லது சொத்துக்களின் குழுமமொன்றாகும்.<br><br>***கூட்டிணைவுச் சொத்துக்கள்*** எனப்படுபவை கவனத்திற் கொள்ளப்பட்டுள்ள காசுபிறப்பாக்க அலகு மற்றும் ஏனைய காசுபிறப்பாக்க அலகுகள் இரண்டினாலும் எதிர்காலக் காசுப்பாய்வுகளுக்குப் பங்களிப்புச் செய்யும் நன்மதிப்புத் தவிர்ந்த ஏனைய சொத்துக்களாகும்.<br><br>***அகற்றல் கிரயங்கள்*** எனப்படுவது நிதிக்கிரயங்கள் மற்றும் வருமான வரிச் செலவுகள் நீங்கலாக, சொத்தொன்றினதோ அல்லது காசு பிறப்பாக்க அலகொன்றினதோ அகற்றலுடன் தொடர்புபட்ட அதிகரிப்புக் கிரயங்களாகும்.<br><br>**தேய்மானத்தகு தொகை** ஆனது நிதிக்கூற்றுக்களில் சொத்தொன்றின் கிரயமாகக் காட்டப்படும் தொகையிலிருந்தோ அல்லது கிரயத்திற்காக பிரதியீடு செய்யப்படும் ஏனைய தொகையிலிருந்தோ அதன் ஈற்று பெறுமதியினை கழிக்க வரும் தொகையாகும்.<br><br>***பெறுமானத் தேய்வு (பெறுமதி அழிவு)*** என்பது சொத்து ஒன்றின் தேய்விடத்தக்க தொகையினை அதன் பயன்தரு ஆயட்காலம் முழுதும் ஒரு முறையான அடிப்படையில்<br><br>***சீர்மதிப்பு*** என்பது <u>சந்தைப் பங்குபற்றுனர்களிடையே மதிப்பீட்டுத் திகதியில்</u> முறைசார் ஊடுசெயல் ஒன்றின்போது சொத்தொன்று <u>விற்கப்படுவதனால் பெறப்படக்கூடிய</u> அல்லது பரிப்பொன்று <u>மாற்றப்படுவதற்காக செலுத்தக்கூடிய விலையாகும். (SLFRS 13 *சீர்மதிப்புப் பெறுமதி* நியமத்தினைப் பார்க்கவும்).</u><br><br>***சேத இழப்பு*** *நட்டம்* எனப்படுவது சொத்தொன்றினதோ அல்லது காசுபிறப்பாக்க அலகொன்றினதோ முன்கொண்டு செல்கைத் தொகை, அவற்றின் மீளப் பெறப்படு தொகையினைவிட எவ்வளவால் அதிகமானதாக உள்ளதோ அந்தத் தொகையாகும்.<br><br>***மீளப்பெறத்தக்க தொகை*** சொத்தொன்றின் அல்லது காசுபிறப்பாக்க அலகொன்றின் மீளப்பெறற்தகு தொகை எனப்படுவது, அதன் சீர்மதிப்பிலிருந்து <u>அகற்றல்</u> தொடர்பான கிரயங்களை கழிக்கவரும் தொகை மற்றும் அதன் உபயோகத்திலுள்ள பெறுமதி இரண்டிலும் எது அதிகமானதோ அந்தத் தொகையாகும்.<br><br>**பயன்தரு ஆயுட்காலமானது பின்வருவனவற்றில் ஒன்றாகும்:**<br><br>(அ) உரிமத்தினால் சொத்தொன்றினை உபயோகிக்க எதிர்பார்க்கப்படும் கால அளவு அல்லது<br><br>(ஆ) உரிமத்தினால் சொத்தொன்றிலிருந்து பெறப்படுமென எதிர்பார்க்கப்படும் உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை அல்லது அதை ஒத்த அலகுகள்<br><br>*பயன்பாட்டில் உள்ள பெறுமதி* என்பது சொத்தொன்றிலிருந்தோ அல்லது காசுபிறப்பாக்க அலகொன்றிலிருந்தோ எதிர்பார்க்கப்படும் எதிர்காலக் காசுப்பாய்வுகளின் இற்றைப் பெறுமதியாகும். |
| பந்தி 12 | சொத்தொன்று சேத இழப்பிற்கு உள்ளாவதற்குச் சாத்தியமான அறிகுறிகள் ஏதேனும் இருக்கக் கூடுமா என மதிப்பிடுதலில், உரிமமொன்று கீழ்வரும் அறிகுறிகளை குறைந்தபட்ச அளவாகக் கருத்திற்கொள்ளும்:<br><br>**தகவல்களின் வெளிவாரி மூலங்கள்**<br><br>(அ) சொத்தொன்றொன்றின் சந்தைப் பெறுமதியானது காலவோட்டம் அல்லது வழமையான உபயோகம் காரணமாக வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படும் |

தொகையிலும் பார்க்க கணிசமான அளவில் குறித்த காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்திருப்பதற்கான அவதானிக்கக்கூடிய அறிகுறிகள் காணப்படல்,

(ஆ) உரிமம் தொழிற்படும் அல்லது சொத்துத் தொடர்பான சந்தையின் தொழில்நுட்ப சந்தை, பொருளியல் அல்லது சட்டச் சூழ்நிலை தொடர்பாக உரிமத்தின் மீது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும் கணிசமான மாற்றங்கள் இந்தக் காலத்தின் போது ஏற்பட்டிருப்பின் அல்லது கிட்டிய எதிர்காலத்தில் ஏற்பட இருத்தல்,

(இ) இந்தக் காலத்தின் போது சந்தை வட்டி விகிதங்கள் அல்லது முதலீடுகள் மீதான ஏனைய சந்தை விளைவு விகிதங்கள் அதிகரித்து இருப்பதுடன் அவ்வாறான அதிகரிப்புக்கள் பாவனையிலுள்ள சொத்தின் மதிப்பினை கணித்தறிதலில் உபயோகிக்கப்படும் கழிவு விகிதங்களின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியதாக இருந்து அந்தச் சொத்தின் மீளப்பெறத்தகு தொகையினை பொருண்மையான அளவில் குறைவடைதல்,

(ஈ) உரிமத்தின் நிகரச்சொத்துக்களின் முன்கொண்டு செல்கைத்தொகை அதன் சந்தை மூலதனப்படுத்தலிலும் பார்க்க அதிகமானதாக இருப்பின்,

**தகவல்களின் உள்வாரி மூலங்கள்**

(உ) சொத்தொன்று வழக்கிழந்து போனமைக்கான அல்லது பௌதிகரீதியில் பாதிப்பு அடைந்தமைக்கான சான்றுகள் கிடைக்கப்பெற்றிருப்பின்,

(ஊ) எந்த அளவிற்கு அல்லது எந்த வகையில் சொத்து உபயோகிக்கப்படும் அல்லது உபயோகிக்கப்படுமென எதிர்பார்க்கப்படும் அளவுக்கு அமைய உரிமத்தின் மீது பாதக விளைவுகளை தரப்பட்ட காலத்தின் போது ஏற்படுத்தியுள்ள அல்லது கிட்டிய எதிர்காலத்தில் ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படும் கணிசமான மாற்றங்கள். இவ்வாறான மாற்றங்கள் சொத்து பயன்படுத்தப்பட முடியாத போதல், சொத்தினால் இயக்கப்படும் தொழிற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அல்லது மீள்கட்டமைப்பதற்கான திட்டங்கள், முன்னர் எதிர்பார்க்கப்பட்ட தினத்திற்கு முன்னதாகவே சொத்தொன்றினை விற்பதற்கான திட்டங்கள் மற்றும் சொத்தொன்றின் பயன்தரு ஆயுட்காலம் மீள்மதிப்பிடல் திடமற்றதல்லாமல் திடமானதாக இருக்கும்.

(எ) சொத்தொன்றின் பொருளியற் சாதனைகள் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க பாதகமானதாக மாறி வருகின்றமைக்கான அல்லது எதிர்காலத்தில் மாறி வரக்கூடியமைக்கான அறிகுறிகள் இருப்பதற்கான சான்றுகள் உள்வாரி அறிக்கையிடலிலிருந்து கிடைக்கப்பெற்றிருத்தல்

ஒரு உப கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி அல்லது இணைக் கம்பனி உரிமம் என்பனவிலிருந்து பெற்ற பங்கிலாபம் என்பது:

(ஏ) ஒரு உப கம்பனி, கூட்டுத் தொழில் முயற்சி அல்லது இணைக் கம்பனி மீதான முதலீட்டிற்கு, முதலீட்டாளர் முதலீட்டிலிருந்து பெறும் பங்கிலாபத்தை ஏற்பிசைவு செய்வதுடன் அதற்கான கிடைக்கத்தக்க சான்றானது:

(1) வெவ்வேறான நிதிக்கூற்றுக்களில் முதலீட்டின் முற்கொணரும் தொகை இணைந்த நன்மதிப்பு அடங்கலாக முதலீட்டுனரின் தேறிய சொத்துக்களின் முற்கொணரும் தொகையாக ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் காணப்படும் முற்கொணரும் தொகையை விட மிஞ்சியதாய் இருக்கும் என்பதற்கும்ளூ அல்லது

(2) பங்கிலாபமானது உப கம்பனி, கூட்டுத் தொழில் முயற்சி அல்லது இணைக் கம்பனியின் மொத்த விரிவான வருமானத்திலும் பார்க்க பங்கிலாபம் வழங்கிய காலத்தில் மிஞ்சியதாய் இருக்கும்.

பந்தி 18 இந்த நியமம் மீளப்பெறத்தகு தொகை என்பதனை சொத்தொன்றின் அல்லது காசு பிறப்பாக்க அலகொன்றின் சீர்மதிப்பிலிருந்து முடிவு செய்தலுடன் தொடர்புபட்ட கிரயங்களைக் கழிக்கவரும் தொகை மற்றும் உபயோகப் பெறுமதி இரண்டிலும் எது அதிகமானதோ அந்தப் பெறுமதியென சொற்பொருள் விளக்கம் செய்கின்றது.

| | |
|---|---|
| | மீளப்பெறத்தகு தொகையின் அளவிடுதலுக்கான தேவைப்பாடுகள் 19 – 57 வரையான பந்திகளில் கூறப்பட்டுள்ளன. இந்தத் தேவைப்பாடுகள் "சொத்து ஒன்று" எனும் பதத்தினை உபயோகிக்கின்ற போதிலும் இது தனி ஒரு சொத்திற்கோ அல்லது காசுபிறப்பாக்க அலகொன்றிற்கோ வேறுபாடின்றிப் பிரயோகிக்கப்படும். |
| பந்தி 20 | சொத்தொன்றின ஒத்த தன்மையான சொத்துக்கான செயற்திறன் மிக்க சந்தையொன்றில் கூறுவிலை இல்லாத போதிலும் அதன் சீர்மதிப்பிலிருந்து அகற்றல் தொடர்பான கிரயங்களைக் கழிக்கவரும் தொகையினை அளவிடல் சாத்தியமானதாக இருக்கக்கூடும். இருப்பினும், விருப்பும் அறிவும் கொண்ட சாராருக்கு இடையே நடைமுறை சந்தை நிலைமைகளில் மதிப்பீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்களிடையேயான முறைசார் ஊடுசெயல் ஒன்றின் மூலம் சொத்தொன்றின் அகற்றலிலிருந்து பெறக்கூடிய தொகையின் நம்பகரமான மதிப்பீட்டிற்கான விலையினை மேற்கொள்வதற்கு அடிப்படை இல்லாமை காரணமாக சிலவேளைகளில் சீர்மதிப்பிலிருந்து அகற்றல் தொடர்பான கிரயங்களைக் கழிக்கவரும் தொகையினை தீர்மானித்தல் சாத்தியமற்றதாக இருக்கும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் உரிமம் சொத்தின் உபயோகப் பெறுமதியினை அதன் மீளப்பெறத்தகு தொகையாக உபயோகிக்கக்கூடும். |
| | சீர்மதிப்பில் அகற்றலுக்கான கிரயங்கள் கழித்த தொகை |
| பந்தி 53A | சீர்மதிப்பு பாவனையில் உள்ள பெறுமதியில் இருந்து வேறுபடும். சீர்மதிப்பு சந்தைப் பங்குபற்றுனர்கள் சொத்தின் விலையை மதிப்பிடும் போது பிரயோகிக்கும் எடுகோள்களைப் பிரதிபலிக்கும். மாறாக, பாவனையில் உள்ள பெறுமதி உரிமத்துக்குப் பிரத்தியேகமான மற்றும் பொதுவான முறையில் உரிமங்களுக்குப் பயன்படுத்தப்படாத காரணிகளினைக் கருத்தில் கொள்ளும். உதாரணமாக, சீர்மதிப்பு பின்வருவனவற்றில் எவற்றையும் அவை சந்தைப் பங்குபற்றுனர்களுக்குக் கிடைக்கும் அளவுக்கு பிரதிபலிப்பதில்லை.<br><br>(அ) சொத்துக்களைக் குழுச் சேர்ப்பதால் கிடைக்கப்பெறும் மேலதிக பெறுமதி (வேறுபட்ட அமைவிடங்களில் உள்ள முதலீட்டு ஆதனச் சேர்க்கைகளின் தொகுதியை ஒன்றித்து உருவாக்கல் முதலான),<br><br>(ஆ) மதிப்பிடப்படும் சொத்துக்கள் மற்றும் ஏனைய சொத்துக்களுக்கு இடையிலான கூட்டு விளைவுகள்<br><br>(இ) சொத்தின் தற்போதைய உரிமையாளருக்கு மாத்திரமான சட்ட ரீதியான உரிமைகள் மற்றும் வரையறைகள்,<br><br>(ஈ) சொத்தின் தற்போதைய உரிமையாளருக்கு மாத்திரமான வரிசார் நன்மைகள் அல்லது சுமைகள் |
| பந்தி 81 | வணிக இணைப்பொன்றின் போது ஏற்பிசைவு செய்யப்படும் நன்மதிப்பு, தனியாக இனங்காண முடியாததும் வேறாக ஏற்பிசைவு செய்யப்பட முடியாததுமான சொத்துக்களிலிருந்து தோன்றும் எதிர்காலப் பொருளியற் பயன்களைப் வணிக இணைப்பாளரின் சுவீகரிக்கப்பட்ட போது பிரதிநிதித்துவப்படுத்தும் சொத்தாகும். நன்மதிப்பானது ஏனைய சொத்துக்களிலோ அல்லது சொத்துக்களின் குழுமங்களிலோ தங்கியிராது காசுப் பாய்வுகளை பிறப்பாக்குவதில்லை. அத்துடன், அனேகமாக இது பல இணைந்த காசு பிறப்பாக்க அலகுகளின் காசுப்பாய்வுகளுக்கு பங்களிப்புச் செய்யும். சில சந்தர்ப்பங்களில் நன்மதிப்பானது தனியான காசு பிறப்பாக்க அலகுகளுக்கு அல்லது காசு பிறப்பாக்க அலகுகளின் குழுமங்களுக்கு மாத்திரம் தன்னிச்சையற்ற அடிப்படையில் ஒதுக்கப்பட முடியாததாக இருக்கும். இதன் விளைவாக, அக முகாமைத் தேவைகளுக்காக நன்மதிப்பு கண்காணிக்கப்படும் உரிமத்திற்கு இடையிலான அதிதாழ் மட்டம் சிலவேளைகளில் நன்மதிப்புடன் தொடர்புடைய பல காசு பிறப்பாக்க அலகுகளை கொண்டிருக்கின்ற போதிலும் அவற்றிற்கு இதனை ஒதுக்க முடியாததாக இருக்கும். நன்மதிப்பு ஒதுக்கப்படும் காசு பிறப்பாக்க அலகொன்று பற்றி 83-99 மற்றும் பின்னிணைப்பு-ஆ வரையான பந்திகளில் மற்றும் பின் இணைப்பு ஆ இல் குறிப்பிடப்பட்டவை நன்மதிப்பு ஒதுக்கப்படும் காசு பிறப்பாக்க அலகொன்றின் குழுமத்திற்கும் அவ்வாறே தொடர்புபட்டவையாகக் கொள்ளப்படும். |

| | |
|---|---|
| பந்தி 105 (a) | அதன் சீர்மதிப்பிலிருந்து அகற்றல் தொடர்பான கிரயங்களை (அளவிடக் கூடியதாயின்) குறைக்கவரும் பெறுமதி. |
| பந்தி 111 (a) | குறித்த காலப்பகுதியின்போது சொத்தின் சந்தைப் பெறுமதி கணிசமான அளவில் அதிகரித்து இருப்பதற்கான அவதானிக்கக்கூடிய குறிகாட்டிகள் காணப்படல் . |
| பந்தி 130 | உரிமமொன்று, குறித்த காலப்பகுதியில் சேத இழப்பு நட்டம் ஏற்பிசைவு செய்யப்பட்ட அல்லது எதிர்ப்பதிவு செய்யப்பட்ட நன்மதிப்பு அல்லது காசு பிறப்பாக்க அலகொன்று உள்ளடங்கலாக தனிச்சொத்து ஒன்றிற்காக கீழ்வருவனவற்றினை வெளிக்காட்டும்:-<br><br>(அ) சேத இழப்பு நட்டத்தினை ஏற்பிசைவு செய்வதற்கு அல்லது எதிர்ப்பதிவு செய்வதற்கு வழிவகுத்த நிகழ்வுகளும் சந்தர்ப்பங்களும்.<br><br>(ஆ) ஏற்பிசைவு செய்யப்பட்ட அல்லது எதிர்ப்பதிவு செய்யப்பட்ட சேத இழப்பு நட்டத்தொகை<br><br>(இ) தனிச் சொத்தொன்றினைப் பொறுத்தமட்டில்<br>i. சொத்தின் தன்மை மற்றும்<br>ii. உரிமமானது SLFRS 8க்கு அமைவாக பிரிவுவாரித் தகவல்களை அறிக்கையிடுமேயாகில், உரிமத்தின் ஆரம்ப அறிக்கையிடு வடிவமைப்பின் அடிப்படையில், சொத்தினை உரித்தாகக் கொண்ட அறிக்கையிடற் பிரிவு<br><br>(ஈ) காசுபிறப்பாக்க அலகொன்றினைப் பொறுத்தமட்டில்<br>i. காசுபிறப்பாக்க அலகின் விவரணம். (இது உற்பத்தி வரிசையொன்றா, பொறியொன்றா, வியாபாரத் தொழிற்பாடொன்றா, புவியியற் பிரதேச மொன்றா அல்லது SLFRS 8 இல் சொற்பொருள் விளக்கம் செய்யப்பட்டவாறு அறிக்கையிடற் பிரிவொன்றா என்பது போன்ற)<br>ii. சொத்துக்களின் வர்க்கத்தினால் ஏற்பிசைவு செய்யப்பட்ட அல்லது எதிர்ப்பதிவு செய்யப்பட்ட சேத இழப்பு நட்டத்தொகையும், உரிமம் SLFRS 8 க்கு அமைவாக பிரிவுவாரித் தகவல்களை அறிக்கையிடுமேயாகில் உரிமத்தின் ஆரம்ப அறிக்கையிடு வடிவமைப்பின் அடிப்படையிலமைந்த அறிக்கையிடு பிரிவினால் ஏற்பிசைவு செய்யப்பட்ட அல்லது எதிர்ப்பதிவு செய்யப்பட்ட சேதஇழப்பு நட்டத்தொகையும்.<br>iii. காசுபிறப்பாக்க அலகினை இனங்காணுவதற்கான சொத்துக்களின் ஒன்று சேர்ப்பானது காசுபிறப்பாக்க அலகின் மீளப்பெறற்தகு தொகையின் (ஏதுமிருப்பின்) முன்னைய மதிப்பீட்டின் பின்னர் மாற்ற மடைநதிருக்குமேயாகில் சொத்துக்களின் ஒன்று சேர்ப்புத் தொடர்பான நடைமுறையிலான மற்றும் முன்னைய வழிமுறைகளின் விபரமும் காசுபிறப்பாக்க அலகினை இனங்காண்பதில் கடைப்பிடிக்கப்படும் வழிமுறையில் மாற்றத்திற்கான காரணங்களும்.<br><br>(உ) சொத்தின் (காசுபிறப்பாக்க அலகின்) மீளப்பெறத்தகு தொகை மற்றும் சொத்தின் (காசுபிறப்பாக்க அலகின்) மீளப்பெறத்தகு தொகை அதன் சீர்மதிப்பிலிருந்து அகற்றல் தொடர்பான கிரயங்களைக் கழிக்கவரும் தொகையா அல்லது அதன் உபயோகப் பெறுமதியா என்பது.<br><br>(ஊ) சொத்தின் (காசுபிறப்பாக்க அலகின்) மீளப்பெறத்தகு தொகை அதன் சீர்மதிப்பிலிருந்து அகற்றல் தொடர்பான கிரயங்களைக் கழிக்கவரும் தொகையாயின் உரிமம் பின்வரும் விடயங்களை வெளிப்படுத்துதல் வேண்டும்:<br>(i) சொத்தின் (அல்லது காசுப் பிறப்பாக்க அலகின்) சீர்மதிப்பு முழுமையாக (அகற்றலுக்கான கிரயம் அவதானிக்கப்படக் கூடியதா என்பதைக் கருத்தில் எடுக்காது) உள்வாங்கப்படும் வகைக்கான சீர்மதிப்பு கட்டமைப்பின் பெறுமதி (**SLFRS 13** நியமத்தினைப் பார்வையிடுக) |

| | |
|---|---|
| | (ii) கட்டமைப்பின் மட்டம் 2 மற்றும் மட்டம் 3 இல் வகைப்படுத்தப்படும் சீர்மதிப்பு வகைகளுக்கு, சொத்தின் சீர்மதிப்பில் இருந்து அகற்றல் கிரயங்களைக் கழித்த பெறுமதியை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட நுட்பம்(ங்கள்) தொடர்பான ஒரு சிறிய விபரணம்.மதிப்பீட்டு நுட்பத்தில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின், உரிமம் அந்த மாற்றத்தியையும் அதற்கான காரணத்தினையும் வெளிக்காட்டல் வேண்டும். அத்துடன்<br><br>(iii) கட்டமைப்பின் மட்டம் 2 மற்றும் மட்டம் 3 இல் வகைப்படுத்தப்படும் சீர்மதிப்பு வகைகளுக்கு, சொத்தின் சீர்மதிப்பில் இருந்து அகற்றல் கிரயங்களைக் கழித்த பெறுமதியை மதிப்பிடுவதற்கு முகாமையால் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு பிரதான எடுகோள்களும். பிரதான எடுகோள்கள் என்பது சொத்தின் (காசு பிறப்பாக்கும் அலகின்) மீளப்பெறக்கூடிய தொகை மிக உணர்திறன் வாய்ந்ததாக உள்ள போதாகும். சொத்தின் சீர்மதிப்பில் இருந்து அகற்றல் கிரயங்களைக் கழித்த பெறுமதியை மதிப்பிடுவதற்கு இற்றைப் பெறுமதி நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பின், உரிமம் தற்போதைய மதிப்பீட்டில் மற்றும் முன்னயை மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட கழிவீட்டு வீதம் அல்லது வீதங்களை வெளிக்காட்டல் வேண்டும்.<br><br>(எ) மீளப்பெறத்தகு தொகையானது உபயோகப் பெறுமதியாக இருப்பின், உபயோகப் பெறுமதியின் நடப்பு மதிப்பீட்டிலும் முன்னைய மதிப்பீட்டிலும் உபயோகிக்கப்பட்ட கழிவு விகிதம் அல்லது விகிதங்கள் (ஏதுமிருப்பின்). |
| பந்தி 134 | காசு பிறப்பாக்க அலகொன்றிற்கு (அலகுகளின் குழுமத்திற்கு) ஒதுக்கப்பட்ட நன்மதிப்பின் அல்லது வரையறுக்கப்படாத பயன்தரு ஆயுட்காலத்தினைக் கொண்ட அருவச் சொத்துக்களின் முன்கொண்டு செல்கைத் தொகையானது உரிமத்தின் நன்மதிப்பின் அல்லது வரையறுக்கப்படாத பயன்தரு ஆயுட் காலத்தினைக் கொண்ட அருவச் சொத்துக்களின் மொத்த முன் கொண்டு செல்கைத் தொகையுடன் ஒப்பிடுகையில் பொருண்மைமிக்கதாக இருப்பின் உரிமம் அந்த ஒவ்வொரு காசுபிறப்பாக்க அலகிற்கும் (அலகுகளின் குழுமத்திற்கும்) கீழே (அ) முதல் (ஊ) வரையிலான பந்திகளில் கேட்கப்பட்டுள்ள தகவல்களை வெளிக்காட்டும்.<br><br>(அ) அந்த அலகிற்கு (அலகுகளின் குழுமத்திற்கு) ஒதுக்கப்பட்டுள்ள நன்மதிப்புகளின் முன்கொண்டு செல்கைத் தொகை.<br><br>(ஆ) அந்த அலகிற்கு (அலகுகளின் குழுமத்திற்கு) ஒதுக்கப்பட்டுள்ள, நிச்சயமற்ற பயன்தரு ஆயுட்காலத்தினைக் கொண்ட அருவச் சொத்துக்களின் முன்கொண்டு செல்கைத் தொகை.<br><br>(இ) அலகின் (அலகுக் குழுமத்தின்) மீளப்பெறத்தகு தொகை எந்த அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது என்று (அதாவது, உபயோகப் பெறுமதியிலா அல்லது சீர்மதிப்பிலிருந்து <u>அகற்றல்</u> கிரயத்தினை கழிக்கவரும் தொகையிலா)<br><br>(ஈ) அலகின் (அலகுக் குழுமத்தின்) மீளப்பெறத்தகு தொகையானது பயன்பாட்டுப் பெறுமதியின் அடிப்படையில் அமைந்ததாக இருப்பின்:<br><br>**(i)** மிகக்கிட்டிய பாதீடுகள் அல்லது எதிர்வுகூறல்களுக்குரிய காலப் பகுதிக்காக முகாமை அதன் காசுப்பாய்வு எறியப்பெறுமதிகளினைத் தீர்மானித்தலில் அடிப்படையாகக் கொண்ட ஒவ்வொரு பிரதான எடுகோள்கள் பற்றிய விபரம். பிரதான எடுகோள்களாவன அலகின் (அலகுகளின் குழுமத்தின்) மீளப்பெறத்தகு தொகை அதிக உணர்வுத் தாக்கத்தினைக் கொண்ட எடுகோள்களாகும்.<br><br>**(ii)** ஒவ்வொரு பிரதான எடுகோளுக்கும் ஒதுக்கப்பட்ட பெறமதிகளை தீர்மானித்தலில் முகாமையின் அணுகுமுறை பற்றிய விபரமும், அந்தப் பெறுமதிகள் கடந்தகால அனுபவங்களையோ அல்லது ஏற்புடையவிடத்து தகவல்களின் வெளிவாரி மூலங்களுடன் மாறாத அடிப்படையில் இருப்பதனையோ பிரதிபலிக்கின்றதா என்பது பற்றியும், இல்லாது போனால் அவை கடந்த கால அனுபவத்திலிருந்து அல்லது தகவல்களின் வெளிவாரி மூலங்களிலிருந்து எவ்வாறு மற்றும் ஏன் வேறுபடுகின்றது என்பது பற்றியும். |

**(iii)** முகாமையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதியியற்பாதீடு அல்லது எதிர்வுகூறல்களின் அடிப்படையில் முகாமை காசுப்பாய்வுகளின் தீர்வுகூறப்பட்ட பெறுமதிகளைக் கணித்தறிந்தமைக்கான காலப்பகுதியும் காசு பிறப்பாக்க அலகொன்றிற்காக (அலகுகளின் குழுமத்திற்காக) ஐந்து ஆண்டுகளுக்கும் அதிகமான காலப்பகுதி உபயோகப்படுத்தப்பட்டிருப்பின், அவ்வாறான நீண்டகாலப் பகுதியினை நியாயப்படுத்தி விளக்கமும்.

**(iv)** மிகக்கிட்டிய பாதீடுகள் அல்லது எதிர்வுகூறல்களுக்குரிய காலத்திற்கும் அப்பால் காசுப்பாய்வு எதிர்வுகூறல் பெறுமதிகளை கணித்தறிதலில் உபயோகிக்கப்பட்ட வளர்ச்சி விகிதமும், உரிமம் தொழிற்படும் உற்பத்திப் பொருட்கள், கைத்தொழில்கள், நாடு அல்லது நாடுகளுக்கான அல்லது அந்த அலகு (அலகுகளின் குழுமம்) அர்ப்பணிக்கப்பட்டுள்ள சந்தைக்கான நீண்டகால சராசரி வளர்ச்சி விகிதத்தினை விட அதிகரித்த ஏதாவது வளர்ச்சி விகிதமொன்றினை உபயோகிப்பதற்கான நியாயப்படுத்தல்களும்.

**(v)** ஒவ்வொரு காசுப்பாய்வு எதிர்வுகூறல் பெறுமதிகளையும் கணித்தலில் பிரயோகிக்கப்படும் கழிவு விகிதம் அல்லது விகிதங்கள்.

(உ) அலகின் (அலகுகளின் குழுமத்தின்) மீளப்பெறத்தகு தொகையானது சீர்மதிப்பிலிருந்து அகற்றல் தொடர்பான கிரயங்களைக் கழிக்க வரும் பெறுமதியின் அடிப்படையில் அமைந்திருப்பின், சீர்மதிப்பிலிருந்து அகற்றல் தொடர்பான கிரயங்களைக் கழிக்க வரும் பெறுமதியினைத் தீர்மானித்தலில் உபயோகிக்கப்பட்ட மதிப்பீட்டு நுட்பம். உரிமம் **SLFRS 13** நியமத்தினால் தேவைப்படுத்தப்படும் வெளிக்காட்டல்களை வெளிக்காட்ட வேண்டியதில்லை. சீர்மதிப்பிலிருந்து அகற்றல் தொடர்பான கிரயங்களைக் கழிக்கவரும் பெறுமதியானது ஒத்த அலகு ஒன்றிற்கான (அலகுகளின் குழுமத்திற்கான) குறிக்கப்பட்ட விலையினை உபயோகித்து தீர்மானிக்கப்பட்டு இருக்காவிடின், உரிமம் கீழ்வரும் தகவல்களை வெளிக்காட்டும்.

**(i)** சீர்மதிப்பிலிருந்து அகற்றல் தொடர்பான கிரயங்களைக் கழிக்க வரும் பெறுமதியினைத் தீர்மானித்தலில் முகாமை அடிப்படையாகக் கொண்ட ஒவ்வொரு பிரதான எடுகோள்கள் பற்றிய விபரம். பிரதான எடுகோள்களாவன, அலகின் (அலகுகளின் குழுமத்தின்) மீளப்பெறத்தகு தொகை அதிக உணர்வுத்தாக்கத்தினைக் கொண்டுள்ள எடுகோள்களாகும்.

**(ii)** ஒவ்வொரு பிரதான எடுகோள்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பெறுமதிகளைத் தீர்மானித்தலில் முகாமையின் அணுகுமுறை பற்றிய விபரமும் அந்தப் பெறுமதிகள் கடந்த கால அனுபவங்களையோ அல்லது ஏற்புடையவிடத்து தகவல்களின் வெளிவாரி மூலங்களுடன் மாறாத அடிப்படையில் இருப்பதனையோ பிரதிபலிக்கின்றதா என்பது பற்றியும் அல்லது போனால் அவை கடந்தகால அனுபவத்திலிருந்து அல்லது தகவல்களின் வெளிவாரி மூலங்களிலிருந்து எவ்வாறு மற்றும் ஏன் வேறுபடுகின்றது என்பது பற்றியும்

**(iiA)** சீர்மதிப்பு அளவீடு முழுமையான உள்ளடக்கப்படும் (அகற்றல் கிரயங்களின் அவதானிக்கக்கூடிய தன்மையினைக் கருத்தில் கொள்ளாது) சீர்மதிப்புக் கட்டமைப்பு (SLFRS 13 நியமத்தினைப் பார்வையிடுக)

**(iiB) மதிப்பீட்டு நுட்பத்தில் எதிர்வுகூறல் மாற்றங்கள் இருபபின், அந்த மாற்றம் மற்றும் அதற்கான காரணம்(ங்கள்)**

**சீர்மதிப்பில் அகற்றல் கிரயங்கள் நீங்கலானதொகை கழிவிடப்பட்ட காசுப்பாய்வு எதர்வுகூறல்களை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படடிருப்பின், உரிமம் பின்வருவனவற்றை வெளிக்காட்டல் வேண்டும்.**

**(iii) முகாமை காசுப்பாய்வை எதிர்வுகூறிய காலப்பகுதி**

| | |
|---|---|
| | **(iv) காசுப்பாய்வு பாய்வு எதிர்வுகூறல் கணிப்புக்கு உபயோகித்த வளர்ச்சி விகிதம்**<br><br>**(v) காசுப்பாய்வு எதிர்வுகூறலுக்கு பிரயோகித்த கழிவு விகிதம் அல்லது விகிதங்கள்**<br><br>(ஊ) அலகின் (அலகுகளின் குழுமத்தின்) மீளப்பெறத்தகு தொகையினை தீர்மானிப்பதில் முகாமை அடிப்படையாகக் கொண்டிருந்த பிரதான எடுகோள் ஒன்றின் நியாயபூர்வமானதும் சாத்தியமானதுமான மாற்றமொன்று அலகின் (அலகுகளின் குழுமத்தின்) முன்கொண்டு செல்கைத் தொகை அதன் மீளப்பெறத்தகு தொகையினைவிட அதிகரித்தலினை ஏற்படுத்துமேயாகில்:<br><br>i. அலகின் (அலகுகளின் குழுமத்தின்) மீளப்பெறற்தகு தொகை அதன் முன்கொண்டு செல்கைத் தொகையினை எந்த அளவினால் அதிகரிக்கின்றது என்பது பற்றி<br><br>ii. பிரதான எடுகோளிற்கு ஒதுக்கப்பட்ட பெறுமதி<br><br>அலகின் (அலகுகளின் குழுமத்தின்) மீளப்பெறற்தகு தொகை அதன் முன்கொண்டு செல்கைத் தொகைக்கு சமமாகும் வகையில், மீளப்பெறத்தகு தொகையினை அளவிடுவதற்கு உபயோகிக்கப்படும் ஏனைய மாறிகளின் மீது மாற்றம் ஏற்படக்கூடிய விளைவுத் தாக்கங்களை கூட்டிணைத்த பின்னரான, பிரதான எடுகோளுக்கு ஒதுக்கப்படும் பெறுமதி மாற்றப்பட வேண்டிய தொகை. |
| பந்தி 139 | இந்தக் கணக்கீட்டு நியமம் 01 சனவரி 2012 இல் அல்லது அன்று முதல் ஆரம்பிக்கும் வருடாந்த காலப்பகுதிகளை உள்ளடக்கும் நிதிக் கூற்றுக்களுக்குப் பிரயோகிக்கத்தக்கதாக உள்ளது. முன்னதான பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. உரிமம் இந் நியமத்தினை 01 சனவரி 2014க்கு முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தல் வேண்டும். |
| பந்தி 140H | SLFRS 10 மற்றும் SLFRS 11 *இணைந்த ஏற்பாடுகள்* நியமங்கள் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 4, பந்தி 12(h) க்கு மேலான தலையங்கம் மற்றும் பந்தி 12(h). உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 10, SLFRS 11 நியமங்களைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 140I | SLFRS 13 *சீர்பெறுமதி மதிப்பீடு* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தப்பட்ட பந்திகள் 5, 6, 12, 20, 22, 28, 78, 105, 111, 130 மற்றும் 134, நீக்கப்பட்ட பந்திகள் 25-27 மற்றும் சேர்க்கப்பட்ட பந்தி 53A. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 140J | 2014 இல் பந்திகள் 130 மற்றும் 134 மற்றும் பந்தி 138க்கு மேல் உள்ள தலைப்பு ஆகியன திருத்தப்பட்டன. உரிமம் ஒன்று அத் திருத்தங்களை முற்கால விளைவுள்ள வகையில் 01 சனவரி 2014 இல் அல்லது அதற்குப் பின்னரான ஆண்டுக் காலப்பகுதிகளுக்குப் பிரயோகிக்கும். முற்காலப் பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இத் திருத்தங்களை SLFRS 13 நியமத்தினைப் பிரயோகிக்காத காலப்பகுதிகளில் (ஒப்பீட்டுக் காலப்பகுதி உள்ளடங்கலாக) பிரயோகித்தல் ஆகாது. |

**LKAS 37 ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள்**

| **ஏற்கனவே உள்ள பந்தி** | **பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி** |
|---|---|
| பந்தி 95 | இந் நியமமானது 2012 சனவரி 1ஆம் திகதி அன்று அல்லது அதற்குப் பின்னரான காலப்பகுதியின் வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்கு செல்லுபடியானதாகும். முந்தைய |

| | |
|---|---|
| | பிரயோகம் ஊக்குவிக்கப்படுகிறது. உரிமம் 2012 சனவரி 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற காலப்பகுதிக்கு நியமத்தினை பிரயோகிக்குமாயின், அது அவ் விடயத்தினை வெளிப்படுத்தல் வேண்டும். |

**LKAS 38 அருவச் சொத்துக்கள்**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| பந்தி 3 (e) | LKAS-32 இல் பொருள்வரையறை செய்யப்பட்டதன் படியான நிதிச் சொத்துக்கள். சில நிதிச்சொத்துக்களின் ஏற்பிசைவும் அளவீடும். SLFRS 10 *ஒன்றித்த* *<u>நிதிக்கூற்றுகள்</u>* LKAS 27 *வேறான நிதிக் கூற்றுக்கள்* மற்றும் LKAS 28 கூட்டுக்கம்பனிகளில் முதலீடுகள் மற்றும் LKAS 31 கூட்டுத்தொழில் முயற்சிகள் மீதான நாட்டங்களில் உள்ளடக்கப்பட்டு உள்ளன. |
| பந்தி 8 | **கீழ்வரும் பதங்கள் இந் நியமத்தில் கீழ்க் குறிப்பிட்டுக் காட்டப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் உபயோகிக்கப்படும்:**<br><br>*காலத் தேய்மானம்* என்பது அருவச் சொத்து ஒன்றின் தேய்மானமிடத்தகு தொகையினை அதன் பயன்தரு ஆயுட்காலமீறாக ஒரு ஒழுங்குமுறையான ஒதுக்குதல் ஆகும்.<br><br>ஒரு ***<u>சொத்து</u>*** என்பது:<br><br>(அ) **தாளாண்மை ஒன்றினால் கடந்தகால நிகழ்வுகளின் விளைவாக கட்டுப்படுத்தப்படுவதும், அத்துடன்**<br><br>**(ஆ) அதனிலிருந்து எதிர்கால பொருளியற் பயன்கள் தாளாண்மைக்குப் பாயுமென எதிர்பார்க்கப்படுவதுமான வளம் ஆகும்**<br><br>*<u>முன்கொணருந் தொகையானது</u>* **சொத்தொன்று அதன் திரண்ட காலத் தேய்மானம் மற்றும் திரண்ட சேத இழப்பு ஏதுமிருப்பின் அவற்றினைக் கழித்ததன் பின்னர், நிதி நிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும் தொகையாகும்.**<br><br>***கிரயம்*** **எனப்படுவது ஒரு சொத்தினைக் கொள்வனவு செய்யும்போது அந்தச் சொத்தின் கொள்வனவின் அல்லது நிர்மாணத்தின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட பணம் அல்லது பணத்திற்கு சமமான தொகை அல்லது கொள்வனவு செய்வதற்காகக் கொடுக்கப்படும் ஏனைய பதிலிறுப்பின் நியாயபூர்வப் பெறுமதியாகும், அல்லது பொருத்தமான போது வேறு நியமங்களின் குறிப்பான தேவைக்கு அமைவாக (உதாரணம்: SLFRS 2 பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு) அச் சொத்துடன் தொடர்புபடுத்தக்கூடிய தொகை.**<br><br>*தேய்மானப்படுத்தற்தகு தொகை* எனப்படுவது சொத்தொன்றின் கிரயம் அல்லது கிரயத்திற்காக பிரதியீடு செய்யப்பட்ட ஏனைய தொகையிலிருந்து ஈற்றுப் பெறுமதியினைக் கழிக்க வருதலாகும்.<br><br>*அபிவிருத்தி* என்பது வர்த்தக உற்பத்தியினை அல்லது உபயோகத்தினை ஆரம்பிக்கு முன்னதான புதிய அல்லது கணிசமான அளவில் சீர்திருத்தப்பட்ட பொருட்கள், சாதனங்கள், உற்பத்திப்பொருட்கள், செயன்முறைகள், முறைமைகள் அல்லது சேவைகளினை உற்பத்தி செய்வதற்காக திட்டமிடுவதற்கு அல்லது வடிவமைப்பதற்கு ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களை அல்லது ஏனைய அறிவினைப் பிரயோகித்தலாகும்.<br><br>*தாளாண்மை சார்ந்த பெறுமதி* என்பது சொத்தொன்றின் தொடர் உபயோகம் அல்லது பயனுள்ள ஆயுட்காலத்தின் பின் விற்பனை மூலம் ஈட்டும் தொகை அல்லது ஒரு பொறுப்பைத் தீர்வு செய்வதாயின் எதிர்பார்க்கும் கொடுப்பனவு ஆகியன மூலம் பெற எதிர்பார்க்கும் காசுப்பாய்வின் தற்காலப் பெறுமதி. |

| | |
|---|---|
| | ***சீர்மதிப்பு*** **என்பது மதிப்பீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்கள் இடையே ஒரு முறையான ஊடுசெயல் மூலம் ஒரு சொத்தை விற்பதனால் பெறப்படும் அல்லது ஒரு பரிப்பினை மாற்றம் செய்வதற்காக அளிக்கப்படும் விலை ஆகும். (SLFRS 13 *சீர்மதிப்பு அளவீடு* நியமத்தினைப் பார்க்கவும்)**<br><br>***சேத இழப்பு*** **எனப்படுவது சொத்தொன்றின் முன்கொணரும் தொகையானது அதனை விற்றுப் பெறக்கூடிய தொகையிலிருந்து எவ்வளவு தொகையினால் அதிகமாகக் காணப்படுகின்றதோ அந்தத் தொகையாகும்.**<br><br>**அருவச் சொத்து எனப்படுவது அடையாளங் காணப்படக்கூடிய ஒரு நாணயச் சார்பில்லாத சொத்தாகும்.**<br><br>***நாணயச் சார்பான சொத்துக்கள்*** **என்பன பணமாக வைத்திருக்கப்படுபவையும் நிலையான அல்லது தீர்மானிக்கப்படக்கூடிய ஒரு தொகைப் பணத்தைப் பெறப்படக்கூடிவையுமான சொத்துக்களுமாகும்.**<br><br>***ஆராய்ச்சி*** **எனப்படுவது புதிய விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப அறிவு மற்றும் விளக்கத்தினைப் பெறும் நோக்கில் மேற்கொள்ளப்படும் ஆரம்ப மற்றும் திட்டமிட்ட புலனாய்வாகும்.**<br><br>***அருவச் சொத்து ஒன்றின் ஈற்றுப் பெறுமதி*** **என்பது தாளாண்மையொன்று சொத்தொன்றின் பயன்தரு ஆயுட்கால முடிவு என எதிர்பார்க்கப்படும் நிலையில் அதன் ஆயுட்கால முடிவில் எதிர்பார்க்கப்படும் விற்பனைக் கிரயத்தினை கழித்தபின் பெற்றுக்கொள்ளப்படுமென எதிர்பார்க்கும் மதிப்பிட்ட தொகையாகும்.**<br><br>*பயன்தரு ஆயட் காலமாவது:*<br><br>(அ) தாளாண்மையினால் சொத்தொன்று உபயோகிக்கப்படுமென எதிர்பார்க்கப்படும் கால இடைவெளி அல்லது<br><br>(ஆ) தாளாண்மையினால் அந்தச் சொத்திலிருந்து பெறப்படுமென எதிர்பார்க்கப்படும் உற்பத்தி அலகுகளின் அல்லது அதுபோன்ற அலகுகளின் எண்ணிக்கை. |
| பந்தி 33 | SLFRS – 3 *வியாபார இணைப்பு* என்ற நியமத்தின்படி கொள்வனவொன்றாக அமையும் வியாபார இணைப்பொன்றின் போது அருவச் சொத்து ஒன்று கொள்வனவு செய்யப்படுமேயாகில், அந்த அருவச் சொத்தின் கிரயமானது கொள்வனவுத் திகதியின் போதான அதன் சீர்மதிப்பாகும். சொத்தின் மீதான பொருளியற் பயன்கள் தாளாண்மைக்கு வந்தடையும் என்ற சந்தைப் பங்குபற்றுனர்களது கையகப்படுத்தல் திகதியிலான எதிர்பார்ப்பின் சாத்தியப்பாட்டினை அருவச் சொத்தொன்றின் சீர்மதிப்பு பிரதிபலிக்கும். வேறு விதமாகச் சொல்வதானால் உட்பாய்வின் காலம் மற்றும் தொகை ஆகியவற்றில் உறுதியற்ற நிலை இருந்தாலும் தாளாண்மை பொருளியற் பயன் உட்பாய்வை எதிர்பார்க்கும். ஆகவே வியாபார இணைப்பு மூலம் கைவசப்படுத்திய அருவச்சொத்துக்கள் தொடர்பாக பந்தி 21 (அ) வின் சாத்திய ஏற்பிசைவுப் பிரமாணங்கள் திருப்திப்படுத்தப்பட்டுள்ளன என எப்போதும் கருதப்படும். ஒரு வியாபார இணைப்பின் மூலம் பெற்றசொத்து வேறுபடுத்தக்கூடியதாக இருந்தால் அல்லது ஒப்பந்தம் சார் அல்லது சட்டரீதியாக உரிமையினால் பெறப்பட்டிருந்தால், சொத்தின் சீர்மதிப்பை நம்பகரமாக அளவிட போதிய தகவல்கள் இருக்கும். இதன்படி வியாபார இணைப்பின் மூலம் பெறப்பட்ட அருவச்சொத்துக்கள் பந்தி 21 (ஆ) இல் அடங்கிய நம்பகரமான அளவீட்டு பிரமாணங்களை திருப்திப்படுத்தியதாக எப்போதும் கருதப்படும். |
| | **வியாபார இணைப்பின் போது கையகப்படுத்தப்பட்ட அருவச் சொத்தக்கள்** |
| பந்தி 39 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 40 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 41 | நீக்கப்பட்டுள்ளது |

| | |
|---|---|
| பந்தி 47 | ஒரு அருவச்சொத்தின் ஏற்பிசைவிற்கு ஒரு நிபந்தனை என பந்தி 21 (ஆ) என்பது குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் கிரயம் நம்பகரமாக அளவிடமுடியும் என்பதே ஒப்பிடக்கூடிய சந்தை ஊடுசெயல் இல்லாத காரணத்தால், ஒரு அருவச்சொத்தின் சீர்மதிப்பு நம்பகரமாக அளவிடக் கூடியதாக இருப்பது.<br><br>(அ) நியாயாமான <u>சீர்மதிப்பு அளவீட்டின்</u> வீச்சத்தின் மாறுபடற்தகவு அந்தச் சொத்திற்கு பொருண்மையானதாக காணப்படாத போது.<br><br>(ஆ) வீச்சத்திற்கு உட்பட்ட வேறுபட்ட மதிப்பீடுகளின் நிகழ்வுகள் நியாயமாக மதிப்பிட்டு <u>சீர்மதிப்பு அளவீடு</u> செய்யப்பட்டு உபயோகப்படுத்தக் கூடியதாக இருக்கும் போது.<br><br>ஒரு தாளாண்மை பெற்ற சொத்தின் <u>சீர்மதிப்பை அளவிடவோ</u> கையளிக்கப்பட்ட சொத்தின் <u>சீர்மதிப்பை அளவிடவோ</u> முடியுமானால், பெறப்பட்ட சொத்தின் <u>சீர்மதிப்பு</u> துலாம்பலமாகக் காணப்பட்டால் ஒழிய, கையளிக்கப்பட்ட சொத்தின் கிரயத்தை கணிக்க அதை பிரயோகிக்கலாம். |
| பந்தி 50 | தாளாண்மை ஒன்றின் <u>சீர்மதிப்புக்கும்</u> எந்தவொரு வேளையிலும் அதன் அடையாளம் காணக்கூடிய நிகரச் சொத்துக்களின் முன்கொணரல் தொகைக்குமிடையேயான வேறுபாடுகள் தாளாண்மையின் <u>சீர்மதிப்பைப்</u> பாதிக்கும் ஒரு தொகையான காரணிகளை அடக்கக்கூடும். எனினும், அவ்வாறான வேறுபாடுகள் தாளாண்மையினால் கட்டுப்படுத்தப்படும் அருவச்சொத்துக்களின் கிரயத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தாது. |
| பந்தி 75 | **ஆரம்ப ஏற்பிசைவுக்கு பின் ஒரு அருவச்சொத்து அதன் மீள்மதிப்பீட்டு தொகையில் முன்கொண்டு வரப்படும். அது அதன் பெறுமதி மீள்மதிப்புச் செய்த திகதியின் பின்னர் திரண்ட தேய்மானம் மற்றும் பின்னர் திரண்ட சேத இழப்புக்கள் ஆகியன கழித்த <u>சீர்மதிப்பாகும்</u>. இந்த நியமத்தின் கீழான மீள்பெறுமதி மதிப்பீட்டின் தேவைக்கு நிறைசந்தையை உராவி <u>சீர்மதிப்பு அளவிடப்படும்</u>. மீள்மதிப்பீடு ஒழுங்காக மேற்கொள்வதனால் அறிக்கையிடும் கால முடிவில் முற்கொணரும் தொகை அதன் <u>சீர்மதிப்புடன்</u> பொருண்மையான அளவில் வேறுபடாது.** |
| பந்தி 78 | **ஒரு அருவச்சொத்திற்கு, பந்தி 8 ல் விபரிக்கப்பட்ட அம்சங்களுடன் இருப்பது ஒரு நிறைசந்தையில் சாதாரணமாகாது. ஆனால் இது ஏற்படலாம். உதாரணமாக: சில நியாயாதிக்கங்களில் இலகுவாக மாற்றக் கூடிய வாடகை மோட்டார்வாகன அனுமதிப்பத்திரம், மீன்பிடி அனுமதி அல்லது உற்பத்தி ஒதுக்கீட்டு செயற்றிறனான சந்தையில் இருக்கலாம். எனினும் சின்னம், புதினத்தாள், உச்சதலைப்பு, சங்கீதம், படச்சுருள், வெளியீட்டு உரிமை, ஆக்க உரிமை அல்லது வர்த்தகக்குறி ஆகியனவற்றிற்கு நிறைசந்தை இருக்க முடியாது. காரணம் ஒவ்வொரு சொத்தும் தனித்துவமானது. மேலும் அருவச்சொத்துக்கள் வாங்கி விற்கப்பட்டாலும், தனிப்பட்ட கொள்முதல் செய்பவர்களுக்கும் விற்பனை செய்பவர்களுக்கும் இடையில் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு ஊடு செயல்கள் ஒப்பிடுகையில் அடிக்கடி ஏற்படுவதல்ல. இந்த காரணங்களால் ஒரு சொத்திற்கு கொடுபட்ட விலை இன்னொரு சொத்தின் நியாயவிலைக்கு சான்றாக மாட்டாது. மேலும் விலைகள் அனேகமாக பொதுமக்களுக்கு கிடைப்பதில்லை.** |
| பந்தி 82 | **மீள்மதிப்பீடு செய்யப்பட்ட அருவச் சொத்து ஒன்றின் <u>சீர்மதிப்பு</u> செயற்றிறன் வாய்ந்த சந்தை ஒன்றைக் கொண்டு <u>அளவிடப்பட</u> முடியாத போது, செயற்றிறன் வாய்ந்த சந்தை ஒன்றைக் கொண்டு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் இருந்து பிற்காலத்துக்கான திரண்ட சேத இழப்புக்கள் மற்றும் பிற்கால திரண்ட சேத இழப்பு நட்டங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியே சொத்தின் முன்கொணரல் பெறுமதி ஆகும்.** |
| பந்தி 84 | ஒரு சொத்தின் சீர்மதிப்பு ஒரு செயற்றிறன் வாய்ந்த சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டு அடுத்துவரும் அளவீட்டு திகதியில் <u>அளவிட</u> முடியுமானால் அத் திகதியிலிருந்து மீள்மதிப்பீட்டு முறை பிரயோகிக்கப்படும். |
| பந்தி 100 (b) | **அந்தச் சொத்திற்கான செயற்றிறன் வாய்ந்த சந்தையொன்று இருத்தல் (<u>SLFRS 13 நியமத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு</u>)** |

| | |
|---|---|
| பந்தி 124 (c) | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 128 (b) | தாளாண்மையினால் கட்டுப்படுத்தப்படும் ஆனால் இந்த நியமத்தின் ஏற்பிசைவுத் தேர்வு நிபந்தனைகளைப் பூரணப்படுத்தாததன் காரணமாகவோ அல்லது இந்த நியமம் தேவைப்படுத்தும் ஏற்பிசைவுத் தேவைப்பாடுகளைத் திருப்திசெய்யாது இருப்பதன் காரணமாகவோ சொத்தொன்றாக LKAS -38 அருவச்சொத்துக்கள் என்ற நியமத்தின் 2011 வழங்கி அமுல்படுத்தலுக்கு முன்பான காரணத்தால் ஏற்பிசைவு செய்யப்படாத பொருண்மையான அருவச் சொத்துக்களின் சுருக்கமான விபரம். |
| பந்தி 130 | ஒரு தாளாண்மை இந் நியமத்தை பின்கூறியவாறு பிரயோகிக்கும்:<br><br>(அ) 2012 சனவரி 1ஆம் திகதியன்று அல்லது அதற்கும் பின்னர் ஒப்பந்தத் திகதியைக் கொண்ட வியாபார இணைப்புகள் மூலம் வசப்படுத்தப்பட்ட அருவச்சொத்துக்களின் கணக்கீட்டு முறையில், அத்துடன்<br><br>(ஆ) <u>2012</u> சனவரி 1ஆம் திகதியோ அதற்குப் பின்னரோ ஆரம்பமாகும் ஆண்டுக்காலம் தொடக்கம் எதிர்நோக்கியவாறு உள்ள எல்லா அருவச் சொத்துக்களின் கணக்கீட்டு முறையில் இதன்படி அத் திகதியிலான அருவச்சொத்துக்களின் முற்கொணர் தொகையை தாளாண்மை செம்மைப்படுத்தாது. எனினும் உரிமமானது அத்திகதியில் அவ்வாறான அருவச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை மீள் கணிப்புச் செய்ய இந்நியமத்தைப் பிரயோகிக்கும். இக்கணிப்பின் விளைவாக தாளாண்மை சொத்தின் பயன்தரு ஆயுட்கால கணிப்பீட்டை மாற்றுமேயானால் அம் மாற்றம் LKAS 8 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டின் மாற்றம் மாதிரி கணக்கீடு செய்யும். |
| பந்தி 130F | <u>SLFRS 10 மற்றும் SLFRS 11 *இணைந்த ஏற்பாடுகள்* நியமங்கள் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்தி 3(e). உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 10, SLFRS 11 நியமங்களைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும்.</u> |
| பந்தி 130G | <u>SLFRS 13 *சீர்பெறுமதி மதிப்பீடு* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தப்பட்ட பந்திகள் 8, 33, 47, 50, 75, 78, 82, 84, 100 மற்றும் 124, நீக்கப்பட்ட பந்திகள் 39-41 மற்றும் 130E. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும்.</u> |

**LKAS 39 நிதிச் சாதனங்கள் (கருவிகள்) : ஏற்பிசைவும் அளவீடும்**

| **ஏற்கனவே உள்ள பந்தி** | **பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி** |
|---|---|
| | இந்த நியமத்தில் கீழே குறிப்பிடப்பட்ட மாற்றங்களுக்கு மேலதிகமாக, “தீர்மானிக்கப்பட்ட” என்னும் பதமானது “மதிப்பிடப்பட்ட” என மாற்றம் செய்யப்படுகிறது. |
| பந்தி 2 *(a)* | **<u>SLFRS 10</u> *ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்* அல்லது LKAS 28 இணைக் கம்பனிகள் <u>மற்றும்</u> கூட்டுத் தொழில் முயற்சிகள் மீதான முதலீடுகள் நியமங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட உப கம்பனிகள், இணைக்கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகளில் கொண்டுள்ள அக்கறைகள். எனினும் <u>சில சந்தர்ப்பங்களில் SLFRS 10, LKAS 27 அல்லது LKAS 28</u> நியமங்கள் உபகம்பனி, இணைக்கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியிலான அக்கறையொன்றினை இந் நியமத்தின் சில அல்லது அனைத்துத் தேவைப்பாடுகளுக்கும் இணக்கமான வகையில் கொண்டுள்ள உரிமங்களைக் கணக்கு வைக்க உரிமத்தினை வேண்டலாம் அல்லது அனுமதிக்கலாம். அத்துடன் உரிமங்கள் உபகம்பனி, இணைக்கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியில் உள்ள அக்கறையின் மீதான உய்த்தறி சாதனங்களுக்கு, அவை LKAS** |

| | |
|---|---|
| | **32 இல் கூறப்பட்டுள்ளவாறு உரிமமொன்றின் உரிமையாண்மைச் சாதன சொற்பொருள் விளக்கத்தினை திருப்தி செய்யாத பட்சத்தில் இந்த நியமத்தினை பிரயோகிக்கும்.** |
| பந்தி 2 (g) | **எதிர்காலத் திகதியொன்றில் சுவீகரிக்கப்படுனனின் கொள்வனவு அல்லது விற்பனைக்கான <u>SLFRS 3 *வியாபார இணைப்புக்கள்* நியமத்தின் நோக்கெல்லையினுள் உள்ளடங்கக்கூடிய</u> வியாபார இணைப்பொன்றில் சுவீகரிப்பாளனுக்கும் விற்பனையாளனுக்கும் இடையேயான எதிர்காலத்துக்கான முற்கூட்டிய ஒப்பந்தங்கள். எதிர்கால ஒப்பங்தங்களின் காலம் சாதாரணமாக, ஊடுசெயல்களை நிறைவு செய்வதற்கான அவசியமான அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான நியாயமான காலப்பகுதி ஒன்றினைவிட அதிகமாக இருத்தல் ஆகாது.** |
| பந்தி 9 | **உய்த்தறி சாதனமொன்றின் சொற்பொருள் விளக்கம்.** |
| பந்தி 9 (b) | **சீர்மதிப்பு குழு வகைப்படுத்தல் மூலமோ அல்லது அதன் சீர்மதிப்பு வெளிக்காட்டப்பட்டு இருந்தாலோ, நிதிச்சொத்துக்கள் அல்லது நிதிப்பரிப்புக்களின் சீர்மதிப்பின் நம்பகரமான <u>மதிப்பிடுவதற்கான</u> தேவைப்பாடுகளை <u>SLFRS 13 *சீர்பெறுமதி மதிப்பீடு*</u> நியமம் குறித்துரைக்கிறது என்பதனை கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.** |
| பந்தி 9 | **“விளைவு வட்டி முறைானது” நிதிச் சொத்தொன்றின் அல்லது நிதிப்பரிப்பொன்றின் (அல்லது நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிப் பரிப்புக்களின் குமுமமொன்றின்) காலத்தேய்மானம் செய்யப்பட்ட கிரயத்தினை கணித்தலுடன், உரியகால மீறாக வட்டி வருமானத்தினை அல்லது வட்டிச் செலவினை ஒதுக்கும் முறையொன்றாகும். விளைவு வட்டி விகிதமானது மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுக் கொடுப்பனவுகளை அல்லது பெறுவனவுகளை நிதிச்சாதனத்தின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலமீறாக அல்லது, பொருத்தமான இடத்து அதனிலும் குறைந்த காலமீறாக கழிவீடு செய்யப்படும் போது அது நிதிச் சொத்தின் அல்லது நிதிப்பரிப்பின் நிகர முன் கொணரற் தொகைக்கு சமமாக அமையும் வண்ணமான கழிவு விகிதமாகும்.**<br><br>**விளைவு வட்டி விகிதத்தினைக் கணிக்கும்போது, உரிமமொன்று நிதிச்சாதனத்தின் சகல ஒப்பந்தரீதியிலான உறுப்புரைகளையும் கவனத்திற் கொண்டு காசுப்பாய்வுகளை மதிப்பிடுவதுடன் (உதாரணமாக, முற்கொடுப்பனவு, அழைப்பு அல்லது அதனையொத்த தேர்வுரிமைகள்) <u>எதிர்காலக் கடன் இழப்புக்களைக் கவனத்தில் கொள்ளாது. இந்தக் கணிப்பீடானது, விளைவு வட்டி விகிதத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக அமைவதும் ஒப்பந்தத் தரப்பினருக்கு இடையே பெறப்படும் அல்லது செலுத்தப்படும் சகல கட்டணங்கள் அல்லது புள்ளிகள் (LKAS 18 வருமானம் இனைப் பார்க்கவும்), ஊடுசெயற் கிரயங்கள் மற்றும் ஏனைய சகல வட்டங்கள் அல்லது கழிவுகளை உள்ளடக்கும். இதன் போது, ஒத்த நிதிச்சாதனங்களின் குமுமமொன்றின் காசுப் பாய்வுகளும் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலமும் நம்பகரமாக மதிப்பிட முடியும் என்ற எடுகோள் மேற்கொள்ளப்படும். எனினும் நிதிச்சாதனமொன்றின் (அல்லது நிதிச்சாதனங்களின் குமுமமொன்றின்) காசுப்பாய்வுகளை அல்லது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்தினை நம்பகரமாக அளவிடுதல் சாத்தியமற்றதாக அமையும் அருமையான சந்தர்ப்பங்களில், உரிமமானது நிதிச் சாதனத்தின் (அல்லது நிதிச்சாதனங்களின் குமுமத்தின்) முழு ஒப்பந்தக்காலம் சீறாக ஒப்பந்த ரீதியிலான காசுப்பாய்வுகளை உபயோகிக்கும்.</u>**<br><br>***ஏற்பிசைவு விலக்கல்* என்பது உரிமத்தின் நிதிநிலைக் கூற்றிலிருந்து முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிப் பரிப்புக்களை நீக்குதல் ஆகும்.**<br><br>***சீர் மதிப்பு* என்பது <u>சந்தைப் பங்குபற்றுனர்களிடையே மதிப்பீட்டுத் திகதியில்</u> முறைசார் ஊடுசெயல் ஒன்றின்போது சொத்தொன்று <u>விற்கப்படுவதனால் பெறப்படக்கூடிய</u> அல்லது பரிப்பொன்று <u>மாற்றப்படுவதற்காக செலுத்தக்கூடிய விலையாகும். (SLFRS 13 *சீர்மதிப்புப் பெறுமதி* நியமத்தினைப் பார்க்கவும்).</u>** |
| பந்தி 13 | உரிமமொன்று இணைந்த உய்த்தறி சாதனமொன்றின் சீர்மதிப்பினை அதன் உறுப்புரை மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் நம்பகரமாக <u>மதிப்பிட</u> முடியாது போனால் (உதாரணமாக, இணைந்த உய்த்தறி சாதனமானது <u>ஒத்த தன்மை வாய்ந்த சாதனம் ஒன்றிற்கு உத்வேகமான சந்தையில் கோரப்பட்ட விலைகளைக்</u> கொண்டிராத, அதாவது மட்டம் 1 உள்ளீடு உரிமைச் சாதனத்தின் அடிப்படையில் அமைந்ததன் காரணமாக) |

| | |
|---|---|
| | இணைந்த உய்த்தறி சாதனத்தின் சீர்மதிப்பானது இணைந்த சாதனத்தின் சீர்மதிப்பு மற்றும் முதன்மை ஒப்பந்தத்தின் சீர்மதிப்பு இரண்டினையும் இந்த நியமத்தின் கீழ் <u>மதிப்பிட</u> முடியுமேயாகில் அவை இரண்டுக்கும் இடையேயான வித்தியாசமாகும். உரிமம் இந்த முறையினை உபயோகித்து இணைந்த உய்த்தறி சாதனத்தின் சீர்மதிப்பினை தீர்மானிக்க முடியாது போனால் பந்தி 12 பிரயோகிக்கப்படுவதுடன் இணைந்த சாதனம் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்பாக வகைப்படுத்தப்படும். |
| பந்தி 15 | ஒன்றித்த நிதிக் கூற்றுக்களில் ஒன்றித்தல் மட்டத்தில் பந்திகள் 16-23 உம் பின்னிணைப்பு “அ” பந்திகள் AG 34 - AG 52 உம் பிரயோகிக்கப்படும். ஆகவே, சகல உப கம்பனிகளையும் ஒன்றிணைக்கும் உரிமமொன்று முதலில் SLFRS 10 இன் அடிப்படையில் ஒன்றிணைத்து அதன் பின்னர் பின்னிணைப்பு “அ” பந்திகள் பிவ 34 - பிவ 52 இனையும் குழுமத்துக்கு பிரயோகிக்கும். |
| பந்தி 43A | **<u>எவ்வாறெனினும், நிதிச் சொத்து அல்லது நிதிப் பரிப்பின் முதன்முறை ஏற்பிசைவிலான சீர்மதிப்பானது ஊடுசெயல் விலையில் இருந்து வேறுபட்டுக் காணப்படின், உரிமம் பந்தி AG76 இனைப் பிரயோகித்தல் வேண்டும்.</u>** |
| பந்தி 46 (c) | **செயற்றனான சந்தையொன்றில் கூறப்பட்ட விலை குறிக்கப்படாததும் அதன் சீர்மதிப்பு நம்பகரமாக அளவிடப்பட முடியாததுமான உரிமையாண்மைச் சாதனங்களில் முதலீடுகளும் கிரயத்தில் அளவிடப்படும் அவ்வாறான விலை குறிக்கப்படாத உரிமையாண்மைச் சாதனங்களுக்கு தொடர்புபடுத்தப்பட்டதும் அவற்றின் விநியோகத்தின் மூலம் தீர்க்கப்பட வேண்டியதுமான உய்த்தறி சாதனங்களும் (பின்னிணைப்பு “அ” பந்திகள் AG 80 மற்றும் AG 81 இனைப்பார்க்கவும்).** |
| தலைப்பு | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 48 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 48A | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 49 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 66 | **<u>செயற்றிறன் வாய்ந்த சந்தையில் கூறப்பட்ட விலையைக் கொண்டிராத</u> உரிமையாண்மைச் சாதனமொன்று அதன் சீர்மதிப்பினை நம்பகரமாக அளவிடப்பட முடியாததன் காரணமாக அதன் சீர்மதிப்பில் முன்கொணரப்படாதபோது அதன் மீது அல்லது அவ்வாறான விலை குறிக்கப்படாத உரிமையாண்மைச் சாதனத்துடன் இணைக்கப்பட்ட அவ்வாறான விலைகுறிக்கப்படாத சாதனத்தின் விநியோகத்தின் மூலம் தீர்க்கப்படவேண்டிய உய்த்தறி சொத்தொன்றின் மீது, சேத இழப்பு ஏற்பட்டிருப்பதற்கான திட்டமான சான்று கிடைக்கப்படாவிட்டால், சேத இழப்பு நட்டத்தொகையானது நிதிச்சொத்தின் முன்கொணரற் பெறுமதிக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்வுகளை அதனையொத்த நிதிச் சொத்துக்களுக்கான நடப்புச் சந்தை விளைவு விகிதத்தில் கழிவீடு செய்யப்படும்போது பெறப்படும் இற்றைப்பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசமாக அளவிடப்படும் (பந்தி 46(இ) மற்றும் பின்னிணைப்பு “அ” பந்திகள் AG 80 மற்றும் AG 81 இனை பார்க்கவும்). அவ்வாறான சேத இழப்பு நட்டங்கள் எதிர்ப்பதிவு செய்யப்பட மாட்டாது.** |
| பந்தி 80 | தளம்பற் காப்புக் கணக்கீட்டுத் தேவைகளுக்காக, உரிமத்துக்கு வெளியேயான ஒரு தரப்பினருடன் தொடர்புபட்ட சொத்துக்கள், பரிப்புக்கள், திடமான கடப்பாடுகள் அல்லது உயர்ந்த சாத்தியத்தினைக் கொண்ட எதிர்வு கூறப்படும் ஊடுசெயல்கள் ஆகியவற்றினை மாத்திரம் தளம்பற் காப்புச் செய்யப்பட்ட உருப்படிகளாக வகைப்படுத்த முடியும். இதன் காரணமாக, <u>SLFRS 10 நியமத்தில் சொற்பொருள் விளக்கப்பட்டவாறாக, முதலீட்டு உரிமம் மற்றும் அதன் உப கம்பனிகளுக்கு இடையிலான ஊடுசெயல்கள் இலாப நட்டங்களின் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் போதாக, முதலீட்டு உரிமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தவிர்ந்த ஏனைய வேளைகளில்</u>, தளம்பற் காப்புக் கணக்கீடானது உரிமங்களுக்கு இடையிலான ஊடு செயல்களுக்கோ அல்லது ஒரே குழுமத்திலுள்ள பிரிவுகளுக்கோ, அந்தக் குழுமத்தின் ஒன்றித்த நிதிக் கூற்றுக்களில் அல்லாது அந்த உரிமங்களின் அல்லது பிரிவுகளின் தனித்தனியான அல்லது வேறான நிதிக்கூற்றுக்களுக்கு மாத்திரம் பிரயோகிக்கப்பட முடியும். |

| | |
|---|---|
| | இதற்கு விதிவிலக்காக, குழுக்களுக்கிடையிலான நாணய உருப்படியொன்றின் (உ-ம்: இரு உப கம்பனிகளுக்கிடையேயான சென்மதிகள் / வருமதிகள்) அந்நிய நாணய இடர், LKAS 21 அந்நிய நாணயமாற்று விகிதங்களில் மாற்றங்களின் தாக்கம் எனும் நியமத்துக்கு அமைவாக ஒன்றித்தலின் போது முற்றிலுமாக நீக்கப்படாது அந்நிய நாணயமாற்று விகித இலாபம் அல்லது நட்ட இடர்த் தாக்கத்துக்கு உள்ளாகும் இடர் காப்பின்மையை விளைவிக்குமேயாகில், அது ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் தளம்பற் காப்புச் செய்யப்பட்ட உருப்படியொன்றாக அமைய தகைமை பெறும். LKAS 21 க்கு அமைவாக குழுமங்களுக்கு இடையிலான நாணய உருப்படி வேறுபட்ட தொழிற்பாட்டு நாணயங்களைக் கொண்ட இரு குழும உரிமங்களுக்கு இடையே ஊடுசெயலுக்கு உள்ளாகும் போது அந்த குழுமங்களுக்கு இடையிலான நாணய உருப்படிகளின் அந்நிய நாணயமாற்று விகித இலாபம் அல்லது நட்டங்கள் ஒன்றித்தலின்போது முற்றாக நீக்கப்படமாட்டாது. மேலும், உயர்ந்த சாத்தியத் தன்மையினை கொண்ட உரிமங்களுக்கு இடையிலான எதிர்வு கூறப்பட்ட ஊடுசெயலின் அந்நிய நாணய இடர், ஊடு செயலினை மேற்கொள்ளும் உரிமத்தின் தொழிற்பாட்டு நாணயமல்லாத வேறொரு நாணயத்தில் அந்த ஊடு செயல் மேற்கொள்ளப்பட்டிருப்பின், அது ஒன்றித்த நிதிக் கூற்றுக்களின் தளம்பற் காப்புச் செய்யப்பட்ட உருப்படியாக அமைய தகைமை பெறக்கூடியதாக இருப்பதுடன் அந்த அந்நிய நாணய இடர் ஒன்றித்த இலாபம் அல்லது நட்டத்தினை பாதிக்கும். |
| பந்தி 88 (d) | **தளம்பற் காப்பின் விளைவுத்திறன் நம்பகரமாக அளவிடப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும், அதாவது தளம்பற் காப்பு இடருக்கு தொடர்புபடும் தளம்பற்காப்பு உருப்படியின் சீர்மதிப்பு அல்லது காசுப்பாய்வுகள் மற்றும் தளம்பற்காப்புச் செய்யப்படும் சாதனத்தின் சீர்மதிப்பு நம்பகரமாக அளவிடப்படக் கூடியதாக இருத்தல்.** |
| பந்தி 91 (a) | **தளம்பற் காப்பு சாதனம் காலாவதியாகும் போது அல்லது விற்கப்படும் போது அல்லது முடிவுறுத்தப்படும் போது அல்லது பயன்படுத்தப்படும் போது. இந்த நோக்கத்துக்காக, தளம்பல் காப்பு சாதனம் ஒன்றின் மற்றொரு தளம்பல் காப்பு சாதனமாக்கும் பதிலீட்டு அல்லது மீள்பெறுகையானது, அந்த பதிலிடல் அல்லது மீள்பெறல் ஆவணப்படுத்தப்பட்ட தளம்பல் காப்பு தந்திரோபாயத்தின் பகுதியாக உள்ள போது, அது காலாவதி அல்லது இரத்துச் செய்கை எனக் கருதப்படல் ஆகாது. <u>மேலும், இந் நோக்கத்துக்காக பின்வரும் சந்தர்ப்பங்களில் தளம்பல் காப்பு சாதனத்தின் காலாவதி அல்லது இரத்துச் செய்கை ஏற்பட்டதாகக் கருதப்பட முடியாது:</u>**<br><br>**<u>(i)</u> <u>சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகளின் விளைவாக அல்லது புதிய சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகளின் அறிமுகம் காரணமாக, தளம்பல் காப்பு ஒப்பந்தத் தரப்பினர் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தீர்க்கும் எதிர்த்தரப்பினர் தமது ஒவ்வொரு தரப்பினரதும் புதிய எதிர்த்தரப்பினர் ஆகுவதற்காக அசல் எதிர்த்தரப்பினரை பதிலீடு செய்யலாம் என இணங்கிக்கொள்வர். இந் நோக்கத்துக்காக, தீர்க்கும் எதிர்த்தரப்பினர் என்பது மத்திய எதிர்த்தரப்பினரால் தீர்த்தலை மேற்கொள்ளும் வகையில் செயற்படும், ஒரு மத்திய தரப்பினர் அல்லது உரிமம் அல்லது உரிமங்களாகும். (உதாரணமாக ஒரு தீர்க்கும் அமைப்பு ஒன்றின் தீர்க்கும் உறுப்பினர் அல்லது தீர்க்கும் அமைப்பு ஒன்றின் தீர்க்கும் உறுப்பினரது சேவை பெறுனர்), (சில வேளைகளில் 'தீர்க்கும் அமைப்பு' அல்லது 'தீர்க்கும் முகவர்' எனவும் கூறப்படலாம்). எனினும் தளம்பல் காப்பு சாதனத்துக்கான தரப்பினர் அசல் எதிர்த்தரப்பினருக்குப் பதிலாக வேறு எதிர்த்தரப்பினரைப் பதிலீடு செய்யும் போது அத் தரப்பினர் அதே மத்திய தரப்பினருடன் தீர்த்தலை செயற்படுத்தின் மாத்திரமே இந்தப் பந்தி பிரயோகிக்கத்தக்கதாகும்.</u>**<br><br>**<u>(ii)</u> <u>தளம்பல் காப்பு சாதனத்துக்கான ஏனைய மாற்றங்கள், ஏதேனும் இருப்பின், அவை எதிர்த்தரப்பினரின் பதிலீட்டுக்கு செயற்படுத்தப்படக்கூடிய அவசியமானவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது. அவ்வாறான மாற்றங்கள் தளம்பல் காப்பு சாதனங்கள் அசலாக தீர்க்கும் எதிர்த்தரப்பினரினால் தீர்க்கப்பட்ட வகையிலான பதங்களுக்கு உரிய வகையில் வரையறுக்கப்படதாகக் காணப்படும். இம் மாற்றங்கள் பிணையப் பத்திரத் தேவைப்பாட்டிலான மாற்றங்கள், வருமதி மற்றும் சென்மதி நிலுவைகளைக் எதிர்த் செய்வதற்கான உரிமை மற்றும் விதிக்கப்பட்ட கட்டணங்கள் ஆகியவற்றிலாக மாற்றங்களை உள்ளடக்கும்.</u>** |

| | |
|---|---|
| பந்தி 101 (a) | **தளம்பல் காப்பு சாதனம் காலாவதியாகும் போது அல்லது விற்கப்படும் போது அல்லது முடிவுறுத்தப்படும் போது அல்லது பயன்படுத்தப்படும் போது. இவ்வாறான நிலைமைகளின் போது தளம்பல் காப்பு செயன்முறையில் இருந்த காலப்பகுதி முதல் ஏனைய முற்றடக்க வருமானங்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டங்கள் எதிர்வுகூறல் ஊடுசெயல்கள் இடம்பெறும் வரை உரிமையாண்மையில் தனியாகப் பேணப்படும் (பந்தி 95 இனைப் பார்வையிடவும்). ஊடுசெயல் இடம்பெறும் போது, பந்தி 97, 98 அல்லது 100 பிரயோகிக்கப்படும். இப் பந்தியின் நோக்கத்துக்காக தளம்பல் காப்பு சாதனம் ஒன்றின் மற்றொரு தளம்பல் காப்பு சாதனமாக்கும் பதிலீட்டு அல்லது மீள்பெறுகையானது, அந்த பதிலிடல் அல்லது மீள்பெறல் ஆவணப்படுத்தப்பட்ட தளம்பல் காப்பு தந்திரோபாயத்தின் பகுதியாக உள்ள போது, அது காலாவதி அல்லது இரத்துச் செய்கை எனக் கருதப்படல் ஆகாது. மேலும், இந் நோக்கத்துக்காக பின்வரும் சந்தர்ப்பங்களில் தளம்பல் காப்பு சாதனத்தின் காலாவதி அல்லது இரத்துச் செய்கை ஏற்பட்டதாகக் கருதப்பட முடியாது:**<br><br>**(i) சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகளின் விளைவாக அல்லது புதிய சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகளின் அறிமுகம் காரணமாக, தளம்பல் காப்பு ஒப்பந்தத் தரப்பினர் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தீர்க்கும் எதிர்த்தரப்பினர் தமது ஒவ்வொரு தரப்பினரதும் புதிய எதிர்த்தரப்பினர் ஆகுவதற்காக அசல் எதிர்த்தரப்பினரை பதிலீடு செய்யலாம் என இணங்கிக்கொள்வர். இந் நோக்கத்துக்காக, தீர்க்கும் எதிர்த்தரப்பினர் என்பது மத்திய எதிர்த்தரப்பினரால் தீர்த்தலை மேற்கொள்ளும் வகையில் செயற்படும், ஒரு மத்திய தரப்பினர் அல்லது உரிமம் அல்லது உரிமங்களாகும். (உதாரணமாக ஒரு தீர்க்கும் அமைப்பு ஒன்றின் தீர்க்கும் உறுப்பினர் அல்லது தீர்க்கும் அமைப்பு ஒன்றின் தீர்க்கும் உறுப்பினரது சேவை பெறுனர்), (சில வேளைகளில் 'தீர்க்கும் அமைப்பு' அல்லது 'தீர்க்கும் முகவர்' எனவும் கூறப்படலாம்). எனினும் தளம்பல் காப்பு சாதனத்துக்கான தரப்பினர் அசல் எதிர்த்தரப்பினருக்குப் பதிலாக வேறு எதிர்த்தரப்பினரைப் பதிலீடு செய்யும் போது அத்தரப்பினர் அதே மத்திய தரப்பினருடன் தீர்த்தலை செயற்படுத்தின் மாத்திரமே இந்தப் பந்தி பிரயோகிக்கத்தக்கதாகும்.**<br><br>**(ii) தளம்பல் காப்பு சாதனத்துக்கான ஏனைய மாற்றங்கள், ஏதேனும் இருப்பின், அவை எதிர்த்தரப்பினரின் பதிலீட்டுக்கு செயற்படுத்தப்படக்கூடிய அவசியமானவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது. அவ்வாறான மாற்றங்கள் தளம்பல் காப்பு சாதனங்கள் அசலாக தீர்க்கும் எதிர்த்தரப்பினரினால் தீர்க்கப்பட்ட வகையிலான பதங்களுக்கு உரிய வகையில் வரையறுக்கப்பட்டதாகக் காணப்படும். இம் மாற்றங்கள் பிணைப் பத்திரத் தேவைப்பாட்டிலான மாற்றங்கள், வருமதி மற்றும் சென்மதி நிலுவைகளைக் எதிர்த் தீர்த்தல் செய்வதற்கான உரிமை மற்றும் விதிக்கப்பட்ட கட்டணங்கள் ஆகியவற்றிலாக மாற்றங்களை உள்ளடக்கும்.** |
| பந்தி 103 | இந் நியமம் 1 சனவரி 2012 அல்லது அதற்குப் பிந்திய காலப்பகுதியைக் கொண்ட நிதிக் கூற்றுக்களுக்கு செயற்படுத்தக் கூடியதாகவுள்ளது. முன்னைய பிரயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. உரிமம் LKAS 32 நியமத்தினையும் பிரயோகிக்காதவிடத்து இந் நியமத்தினை 2012 சனவரி 01 க்கு முற்பட்ட காலங்களுக்குப் பிரயோகித்தல் ஆகாது. 01 சனவரி 2012 முந்திய காலப் பகுதிக்கு பிரயோகிப்பின் அந்த விடயத்தினை அது வெளிப்படுத்தும். |
| பந்தி 103A | உரிமமொன்று பந்தி 2 (ஒ) இல் கூறப்பட்டுள்ள திருத்தத்தினை 2012 சனவரி 1 ஆந் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்குப் பிரயோகிக்கும். உரிமமொன்று முன்னைய காலம் ஒன்றிற்கு IFRIC 5: *தொழிற்பாட்டினை முடிவுக்குக் கொண்டுவருதல், மீள இயல்புநிலைக்கு கொண்டுவருதல் மற்றும் சூழல் புனரமைப்பு நிதியத்தினை ஏற்படுத்துவதன் மூலம் ஏற்படும் அக்கறைகளுக்கான உரிமைகள்* இனை பிரயோகிக்குமேயாகில், இந்தத் திருத்தம் அந்த முன்னைய காலத்திற்கு பிரயோகிக்கப்படும். |
| பந்தி 103P | SLFRS 10 மற்றும் SLFRS 11 *இணைந்த ஏற்பாடுகள்* நியமங்கள் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 2(a), 15, AG3, AG36-AG38 மற்றும் பந்தி |

| | |
|---|---|
| | AG4 I (a). உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 10, SLFRS 11 நியமங்களைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 103Q | SLFRS 13 *சீர்பெறுமதி மதிப்பீடு* நியமம் ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தப்பட்ட பந்திகள் paragraphs 9, 13, 28, 47, 88, AG46, AG52, AG64, AG76, AG76A, AG80, AG81 மற்றும் AG96, சேர்க்கப்பட்ட பந்தி 43A. நீக்கப்பட்ட பந்திகள் 48-49, AG69-AG75, AG77-AG79 மற்றும் AG82. உரிமம் இத் திருத்தங்களை அது SLFRS 13 நியமத்தைப் பிரயோகிக்கும் போது பிரயோகித்தல் வேண்டும். |
| பந்தி 108D | *நேரற்றகளின் பதிலீடு மற்றும் தளம்பல் காப்புக் கணக்குகளின் தொடர்ந்துசெல்லல்* (LKAS 39 நியமத்துக்கான திருத்தங்கள்) 2014 இல் வெளியிடப்பட்டது. திருத்தப்பட்ட பந்திகள் 91 மற்றும் 101, சேர்க்கப்பட்ட பந்திகள் AG113A. உரிமம் ஒன்று இப் பந்திகளை 01 சனவரி 2014 இல் அல்லது அதற்குப் பின்னரான ஆண்டுக் காலப்பகுதிகளுக்குப் பிரயோகித்தல் வேண்டும். உரிமம் இத் திருத்தங்களை முற்கால விளைவுள்ள வகையில் LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* நியமத்துக்கு இணக்கமான வகையில் பிரயோகித்தல் வேண்டும். முற்காலப் பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இத் திருத்தங்களை முற்காலப் பகுதிகளுக்குப் பிரயோகித்து இருந்தால் அவ் விடயம் வெளிக்காட்டப்படல் வேண்டும். |
| பந்தி AG3 | சில வேளைகளில் உரிமம் ஒன்று, முதலீடு செய்யப்படும் வேறொரு உரிமத்துடன் நீண்டகால தொழிற்பாட்டு உறவினை ஏற்படுத்திப் பேணும் நோக்கில் அந்த உரிமம் வழங்குகின்ற உரிமையாண்மைச் சாதனங்களில் "தந்திரோபாய முதலீட்டினை" மேற்கொள்கின்றது. அவ்வாறான முதலீடு ஒன்றிற்கு உரிமையாண்மைக் கணக்கீட்டு முறை பொருத்தமானதா என தீர்மானிப்பதற்கு அந்த முதலீடு செய்யும் உரிமம் அல்லது கூட்டுத் தொழில் முயற்சி உரிமம் LKAS 28 எனும் நியமத்தினை பிரயோகிக்கின்றது. உரிமையாண்மை முறை பொருத்தமானதாக அமையாதவிடத்து, அந்த தந்திரோபாய முதலீட்டுக்கு உரிமம் இந்த நியமத்தினை பிரயோகிக்கும். |
| பந்தி AG4I | உரிமம் தொழில் முயற்சியின் மூலதன அமைப்பு, பரஸ்பர நிதியம், அலகு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது அதனை ஒத்த உரிமமொன்றாக இருப்பதுடன் அவற்றின் வியாபாரம் வட்டி அல்லது பங்கிலாபம் மற்றும் சீர்மதிப்புக்களில் மாற்றங்கள் போன்றவற்றின் மூலமாக மொத்த வருவாயிலிருந்து இலாபத்தினைப் பெறும் நோக்கத்தினை கொண்டதாகும். LKAS 28 நியமம், முதலீடுகள் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீரமதிப்பில் அளவிடப்படின், அவைகளை அவற்றின் நோக்கெல்லையிலிருந்து விலக்கப்பட இந்த நியமத்துக்கு இணக்கமான விதமாக அனுமதிக்கின்றது. உரிமமொன்று, இதே கணக்கீட்டு கொள்கைகளை மொத்த வருவாயின் அடிப்படையில் முகாமைப்படுத்தப்படும், ஆனால் அவற்றினை LKAS 28 நியமத்தின் நோக்கெல்லைக்குள் உட்படுத்த போதுமான தலையீட்டினை கொண்டிராத பிற உரிமங்களுக்கும் பிரயோகிக்கலாம். |
| தலைப்பு | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG34 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG35 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG37 | பந்தி 18 (b) இல் விபரிக்கப்பட்ட நிலைமை (உரிமம் நிதிச் சொத்தின் காசுப்பாய்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்த உரிமைகளைக் கொண்டிருந்து, ஆனால் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பெறுநர்களுக்கு காசுப் பாய்வுகளை செலுத்த வேண்டிய ஒப்பந்க் கடப்பாட்டினைக் கொண்டுள்ள போது), உதாரணமாக, உரிமம் ஒரு நம்பிக்கை நிதியமாக இருந்து அது உரிமை கொண்டுள்ள மற்றும் அது தொடர்பான சேவைகளை வழங்கும் குறித்த நிதிச் சொத்தின் பயன் நன்மைகளை முதலீட்டாளர்களுக்கு வழங்குதல். அவ்வாறான சந்தர்ப்பங்களில், பந்திகள் 19 மற்றும் 20 இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படின், குறித்த சொத்து ஏற்பிசைவு நீக்கலுக்குத் தகுதி பெறும். |

| | |
|---|---|
| பந்தி AG38 | பந்தி 19 இனை பிரயோகிக்கும்போது அந்த உரிமம், உதாரணமாக, நிதிச் சொத்தினை ஆரம்பித்தவராகவோ அல்லது நிதிச்சொத்தினை கொள்வனவு செய்து காசுப்பாய்வுகளை தொடர்பற்ற மூன்றாம் தரப்பு முதலீட்டாளர்களுக்கு கடத்தும் உபகம்பனி ஒன்றினை உள்ளடக்கும் குழுமமொன்றாகவோ இருக்க முடியும். |
| பந்தி AG46 | பந்தி 27 இன் பிரயோகத் தேவைப்பாடுகளுக்காக, தொடர்ந்தும் ஏற்பிசைவு செய்யப்படும் பகுதியினதும் ஏற்பிசைவு விலக்கப்பட்ட பகுதியினதும் சீர்மதிப்புக்களை அளவிடும் போது, உரிமமொன்று பந்தி 28 க்கு மேலதிகமாக, SLFRS 13 நியமத்தின் சீர்மதிப்பு அளவீட்டுத் தேவைப்பாடுகளை பிரயோகிக்கும். |
| பந்தி AG64 | ஆரம்ப ஏற்பிசைவின்போது நிதிச்சாதனமொன்றின் சீர்மதிப்பானது வழக்கமாக ஊடுசெயல் விலையாகும். (அதாவது கொடுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட பதிலிறுக்கியின் சீர்மதிப்பாகும் - SLFRS 13 மற்றும் பந்தி AG 76 இனை பார்க்கவும்). எனினும் கொடுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட பதிலிறுக்கியின் பகுதியொன்று நிதிச்சாதனம் சாராத ஒன்றுக்காக இருக்குமேயாகில், நிதிச் சாதனத்தின் சீர் மதிப்பினை உரிமம் பெறுமதி மதிப்பீட்டு நுட்பமொன்றினை உபயோகித்து அளவிடப்படும். உதாரணமாக, வட்டியினைக் கொண்டிராத நீண்டகாலக் கடன் ஒன்றின் அல்லது வருமதியொன்றின் சீர்மதிப்பானது, சகல எதிர்கால காசுப் பெறுவனவுகளையும் ஒத்த கடன் நாணய தரத்தினைக் கொண்ட ஒத்த சாதனங்களுக்கான (ஒத்த நாணயம், கட்டுறுப்பு, வட்டி விகிதவகை மற்றும் பிற காரணிகளைக் கொண்ட) நிலவும் சந்தை வட்டி விகிதங்களை உபயோகித்து கழிவீடு செய்வதனால் பெறப்படும் இற்றைப் பெறுமதியில் அளவிட முடியும். கொடுக்கப்படும் எந்தவொரு மேலதிக தொகையும், அது வேறொரு வகையான சொத்தாக ஏற்பிசைவு செய்ய தகைமை பெறாதவிடத்து, செலவொன்றாகவோ அல்லது வருமதியில் குறைப்பாகவோ கொள்ளப்படும். |
| தலைப்பு | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG69 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG70 | நீக்கப்பட்டுள்ளது |
| தலைப்பு | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG71 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG72 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG73 | நீக்கப்பட்டுள்ளது |
| தலைப்பு | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG74 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG75 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG76 | ஆரம்ப ஏற்பிசைவின்போது நிதிச் சாதனமொன்றின் சீர்மதிப்பிற்கான சிறந்த சான்று வழக்கமாக, அதன் ஊடு செயல் விலை ஆகும் (கொடுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட பதிலிறுக்கியின் சீர்மதிப்பு, SLFRS 13 நியமத்தினையும் பார்வையிடவும்). உரிமம் ஒன்று ஆரம்ப ஏற்பிசைவின் போதான சீர்மதிப்பு பந்தி 43A இல் குறிப்பிடப்பட்ட ஊடுசெயல் விலையில் இருந்து வேறுபடும் எனத் தீர்மானித்தால், உரிமம் அச் சாதனத்தை அத் திகதியில் பின்வருமாறு கணக்கீடு செய்ய முடியும்:<br><br>(அ) சீர்மதிப்பு செயற்றிறன் வாய்ந்த சந்தை ஒன்றில் ஒத்த தன்மையான சொத்து அல்லது பரிப்புக்குக் காணப்படத்தக்க கூறப்பட்ட விலை ஒன்றினால் (அதாவது: மட்டம் 1 உள்ளீடு) அல்லது அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளை மாத்திரம் |

| | |
|---|---|
| | பிரயோகிக்கும் மதிப்பீட்டு நுட்பம் ஒன்றின் அடிப்படையில் சான்றுப்படுத்தப்படின், பந்தி 43 இனால் தேவைப்படுத்தப்படும் அளவீட்டில். உரிமம் ஆரம்ப ஏற்பிசைவின் போதான சீர்மதிப்பு மற்றும் ஊடுசெயல் விலை ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டினை ஒரு இலாபமாக அல்லது நட்டமாக ஏற்பிசைவு செய்யும்.<br><br>(ஆ) ஏனைய சந்தர்ப்பங்களில், பந்தி 43 இனால் தேவைப்படுத்தப்படும் அளவீட்டில், ஆரம்ப ஏற்பிசைவின் போதான சீர்மதிப்பு மற்றும் ஊடுசெயல் விலை ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டினைப் பிற்போடுவதற்கான சீராக்கங்களை மேற்கொள்ளலாம். ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர், உரிமம் அவ்வாறு பிற்போடப்பட்ட வேறுபாட்டினை சந்தைப் பங்குபற்றுனர்கள் சொத்து அல்லது பரிப்பை ஒன்றின் விலையிடலின் போது கருத்தில் கொள்ளும் ஒரு காரணியின் (காலம் உள்ளடங்கலான) மாற்றத்தினால் ஏற்படும் விளைவின் அளவுக்கு மாத்திரம் இலாபம் அல்லது நட்டமாக ஏற்பிசைவு செய்து கொள்ளும். |
| பந்தி AG76A | நிதிச் சொத்து அல்லது நிதிப் பரிப்பின் பிற்கால மதிப்பீடு மற்றும் அதன் இலாப நட்டங்களின் பிற்கால ஏற்பிசைவு ஆகியன இந்த நியமத்தின் தேவைப்பாடுகளுக்கு நிலையான தன்மையினைக் கொண்டவையாக இருத்தல் வேண்டும். |
| பந்தி AG77 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG78 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG79 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG80 | செயற்றதிறனான சந்தையொன்றில் ஒத்த தன்மை வாய்ந்த சாதனங்களுக்கான (அதாவது: மட்டம் 1 உள்ளீடு) கூறப்படும் சந்தை விலையொன்றினைக் கொண்டிராத உரிமையாண்மைச் சாதனங்களில் முதலீடுகள் மற்றும் அவ்வாறான விலை குறிக்கப்படாத உரிமையாண்மைச் சாதனங்களுடன் இணைக்கப்பட்டதும் அவற்றின் விநியோகத்தினால் தீர்க்கப்படவேண்டியதுமான உய்த்தறி சாதனங்கள் ஆகியவற்றின் சீர்மதிப்பு (பந்திகள் 46 (C) மற்றும் 47 இனை பார்க்கவும்) நம்பகரமாக அளவிடப்படக் கூடியதாக இருப்பது, (அ) நியாயபூர்வமான சீர்மதிப்பு மதிப்பீடுகளின் மாறுந் தன்மையானது அந்தச் சாதனத்திற்கு கணிசமானதாக இல்லாதபோது, அல்லது (ஆ) அந்த வீச்சத்திற்கு உட்பட்ட வேறுபட்ட மதிப்பீடுகளின் சாத்தியக்கூறுகள் நியாயபூர்வமாக அளவிடக்கூடியதாக இருந்து சீர்மதிப்பினை மதிப்பிடலில் உபயோகிக்கப்படும் போது ஆகும். |
| பந்தி AG81 | செயற்றிறனான சந்தை ஒன்றில் ஒத்த தன்மை வாய்ந்த சாதனங்களுக்கான (அதாவது: மட்டம் 1 உள்ளீடு) கூறப்படும், சந்தை விலையொன்றினை கொண்டிராத உரிமையாண்மைச் சாதனங்களில் முதலீடுகள் மற்றும் அவ்வாறான விலை கூறப்படாத உரிமையாண்மைச் சாதனங்களுடன் இணைக்கப்பட்டதும் அவற்றின் விநியோகத்தினால் தீர்க்கப்படவேண்டியதுமான உய்த்தறி சாதனங்கள் (பந்திகள் 46 (இ) மற்றும் 47 இனை பார்க்கவும்) ஆகியவற்றின் நியாயமான சீர்மதிப்பு அளவீடுகளின் வீச்சத்தில் மாறுபடும் தன்மையானது பல சந்தர்ப்பங்களில் கணிசமானதாக அமையாதிருத்தல் சாத்தியமானதாகும். உரிமமொன்று வெளித்தரப்பினர் ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யும் நிதிச்சொத்துக்களின் சீர்மதிப்பினை அளவிடுதல் வழக்கமாக சாத்தியமானதாக இருக்கும். எனினும், நியாயாமான சீர்மதிப்பு மதிப்பீடுகளின் வீச்சம் கணிசமானதாகவும் வேறுபட்ட மதிப்பீடுகளின் நிகழ்தகவுகள் நியாயமாக அளவிட முடியாததாகவும் இருப்பின் உரிமமானது சாதனத்தினை சீர்மதிப்பில் அளவிடுதலிலிருந்து விலக்கப்படும். |
| தலைப்பு | **நீக்கப்பட்டுள்ளது** |
| பந்தி AG82 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி AG96 | செயற்றிறன் வாய்ந்த சந்தை ஒன்றில் ஒத்த தன்மையான சாதனம் ஒன்றுக்கு கூறப்பட்ட விலை கொண்டிராத உரிமையாண்மைச் சாதனமொன்றின் (மட்டம் 1 உள்ளீடு) சீர்மதிப்பு நம்பகரமாக அளவிடப்பட முடியாததனால் சீர்மதிப்பில் முன்கொணரப்படாத விலை கூறப்படாத உரிமையாண்மைச் சாதனமொன்றில் முதலீடு அல்லது அவ்வாறான விலை கூறப்படாத உரிமையாண்மைச் சாதனத்துடன் இணைக்கப்பட்டதும் அவற்றின் விநியோகத்தின் மூலம் தீர்க்கப்பட வேண்டியதுமான உய்த்தறிசாதனமொன்று (பந்திகள் |

| | |
|---|---|
| | 46 (C) மற்றும் 47 இனைப் பார்க்கவும்) தளம்பற்காப்புச் செய்யப்படும் உரிமம் ஒன்றாக வகைப்படுத்தப்படமுடியாது. |
| பந்தி AG113A | சந்தேகங்களைத் தவிர்க்கும் முகமாக, ஆரம்பத் தரப்பினரைத் தீர்க்கும் தரப்பினருக்குப் பதிலீடு செய்தல் மற்றும் பந்தி 91 (a) (ii) மற்றும் 101 (a) (ii) இல் குறிப்பிடப்பட்ட மாற்றங்களை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றின் விளைவுகள் தளம்பற் காப்பு சாதனத்தின் மதிப்பீட்டில் பிரதிபலிக்கப்பட்டு அதன் மூலம் தளம்பற்காப்பு மதிப்பீட்டு விளைவுத்திறன் மற்றும் தளம்பற் காப்பு அளவீட்டு விளைவுத்திறன் ஆகியன பிரதிபலிக்கப்படும். |
| பந்தி AG133 | உரிமமொன்று இந்த நியமத்திற்கு அமைவாக (பந்தி 80 இன் இறுதி வாக்கியத்தில் திருத்தப்பட்டவாறு) தளம்பற்காப்புக் கணக்கீட்டிற்கு தகைமைபெற்ற தளம்பற் காப்பொன்றில் , எதிர்வு கூறப்பட்ட குழுமத்தின் உள்ளான ஊடுசெயல் ஒன்றினை 2012 ஜனவரி 1ஆந் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பமாகும் வருடாந்த காலமொன்றிற்கு (அல்லது, ஒப்பீட்டுத் தகவல்களை திருத்திக் கூறும் தேவைகளுக்காக முந்திய ஒப்பீட்டுக் காலத்தின் ஆரம்பத்தில் இருந்து) தளம்பற்காப்புச் செய்யப்பட்ட உருப்படியொன்றாக வகைப்படுத்தியிருக்கக்கூடும். அவ்வாறான உரிமமொன்று அந்த வகைப்படுத்தலினை 2012 சனவரி 1ஆந் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பமாகும் வருடாந்த காலமொன்றிற்காக (அல்லது, முந்திய ஒப்பீட்டுக் கால ஆரம்பத்திலிருந்து), ஒன்றித்த நிதிக் கூற்றுக்களில் தளம்பற்காப்பு கணக்கீட்டினை பிரயோகிப்பதில் உபயோகிக்கக்கூடும். அவ்வாறான உரிமமொன்று பந்திகள் **AG** 99அ மற்றும் **AG** 99 ஆ ஆகியவற்றினையும் 2012 சனவரி 1ந் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ ஆரம்பமாகும் வருடாந்த காலத்தின் ஆரம்பத்திலிருந்து பிரயோகிக்கும். எனினும், பந்தி 108-ஆ க்கு அமைவாக, முன்னைய காலங்களுக்கான ஒப்பீட்டுத் தகவல்களுக்கு அது பந்தி **AG** 99ஆ வினை பிரயோகிக்க வேண்டும். |

**LKAS 40 முதலீட்டு ஆதனம்**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பந்தி |
|---|---|
| | இந்த நியமத்தில் கீழே குறிப்பிடப்பட்ட மாற்றங்களுக்கு மேலதிகமாக, "தீர்மானிக்கப்பட்ட" என்னும் பதமானது "அளவிடப்பட்ட" எனப் பதிலீடு செய்யப்படுகிறது. |
| பந்தி 5 | **கீழ்வரும் பதங்கள் இந்த நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் உபயோகிக்கப்பட்டுள்ளன :**<br><br>***முன்கொண்டு செல்லும் தொகை*** **என்பது சொத்தொன்று நிதி நிலமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகையாகும்.**<br><br>***கிரயம்*** **என்பது சொத்தொன்றின் கொள்வனவின் போதோ அல்லது நிர்மாணத்தின் போதோ செலுத்தப்படும் காசு அல்லது காசுக்கு சமமான தொகையோ அல்லது கொடுக்கப்படும் ஏனைய பதிலிறுக்கியின் சீர்மதிப்போ அல்லது ஏற்புடைய இடத்து ஏனைய SLFRS உதாரணம் SLFRS 2 பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் அடிப்படையில் அந்தச் சொத்தினை ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யும் போது அதனுடன் நேரடியாக தொடர்புபடுத்தப்படும் தொகையாகும்.**<br><br>***சீர் மதிப்பு*** **என்பது சந்தைப் பங்குபற்றுனர்களிடையே மதிப்பீட்டுத் திகதியில் முறைசார் ஊடுசெயல் ஒன்றின்போது சொத்தொன்று விற்கப்படுவதனால் பெறப்படக்கூடிய அல்லது பரிப்பொன்று மாற்றப்படுவதற்காக செலுத்தக்கூடிய விலையாகும். (SLFRS 13** ***சீர்மதிப்புப் பெறுமதி*** **நியமத்தினைப் பார்க்கவும்).**<br><br>***முதலீட்டு ஆதனம்*** **என்பது வாடகை அல்லது மூலதன மதிப்புயர்வு அல்லது இவை இரண்டினையும் உழைக்கும் நோக்கில் கொண்டிருக்கப்படும் (உரிமையாளரினாலோ அல்லது நிதிக்குத்தகையொன்றின் கீழ் குத்தகை பெறுணனினாலோ) ஆதனம்** |

| | |
|---|---|
| | **(காணி அல்லது கட்டடம் அல்லது கட்டடமொன்றின் ஒரு பகுதி அல்லது இவை இரண்டும்) ஆகும். இது கீழ்வருவனவற்றினை உள்ளடக்காது.**<br><br>**(அ) பொருட்கள் அல்லது சேவைகளின் உற்பத்தியில் அல்லது வழக்குதலில் அல்லது நிருவாகத் தேவைகளுக்காக உபயோகிப்பதற்காக வைத்திருக்கப்படும் ஆதனங்கள் அல்லது,**<br><br>**(ஆ) வியாபாரத்தின் வழமையான நடவடிக்கையின் நிமித்தம் விற்பனைக்காக வைத்திருக்கப்படும் ஆதனங்கள்.**<br><br>***உரிமையாளர் உறைகொள் ஆதனம்*** **என்பது பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குதலில் உபயோகிப்பதற்காக அல்லது நிருவாக தேவைகளுக்காக (உரிமையாளரினால் அல்லது நிதிக்குத்தகையொன்றின் கீழ்க்குத்தகை பெறுனரினால்) வைத்திருக்கப்படும் ஆதனமாகும்.** |
| பந்தி 26 | குத்தகைக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட எந்தவொரு மிகை விலையும் (வட்டம்) இந்தத் தேவைகளுக்காக அதி குறைந்த குத்தகைக் கொடுப்பனவுத் தொகையின் பகுதியாகக் கொள்ளப்படுவதுடன் அதன் காரணமாக சொத்தின் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்ற போதிலும் பரிப்பில் உள்ளடக்கபடமாட்டாது. குத்தகையொன்றின் கீழ் கொள்ளப்பட்டுள்ள ஆதனம் மேலான அக்கறை முதலீட்டு ஆதனமாக வகைப்படுத்தப்பட்டிருப்பின் சீர்மதிப்பில் கணக்கிடப்பட்ட உருப்படியானது அந்த அக்கறையேயொழிய அதற்கான ஆதனமாகாது. ஆதன அக்கறை ஒன்றின் சீர்மதிப்பினை மதிப்பிடுவதற்கான வழிகாட்டி பந்திகள் <u>33-35, 40, 41, 48, 50 மற்றும் 52 மற்றும் SLFRS 13</u> இல் கூறப்பட்டுள்ள சீர்மதிப்பு மாதிரியமைப்பில் விளக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த வழிகாட்டி ஆரம்ப ஏற்பிசைவு தேவைகளுக்கான கிரயமாக சீர்மதிப்பினை உபயோகிக்கும் சந்தர்ப்பங்களில் அந்த சீர்மதிப்பினை <u>மதிப்பிடுவதற்குத் தேவைப்படுவதாகும்.</u> |
| பந்தி 29 | சொத்தொன்றிற்கான ஒப்பிடத்தகு சந்தை ஊடு செயல்கள் இல்லாதவிடத்து (அ) அந்தச் சொத்திற்கான நியாயபூர்வமான சீர்மதிப்பு <u>மதிப்பீடுகளின்</u> வீச்சத்தின் வேறுபாடு கணிசமானதாக இல்லாதவிடத்து அல்லது (ஆ) அந்த வீச்சத்திற்கு இடையேயான வேறுபட்ட மதிப்பீடுகளின் நிகழ்தகவுகள் நியாயபூர்வமாக <u>மதிப்பிடக்கூடியதாக</u> இருந்து அவை சீர்மதிப்பினை <u>மதிப்பீடு</u> செய்வதில் உபயோகிக்கப்படக் கூடியதாக இருப்பின், அந்தச் சொத்தின் சீர்மதிப்பு நம்பகரமாக <u>மதிப்பிடக்கூடியதாக</u> இருக்கும். உரிமமானது பெறப்பட்ட சொத்தின் அல்லது கொடுக்கப்பட்ட சொத்தின் சீர்மதிப்பினை நம்பகரமாக மதிப்பிடக் கூடியதாக இருப்பின், பெறப்பட்ட சொத்தின் சீர்மதிப்பு அதிக தெளிவான சான்றாக இருந்தாலன்றி கொடுக்கப்பட்ட சொத்தின் சீர்மதிப்பு கிரயத்தினை <u>மதிப்பிடுவதில்</u> உபயோகிக்கப்படும். |
| பந்தி 36 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 37 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 38 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 39 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 40 | <u>SLFRS 13 நியமத்துக்கு இணக்கமான வகையில் முதலீட்டு ஆதனத்தின் சீர்பெறுமதியை மதிப்படும் போது, ஏனைய விடயங்களிடையே, சீர்பெறுமதியானது நடப்புக் குத்தகைகளிலிருந்தான வாடகை வருமானம் மற்றும் நடப்பு நிலவரங்களின் கீழ் எதிர்கால குத்தகைகளிலிருந்து பெறக்கூடிய வாடகை வருமானம் பற்றி சந்தைப் பங்குபற்றுநர்கள் முதலீட்டு ஆதனம் ஒன்றினை விலையிடும் போது கருத்தில் கொள்ளும் ஏனைய அனுமானங்களைப் பிரதிபலிப்பதை உரிமம் உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.</u> |
| பந்தி 42 | நீக்கப்பட்டுள்ளது |

| | |
|---|---|
| பந்தி 43 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 44 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 45 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 46 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 47 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 48 | விதிவிலக்கான சந்தர்ப்பங்களில், உரிமமொன்று முதன் முதலாக முதலீட்டு ஆதனம் ஒன்றினை கொள்வனவு செய்யும் போது (உபயோக மாற்றத்தின் பின்னர் இருப்பிலுள்ள ஆதனமொன்று முதன் முதலாக முதலீட்டு ஆதனமாக மாற்றமடைகையில்) நியாய பூர்வமாக சீர்பெறுமதி மதிப்பீடுகளின் வீச்சத்தில் மாறுபடும் தன்மை மிகவும் பெரியதாகவும் வேறுபட்ட பெறுபேறுகளின் நிகழ்தகவுகளை மதிப்பிடுதல் சிரமமானதாகவும் இருக்கும் போது சீர்மதிப்பிற்கான தனியொரு மதிப்பீட்டினை பயன்படுத்த முடியாமை தெளிவான சான்றாக இருக்கும். இது ஆதனத்தின் சீர்மதிப்பினை தொடர்ச்சியான அடிப்படையில் நம்பகரமாக மதிப்பிட முடியாது இருப்பதனை குறிக்கக் கூடும். (பந்தி 53 இனைப் பார்க்கவும்) |
| பந்தி 49 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 51 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 53 | **உரிமமொன்று தொடர்ச்சியான அடிப்படையில் முதலீட்டு ஆதனமொன்றின் சீர்மதிப்பினை நம்பகரமாக மதிப்பிட முடியுமென்ற மறுக்க முடியாத எடுகோள் ஒன்று உள்ளது. எனினும், விதிவிலக்காக சந்தர்ப்பங்களில், உரிமமொன்று முதன்முறையாக முதலீட்டு ஆதனமொன்றினைக் கொள்வனவு செய்யும் போது (அல்லது இருப்பிலுள்ள ஆதனமொன்று உபயோக மாற்றமொன்றின் பின்னர் முதன்முதலாக முதலீட்டு ஆதனமாக மாறுகின்ற போது) அந்த முதலீட்டு ஆதனத்தின் சீர்மதிப்பு தொடர்ச்சியான அடிப்படையில் நம்பகரமாக மதிப்பிடப்பட முடியாமைக்கான தெளிவான சான்றுகள் உள்ளன. இந்நிலை ஏற்படுவது, ஒப்பிடத்தகு ஆதனத்திற்கு சந்தை ஊடு செயல்கள் அடிக்கடி நடைபெறாத போதும் சீர்மதிப்பிற்கான நம்பகரமான மாற்று மதிப்பீடுகள் (உதாரணமாக, ஒருசில ஊடுசெயல்கள் மாத்திரம் காணப்படல், விலை கோரல்கள் நடைமுறைக்காலத்துக்கு உரியன அல்லாததாகக் காணப்படல் அல்லது அவதானிக்கப்பட்ட ஊடுசெல் விலைகள் விற்பனையாளர் விற்பதற்காகக் கட்டாயப்படுத்தப்பட்டமையைப் பிரதிபலித்தல்) மற்றும் சீர்பெறுமதி மதிப்பீட்டுக்கான மாற்று வழிமுறைகள் (உ-ம்- கழிவீட்டுக் காசுப்பாய்வு எதிர்வு கூறல்களின் அடிப்படையில் அமைந்தவை) கிடைக்கப்பெறாத போது மட்டுமேயாகும். உரிமமொன்று நிர்மாணத்தின் கீழ் உள்ள முதலீட்டு ஆதனமொன்றின் சீர்மதிப்பு நம்பகரமாக மதிப்பிடப்பட இயலாதது ஆனால் அச் சீர்மதிப்பீடு நிர்மாணம் பூர்த்திடையும் போது நம்பகரமாக தீர்மானிக்கப்படக் கூடியதென தீர்மானிக்குமெனின் அது சீர்மதிப்பீடு நம்பகரமாக மதிப்பிடப்பட இயலுமாகும் வரை அல்லது நிர்மாணம் முழுமையடையும் வரை (எது முதலில்) நிர்மாணத்தின் கீழ் உள்ள அம் முதலீட்டு ஆதனத்தினை கிரயத்தில் அளவீடு செய்யும். உரிமமொன்று முதலீட்டு ஆதனமொன்றின் சீர்மதிப்பு (நிர்மாணத்தின் கீழ் அல்லாத மூலதன ஆதனம் தொடர்ச்சியான அடிப்படையில் நம்பகரமாக மதிப்பிடப்பட முடியாது எனின் உரிமம் LKAS 16 இன் கிரய மாதிரியினை உபயோகித்து அம்முதலீட்டு ஆதனத்தை அளவிடும்). முதலீட்டு ஆதனத்தின் முடிவுப் பெறுமதி பூச்சியமென அனுமானிக்கப்படும். உரிமம் LKAS 16 இனை முதலீட்டு ஆதன விற்பனை வரை உபயோகிக்கும்.** |
| பந்தி 75 (d) | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 80 *(a)* | **உரிமமானது முன்னைய காலங்களில் அந்த ஆதன அக்கறைகளின் சீர்மதிப்பினை பகிரங்கமாக (நிதிக்கூற்றுகளிலோ அல்லது வேறு விதமாகவோ) முன்னர் வெளிக்காட்டியிருப்பின் (SLFRS 13 நியமத்தில் உள்ள வழிகாட்டிகளில் கூறப்பட்டுள்ள சீர்மதிப்பிற்கான சொற்பொருள் விளக்கத்தினை திருப்தி செய்யும் அடிப்படையில்** |

| | |
|---|---|
| | **மதிப்பிடப்பட்ட) உரிமமானது கீழ்வருவனவற்றினை மேற்கொள்ளத் தேவைப்படுத்தப்பட்டிராத போதிலும் அவற்றினை மேற்கொள்ளல் ஊக்குவிக்கப்படுகின்றது:** |
| பந்தி 85 | உரிமமொன்று இந்த நியமத்தினை <u>2012</u> சனவரி 1ஆந் திகதியன்றோ அல்லது அத் திகதிக்குப் பின்னரோ ஆரம்பமாகும் வருடாந்தக் காலங்களுக்கு பிரயோகிக்கும். முற்கூட்டிய பிரயோகம் ஊக்குவிக்கப்படுகின்றது. உரிமமொன்று இந்த நியமத்தினை <u>2012</u> சனவரி 1ஆந் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கும் காலமொன்றிற்கு பிரயோகிக்குமேயாகில் அந்த விடயம் வெளிக்காட்டப்படல் வேண்டும். |
| பந்தி 85 *(c)* | <u>SLFRS 13 ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. சீர்பெறுமதிக்கான வரைவிலக்கணமானது பந்தி 5 இல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 26, 29, 32, 40, 48, 53, 53B மற்றும் 78-80 மற்றும் 85B. நீக்கப்பட்டுள்ள பந்திகள் 36-39, 42-47, 49, 51 மற்றும் 75(d). உரிமம் ஒன்று SLFRS 13 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது இத் திருத்தங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.</u> |

**LKAS 41 விவசாயம்**

| ஏற்கனவே உள்ள பந்தி | பதிலீடு செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட0 பந்தி |
|---|---|
| பந்தி 8 | **கீழே தரப்பட்டுள்ள பதங்கள் குறித்துக்காட்டப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் இந்த நியமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளன:**<br><br>**முன்கொணரற் பெறுமதியானது சொத்து நிதிநிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகையாகும்.**<br><br>***சீர் மதிப்பு* என்பது <u>சந்தைப் பங்குபற்றுனர்களிடையே மதிப்பீட்டுத் திகதியில்</u> முறைசார் ஊடுசெயல் ஒன்றின்போது சொத்தொன்று <u>விற்கப்படுவதனால் பெறப்படக்கூடிய</u> அல்லது பரிப்பொன்று <u>மாற்றப்படுவதற்காக செலுத்தக்கூடிய விலையாகும். (SLFRS 13 *சீர்மதிப்புப் பெறுமதி* நியமத்தினைப் பார்க்கவும்).</u>**<br><br>***அரச மானியங்கள்* என்பது LKAS 20 *அரச மானியங்களுக்கான கணக்கீடும் அரச உதவிகளின் வெளிக்காட்டலும்* எனும் நியமத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு.** |
| பந்தி 9 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 15 | உயிரியற் சொத்தொன்றின் அல்லது விவசாய உற்பத்திப் பொருளொன்றின் சீர்மதிப்பினை <u>மதிப்பிடல்</u>, பொருண்மையான குணவியல்புகளின் அடிப்படையில் உயிரியற் சொத்துக்களை அல்லது விவசாய உற்பத்திகளை குழுமமாக்குவதன் மூலம் வசதியாக்கப்படுத்தப்படலாம். உதாரணமாக, வயதின் அடிப்படையில் அல்லது தரத்தின் அடிப்படையில். உரிமம் சந்தையில் விலையிடுதலுக்கு அடிப்படையாக அமையும் ஒத்த குணவியல்புகளை தேர்வு செய்யும். |
| பந்தி 16 | உரிமங்கள் அனேகமாக அவற்றின் உயிரியற் சொத்துக்களை அல்லது விவசாய உற்பத்திகளை எதிர்காலத் திகதியொன்றில் விற்பனை செய்வதற்கான ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்திக் கொள்கின்றன. சீர் மதிப்பானது, விருப்புடைய <u>சந்தைப் பங்குபற்றுனர் கொள்வனவாளர்களும்</u> விற்பனையாளனும் ஊடுசெயல் ஒன்றினை ஏற்படுத்திக் கொள்ளும் நடப்புச் சந்தை <u>நிலைமைகளினை</u> பிரதிபலித்தலினால், அந்த ஒப்பந்த விலைகள்<br><br>சீர்மதிப்பினை <u>மதிப்பிடுவதில்</u> தொடர்புடையதாக இருக்கவேண்டிய அவசியமில்லை. இதன் விளைவாக, உயிரியற் சொத்தொன்றின் அல்லது விவசாய உற்பத்தியின் சீர்மதிப்பு, ஒப்பந்தமொன்று இருக்கும் காரணத்திற்காக சீராக்கம் செய்யப்படமாட்டாது. சில சமயங்களில், உயிரியற் சொத்தொன்றின் அல்லது விவசாய உற்பத்தியின் விற்பனைக்கான ஒப்பந்தமொன்று LKAS 37 *<u>ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புகள் மற்றும்</u>* |

| | |
|---|---|
| | *உறுமுரிமைச் சொத்துக்கள்* எனும் நியமத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு ஒரு பளுவான ஒப்பந்தமாக இருக்கலாம். பளுவான ஒப்பந்தங்களுக்கு LKAS 37 பிரயோகிக்கப்படும். |
| பந்தி 17 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 18 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 19 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 20 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 21 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 23 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 30 | **உயிரியற் சொத்துக்களுக்கு சீர்மதிப்பினை நம்பகரமாக அளவிடமுடியும் என்ற எடுகோள் ஒன்று உள்ளது. எனினும், இந்த எடுகோள், சந்தையினால் நிர்ணயிக்கப்படும் கோரப்பட்ட சந்தை விலைகள் அல்லது பெறுமதிகள் கிடைக்கப்பெறாத அல்லது சீர் மதிப்பிற்கான மாற்று மதிப்பீடுகள் நம்பகத் தன்மையினை கொண்டிராத உயிரியற் சொத்துக்களுக்கான ஆரம்ப ஏற்பிசைவின்போது மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாக இருக்கும். அவ்வாறான சம்பவங்களில், அந்த உயிரியற் சொத்து கிரயத்திலிருந்து திரள் தேய்மானம் மற்றும் திரள் சேத இழப்பு நட்டங்களை கழித்த தொகையில் அளவிடப்படும். அவ்வாறான உயிரியற் சொத்தின் சீர்மதிப்பு நம்பகரமாக அளவிடப்படக்கூடியதாக வரும்போது, உரிமம் அந்தச் சொத்தினை சீர்மதிப்பிலிருந்து விற்பனைக்கான கிரயத்தினை கழிக்க வரும் தொகையில் அளவிடும். நடைமுறை சாராத உயிரியற் சொத்தொன்று SLFRS 5** ***விற்பனைக்காக வைத்தருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்களும் முடிவுக்குக் கொண்டுவரப்படும் தொழிற்பாடுகளும்*** **என்னும் நியமத்திற்கு அமைவாக விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்த தேவையான மூலப்பிரமாணங்களை நிறைவு செய்யும்போது (அல்லது விற்பனைக்காக வைத்தருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்பட்ட விற்பனைக் குழுமத்தில் உட்படுத்தப்பட்டிருக்கும் போது), சீர்மதிப்பு நம்பகரமாக அளவிடப்பட முடியுமென கொள்ளப்படும்.** |
| பந்தி 47 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 48 | நீக்கப்பட்டுள்ளது |
| பந்தி 58 | இந்த நியமம் 2012 சனவரி 1ஆந் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பமாகும் ஆண்டுக் காலங்களுக்கு நடைமுறைக்கு வருகின்றது. முற்கூட்டிய பிரயோகம் ஊக்குவிக்கப்படுகின்றது. உரிமமொன்று இந்த நியமத்தினை 2012 சனவரி 1ந் திகதிக்கு முன்னர் ஆரம்பமாகும் காலமொன்றிற்கு பிரயோகிக்குமேயாகில் அந்தத் தரவு வெளிக்காட்டப்படல் வேண்டும். |
| பந்தி 61 | SLFRS 13 ஏப்ரல் 2013 இல் வெளியிடப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் 8, 15, 16, 25 மற்றும் 30. நீக்கப்பட்டுள்ள பந்திகள் 9, 17-21, 23, 47 மற்றும் 48. உரிமம் ஒன்று SLFRS 13 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது இத் திருத்தங்களைப் பிரயோகித்தல் வேண்டும். |



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.